காட்டு எருமைகள்

கோவைகிழார்

[illegible] நிலையப் பதிப்பகம்

684

2/28

காட்டு எருமைகள்

"கோவை கிழார்"

கோவை நிலையப் பதிப்பகம்
கோவை

விலை ரு. 1-4-0

சாது அச்சுக்கூடம்
இராயப்பேட்டை, சென்னை-14

பொருளடக்கம்

முகவுரை

"எருமைகள் எத்தனை வகை உண்டு?" என்று கேட்டார் என் வகுப்பு ஆசிரியர். எனக்கோ அக் கேள்வி விளங்கவில்லை. நான் பார்த்ததெல்லாம் ஒரே ஒரு வகை எருமைதான். அதுவும் எங்கள் எதிர்வீட்டில் இருக்கக் கண்டிருந்ததினுல் அறிவேன். ஆனுல், ஆசிரியர் சிறந்த அறிவாளி. அவர் கைப்பிரம்புபோல அவருடைய அறிவும் கூர்மையாக இருக்கும் அல்லவா? அவருடைய கூரிய நுட்ப அறிவிலே பல வகையான எருமைகளைப் பார்த்திருக்கலாம் என்றெல்லாம் எண்ணிக்கொண்டிருந்தேன். திடுக்கென்று "நீ சொல்" என்று என்னைச் சுட்டிக் 'கேட்டுவிட்டார். என்ன செய்வது? பிரம்பு என்ருல் எனக்கு வெகு அச்சம். அதிலும் அக்காலத்தில் ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கைப்பிரம்பு என்ருல் சின்னஞ்சிறு பிள்ளைகளுக்கு எமன்தான். அந்த எமனுடைய பாசத்தையும் காணப்பயப்படா நெஞ்சர்; ஆனுல், ஆசிரியர் பிரம்பு என்ருல், சொல்ல முடியாத அச்சம். உடனே நெஞ்சை தைரியப்படுத்திக்கொண்டு சொன்னேன்:

"ஐயா, நான் ஒரே வகை எருமையைத் தான் பார்த்திருக்கிறேன்" என்றேன். "அசடு, நீ பட்டணவாசி, கிணற்றுத்தவளைக்கு நாட்டு வளப்பமேன்" என்றது சரியாய்ப்போச்சு. 'நீ சொல்?' என்று அடுத்தவனை நோக்கிக் கேட்டார். அவனுல் எதுவும் சொல்ல முடியவில்லை. மற்றும் வகுப்பில் எவரும் சொல்லவில்லை. பட்டிக்காட்டுப் பிள்ளைகள் சிலர் இருந்தார்கள். அவர்களும் சொல்லவில்லை,

"பிள்ளைகளே, நீங்கள் எல்லாரும் முழு அசடுகள். இச்சிறு கேள்விக்கு விடை தெரியவில்லையே. கேளுங்கள்.

எருமைகள் மூன்றுவிதம் உண்டு ; வீட்டு எருமை, நாட்டு எருமை, காட்டு எருமை என்பவைகள்'' என்றுசொல்லி மேஜையை ஒரு தட்டுத் தட்டிக் கைப்பிரம்பைக் காற்றில் வீசி அதையும் ஓர் அடி அடித்துவிட்டு வெகு பெருமிதமுடன் குறிச்சியில் உட்கார்ந்தார். எனக்கோ இம்மூன்று வகைகளுக்கும் என்ன வேற்றுமை என்று விளங்கவே இல்லை.

அக்காலத்தில் எங்கள் வீட்டில் பசுமாடுதான் இருந்தது. எங்கள் தகப்பனர் நாம் எல்லாம் பசுவின்பால்தான் குடிக்கவேண்டும் என்று சொல்லுவார். எருமைப் பால் கெட்டியானது, அது மந்தம் செய்யும் என்று கூறியிருந்தார். எங்கள் எதிர்வீட்டு அம்மாள் ஓர் எருமை வளர்த்தி அதன் பாலைக் கறந்து விற்பாள். விற்கும்போது அப்பாலைப் பார்த்திருக்கிறேன். எங்கள் வீட்டுப் பசும்பாலைப்போலவே அதுவும் இலேசாக இருந்தது. அது எனக்குப் புரியவில்லை. அடுத்த வீட்டுப்பையன் அதன் இரகசியத்தைச் சொன்னான். பாலில் தண்ணீர்விட்டு அதனை அந்த அம்மாள் விற்கிறாள் என்றான். அக்காலத்தில் எங்கள் ஊரில் தண்ணீர் மிக அரிது. கிணறுகள் வெகு ஆழம். அடடா, இத்தனை ஆழத்திலிருந்து தண்ணீர் மொண்டு இந்த அம்மாள் எருமைப் பாலோடு கலக்கி அதனை பசுவின் பால்போல ஆக்குகிறாளே ! எத்தனை வருத்தப்படுகிறாள், மந்தமான பாலை இலேசானபால் ஆக்கித் தருகிறாள் என்று அவளை மெச்ச வேண்டாமா என்று அவளைப் பாராட்டினேன்.

எதிர்வீட்டிலே மட்டுமல்ல, நான் எருமையைப் பார்த்தது. தினந்தோறும் ஊர்க் கால் நடைகளையெல்லாம் மேய்ச்சலுக்கு இடையன் அழைத்துக்கொண்டு செல்லும்போது அதனைப் பார்த்திருக்கிறேன். மந்தையில் முதலில் பசுக்கள், பிறகு நொண்டிகட்டின பசுக்கள், கடைசியில் எருமைகள் செல்லும். அந்த அணிவகுப்பைப் பார்த்தால் எனக்கு

யானைப் பாடம் நினைவுக்கு வரும். காட்டில் எதேச்சையாய்த் திரியும் யானை மந்தைகள் முதலில் அனுபவம் வாய்ந்த யானைகளும், பிறகு பெண் யானைகளும் குட்டிகளும் கடைசியில் பலமுள்ள யானைகளும் போகுமாம். இதன் கருத்து பகையான விலங்குகள் போருக்குவந்து எதிர்த்தால் பாது காப்பதன் பொருட்டாம். இந்தப் பாடம் நினைவிற்கு வரவே ஊர் மந்தையும் இதே மாதிரிதான் இருக்கும் என்று எண்ணினேன். இறுதியில் செல்லும் எருமைகள் மிக பலசாலிகளாக இருக்கும் என்று எண்ணினேன். மேலும் எருமை முகத்து அசுரனான மகிடாசுரன் வெகு பலசாலி என்று புராணம் சொல்லுகிறதல்லவா? ஆகவே, எருமை மிக்க பலமுள்ளது. ஆகவே, இறுதியில் செல்லுகிறது என்று எண்ணினேன். ஆனால் எனது நண்பன் ஒருவன், எருமை மந்தகதி கொண்டது. ஆனதினால் பின் செல்லுகிறது என்றான். நான் அதை ஒத்துக்கொள்வேனா?

வகுப்பில் கேள்விக்கு விடை அளிக்காது மரம்போல் நிற்கும் பிள்ளைகளை நோக்கி ஆசிரியர் ‘என்னடா எருமை மாட்டின்பேரில் சிறு நீர் பேய்ந்தால்போல் நிற்கிறாயே? என்பார். எனக்கோ அதன் பொருள் புரியவில்லை. ஒரு நாள் இலேசாக மழை பெய்துகொண்டிருந்தது. எங்கள் வீட்டு இறவாரத்திலிருந்து மழைநீர் சிறு தாரையாக ஒழுகிக்கொண்டிருந்தது. அதன் அடியில் ஒரு தெரு எருமை படுத்துக்கிடந்தது. அதன் முதுகில் நீர்த்தாரை இலேசாக விழவே அது எழுந்து ஓடும் என்று இருந்தேன். ஆனால் அது எழவே இல்லை. அங்கேயே முரட்டுத்தனமாக படுத்துக்கிடந்தது. நான் முரட்டுத்தனம் என்று நினைத்தேன். அடுத்தவீட்டு நண்பன் அதற்கு மகிழ்ச்சி என்றான். இவ்வாறு அடிக்கடி எங்களுக்குள் கருத்துவேற்றுமை தோன்றுவதுண்டு. எருமைத்தோல் மிகக்கெட்டி. குளிர்

நீர் தாரையாக விழுந்தால் அதற்கு இன்பம். ஆகவேதான் 'அந்த மந்த மிருகம் எழுந்திருக்கவில்லை' என்றான் நண்பன். இந்த வகையில் வீட்டு எருமையின் குணங்களை நான் அறிந்துகொண்டேன்.

வீட்டெருமை பால் கறக்கிறதை அறிவேன். அது பெண் எருமை. ஆண் எருமை என்ன செய்யும் என்று நான் பார்த்ததில்லை. ஒருநாள் என் சிறிய தந்தையார் மலையாள நாட்டிற்கு ஒரு காரியமாகச் சென்றார். எனக்கு விடுமுறையாக இருந்ததினால் என்னையும் அழைத்துச் சென்றார். வாளையாறு தாண்டினதே எங்கும் அடர்ந்த காடு. அதன் வனப்புகளைக் கண்டு மகிழ்ந்துகொண்டு சென்றேன். கஞ்சிக்கோடு தாண்டினதும் இருபுறங்களிலும் செழிப்பான வயல்களைக் கண்டேன். மழை மிகுதியாக நெல் சாகுவளி செய்ய மழைநீரே போதுமாம். சிலபேர் வயல்களை உழுதுகொண்டிருந்தார்கள். எருக்கு மாடுகளுக்குப் பதிலாக எருமைகளைப் பூட்டி உழுதுகொண்டிருந்தார்கள். எனக்கு மிகுந்த வியப்பு. ஆண் எருமைகள் உழுவதற்குப் பயன்படுகின்றன என்று அறிந்தேன். மேலும், அங்கே வண்டிக்கும் எருமைகளைக் கட்டி ஓட்டுகிறார்கள். அவைகள் வைக்கோல் முதலிய பார வண்டிகள். அப்போதுதான் என் ஆசிரியர் சொன்ன நாட்டு எருமை நினைவு வந்தது. வீட்டு எருமையைக் காட்டிலும் நாட்டு எருமை பலசாலி என்று எண்ணினேன்.

ஒருநாள் என் சிறிய தந்தையார் என்னை ஒரு செல்வவானுடைய மாளிகைக்கு அழைத்துச்சென்றார். அவர் வீட்டு முன் வாசலிலே தலைக்கதவுக்கு மேலே ஒரு பெரிய எருமைத்தலை வைத்திருந்தது. அத்தனைப் பெரியது நான் கண்டதே இல்லை. அது காட்டு எருமையின் தலை என்று என் சிறிய தந்தையார் சொன்னார். 'காட்டிலே எதேச்சை

யாய்த் திரிவது. அது மிகப் பயங்கரமானது. யானையையும் விரட்டிவிட வல்லது. அதனை ஒரு சிகாரி (வேட்டைக் காரன்) துப்பாக்கியால் சுட்டுக்கொன்று தலையை வெட்டிப் பஞ்சினால் அடைத்து இங்கே இருக்கும் இந்த செல்வ வானுக்கு விற்றிருக்கிறான்' என்று சொன்னார்.

அவ் வரலாற்றைக் கேட்க எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. காட்டில் திரியும் எருமை மிகப் பயங்கரமானது எனினும் இங்கே சுவரில் தொங்கும்போது அலங்காரமாக இருக்கிறது. ஆனால் பயங்கரத்தன்மை போகவில்லை. இங்கே தான் நான் முதன்முதலாகக் காட்டு எருமையைக் கண்டது.

பின் நாளிலே ஒருமுறை தேக்கடி சென்று பெரியாற்றின் தேக்கத்தைக்கண்டு நீராவிப் படகில் உல்லாசமாகச் சென்றோம். மலைவழியின் இடையிலே தேக்க நீர் வளைந்து வளைந்து செல்லுகிறது. ஆங்காங்கே மலைச்சிகரங்கள் நீர் மட்டத்தின் மேல் உயரக்கிளம்பி நிற்கின்றன. அம்மலைச் சிகரங்கள் பச்சைப்பசேல் என்று புல் பூண்டுகளால் போர்த்தப்பட்டிருக்கின்றன. அன்னம்போல் படகு நீரில் மிதந்துகொண்டு போக எதிரிலும் மருங்கினிலும் புல் திட்டுக்கள் படர்ந்து கிடக்க அந்தப் பயணத்தில் யான் பெற்ற மகிழ்ச்சியைக் கூறவும் வேண்டுமோ? எதிரே தொலைவில் யானைகள்போல பல விலங்குகள் புல் தரை நடுவில் மெதுவாக நடந்துகொண் டிருந்தன. அவைகள்தான் காட்டெருமைகள் என்று படகோட்டி சொன்னான். அவை மிகப் பயங்கரமானவை என்றும் ஆளைக் கண்டால் மோதிக் கொன்றுவிடும் என்றும் சொன்னான். யானையையும் பழக்கி விடலாம். காட்டெருமை என்ற பைசனை (Bison) பழக்கவே முடியாது என்றான். அப்போதுதான் பயங்கரமானதும் பலமுள்ளதும் பழக்க முடியாததுமான ஒரு பிராணி காட்டு எருமை என்று அறிந்தேன். வீட்டு எருமையைப்

போல் காட்டு எருமையை அருகில் பார்க்காவிட்டாலும் பணக்காரர் மாளிகையிலும் கண்காட்சிச் சாலேகளிலும் பார்க்கலாம் அல்லவா! அதுவே போதும். கோவைக் கோனியம்மன் கோயிலில் பண்டைக்காலத்தில் இருளர் தலைவன் அம்மனுக்குத் திருப்தி அளிக்கக் காட்டு எருமையைத்தான் பலியிட்டான் போலும்! மகாநவமித் திருநாளில் கொலுவு வீற்றிருக்கும் சூடாம்பிகை என்ற சாமுண்டீசுவரி காட்டு எருமையாகிய அசுரனைத்தான் வதைத்து மனித வருக்கத்தைக் காத்ததுபோலும் என்றெல்லாம் நினைத்தேன்.

எங்கள் வகுப்பு ஆசிரியர் கேள்விக்கு விடை தராத பிள்ளைகளைப் பார்த்து "அட எருமைகளே!" என்று விளிப்பார். அதைக் கேட்ட நான் மனிதர்களிலும் எருமைகள் உண்டு என்று நினைத்தேன். ஏனெனில் உலகத்திலேயே அறிவாளிகளில் சிறந்த அறிவாளி எங்கள் இரண்டாம் வகுப்பு ஆசிரியர் என்று அவரது பிரம்பைக் கண்டு வியந்துகொண்டிருந்த நான், பிள்ளைகளை அவர் எருமை என்று கூறி அழைத்தால் அது பொய்யாக இருக்காது என்றுதான் நினைத்தேன். ஒருநாள் அவரே புன்னகை செய்துகொண்டு ஒரு பிள்ளையைப் பார்த்து 'எமன் ஏறும் பரியே' என்று விளித்தார்.

அதற்குப் பொருள் என்ன என்று விசாரித்தேன். எமன் ஏறும் பரி அல்லது குதிரை எருமை ஆகும் என்று கண்டுகொண்டேன். எருமைக்குக் குதிரை உவமானம். ஆனால், எருமை குதிரைபோல் ஓடும் அல்லவா? எங்கள் வீட்டுக்குதிரை ஓடுவதில் பேர்போனது. கோவையிலேயே அதைப்போல் இல்லை என்பர். ஆகவே, அதனை உவமையாக ஓர் எருமையைக் கூறும்போது எருமையும் எமன் ஏறினால் வெகு மும்முரமாகவும் விரைவாகவும் ஓடும் என்று எண்ணினேன். ஆகுநாள் வந்தால் எதுவும் தானே முடியு

மாம். எருமைக்கும் அதுவே யாம். ஆசிரியர் விளித்த பிள்ளை ஒரு செல்வவான் பிள்ளை. செல்வம் எதையும் ஊக்கும் அல்லவா! ஆகவேதான் ஆசிரியர் அவனை நோக்கி பரிபோன்ற எருமைக்கு இலக்கு ஆக்கினர் என்றான் அடுத்த வீட்டு நண்பன். ஆகவே, வீட்டு எருமை பொறுமையானது என்றால், நாட்டு எருமை வலிவுள்ளது, காட்டெருமை பயங்கரமானது. அவைகளைப் போலவே, மானிட எருமைகளும் உண்டு என்று முடிவிற்கு வந்தேன்.

காட்டு எருமைகள் பயங்கரமானவை! காடுகளிலே தன்னந்தனியே வசிக்கும், பிறரிடம் பழகாது. எப்படிப்பட்ட யானை போன்ற விலங்குகளாயினும் அருகில் வந்தால் தாக்கித் தூரத்திவிடும் இயல்புகொண்டவைகள். அவைகளைப் போலவே மக்களில் வெகுநாளிலிருந்து குறுநில மன்னர்கள் நாட்டில் வாழ்ந்து வந்ததுண்டு. பாமர மக்களிடம் சேரார்கள். போர்த்தொழிலே ஆர்வமிகுந்த தொழிலாகக்கொண்டு யதேச்சையாக ஆணை செலுத்தி வந்தார்கள். பண்டைக் காலத்தில் வேளிர் என்றும், இடைக்காலத்தில் குறுநில மன்னர் என்றும், அண்மைக்காலத்தில் பாளையக்காரர்கள் என்றும், நாட்டுப் பரிபாலனத்தில் விளங்கி இருந்தார்கள். இவர்களைக் கண்டுதான் என்னமோ ஒரு புலவர்

*"கட்டாண்மை வேந்தர் பெருமை எண்ணாதவர் கன்னத்தடி
பட்டாலல்லாமல் வணங்கார் விடமுட்படாமல் சும்மா
தொட்டாலதைப் பிள்ளைப்பூச்சி என்பார் முட்சுருக்கெனவே
கொட்டாமல் தேளென்பரோ அச்சுதாநந்த கோவிந்தனே."

என்று பாடினர்.

காட்டெருமைகள் எப்போதும் எல்லோருக்கும் கொடியவைகளா? இல்லவே இல்லை. தம்மை எதிர்க்கும் பகை விலங்குகளுக்கே கொடியவைகள். தம்மினத்தார்க்கும் தம்

குட்டிகளுக்கும் கொடியவை அல்ல. ஏனைய தாப்பு விலங்குகளைப் போலவே தம் குட்டிகளுக்கு அன்பாகப் பால் தந்து காப்பாற்றும். அதுபோலவே மக்களிடை இருந்த குறுநில மன்னர்களும் சில பண்புகளில் சிறப்புற்றிருந்தனர். வேளிர்கள் போர்களில் வெகு கொடியவர்களாக இருந்தபோதிலும் தம்மை நாடின புலவர்களிடம் மிகுந்த ஈகைக் குணம் காட்டினர்கள். பின் காலத்துப் பாளையக்காரர்களும் அவ்வாறே உதாரகுணம் காட்டியுள்ளார்கள். மற்றும் காட்டு எருமைகளில் சில வகைகள் பயன்படக் கூடியவைகள் உண்டு. இமயமலைச் சாரலில் யாக் என்ற காட்டெருமை உண்டு. பெரிய மிருகம். வலிவுள்ளது. அடர்ந்த மயிர்கொண்டது. ஆகையால், 10,000 அடிக்குமேல் மிகக் குளிரான பிரதேசங்களியே பெரும் பளுவைத் தாங்கி மலை மேல் ஏறுமாம். அந்நாட்டாருக்கு அவை மிகுந்த பயன்படும். அவை போலவே தனித்த கொடிய பிரதேசங்களில் சிறப்பாகக் கள்ளர் மறவர் நாடுகளிலே பாளையக்காரர்கள் அந்நாட்டு மக்களுக்கு மிகுந்தபயன் அளிப்பார்கள். ஆனால் பகைவர் கண்டால் அவர்களை அடக்க முடியாது என்பர். இந்த வகையில் மக்களிடம் காட்டெருமைகள் உண்டு என்றறிய வேண்டும். அவ் வெருமைகளின் குணாதிசயங்களைப்பற்றி அறியவேண்டும் என்ற அவா வெகு நாளாக இருந்தது. பல இடங்களில் கண்ட அவ்வாட்களைச் சந்தித்தபோது அடைந்த அனுபவங்களில் சிலவற்றைக் கூறுவோம்.

விலங்குகளிலே உள்ள காட்டெருமைகள் எங்கே சஞ்சரிக்கின்றன. அடர்ந்த காடுகளிலும் மலைப் பாகங்களிலும் உள்ள பெரும் பசும்புல் தரைகளிலுமே திரிகின்றன. அதுபோல மனித வருக்கத்தில் காணும் காட்டெருமைகள் எங்கே சஞ்சரிக்கின்றன? அறிவின்மை காணும் பட்டிக் காடுகளிலும், தம் வல்லமை அறியாது பிறருக்காக

வேளாண்மை செய்து உழைக்கும் நாட்டுப் புறங்களிலும் வசிக்கிறார்கள். அப்படிப்பட்ட பட்டிக்காடுகளும் நாட்டுப் புறங்களும், அடர்ந்த காடுகளுக்கும் பசும் புற்றரைகளுக்கும் சமானம். அங்கே காட்டெருமைகள் யானை முதலிய விலங்குகளை எதிர்த்துத் துரத்துவதுபோல நாட்டுப்புறங்களிலும் மற்ற வலிமை பொருந்திய வெறும் தலைவர்கள் தோன்றினால் அவர்களை விரட்டித் துரத்திவிடுவார்கள். இவ்வித நாட்டாண்மைத் தலைவர்களே காட்டெருமைகள் போன்றவர்கள். அறிவுள்ள குடிகளிடம் இவர்கள் மூர்க்கத்தனமும் அதிகாரமும் சிறிதும் செல்லாது.

காட்டெருமைகளிலே யாக் போன்ற உழைப்பாளிகளும் இருக்கலாம் என்றோம் அல்லவா! சில மானுட எருமைகள் அவ்வாறு மக்கள் நன்மைக்குப் பயன்படுகிறார்கள். பல தம் குடிமக்களுக்கு யாதொரு பயனும்இன்றி சுகசீவிகளாகக் காலம் தள்ளுபவர்களே இருப்பார்கள். காட்டு எருமைகள் காடுகளில் வேட்டையாடப்பட்டு இப்போது மறைந்து போகத் தொடங்கி விட்டன. இனி சிறிது காலத்திற்குள் காட்டெருமைகளையே காண முடியாமற் போகும். அது போலவே நமது நாடுகளிலும் மானிடக் காட்டெருமைகள் கூடிய விரைவில் தொலைந்து போகக்கூடும். அதற்கு அறிகுறிகள் இப்போதே தொடங்கிவிட்டன. ஆகவே, அவர்களின் வரலாறுகள் சிலவற்றை எடுத்துக் காட்டாக எழுதி விடுதல் நன்று அல்லவா ?

இங்கே எடுத்தாளப்படும் காட்டெருமைகளின் வரலாறுகள் பொதுவாய் மானுட இயற்கையைக் கண்டு எழுதினவைகளே யன்றி ஒரு குறிப்பிட்ட நபரையாவது இடத்தையாவது நினைத்து எழுதியவைகள் அல்ல. ஆகையால் எவரும் இக்கதைகளைப் பற்றி வீண் புகைச்சல் கொள்ள வேண்டியதில்லை. செய்திகள் உண்மையாக இருக்கலாம்.

ஆட்கள் உண்மை என்று சொல்லமுடியாது. பல செய்திகள் கதைக்கு வேண்டியவாறு சேர்த்தும் பிணைத்தும் இணைத்தும் குறைத்தும் ஆக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே இவைகள் ஒருவரை ஏளனம் செய்யவோ அவமதிக்கவோ எழுதப்பட்டவை அல்ல என்று இங்கே வற்புறுத்தப் படுகின்றன.

ஆங்கிலத்திலே ஒரு பழமொழி உண்டு. “இந்தக் குல்லாய் உன் தலைக்குச் சரியானால் நீ அணிந்துக்கொள்ளலாம்” என்பது. அதைப் போலவே இங்கிருக்கும் கதைகள் உங்கள் கதையைப் போல இருக்கிறது என்று நீங்கள் நினைத்தால் அதனை நீங்கள் ஏற்றுக்கொள்வதில் தடையில்லை. அவைகள் உங்களுக்காக எழுதினவைகள் அல்ல. நாட்டில் நடைபெறும் இயற்கைகளை ஒருங்கு சேர்த்துக் கதைகள்போல இணைக்கப்பட்டுள்ளன. அப்படி எண்ணாமல் என் தலைக்கே இந்தக் குல்லாய் சரியாக இருக்கிறது என்று நீங்கள் பிடிவாதமாகச் சொன்னால் அதனைக் குறைகூறவும் மறுக்கவும் திருத்தி அமைக்கவும் இந்தத் தையல்காரனுக்கு ஆசையும் இல்லை, ஆற்றலும் இல்லை, ஆர்வமும் இல்லை என்றறிக. அவன் அந்த உடன்பாட்டிற்குப் பொறுப்பாளியும் அல்ல என்று உறுதி கூறுகிறான்.

நாட்டில் உள்ளக் குணங்கள் நீங்கி நன்மை நடைபெற வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் இவைகள் தொகுக்கப்பட்டன. கோயில் பூனைகள், வீட்டு எலிகள், நாட்டு நாய்கள் எப்படி எழுதப் பெற்றனவோ அதே முறையில் தான் காட்டெருமைகளின் சுய சரிதங்களும் எழுதப்படுகின்றன. இவைகளை மக்கள் படித்து ஏற்றவைகளை எடுத்துக்கொண்டு ஏற்காதவைகளைத் தள்ளிவிடவும் வேண்டிக்கொள்ளப்படுகிறார்கள்.

காட்டு எருமைகள்

காட்டு எருமைகள்

1. மெல்லுடையில் நல்லிசைகள்

1

காலை நேரம்; என் அறையில் உட்கார்ந்துகொண்டு, ஏதோ என் சொந்த அலுவலைப் பார்த்துக்கொண்டிருந்தேன். தெருவில் ஒரு விசை வண்டி விரைவாக வந்து என் வீட்டின் முன் நின்றதுபோல் ஒலி கேட்டது. சரி, யாரோ என்னைப் பார்க்க வருகின்றார் என்று எண்ணினேன். நினைக்க நினைக்க என் ஆள் மேலே ஓடிவந்து ஒரு சிறு அழகிய முகவரிச் சீட்டை என் கையில் கொடுத்தான். அதில் அளற்றூர் ஜமீன்தார் என்று அச்சடித்திருந்தது. 'வரச்சொல்' என்று சொல்லிவிட்டு, என் உடையைத் திருத்திக்கொண்டு வாயிலிடம் சென்றேன். ஒல்லிய உடல், உயர்ந்த வடிவம், மெல்லிய உடை, நறைத்த தலை, இப்படிப் பட்டவர் எதிரே வந்துகொண்டிருந்தார். ஜமீன்தார் போலத் தோன்றவில்லை. அவருடைய சேவகன் என்று நினைத்தேன். அவருக்கு முன்னால் இரண்டு சிறு சீமை நாய்க்குட்டிகள் ஓடிவந்தன. அவருக்கு என்று வைத்திருந்த ஆசனத்தில் அவைகள் ஏறி அமர்ந்தன. அதனைக் கண்டவுடனே, அவர் சேவகன் அல்ல, அசல் ஜமீன்தாரே என்று உறுதி செய்துகொண்டேன். நடந்ததைச் சொல்லுவதன் முன், அவர் அழகிய உடையைப்

பற்றிச் சொல்ல வேண்டாமா? அதனை அடிமுதல் முடி வரை வருணிப்போம். மகமலால் இணைத்த சரிகை மிதியடி அணிந்திருந்தன அவருடைய திருவடிகள். அரையில் கட்டியிருந்த காசித்துப்பட்டா அடிவரையில் தொங்கிக் கொண்டிருந்தது. தற்காலப் பள்ளிப்பிள்ளைகளின் முண்டு போல் அது உடுக்கப்பட்டிருந்தது. காசித்துப்பட்டா என்றால், இரத்தச் சிவப்பும் ஊதா நீலமும் இணைந்த பட்டுச் சேலையில் பூக்கள்போல தங்கச் சரிகைப்புடங்கள் போட்டது அது. ஒருவேளை அரசியாரின் "தோயாப் பூந்துகிலை" மறந்து உடுத்திக்கொண்டாரோ என்றும் எண்ணலாம். அப்படியல்ல. இந்த மன்னர் அந்த வண்ணம் அமைந்த துகிலைத்தான் விருப்பமுடன் அணிவாராம். மார்பிலும் அது போன்ற வேறு பட்டுக் கச்சு அணிந்திருந்தார். கஞ்சுகம் என்றால் அதற்குப் பொருந்தும். உத்தரியமோ ஓர் அரசியின் தாவணியும் தோற்றுவிடும். தலையில் வெண்மயிரைக் கருப்பு மையால் நன்றாக நீவி சீப்பால் கோதிவிட்டு வகுடு கீறி வாசனை நெய்யின் 'மணங்கமழ் நறுமணம்' வெகு தொலைவுவரை எட்ட அணி செய்து இருந்தார். இவ்வழகிய கோலத்தைக் கண்டு நீங்கள் மெச்சுவீர்கள் என்று எண்ணுகிறேன்.

ஜமீன்தார் வாயிற்படி வந்ததும் அவருக்கு வணக்கம் செய்தேன். அவரும் புன்னகையுடன் மறு வணக்கம் செய்தார். "தங்கள் வரவு நல்வரவு ஆகுக, தாங்கள் வருவதற்கு முன் தங்கள் நாய்க்குட்டிகள் வந்து அமர்ந்து இருக்கின்றன. தாங்கள் எழுந்தருள வேண்டும்" என்றேன்.

"மிகவும் நன்றி. அவைகள் நாய்க்குட்டிகள் அல்ல. நாய்கள்; உருவம் சிறியவை; ஆனால் நடுவயதானவை."

" ஆமாம் அறிந்தேன். உருவத்தைப் பார்த்துத்தான் அவைகள் குட்டிகள் என்றேன். முந்தி ஒருமுறை இந்த சாதி நாய்களைப் பார்த்திருக்கிறேன் "

" அப்படியா ? எங்கே பார்த்திருக்கிறீர்கள் ? அவைகள் மிக புத்திசாலிகள் அல்லவா ?"

" உண்மை. புத்திசாலிகள் அல்லாவிடில் நீங்கள் வைத்திருப்பீர்களா ? அவைகள் மிக புத்திசாலிகள் நன்றியுடையவைகள், மேலும் ரோஷமுடையவைகள்."

"நீங்கள் எங்கே கண்டீர்கள் என்று சொல்லவில்லையே?"

"சொல்லுகிறேன் கேளுங்கள். ஒருமுறை இராயலுசீமையில் புகைவண்டியில் போய்க்கொண்டிருந்தேன். ஒரு வெள்ளையன், புகைவண்டி அதிகாரி, தன் குடும்பத்தோடு என் வண்டியில் ஏறினான். அவனோடு இவ்வகைப் போன்ற இரண்டு நாய்கள் ஏறின. அவைகள் ஒரு கணமேனும் சும்மா இருக்கவில்லை. வெகு சுருசுருப்பு. ஆனால் சொன்னபடி கேட்கும். மிகவும் குள்ளம். ஆகையினால் ஜன்னலை எட்ட முடியவில்லை. ஒரு நிலையம் வந்தது. அங்கே ஒரு பெரிய நாய் நின்றுகொண்டு இருந்தது. அதைக்கண்டு உருமித் துறத்திவிட்டன. அவைகளின் ரோஷத்தை அன்றுதான் கண்டேன். "

"அந்த வெள்ளைக்காரனுக்கு எப்படி கிடைத்ததோ ?"

" ஆமாம், கேட்டேன். அவனுடைய நண்பன் ஒரு ஜமீன்தாரன் கொடுத்தானாம். "

" சரி, அறிந்தேன். இல்லாவிடில் அவனுக்கு எப்படிக் கிடைக்கக்கூடும். ஜமீன்தாரர்கள் தான் இந்த உயர்ந்த சாதி நாய்களை வாங்கவும் வளர்க்கவும் கூடும். "

" மிகவும் சரி, 'உடல் சிறியர் என்று இருக்க வேண்டாம்' என்று ஔவையார் சொன்னது இந்நாய் போன்ற

பொருள்களைப் பார்த்துத்தான் இருக்கவேண்டும். இதனை போமெரீனு என்பார்கள்."

"வெகு மகிழ்ச்சி. உங்களுக்கு எல்லாம் தெரியும் போல் இருக்கிறதே!"

"தங்களைப் போன்ற பெரியவர்களிடம் பழகினால் ஏன் எல்லாம் தெரியாது" என்றேன்.

"இந்த நாய் ஒன்று ரூ. 500 போட்டு வாங்கினேன். இந்த இரண்டிற்கும் நாள் ஒன்றுக்கு ரூ. 5 தீனி ஆகிறது."

"'நீரளவே ஆகுமாம் நீராம்பல்' என்றபடி இந் நாய்க்கு வேண்டிய உணவு வேண்டாமா? இவைகள் குறுநில மன்னர்களுக்கே ஆகும்."

"நானென்ன அப்படி மிகுதியாக நாய்களை வளர்க்கிறேனு? வடக்கில் ஒருவர் இருக்கின்றூர் அவரிடம் 500 விதம் விதமான நாய்கள் இருக்கின்றனவாம்."

"உண்மை. நானும் கேள்விப்பட்டிருக்கிறேன். அவருக்கு "குக்கலுராஜு" என்று பெயரும் வந்துவிட்டதாம்."

"ஓகோ, உங்களுக்கு அதுவும் தெரியும்போல் இருக்கிறது."

இதற்குமேல் நாய்களைப் பற்றிய ஆராய்ச்சி அவர் செய்யவில்லை. ஆனாலும் அந்நாய்கள் என் வீட்டின் அருமையான பரப்பு, சாய்வுக்குறிச்சி இவைகளில் செய்த துட்டத்தனத்திற்கு அளவே இல்லை. எப்போது ஜமீந்தார் வெளியே கிளம்புவாரோ என்று இருந்தேன்.

பிறகு, தான் வந்த காரியத்தைச் சொல்லத் தொடங்கினார். தான் மிகவும் திருப்தியடைந்ததாகக் காட்டுவதற்கு ஒரு இருமல் இருமிவிட்டு மெல்லப் பேசினார்.

"பொன்னூற்றருவிக் கருகில் ஒரு சுவாமிகள் தபோவனம் இருப்பதை அறிந்திருப்பீர்கள். அந்தத் தபோவனத்

திற்கு நான் ஒரு சீடன். மிகுதியாக நன்கொடை கொடுத்திருக்கிறேன். சுவாமிகள் சமீபத்தில் சிவபதம் அடைந்ததும் தெரிந்திருக்கலாம். தற்போது எம்போன்ற சீடர்களை விலக்கிவிட்டு வேறு தாறுமாருன செயல்களைச் செய்யச் சில பேர் முயன்று வருகிருர்கள். இதற்குத் தங்கள் உதவி வேண்டும்."

"ஆமாம். எனக்கும் இந்தத் தகவல் கிடைத்தது. விவரமாக அறிய வேண்டிய செய்திகளை எழுதி அனுப்புங்கள். நான் கூடியவரை முயற்சி செய்கிறேன்.

"மிகவும் மகிழ்ச்சி. தாங்கள் செய்வீர்கள் என்ற உறுதி உண்டு. அதனுல்தான் நேரில் சொல்ல வந்தேன்."

"எங்கள் சமஸ்தானக் கோயிலுக்கு விஜயம் செய்ய வேண்டும். அடுத்த மாதம் திருவிழா நடக்கும். அழைப்பு அனுப்புகிறேன். அவசியம் வரவேண்டும்."

"அதற்கென்ன தாங்கள் அழைக்கும்போது வராமல் இருக்க முடியுமா?"

"வணக்கம்" என்று சொல்லிப் புறப்பட்டார். நாய்களும் உடனே புறப்பட்டன. 'தொலைந்தனர்' என்று மனதில் எண்ணிக்கொண்டு நாற்காலியில் சாய்ந்தேன்.

* * * *

2

அளற்றூர் மிகப் புகழ்பெற்ற பண்டைய பாளையப்பட்டு. தஞ்சைச் சோழர், கூடற் பாண்டியர் முதலியோர் காலத்திலிருந்தே அதன் பெருமை தமிழ்நாடு எங்கும் பரந்திருந்தது. பாண்டிய மன்னர் முச்சங்கங்களை வைத்துத் தமிழ் ஆராய்ந்து வந்தனர் என்ருல் அளற்றூர்க் குறுநில மன்னர்களோ தங்களைப் பொருத்தின மட்டில் ஒரு செந்தமிழ்ச்

சங்கம் வைத்துப் புலவர்களை ஆதரித்து வந்தனர். ஆகவே அவர்களுடைய பேரவையில் எப்போதும் புலமை விளங்கிக் கொண்டே இருந்தது. கூடலில் கடைச்சங்க காலத்தில் இயற்றமிழ் மிளிர்ந்து ஓங்கிச் செழிப்பு அடைந்ததானால் அளற்றூரிலோ முத்தமிழும் போற்றப்பட்டது என்று அறிய வேண்டும். இயற்றமிழைவிட ஆடலும் பாடலுமே சிறப்பாகப் போற்றப்பட்டன. அந்த மணம் நாளது வரையில் அங்கே பரிமளித்துக் கொண்டே இருக்கிறது.

தமிழ்த் தன்னரசு வலிகுன்றி மேன்மை யடையவே வடநாட்டிலிருந்து கருநாடகர்கள் தெற்கே புகுந்தனர். தமிழ்நாடு முழுவதும் தம் கைவசப்படுத்திக் கொண்டு தமக்காக ஆட்சி புரிவதன் பொருட்டு நாயக்கர்களை அனுப்பினார்கள். மதுரையில் விசுவநாத நாயகன் கருநாடக மன்னனின் பிரதிநிதியாக ஆண்டான். அவன் ஆட்சி தொடங்கின போது நாடு சுற்றிலும் சின்னஞ் சிறு தலைவர்கள் நாட்டாண்மைக்காரர்களாக ஆண்டு வருவதைக் கண்டான். அவர்களிலே தன் வசம் நம்பிக்கையோடு இருக்கக் கூடிய குடும்பத்தலைவர்களைத் தான் ஏற்றுக்கொண்டு அவர்களைப் பாளையக்காரர்களாக வைத்துக் கொண்டான். தனக்கு அடங்காத பெயர்களை நீக்கிவிட்டு அவர்களுக்கு மாறாகத் தன்னுடைய சேனைத்தலைவர்களை வைத்துக் கொண்டான். இவ்வகையில் மூன்றில் இருபங்கு நாயக்கர்களும் ஒருபங்கு பண்டய தமிழர்களும் பாளையக்காரர்கள் ஆனார்கள். அப்படி உண்டான தமிழ்த்தலைவர்களில் ஒருவர் அளற்றூர்த் தலைவர்.

பாளையக்காரர்கள் என்றால் ஒரு குறிப்பிட்ட தொகுதிப் படைகளுக்குத் தலைமை பூண்டவர்கள் என்பது கருத்து. ஆகவே அவர்களுடைய சிறு வட்டத்திற்குப் பாளையப்பட்டு என்ற பெயர் வழக்கத்தில் இருந்தது. அந்த வட்டத்தில்

இருக்கும் ஊர்களின் மக்கள் அவர்களின் குடிகள் ஆவார் கள். அவ்வட்டத்துக் கடமைகளை அவர்களே வசூலித்துக் கொள்வார்கள். அதிலிருந்து பெரிய மன்னனுக்கு ஒரு பகுதி கப்பமாகத்தரப்பட்டது. நாட்டு மன்னன் போர் புரிய எழுந்தால் பாளையக்காரன் தனக்குக் குறிப்பிட்ட படை களைக் கூட்டிக்கொண்டு அரசனுக்கு உதவியாகச் செல்ல வேண்டும். இந்த வகையில் பாளையக்காரன் அரசனுக்குக் கட்டுப்பட்டவன். அந்த உதவிக்காக அரசனும் பாளையக் காரனுக்குப் பகை ஒன்றும் வராதபடி காப்பு அளிப்பான். இந்த முறையில் அரசியல் திட்டம் உலகமெங்கும் ஒரு காலத்தில் இருந்தது. ஆனால் தமிழ் நாட்டிலே அது கரு நாடக சாம்ராஜ்ஜிய காலத்தில் மிகவும் சிறப்பாக இருந்தது. இப்படிப்பட்ட குறுநிலத் தலைவர்களில் ஒருவன் அளற் றூர்த் தலைவன்.

நாம் முன்னமே குறிப்பிட்டபடி அளற்றூர்த் தலைவர் கள் தமிழ் ஆராய்ச்சியில் சிறப்பாக இசையில் நாடகத்தில் ஈடு பட்டு வந்ததினால் அவர்கள் படைத்திறத்தில் மிகுதியாக விளங்கவில்லை. ஆகவே, இவர்களைக் குறித்து மதுரை மன்ன னுக்கு யாதொரு கவலையும் ஏற்படவில்லை. வேறு தலைவர் கள் அடிக்கடி கப்பங் கட்டாமலும் போர்த்தினவு கொண்ட வர்களாகவும் இருந்ததினால் அவர்களுடைய ஆட்சியில் நாட்டு மன்னன் அப்போதைக்கப்போது கவலைகொள்ள வேண்டி வந்தது. தலைவர்கள் மாற்றப்பட்டும் போனார்கள். ஆனால் அந்த மாறுதல் அளற்றூரில் ஏற்படவே இல்லை. தலைவனே பண்டைத் தலைமைக்கு வேறொரு ஆளை நியமித் திருந்ததினால் யாதொரு கவலையும் இன்றிப் போர்க்காலத்தில் அவனை அனுப்பிவிடுவான். தான் மிக நிம்மதியாகத் தன் தலைமை ஊரில் இசை ஆராய்ச்சி செய்து கொண்டிருப்பான்.

இந்த வகையில் நாடு, நகரம், மக்கள், அவர்களுடைய சுகதுக்கங்கள் முதலியவைகளில் யாதொரு கவலையும் இன்றி அளற்றூர்த் தலைவர்கள் தங்கள் வாழ்நாளை குடும்பப் பெருக்கத்திலும் இன்பசாகரத்திலும் மூழ்கினவரார்களாய் காலைக் கழித்து வந்தார்கள்.

ஆடல் பாடல்களில் ஆர்வம் கொண்டிருந்தால் அதற்கு ஏற்ற நட்பும் சின்னங்களும் தொடரும் அல்லவா? மாலை நேரங்களிலும் இரவுகளிலும் பொழுது போக்கிற்காகப் பல நண்பர்கள் கூடுவார்கள். அவர்கள் இசை நாடகங்களில் பெயர் பெற்ற ஆர்வம் கொண்டவர்களாகவே இருப்பார்கள். ஆடல் பாடல்களிலே தலைவனும் கலந்து கொள்ளுவான். அக்காலத்துப் பழக்க வழக்கங்களின்படி இருபாலர்களும் கலந்துகொள்வார்க்ள். வேண்டிய காலங்களில் தலைவன் விருப்பத்தின்படி புதியன புகுதல் வகையிலே பால் மாறு தல்களும் ஏற்படும். அந்தத் திருவிளையாடல்களில் தலைவனும் ஈடுபடுவான். வெளிப்படை நாடகங்களிலும் தெருக்கூத்துக்களிலும் ஆண்கள் பெண்களைப் போல நடிப்பு கொள்ளும்கால், அரண்மனைப் பொழுது போக்குத் திருவிளையாடல்களில் இவ்வித மாறுதல்கள் ஏற்பட்டால் என்ன தடை ஏற்படும்? ஆகவே, அளற்றூர் அரண்மனையில் வெகுகாலமாக இவ்விதக் கூத்துக்கள் நடைபெற்று வந்தன. கூத்தாசிரியர்களுக்கும் இசையாசிரியர்களுக்கும் அங்கே மிகுதியாக மதிப்பும் வருவாயும் இருந்தன. ஆடல் அரங்கு கள் கட்டப்பெற்றிருந்தன. அவற்றில் வெறும் ஆடல் மேடையும் உண்டு. நீராடல் குளமும் உண்டு. இவைகளில் நிரந்தரமாக கேளிக்கைகள் நடைபெற்று வந்தன.

இந்திய வரலாற்றில் படித்த ஒரு செய்தி இந்தச் சமயத்தில் நினைவிற்கு வருகின்றது. டெல்லியில் ஆண்ட ஆப்கானிய மன்னுதி மன்னர்களில் மிகப் புகழ்பெற்ற கில்ஜி

வமிசம் ஒன்று ஆகும். அதில் வாகைசூடி வெற்றி பெற்ற மன்னர் பலர் இருந்தனர். அவர்களில் இறுதியில் இருந்த மாலிக்காபூர் என்ற தலைவனைச் சதிசெய்து கொன்ற பிறகு மூபாரக்கு என்ற ஒரு சிற்றின்பன் அரியாசனம் ஏறினன். தன்னுடைய ஆசனம் நிலையாக ஏற்பட்டுவிடவே அரசு வேலையை அமைச்சர் வசம் விட்டு விட்டு அரண்மனைக்குள்ளே இன்பசாகரத்தில் திளைக்கத் தொடங்கினன். பட்டத்திற்கு வருவதற்கு முந்தி இசையரங்குகளில் தேர்ந்திருந்தான். உடலும் செக்கச் செவேல் என்று வளப்பமாக இருக்கும். நாள்தோறும் இரவிலும் மாலையிலும் இசையாடல்களில் வல்ல நண்பர் களோடு பொழுது போக்குவான். பெண்வேடம் பூண்டு அணிகளை அணிந்து பட்டுப் பாவாடைகளை உடுத்திக் கொண்டு ஆடுவான். இந்தப் பொழுதுபோக்கிற்கு அமைதி யாக அலிகளும் பேடிகளும் அவனைச் சூழ்ந்து கொண்டே இருப்பார்கள். இப்படிப்பட்டவன் அரசியல் என்ன ஆகும்? வேறொரு தீரனல் அவன் கொல்லப்பட்டான் என்ற செய்தி இங்கே கூறவேண்டியதில்லை. இடைக்காலத்திலே டெல்லி தெக்காணம் முதலிய அரசுகளிலே இவ்விதச் சிற்றின்பப் பொழுதுபோக்குகள் மிக மலிந்திருந்தன என அறிய வேண்டும். டெல்லியிலே ஜஹான்கீர் போன் ஒருவன் புலாக் பாட்சா' என்ற பெயரோடு இருந்தான். இவன் மூக்குத்தொங்கடம் அணிவிக்கப்பெற்றுப் பெண்ணுடையில் பல ஆண்டுகள் வளர்க்கப் பெற்றான். இந்த நினைவுகளை அளற்றார் பாளையப்பட்டு என்று சொன்னவுடன் ஒருவன் மனதில் தோன்றக்கூடும் அல்லவா? பண்டைய நாளிலும் பின்னரும் இவ்வித இசை ஆடல் இயக்கங்களில் ஆர்வம் கொண்டவர்களாய் அத்தலைவர்கள் பொழுது போக்கிக் கொண்டிருந்தார்கள். இதை அறிந்த புலவர் பெருமக்களும்

விறலிவிடுதூது, மன்மதவிலாசம், சமுத்திரவிலாசம், காமரசவல்லி, காவடிச்சிந்து முதலிய பிரபந்தங்களை இவர்கள் மீது இயற்றி ஆடலும் நடத்திப் பெரும் பரிசுகள் பெற்றுச் செல்லுவார்கள். இத்தகைய குணங்களோடு அந்த வமிசத்தில் தோன்றிய ஒரு வள்ளல் தான் என்னைக் காண வந்தவர். அவர் அப்போது பேசின வரலாற்றை முன்னமே கூறினேம்.

* * * *

3

குறுநில மன்னர் அழைப்பிற்கு இணங்கி அளற்றூர் சென்றேன். என் கீழ் அதிகாரிகளும் அங்கே இருக்கும் சமய நிலையங்களைப் பார்வையிடுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்திருந்தார்கள். அதனால் அம்மன்னர் அதனையே சாக்காகக்கொண்டு என் பொருட்டு யாதொரு கவலையும் எடுத்துக் கொள்ளவில்லை.

திருவிழா பெரிதாக நடந்து கொண்டிருந்தது. ஆலயத்திற்குச் சுற்றிலும் கணக்கில்லாத கடைகள், ஆடல் பாடல் நிலையங்கள், தின்பண்டச்சாலைகள், விளையாட்டுச் சாமான் கடைகள், கணக்கில்லாத மக்கட் கூட்டம் இவைகள் எங்கும் தென்பட்டன. கோயிலுக்குச் சிறிது தொலைவில் ஒரு திறந்த வெளியில் சில கூடாரங்கள் போடப்பட்டிருந்தன. அவைகளில் போலீசு முதலிய இலாகா அதிகாரிகள் தங்கி இருந்தார்கள். அவைகளின் நடுவில் ஒரு கம்பீரமான கூடாரம் போடப்பட்டிருந்தது. அது வெகு விமரிசையாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. கொடி, பதாகை, தோரணம் முதலியவைகளுக்கு அளவில்லை. திரைச்சீலைகள் பலவித நிறங்களோடு தொங்கிக்கொண்டிருந்

தன. காவலாளிகள் அழகிய தோள் பட்டைகளுடன் விளங்கினார்கள். இந்த ஆடம்பரங்கள் அதனைப் பாளையப் பட்டார் கூடாரம் என்று காட்டிற்று.

நான் கூடாரத்தை நெருங்கினதும், என் வரவைக் குறித்து ஒருவர் உள்ளே போய்த் தெரிவித்தார். என்னை வரும்படி தகவல் வந்தது. உள்ளே சென்றேன். கூடாரம் வெகு அழகாக மொகலாயர் சிற்ப ஓவியச் செழுப்பில் ஆக்கப்பட்டிருந்தது. அடியில் அழகிய பாரசீக விரிப்புக்கள்; சுற்றிலும் பல நிறங்கள் கொண்ட சித்திரங்களால் தீட்டப் பெற்ற படுதாக்கள் ; மேலே விசித்திர வேலைப்பாடுகொண்ட அசமானகிரி அல்லது ஷாமியானா, நிலத்தில் விரிப்புக்களின் மேலே நல்ல வேலைப்பாடுகொண்ட நாற்காலிகளும் சாய்வு மஞ்சங்களும் போடப்பட்டிருந்தன. நடுவில் ஒரு சிறு மேஜையின் பேரில் சந்தனம், தாம்பூலம், வாசனைத் திரவியங்கள் முதலானவை வைக்கப்பட்டிருந்தன. ஒரு மெத்தை மஞ்சத்தில் மன்னர் உட்கார்ந்துகொண் டிருந்தார். அருகிலே போலிசு அதிகாரி, தபால் அதிகாரி, முதலியோர்கள் உட்கார்ந்துகொண் டிருந்தார்கள். நான் சென்றவுடனே வணக்கம் சொல்லி என்னை அமரச் சொல்லிவிட்டு மற்ற அதிகாரிகளுக்கு என்னை அறிமுகப்படுத்தினார். அவர்களுக்கு வணக்கம் கூறிவிட்டு நானும் உட்கார்ந்தேன்.

"என் அழைப்பிற் கிணங்கி தாங்கள் விஜயம் செய்ததைப்பற்றி மிகவும் மகிழ்ச்சி. தாங்கள் எப்படியாவது இரவு தங்கிவிட்டுச் சென்றால் நல்லது" என்றார்.

"நான் இப்போது கோயில்களைப் பார்வை இடுகிறேன். பிற்பகலில் அடுத்த ஊர் செல்லவேண்டும். அங்கே ஒரு சொற்பொழிவு நடக்கப்போகிறது. அதில் நான் தலைமை வகிக்க வேண்டும்."

"சரி, செய்யலாம். இரவு 12 மணிக்குமேல் வந்தால் போதுமானது. ஜில்லா அதிகாரிகள் எல்லோரும் அப்போதுதான் வருகிறார்கள். தாங்களும் வரவேண்டும்"

"நான் இரவில் தூக்கம் கெடுகிறதில்லையே."

"பரவாயில்லை. நமக்காகவாவது வரவேண்டும். நல்ல நாடக கச்சேரி நடக்கப்போகிறது." அதற்குள் அருகில் இருந்த அதிகாரி "ஐயா, தங்களுக்குப் புதிது போலத் தெரிகிறது. இன்றையச் சதிர் வெகு பேர்போனது. அதிலே மன்னர் அவர்களே மோர்சிங்கு வாசிக்கப் போகிறார்கள். அவருடைய வித்தை கூற முடியாதது. நீங்கள் வந்தால் நடுவில் எழுந்திருக்கமாட்டீர்கள்." என் மனதிற்குள் 'வந்தால்தானே' என்று எண்ணிக்கொண்டேன்.

"தாங்கள் எல்லாரும் அத்தனை ஆர்வத்தோடு சொல்லும்போது நான் முயற்சிக்கிறேன்" என்று சொல்லி விடை பெற்றுக்கொண்டேன்.

"ஐயா, தங்களைக் கண்டிப்பாக எதிர்பார்க்கிறேன்" என்று சொல்லிக்கொண்டே மன்னர் விடை தந்தார்.

கூடாரத்திற்குள் பரிமள மணத்தைவிட சுருட்டு மணமும் மதுபான மணமும் பொறுக்க முடியவில்லை. வெளியே சென்று சுத்தவாயுவை உட்கொண்ட பிறகுதான் என் உள்ளம் சாந்தம் அடைந்தது.

மன்னருக்குச் சேர்ந்த கோயில்களை சுற்றிப்பார்த்தேன். அவருடைய பாட்டன் காலத்தில் அரைகுறையாய்க் கட்டிவிட்ட சுவர்களும் தளவாடங்களும் தென்பட்டன. பூச்சு வேலை சுண்ணும்பு முதலியவைகளை அச்சுவர்கள் கண்டதே இல்லை. மூலை முடுக்குகள் எல்லாம் சிலந்திகளும் வௌவால்களும் வெகு நிம்மதியாகக் குடிகொண்டிருந்தன. சில பொந்துக்களில் தேள்களும் பாம்புகளும் தவம் செய்துகொண்

டிருப்பதாகக் கேள்வி. அறணை, பூரான் இவைகளுக்குக் குறைவே இல்லை. திருவிழாவில் பதினைந்து நாட்கள் பாண வேடிக்கைகள், சதிர்க்கச்சேரி, பாட்டுக்கச்சேரி, பொய்க்கால் குதிரை, நையாண்டி மேளம் இவைகளுக்குப் பெருந்தொகை செலவழிக்கும் பாளையக்கார தருமகர்த்தர் ஆலயப் பூச்சுக்கு ஒரு தம்பிடியும் செலவழிப்பதில்லை என்று அறிந்தேன். அவர் தன் இந்திரபோகக் கூடாரத்தில் அந்தப் பதினைந்து நாள்களும் அதற்கேற்ற நண்பர்களுக் கிடையில் கொலுவில் இருப்பாரே அன்றி பாமரர் கூட்டம் கூடிப் பொரிகடலை உண்ணும் கோயிலுக்குள் நுழைவாரா? அந்தக் கேள்வியே அங்கு எழாது என்று அறியுங்கள். இரவுகள் முழுவதும் 12 மணி முதல் காலை 4 மணி வரை பலவித உல்லாசக் கச்சேரிகள் அப்பவனத்தில் நடைபெறும். அவைகளில் பக்க வாத்தியங்களில் ஏதாவது ஒன்றை மன்னரே தாங்கிக் கொண்டு வெகு விமரிசையாக நடிப்பாராம். அப்போது எல்லாருடைய கண்களும் மன்னர் பெருமான் மீதே இருக்கும். பேஷ், சபாஷ் சொல்லுகிறவர்களுக்குக் குறைவே இல்லை. அந்த அற்புதமான கைங்கரியத்தின் இடையிலே கால் மணிக்கு ஒரு முறை திராட்சரச பானம் கொடுக்கப் படும். அவரோ மிகவும் மனோரம்மியமான காசி துப்பட்டா ஆடை தரித்துக்கொண்டு நடிகர்களும் வெட்கும்படி ஆடுவார்.

இவைகளைக் கண்ட போன்ப கோடிகள், திருவிழாவில் தருமகர்த்த மன்னர் காட்டும் ஆர்வத்தை மெச்சி மெச்சிப் பேசிக்கொண்டு செல்வார்கள்.

இவ்வித இன்ப சாகரத்தில் முழுகிக் கிடக்க எனக்கு மனம் வரவில்லை. கோயில்களில் அலங்கோலங்களைக் கண்டு விட்டுச் சில குறிப்புக்களை எழுதிக்கொண்டுவிட்டு வண்டி யேறி வேறூர் சென்றேன். அன்று இரவு தலைவலியென்று

சாக்கு எழுதிவிட்டு வரமுடியாததற்கு மன்னிப்புக் கேட்டு விட்டுப் போனேன். திரும்பி அவ்வூரில் கால்வைக்க என் நெஞ்சு இடம் தரவில்லை.

---

2. வீரமுடையார் ஈரமும் உடையார்

1

"அடே, பாண்டியா, இத்தனை நாள் எங்கே போனாய்? அத்தி பூத்தாற்போல இருக்கிறாயே? எங்களை மறந்து விட்டாயோ? காப்பி குடித்துவிட்டுப் போ."

"ஒன்றும் விசேஷம் இல்லை, அம்மா, கொஞ்சம் வேலை அதிகம். வர முடியவில்லை. உங்களை மறப்பேனா? இப்போது தான் காப்பி குடித்துவிட்டு வந்தேன். ஐயாவை அழைத்துக்கொண்டு கோயிலைக் காண்பித்துவிட்டு வந்தேன்."

"கோயிலைத் திருப்பணி செய்கிறாயாமே. அதுதான் செய்ய வேண்டும். நீ க்ஷேமமாய் இருப்பாயாக! ஐயா காலத்திலே கோயில்கள் மிக நன்றாய் ஆகின்றனவாமே!"

"ஆமாம், அம்மா, நானும் அவர் காலத்திலேயே கோயிலையும் பள்ளிக்கூடத்தையும் நன்றாய்ச் செய்யவேண்டும். ஐயா அதற்கு ஒத்தாசை புரிவார்."

"செய், அப்பா, நீ நன்றாக இருக்கவேண்டும். கொஞ்சம் அதிரசம் சாப்பிட்டுவிட்டுக் காப்பி குடித்துவிட்டுப் போ" என்று ஆசீர்வாதம் சொல்லிவிட்டு முதிய அம்மாள் உள்ளே சென்றாள்.

இது நடந்தது மேனேஜர் ஐயங்கார் வீட்டின் முன்னிலையில். ஜமீன்தார் என்னை அழைத்துக்கொண்டு, ஜமீன்

அதிகாரத்திற்குத் தான் வந்தபிறகு செய்து வருகிற திருப் பணிகளைக் காட்டிவிட்டு மானேஜர் வீட்டுப்புறம் வந்தார். மேனேஜருடைய தாயார் ஒரு வயதான கிழவி. ஜமீன் தாரரை இளவயது முதல் கண்டறிந்தவள். ஆகவே அவர் அங்கு சென்றதைக் கண்டு அழைத்து அவ்வாறு சகசமாய்ப் பேசினாள். வேறு எவ்விடத்தில் இந்தப் பேச்சை எதிர்பார்க்க முடியும்? ஜமீன்தாரர் அந்த அம் மாள் முன்னிலையில் தாய்ப் பசுவிடம் மகிழ்ச்சியுடன் நிற் கும் இளங்கன்றைப் போல் இருந்தார். இத்தனைச் சாது உலகில் இருப்பாரா என்று எண்ணவேண்டும்.

அவருடைய திட்டங்களைப் பார்த்தேன். வெகு கால மாகப் பாழடைந்த கோயிலைப் புதுப்பித்து, கிராம வெளிச் சம் வரும்படி எடுத்துக்கட்டத் தொடங்கினார். கோயிலி னுடைய வரும்படியைச் சரியாக வசூலித்து அனுவசியமான செலவுகளை நிறுத்தி மீதிப்படுத்தி அதிலிருந்து ஒரு பெண் பாடசாலை தேவார பாடசாலை இவைகளை ஏற்படுத்தி நடத்தி வருகிறார். இவற்றைக் கண்டு என் மனம் மிகவும் மகிழ்ச்சி அடைந்தது.

2

ஒரு நாள் ஓர் உயர்தரப் பள்ளி மண்டபத்தில் ஒரு ஜமீன்தாரருக்கு ஒரு வரவேற்பு நடந்தது. அந்நாட்டுப் பெருமக்கள் நூற்றுக்கணக்காக வந்திருந்தார்கள். சிற் றுண்டி வழங்கப்பட்டது. பிறகு மண்டபத்தில் வரவேற் புப் பேச்சுக்கள் நடைபெற்றன. பல புலவர்கள் அதில் கலந்து கொண்டார்கள். இறுதியில் ஜமீன்தாரர் தலைமை உரை நிகழ்த்தினார்கள். அது எவரும் எதிர் பாராத வீரச் சொற்களைக் கொண்டிருந்தது. ஜமீன்தாரர் இணையற்ற

தீரர், அஞ்சா நெஞ்சம் உடையவர் என்று எல்லோரும் அறிவார்கள். ஆனால் இத்தனை உருக்கமாகப் பேசக் கூடிய நா வன்மை படைத்தவர் என்று எவரும் அறிந்த தில்லை. அவருடைய பேச்சைக் கேட்கக் கேட்க எல்லா ரும் திடுக்கிட்டுப் போய் விட்டார்கள்.

"அருமை நண்பர்களே, நான் ஒரு தமிழன். இந்த நாடு என்னுடைய நாடு. நாட்டு மக்கள் என் மக்கள். நானும் இந்நாட்டு மகன். தெருவில் திரியும் ஏழை என்னு டைய தம்பி. அவனுக்கு உணவு கிடைக்கிற மட்டும் எனக்கு நிம்மதி இல்லை. அதற்குப் பாடுபடுவேன்.

நான் தமிழன். ஆனால் மறவன். மறக்குடியில் பிறந்த வன். பண்டைத் தமிழ் மன்னர்கள் மறவர்கள். அஞ்சா நெஞ்சம் படைத்தவர்கள். அவர்கள் மரபில் நான் உதித்தேன் அவர்களுடைய இரத்தம் என் நாடியில் ஊறுகின்றது. அது ஊறும் மட்டும் நான் தமிழர்களுக்காகப் பாடுபடுவேன். பகைவர்கள் யாராக இருந்தாலும் அஞ்சேன். நன்மைக் கும் நீதிக்கும் நாட்டிற்கும் என் இரத்தத்தைச் சிந்த முன் வருவேன்.

நான் செல்வக் குடியில் பிறந்தேன். ஆனால் செல் வத்தைப் பார்க்கவில்லை. வறுமையைத் தான் அனுபவித் தேன். வறுமை மட்டுமோ ? துன்ப வாழ்க்கை எப்படி யிருக்குமோ அதனை எல்லாம் கண்டேன். அரண்மனை உண்டு ; அதில் வாழவில்லை. செல்வம் உண்டு; நல்லுணவு உண்ணவில்லை. பள்ளிக்கூடம் உண்டு ; படிப்பு பெற்றே னில்லை. உறவினர் உண்டு; அவர் உறவு கிடைக்கவில்லை. மிடி வாழ்வே என் வாழ்க்கை. உலகமே என் வீடு. இவைகளில் நான் படித்தேன்.

உற்றார்தான் என் பகைவர். அவர்கள் தூண்டுதலால் அரசியல் எனக்குப் பெரும் பகை. அதனோடு போராடினேன்.

யுகலிடம் இன்றிப் பிற சமயத்தார் மடம் புகுந்தேன். அங்கே வரவேற்பு கிடைத்தது. அன்னாருக்கு என்றும் என் நன்றி உரியது. இரத்தம் சிந்தவும் தயாராக இருக்கிறேன்.

பகை பெருகிற்று. எங்கும் பகை. மறவன் அஞ்சுவேனோ? என் மதியே எனக்கு அமைச்சன். என்னைக் கைது செய்து சிறையில் வைக்க ஆயிரம் பேர் புறப்பட்டார்கள். ஆயிரம் குற்றங்களைச் சாட்டினார்கள். என்னைப் பிடிக்கப் பரிசுகளையும் விளம்பரப்படுத்தினார்கள். ஆனால் என்னை ஒருவரும் பிடிக்கமுடியவில்லை.

நான் ஒரு குற்றமும் செய்தவன் அல்ல. ஆகவே எனக்கு அச்சம் இல்லை. எவரும் கண்டு பிடிக்காதபடி மறைவாக அஞ்ஞாத வாசம் செய்தேன். பகைவர் எதிரிலேயே வருவேன். என்னை அவர்கள் அறியவில்லை. பாரதம் முழுவதும் சுற்றினேன். நான் இருந்த இடம், எவரும் அறியவில்லை. என்னைப்பிடிக்க நூறுபேர் நிற்பார்கள். அவர்களுக்குத் தகவல் கொடுத்து விடுவேன். அவர்கள் கையில் சிக்காதபடி செல்வேன். நீதிமன்றத்தில் நிற்பேன். பேதையர்கள் ஏமாந்து போவார்கள்.

எனக்கு வழக்கறிஞர் உதவி இல்லை. எவரும் வர அஞ்சினார்கள். நானே முன் நின்று வழக்கை நடத்தினேன். வெற்றிபெற்றேன்: நூற்றுக்கணக்கான வழக்குகளும் பஞ்சாய்ப் பறந்தன. இப்போது நான் நிரபராதியாக நிற்கிறேன். ஏன்? மறக்குடியில் பிறந்தேன். மறவன் இரத்தம் என்னில் ஓடுகிறது. குற்றம் செய்யேன். பகையையும் பொறாமையையும் தூள் தூளாகப் பொடிசெய்து தூற்றிவிடுவேன்.

இனி நல்லகாலம் வந்தது. மக்களுக்காகப் பாடுபடுவேன். சங்கநூலில் கண்ட தமிழ் மன்னனைப் போல் நடப்பேன்."

இவ்வாறு பேசுகையில் அவர் உருவத்தைப் பார்க்க வேண்டும். பண்டைக் காலத்துத் தமிழ் மன்னன் மீண்டும் பிறந்து விட்டானே? என்று அக்கட்டடத்தில் எல்லாரும் திறந்த வாயோடு அவரையே உற்றுப் பார்த்துக்கொண்டும் ஓர் அசையும் விடாமல் கேட்டுக்கொண்டும் இருந்தார்கள். இதுவரையில் அறியாத அற்புத வரலாற்றை இன்று தான் கேட்டார்கள். கேட்டுத் திடுக்கிட்டார்கள். பேசுகிற புருடனே ஒரு அவதார புருடனே என்று வியந்தார்கள். அவர் பேசின பேச்சு உண்மையாக இருக்குமோ வெறும் கட்டுக் கதையோ என்று இப்போது எண்ணலாம். ஆனல் பேச்சு நிகழ்ந்தபோது கேட்ட எல்லா மக்களும் அது முழு வதும் உண்மையே என்று திடமாக நம்பினர்கள். நானும் அது முழுவதும் கேட்டேன். உண்மை என்றே நம்பினேன். தமிழ்நாட்டில் இந்தக் காலத்தில் இப்படிப்பட்ட ஒரு தீர புருடனும் இருப்பானு என்று வியந்தேன்.

கொடுமையான வாழ்க்கை ஓர் ஆளை உன்னத நிலைக்குச் செலுத்திவிடும் அல்லவா? இவருடைய நெஞ்சைப் போல் இன்னும் சிலருக்கு இருந்தால் தமிழ் உலகம் வேறு நிலை அடைந்துவிடும்.

3

முன்னே ஒரு முதிய கிழவி "அடே பாண்டியா" என்று மகற்காற்றும் அன்பில் அழைக்கப் பெற்றவரான ஒரு மென்மைக் குணத்து ஜமீன்தாருக்கும், பின்னே ஒரு வரவேற்புக் கூட்டத்தில் வீரதீரப் பெருஞ் சொற்களை வாரிக் கொட்டின ஜமீன்தாருக்கும் இணை எங்கே? இவ் விரு குணங்களும் ஒருவரிடத்தில் இருப்பது இயற்கைக்கு மாறுனது அல்லவா? இவை இரண்டும் இரு வேறியல்பு

கள் அல்லவா? ஆனாலும் தன் தாயிடமும் மனைவியிடமும் மென்மைத் தன்மை காட்டிய இராமன், இலங்கையிலே அரக்கரோடு போர் புரிந்தகாலை எத்தனை வீரபுருடனாய் விளங்கினான்? அதேபோன்று முன் முதிய அம்மையிடம் பேசின அதே மெல்லிய நெஞ்சம், பின் வரவேற்புக்கட்டத்தில் வீரம் பொங்கி எழும்பின நெஞ்சாகும் என்றால் வியந்து போவீர்களோ?

'நல்குரவு சாகசத்தைப் பெருக்கும்' என்பது ஆங்கிலப் பழமொழி. நல்குரவு என்ற பள்ளியிலே பயின்ற ஓர் இளைஞன் மதிநுட்பம் பெற்று எப்படிப்பட்ட சாகசச் செயலும் செய்வான் அன்றோ? அன்னாருக்குத் தெய்வமே உதவிபுரியும் அல்லவா? பிறந்த குடியை விட்டு அகற்றப்பெற்ற இளைஞன் பாதிரிகளிடம் அடைக்கலம் புகுந்தான். அடைக்கலம் புகுந்தோர்களுக்கு அபயம் கொடுத்து உதவி புரிவதே தம் கடமையாகக் கொண்ட துறவிகளே பாதிரிமார்கள். யாதொரு பலனையும் எதிர்பாராது நன்மையே செய்கிற பாதிரிமார்கள் எத்தனையோ பேர் உண்டு. பனிக்கட்டியில் மலைமீது தவறி வீழ்ந்த மக்களைத் தூக்கி எடுத்து உயிர் காப்பாற்றும் துறவிகள் ஆல்ப்ஸ் மலைகளில் இருக்கிறார்களாம். நம் நாட்டில் பொறாமையினாலும் பகையினாலும் வெறுக்கப்பட்டுக் கொடுமையில் தவிக்கும் பேதை மக்களைக் கண்டுபிடித்துக் கை கொடுத்து உதவி புரியும் பெருமக்கள் பாதிரிகள் என்று அறிக. அவர்கள் சீவகாருணியம் மேலிட்டு பரோபகாரம் செய்கிறார்களேயன்றிப் பலனை எதிர்பார்ப்பதில்லை. அப்படிப்பட்ட ஒரு நல்ல புகலிடம் இவ்விளைஞருக்குக் கிடைத்தது. அதனாலே தான் மிக்க தைரியத்துடன் தனக்கு வந்த இடையூறுகளுடன் போராடினார். பல ஆண்டுகள் பிடித்த தற்காப்புப் போரில் வெற்றியடைந்தார். அப்

போது செய்த சாகசச் செயல்கள் பிரமிக்கக் கூடியவை களே. அதில் வெற்றியடைந்து மிகுந்த பெருமையுடன் வாகை சூடி வெளிவந்தார். தான் கடமைப்பட்டவர்களுக்கு வேண்டிய பிரதிபலனும் தந்தார். உலகுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற கங்கணமும் கட்டிக்கொண்டார். அதன் காரணமாகத்தான் பற்பல நல்ல நிலையங்களை ஏற் படுத்த முயன்றார்.

4

ஒரு நாள் காலையில் என் அறையில் உட்கார்ந்து கொண்டு படித்துக் கொண்டிருந்தேன். தபால்காரன் அன் றைய நாள் வந்த தபால் கடிதங்களைக் கொண்டுவந்து என் முன்னால் வைத்தான். ஒன்று அழகிய அட்டையில் ஆக் கப்பட்டிருந்தது. எடுத்துப் பார்த்தேன். ஜமீன் முத்திரை இட்டிருந்தது. உடைத்து உள்ளே பார்த்தேன். ஒரு சிறு நிருபம் அதில் இருந்தது. ஜமீன்தாருடைய பழகிய கையெழுத்தை அதில் கண்டேன். ஆவலுடன் அதைப் படித்தேன். வணக்கம் கூறிவிட்டு தான் எடுத்துக்கொண்ட நன் முயற்சி கூடிவருகிறதாகவும் கூடிய விரைவில் தான் கட்டத் தொடங்கிய பாடசாலை முடிவுபெறும் என்றும் அதைக் கட்டுவதற்கு ஊக்கமும் அன்பும் உதவியும் தந்த தற்காக எனக்கு வந்தனம் அளிப்பதாகவும் அதில் கண் டிருந்தது. நான் செய்த உதவி பெரியதல்ல, பாடசாலை கட்டுவதற்கு அனுமதி கொடுத்ததொன்றே ஆகும். அதற்கு இத்தனைப் பெரிதாக நன்றி செலுத்தியதைக் கண்டு அவரு டைய பெருந்தன்மையை அறிந்து மெச்ச வேண்டும் என்று எண்ணினேன்.

கடிதத்தை மேஜையின் மேல் வைத்தேன். அன்றைய தினசரித் தாளும் வந்தது. எடுத்துப் பார்த்தேன், கொட்டை

கொட்டை எழுத்தில் 'ஜமீன்தாரர் துப்பாக்கியால் சுடப்பட்டார். அக்கணமே உயிர் துறந்தார். சுட்ட பேர்வழி ஓடிவிட்டான்' என்று எழுதப்பட்டிருந்தது. திடுக்கிட்டேன். சிறிதும் நம்பமுடியவில்லை. இப்போது தான் அவருடைய கையெழுத்தில் கடிதம் படித்தேன். உடனே அவர் கொல்லப்பட்டார் என்ற செய்தி வருகிறது. எதை நம்புவது ?

இரண்டையும் திருப்பித் திருப்பிப் பல தடவை வாசித்தேன். இரண்டும் ஒரே தேதிதான். எதை நம்புவது? என் மனக் கொந்தளிப்புக்கு அளவே இல்லை. கடிதத்தைப் பார்த்த மகிழ்ச்சி ஒரே விநாடியில் துக்கமாக மாறிவிட்டதே! என்ன கொடுமை! மறுநாள் தினத்தாள் வருமட்டும் காத்திருந்தேன். கொலையைப் பற்றிய விவரங்கள் வந்தன. அவர் தன் ஆபீசை விட்டு அடுத்த ஊருக்குத் தன் விசை வண்டியில் சென்றதாகவும் அங்கே இறங்கிச் சில குடியானவர்களிடம் பேசிக்கொண்டிருந்ததாகவும், எவனோ ஒருவன் பின்னால் இருந்து திடீரென்று சுட்டுவிட்டு ஓடி விட்டதாகவும், அருகில் இருந்த குடிகள் கீழே விழப்போகும் ஜமீன்தாரைத் தூக்கி எடுப்பதிலே கவனமாக இருந்தார்கள் என்றும், சுட்டவன் இன்னார் என்று கவனிக்கவில்லை என்றும் அது கூறிற்று.

இச்சொற்களைப் படித்தவுடனே எனக்குக் கடிதம் எழுதித் தபாலுக்கு அனுப்பின பிறகு அவர் ஊருக்குச் சென்றிருக்க வேண்டும் என்றும் அப்போது அங்கே சுட்டுக் கொல்லப்பட்டார் என்றும் ஊகித்தேன். கடிதத்தைப் பத்திரமாக வைத்துக் கொண்டேன். அது இன்றைக்கும் என்னிடமே இருக்கிறது. அதை எடுத்துக் காணும்போதெல்லாம் 'தமிழ்நாட்டில் ஓர் ஒப்பற்ற தனி ஆள் இருந்தான், அவன் பண்டைத் தமிழரின் பண்புகளுக்கு ஒரு எடுத்துக் காட்டு, அவனைப்போல் வெளித்தோற்றத்திற்கு

முரண்பாடும் உண்மையில் முரண்பாடு இல்லா இணையற்றத் தன்மையும் கொண்ட ஓர் ஆள் இனித் தோன்றுவாறு' என்ற எண்ணம் வரும். ஆனுல் என்ன முடிவு? யார் இதனை எதிர்பார்த்தார்கள்? வெற்றி அடைந்தபோது அது பிடுங்கப்பட்டது. யாருக்கு என்ன பயன்? ஆனுல் நல்லவனுக்கு என் தீங்கு ஏற்படுகிறதோ? பயனற்ற பேர்கள் இன்பம் துய்க்கிறார்களே அவர்களுக்கு ஒரு தீங்கும் வருவதில்லையே? இக்கேள்விக்கு யார் என்ன விடை தரக்கூடும்? இயற்கையை யார் அறிந்தார்கள்?

---

3. கொசுக்களை நசுக்கினுல் குற்றமோ?

1

ஓர் ஏழைப்பெண். நடக்கவும் சக்தி இல்லை. வயிறாரச் சாப்பிட்டு எத்தனை நாள் ஆயிற்றோ அறியோம். போதாக் குறைக்குக் கக்கத்தில் ஒரு குழந்தை. அது பசிக்கு அழுது கொண்டே இருக்கிறது. அள்ளையில் ஒரு பையன், எலும்பும் தோலும் தான் தெரிகிறது, நடக்கச் சக்தி இல்லை. தாய் இழுத்துக் கொண்டு செல்லுகிறாள். அவன் அழுகாத அழுகையில் தத்தித்தடுமாறிக் கொண்டு செல்லுகிறான். 'அம்மா; இன்னும் எத்தனை தூரம் நடக்க வேண்டும்' என்கிறான். 'வந்து விட்டது சும்மா வா' என்று சொல்லி முன் செல்லுகிறாள், சென்னையில் ஒரு பெரிய பாதையிலே.

திடீரென்று ஒரே அமளி செய்துகொண்டு ஒரு குதிரைச் சவாரி வண்டி ஒன்று வழிப்போக்கர்களைச் சட்டைச் செய்யாமல் ஓடிச் செல்கிறது.

இரு புறங்களிலும் பாதசாரிகள் வெகு அச்சத்தோடு ஒதுங்கிச் செல்லுகிறார்கள். வண்டியோ பெரிய வண்டி.

ஆட்களோ வெகு விரைவாக அதனை ஓட்டிச் சென்று கொண்டிருந்தார்கள். உண்மையில் ஓட்டிச் சென்றது ஒரு பெண்பால். இந்திய உடை தரித்தவள், கையில் நீண்ட சவுக்கு இருந்தது. 'ஜமீன் வண்டி வருகிறது. ஒதுங்கிச் செல்லுங்கள்' என்று மக்கள் எச்சரிக்கை செய்து கொண்டே அகன்றார்கள்.

ஆனால், தத்தித்தடுமாறிச் செல்லும் ஏழைத் தாய்க்கு இதன் மர்மம் என்ன தெரியும். வெகுநாள் பட்டினியினால் காது அடைப்பட்டிருந்தது. அவள் ஒதுங்கவில்லை. சவாரி போகும் பெண்ணோ அதனைக் கண்டாள். குதிரையைச் சற்றுத் திருப்பினாள். அது திரும்பிற்று. ஆனால் அதற்குள் வண்டிச் சக்கரம் தத்திச் செல்லும் பையன் உடலில் உராய்ந்தது. அவன் வீரிட்டுக் கீழே விழுந்தான். தலையில் சிறிது காயம்பட்டது. தற்செயலாகப் பெண்ணும் கைக் குழந்தையும் தப்பினார்கள். சவாரி போன யுவதியோ வண்டியை நிறுத்தினாள்.

"பிச்சைக்காரிகள், அறிவில்லாத மூடர்கள் வண்டி வருவதும் தெரியாமல் குறுக்கே நிற்கிறார்கள். என்ன தரித்திரப்பட்டணம், இங்கே போலீசு இல்லையோ" என்று எரிந்து விழுந்தாள்.

அவ்வண்டியில் இருந்த ஆடவன், சிறுவன் காயப் பட்டு இரத்தம் ஒழுகுவதைக் கண்டான். மக்கள் கூட்டமும் சேரத் தொடங்கினது. பிச்சைக்காரியை அழைத்தான்.

'இந்தா துட்டு' என்று சொல்லி இரண்டு வெள்ளியை அவளிடம் எறிந்தான். அவள் எடுத்தாளோ இல்லையோ என்றுகூடப் பார்க்கவில்லை. உடனே குதிரை வாரைப் பிடித்து விரட்டி விட்டாள். வண்டியும் ஆட்களும் மறைந்து போயினர்.

ஊர் மக்கள் கூட்டம் கூடிக்கொண்டு அவ்வேழையைத் தேற்றினார்கள். சிலபேர் போலீசில் சொல் என்றார்கள். சிலபேர் ஆஸ்பத்திரிக்குச் செல் என்றார்கள். பெண்ணுக்கு ஒன்றும் தோன்றவில்லை. அங்கேயே உட்கார்ந்து கொண்டாள். வழியில்சென்ற ஒரு பள்ளி மாணவன் அவளுக்குத் தேறுதல் சொல்லி அக்காயம்பட்ட பையனுக்கு மருந்தைத் தடவித் தன் துணியால் கட்டிவிட்டுச் சென்றான். இந்தச் சம்பவம் சென்னையில் பட்டப் பகலில் நடந்தது. ஆனால், எந்தப் போலீசுகாரனும் இதனைக் கவனிக்கவே இல்லை. வழியில்சென்ற சில போலிசு சேவகர்களும் பாராமுகமாய்ச் சென்றுவிட்டார்கள். ஜமீன்தாரின் வண்டியை ஏழைமக்கள் ஏன் தடைசெய்கிறார்கள்? அறிவில்லையா என்று சாக்குச் சொல்லி ஒருவன் போய்விட்டான்.

மக்கள் ஈக்கள், கொசுக்கள், அவர்களை நசுக்கிவிடலாம். அதனை அதிகாரிகள் அறிந்துகொள்ள மாட்டார்கள். இது தான் நாகரீக உலகம்.

2

நாற்பது ஆண்டுகளுக்கு முன் நான் சென்னையில் கல்லூரிகளில் படித்துக் கொண்டிருக்கையில் ஒரு சவாரி வண்டியில் இரண்டுபேர் வெகு கம்பீரமாகப் பெரிய சாலைகளில் எல்லாம் போய்க்கொண்டிருப்பார்கள். சவாரி வண்டியோ பெரியசக்கிரங்களைக் கொண்டது. குதிரை மிகப் பெரியது. பந்தயங்களில் ஓடும் அரபிக்குதிரைகளும் அதற்கு இணையாகாது. வண்டியில் அமர்ந்திருந்த ஆள்களைப் போலவே அதுவும் கன்னங்கரேல் என்று இருக்கும்.

கண்ணன் கருப்புத்தான். ஆனால், அவனைப்போல் ஆணழகன் உலகில் இருந்தார்களா? ஆயிரக்கணக்காக

கோபிகளையும் அவனுடைய அழகு வசீகரிக்கவில்லையா? அதுபோலவே அக்குதிரை எப்படிப்பட்ட ஆளையும் வசீகரித்துத் தன் வலையில் இழுத்துக்கொள்ளும். அதன் விசையோ வாயுவேகம் மனோவேகம் என்று கதையில் கூறுவார்களே, அவ்வுவமையும் தோற்றுவிடும். வண்டியில் வீற்றிருந்து வாரைப்பிடிக்கும் ஆளைப்பொருத்தல்லவோ குதிரையின் ஓட்டமும் இருக்கும். சில குதிரைகள் சிலருக்கு நன்றாக ஓடும். மற்றவர்களுக்கு ஓடாமல் சண்டித்தனம் செய்யும். இந்தக்குதிரையோ தன் எஜமானி வார்பிடித்தால் நீலவேணிக் குதிரையும் பாராசாரிக் குதிரையும் இதற்கு இணையாகுமா என்று பாதசாரிகள் எண்ணுவார்கள். அந்தக் குதிரையின் பேச்சே சில மாதங்கள் வரை சென்னை முழுவதும் பரவி விளங்கிக்கொண்டிருந்தது.

இப்படிப்பட்ட அருமைவாய்ந்த குதிரை வண்டியில் உல்லாசமாக ஓடுகிற செல்வவான்கள் யார்? அவர்களை அறியாதவர்களும் சென்னையில் உண்டோ? ஏனெனில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பெரும் தெருவிலும் நினைக்க வொண்ணா வேகத்தில் ஒரு வண்டி போய்க்கொண்டு இருந்தால், அவ்வண்டியின் மணியோசை கேட்டவுடனே சிறு குழந்தையும் தன் உயிர் தப்ப இயற்கையாகவே அள்ளையில் ஓடி ஒளிக்கும் என்றால் அதில் போகும் ஆட்களைப்பற்றி அறியாமலா இருப்பார்கள். சென்னையே பார்க்காத நாட்டுப்புறத்தார் மட்டும் அவர்களை அறியார்கள். அவர்களும் இரண்டு நாள் சென்னையில் தங்கிவிட்டால் அவர்களை அறிந்து கொள்ளாமல் இருக்க முடியாது. அவ்வாட்களின் நிற அழகைப்பற்றி முன்னமே சொல்லி விட்டுச் செல்ல வேண்டாமா? அவர்களில் ஒருவர் ஆண், மற்றவர் பெண். அவர்களை வித்தியாசமாக எண்ண வேண்டியதில்லை. வடிவத்திலும் ஒரேமாதிரியாக இருப்

பதினல் தமயன் தங்கை என்றே உலகம் கூறும். இருவரில் ஆண் ஆனவன் ஆங்கில உடையில் தோன்றுவான். பெண்ணே இந்திய உடையில் தோன்றுவாள். அவருடைய நிறத்திற்கு ஆங்கில உடை பொருந்தாது என்று எண்ணி தமிழர் உடை உடுத்தினள் போலும்.

ஏன் இவர்கள் இவ்வாறு உலாபோக வேண்டுமோ? சில மக்கள் எண்ணுவார்கள், ஆங்கில நடையின் மோகமே இவர்களை இவ்வாறு செய்ததென்பர். ஆங்கிலர் திருமணம் ஆகாமல் இருந்தால் தம்கூடப் பிறந்தவளையாவது அழைத்துச் செல்வது வழக்கம் என்பர். ஆண் மிக உயரம். பெண் குள்ளமாயிருந்தாலும் கட்டழகி. இவர்கள் இருவரும் தினந்தோறும் எங்கே செல்லுகிறார்கள் என்பதுதான் கேள்வி?

ஐரோப்பியர்கள் மாலை வேளைகளில் கிளப் என்ற உல்லாச பவனங்களுக்குச் சென்று இன்பம் துய்ப்பார்கள். ஆண்களும் பெண்களும் சேர்ந்து பந்து விளையாடல்களில் ஈடுபடுவார்கள். அவர்களுடைய பழக்க மோகம் இவ்வுடன் பிறந்தார்களுக்கும் ஒட்டிக்கொண்டதாம். மிகச் செல்வம் திளைத்த பண்டை ஜமீன் உரிமை பெற்றதினலே ஐரோப்பிய உல்லாச விடுதிகளில் சேர்ந்து அவர்களோடு உறவாடி இன்பம் துய்க்கச் செல்லுகிறார்களாம். எப்போதும் சவாரி வண்டியில் இரண்டு டென்னிசு தடுப்புகள் இருக்கும். ஆகவே இவர்கள் டென்னிசு ஆடுவதில் மிகுந்த மோகம் கொண்டார்கள் என்று மக்கள் பேசிக் கொள்ளுவார்கள். ஜமீன்தார்கள் ஆகையால் வெறும் மக்களை மக்களாக அவர்கள் எண்ணினதே இல்லை. அவர்களைப் பூச்சிகளாகப் பாவிப்பார்கள். நமக்குத் கண்களுக்கு எதிரே பூச்சிகள் வந்தால் கையால் தட்டி நசுக்கி விடுகிறேமோ அதே போன்று, பாமர மக்கள் அவர்களைச் செல்லும் தாரையில்

தடைபட்டால் சவுக்கடியால் அடிக்கப்பட்டு நசுக்கப்படும் யோக்கியதைதான் கொண்டவர்கள் என்று அவர்கள் எண்ணுவார்களாம். இந்த முறையில் அவர்களுடைய வாழ்க்கைத்திறம் நடந்தது.

அப்படித்தான் இவர்களுடைய வாழ்வு எப்போது தோன்றிற்று? எத்தனை நாள் இருக்கப்போகிறது? ஒரு ஜமீன்தாரன் திடீரென்று இறந்தான். அவனுக்குப் பிள்ளை யில்லை. அடுத்த வார்சு மிகவும் ஏழை. கஞ்சிக்கில்லாது கிடந்தான். படிப்பும் இல்லை. ஆனால் உரிமையுண்டு, நேற்று இரவு பட்டினி. இன்று காலை எழுந்தான். இலக்ஷாதிகாரி ஆகிவிட்டான். அரண்மனை புகுந்தான். இன்னது செய்வது என்று தெரியவில்லை. துர் அமைச்சர்கள் தோன்றினர். சென்னைக்கு வந்தான். உல்லாச வாழ்க்கை நடத்தினன்.

'அற்பனுக்கு ஐசுவரியம் வந்தால் அர்த்தராத்திரியில் குடை பிடிப்பானும்'. ஐரோப்பிய கிளப்புகளில் சேர்ந்தான். அவர்களைப்போலவே பந்தாட்டம், குதிரைப்பந்தயம் இவை களில் புகுந்தான். தங்கையை உடன் அழைத்துச் சென்றான். இது ஐரோப்பியப் பழக்கம் அல்லவோ? இந்த வகையில்தான் மேலே கூறிய சம்பவம் நடந்தது.

அவன் வாழ்வு வெகுநாள் இருக்கவில்லை. மதுபான மும் அதற்கு ஏற்ற சாவகாசமும் ஏற்பட்டன. சில நாளில் நோய் சம்பாதித்துக்கொண்டான். சட்டப்படி திருமணம் ஆகாததற்கு முன்பே மறுஉலகம் சென்றான். ஏழை கண்ணீர் எதுதான் செய்யாது?

* * * *

3

கோலாகல வாழ்வில் மூழ்கி இருந்த இளைய ஜமீன் தார் சிறிது காலத்திற்குள்ளாக கணக்கில் அடங்காத

கடன்களை வைத்து விட்டுச் சென்றான். அவனுக்குப் பின் வந்தோன் அவனைப் போலவே ஈனகுடியிலிருந்து வந்தவன். எதிர்பாராத சம்பத்து வரவே உடல் பொங்கி இருந்தான். ஆனால் கடன் தலைக்குமேல் இருந்தது. விவகாரங்களில் சதுரங்கம் ஆடத்தொடங்கினான். கடன் ஏறிற்றே ஒழிய விவகாரம் தீர்ந்தபாடில்லை. கவலையும் துயரமும் மலையேறிவிட்டன. வெகு விரைவில் மறு உலகம் சென்றுவிட்டான். பிறகு மற்றொரு அநாமதேயம் தோன்றினான். கல்வியறிவு சிறிது மில்லாதவன். ஆனால் வெகு மூர்க்கமுள்ளவன். இவன் ஆட்சிக்கு வந்த சில ஆண்டுகளுக்குள் வாங்கக்கூடிய கடன் முழுவதும் வாங்கியாகி விட்டது. நிலங்களின் மேல் எதிர்கடனும் பெற்றாகி விட்டது. வருங்காலக் குத்தகைகளும் சாப்பிட்டாகி விட்டன. இனி ஜமீன் நிலங்களில் யாதொரு வருமானமும் வரமுடியாது என்ற நிலை ஏற்பட்டது. ஆனால் சிற்றின்ப வாழ்க்கையின் விபரீத வினோதங்களுக்கோ எல்லையில்லை. ஆகவே என்ன நடந்தது பார்ப்போம்:

காலத்திற்கேற்றபடி ஒரு நிறைமதியன் அமைச்சனானான். ஜமீன் ஆளுகைக்குள் கோயில் நிலங்கள் உள்ளன. அவைகளை வழங்கலாம் என்று உபதேசித்தான். ஆனால் அவைகளின் பேரில் யார் கடன் கொடுப்பார்கள் என்ற கவலை இருந்தது. ‘நீண்ட காலத்திற்கு சுவாதீன அடைவு கொடுத்தால் யார்தான் வாங்கமாட்டார்கள்? ஒன்றுக்குப் பாதியாகப் பெற்றுக்கொண்டால் கடன் வாராதா? வில்லங்கங்களை விலக்கு வாங்குவார்கள் உலகில் இல்லையோ! அதற்காகத் தரகர்கள் எப்போதும் காத்துக்கொண்டே இருக்கிறார்கள்’ என்றான் அமைச்சன். உடனே இந்த ஆலோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டது. கடவுளுக்குச் சொத்து ஏன் வேண்டும்? அவர் கேட்கிறாரா? தருமம் காப்பார்க்கே

அது சொந்தம். 'கடவுள் உண்டு என்பார்களுக்கு அன்றோ அச்சம்? இல்லை என்பார்க்கு அவர் இல்லை' என்று பண்டை நூலும் சொல்லுகிறதல்லவோ ? ஜமீன் கோயில் சொத்துக்கள் எல்லாம் கையாடப்பட்டன. இரண்டு ஆண்டுகளுக்குள் அவைகளும் போக்கப்பட்டன.

ஜமீன்தாரன் அரண்மனைவிட்டு வெளியே கிளம்புவது நின்றுவிட்டது. மனை அரண் ஆனுல் எவர் உள்ளே செல்ல முடியும்? ஜமீன்தாரன் தானே இட்டுக்கொண்ட வெறுங் காவலில் இருந்தான். அமைச்சனும் தாசியர்களுக்குமே உள்ளே செல்ல அனுமதி. மற்றையோர் சிறைக்கு ஏன் செல்லுகின்றனர்.

* * * *

4

ஒருநாள் அந்த ஜமீன் கோயிலைப் பார்க்கச்சென்றேன். ஊருக்கு அரைக்காதம் கிழக்கே வெட்ட வெளியிலே ஒரு அழகிய குன்று தோன்றிற்று. குன்றோ சிறியது தான். நூறு அல்லது நூற்றுஐம்பது அடி உயரம் இருக்கும். ஓரே பாறை. சுற்றிலும் ஏற்றமில்லாத சரிவு. அழகிய படிகள் செதுக்கப்பட்டிருந்தன. படிகள் ஏறினுல் சமபரப்பு. அதின் மேல் ஓர் அழகிய சிறு கோயில். மலையைச் சுற்றிலும் விளைந்த நன்னீர் நிலை. கோட்டையைச் சுற்றிலுமுள்ள அகழிபோல அது படர்ந்திருந்தது. அதனைச் சுற்றிலும் தென்னந்தோப்புகளும் வயல்களும் காடுகளும் இருந்தன. சம நிலத்தில் ஒரு பெரிய தொட்டாங் கச்சியைக் கவிழ்ந்தாற்போல குன்றின்தோற்றம் இருந்தது. சிறு பிள்ளைகள் மணலில் விளையாடும்போது தொட்டாங்கச்சியில் ஈர மணலை அமுக்கித் தலைகீழாக வைப்பார்கள். பிறகு தொட்டாங் கச்சியை எடுத்துவிட்டால் அரை முட்டைபோல மணல்

உருவம் தோன்றும். அதே உருவம் இந்த அழகிய குன்றுக்கும் இருந்தது. மலேஏறி கோயில் மண்டபத்துள் நுழைந்தால் சொல்லமுடியாத ஆனந்தம். குளிர்ந்த இனிய காற்று ஜில் என்று அடிக்க அங்கே உட்கார்ந்துவிடுவோம். இவ்வித ஆனந்த மலேக்கோயில் இந்த ஜமீனைச்சேர்ந்தது.

கோயில் அர்ச்சகன் இருந்தான். பூசைசெய்து திருநீறு கொடுத்தான். உடனே தன் கதையை வளர்த்தத் தொடங்கினன். 'சம்பளம் இல்லே. நிபந்தம் இல்லே. நைவேத்தியம் இல்லே. எத்தனேநாள் சும்மா பாடுபடுவது ? வயிறு இல்லாவிட்டால் எதையும் கேட்கேன். அந்தப் பாழுங் கடவுள் வயிற்றைக் கொடுத்துவிட்டானே? அதற்குப் படி அளக்கிறன் இல்லே' என்றன். 'இவ்விதம் பேசினல் என்ன பயன். அங்கு இருக்கும் கடவுளேக் கல் என்று நீ வழிபட்டால் அது கல்லாகத்தான் இருக்கும். கடவுள் என்று வழிபட்டால் அதே கடவுளாக அருள் புரியும். இந்தப் பேச்சை நீ விட்டுவிடு' என்றேன்.

'உங்களிடம் சொல்லாமல் யாரிடம் சொல்வது' என்று மீண்டும் கூறினன். 'கடவுள் பெயரை நிந்திக்கவேண்டாம். பெருந் தவறு. உங்கள் குடும்பத்தைத் தலேமுறை தலே முறையாக அவர் காப்பாற்றவில்லேயா ? நடுவில்வந்த ஜமீன்தார் அவ்விதம் செய்தால் அது கடவுள் தப்பாகுமா ? அவருக்கு நற்புத்தி புகட்டும்படி கடவுளே வேண்டிக்கொள்' என்றேன். ஆனல் அவன் பசி அதனல் அடங்குமோ ?

* * * *

5

'இரண்டுபேர் நண்பர்கள் வீட்டை விட்டுப் புறப்பட்டார்கள். - ஒருவன் பந்தாடச் சென்றன். மற்றவன்

பெரிய புராணம் கேட்கச் சென்ருன். பந்தாட்டம் ஆடச் சென்றவனுக்கு ஆட்டம் நன்ருக வரவில்லை. பெரிய புராணம் கேட்கச் சென்றிருக்கலாம் என்று எண்ணிக் கொண்டிருந்தான். பெரிய புராணம் கேட்கச் சென்றவன் பந்தாட்டத்திற்குச் சென்றிருந்தால் இன்பம் அடைந் திருக்கலாம் என்று எண்ணினுன். இருவருக்கும் இன்பம் இல்லை. பந்தாட்டத்திற்குச் சென்றவனுக்கே புண்ணியம் கிடைத்ததாம்' என்பது ஆன்றோர் கதை.

இவ்விதக் கதைகள் நான் பலபலப் படித்திருக்கிறேன். ஆனுல் அவற்றின் உட்பொருளை நான் உணரவில்லை. ஒரு முறை நன்கு உணர்ந்தேன். இந்த ஜமீன்தாரர் ஊருக்குச் சென்றபோது மற்ருெரு பழங்கோயிலைப் பார்க்கச் சென் றேன். அன்று ஒரு புதிய செருப்பு அணிந்துகொண்டு சென்றேன். கோயிலின் வாயிலில் விடும்போதே எனக்குத் தயக்கம். யாராவது எடுத்துக்கொண்டுபோய் விட்டால் என்ன செய்வது என்று எண்ணிக்கொண்டே உள்ளே சென்றேன். கோயிலில் தரிசிக்கும்போதும் அர்ச்சனை செய்யும்போதும் வழிபடும்போதும் செருப்பு நினைவாகவே இருந்தேன். என்ன முயன்றும் தெய்வ நினைவு வரவே யில்லை. எப்போது வெளியே செல்லலாம் என்ற எண்ணமே இருந்தது. இறுதியில் வெளியே வந்தேன். செருப்பு காண வில்லை. இரண்டு ரூபாய்க்குப் புதிதாக வாங்கின செருப்பு காணேமே என்று கவலை உற்றேன். அன்றுதான் மேலே சொன்ன கதையின் பொருள் விளங்கிற்று.

செருப்பு காணுமல் போன செய்தியை ஜமீன் காரியஸ் தனுக்குச் சொன்னேன். அவன் கோயில் காவலாளியை விசாரித்தான். ஒரு துப்பும் யாரும் சொல்லவில்லை. அவ் வூரில் பைத்தியக்காரன் ஒருவன் உண்டு. அவனே திருடி இருப்பான் என்ருர்கள். இது சீக்குப் போக்குக் கதை

என்று அறிவேன். நான் அதை நம்பவில்லை என்று அவர்களுக்குத் தெரியும். உடனே ஆள் அனுப்பி அப் பைத்தியக்காரனைத் தேடுவதாகச் சொன்னான். நீங்கள் செருப்பைத்தேடி அனுப்பாவிட்டால் இச்செய்தி ஜமீன்தார் காதிற்கு எட்டிவிடும் என்று என் காரியத்தன் சொல்லி விட்டான். பிறகு வேலை துரிதமாக நடந்தது.

நானும் என் ஆட்களும் பத்துக்கல்லுக்கு அப்பால் இருந்த எங்கள் தங்கு விடுதிக்கு உடனே விசைவண்டியில் புறப்பட்டுவிட்டோம். இரண்டு மணிநேரத்தில் அச் செருப்பு என்னிடம் வந்துவிட்டது. தேடிச்சென்ற ஆட்கள் அப்பைத்தியக்காரனைக் கண்டுபிடித்தார்களாம். அவனிடம் திருடிவைத்து இருந்த செருப்பைப் பிடிங்கிக் கொண்டு வந்துவிட்டார்களாம். 'இது கட்டுக்கதை என்று எல்லோரும் அறிவோம்.' 'கோயில் ஆட்களே திருடிவைத் திருப்பார்கள்' என்று கணக்கன் ஊகித்தான். 'செருப்பு வந்துவிட்டது. இனி அதைப்பற்றி என்ன கவலை' என்றேன். 'பாருங்கள், இப்படிப்பட்டவர்கள் கோயில் காப்பாளர்களாக இருந்தால் சமயப்பற்று எங்கே' என்றான். இதைப்பற்றி மேல் ஆராய்ச்சி வேண்டாம் என்றுசொல்லி அதனை அத னோடு நிறுத்திவிட்டேன்.

* * * *

6

இச் சமீன்தாரனைப்பற்றி உலாவும் கதைகள் பல. சிற்றின்பப் பிரியன் என்றால் உலகத்தில் அவனை மீறினவன் இல்லையாம். அரண்மனைக்குள் நடைபெறும் சங்கதிகள் வெளியே சிறிதும் வாரா து. இன்பம் துய்ப்பதற்கு வேண்டிய ஆட்களைச் சேகரித்துத் தரப் பல தரகர்கள் உண்டு. உள்ளே

செல்லும் அபலைகள் அடையும் கெதிக்கு அளவு இல்லை. மறுதலித்தால் உயிர் நிற்காதாம். மொகலாயர் அந்தப் புறங்களிலும் இப்படிப்பட்ட திருவிளையாடல்கள் நடைபெற்ற தில்லை என்று கதைகள் சொல்லுவார்கள். ஒருமுறை ஓர் அழகி மயக்கப்பட்டு உள்ளேகொண்டு செல்லப்பட்டாளாம். அவள் இணங்காததால் மிகக்கொடுமையாக நடத்தப் பெற்றதினுல் உயிரே போய்விட்டதாம். இச் செய்தி போலீசுக்குச் சிறிதும் தெரியவில்லையாம். உடலில் மெல்லிய பகுதிகள் சர்க்கரை நீரால் பூசப்பெற்று வேட்டை நாய்களின் நக்குதலுக்கு உட்படுத்தப்பெற்றனவாம். அப்படியும் அவள் சிறிதும் இடங்கொடுக்கவில்லையாம். அவள் படும் சித்திரவதையைக் கண்டும் அழுகுரல்களைக் கேட்டும் பல் இளித்துக்கொண்டே இருந்தானும் அந்த 'நீரோ' மன்னன். இவ்விதச் சீராட்டங்கள் இந்த நூற்றுண்டிலும் நடைபெற்றன என்றுல் யார் நம்புவார்கள்?

---

4. பணம் இல்லையேல் பிணம் ஆகுக

காலைத் தினத்தாள்கள் திடுக்கிடக்கூடிய செய்தி ஒன்றைக் கொட்டை கொட்டை எழுத்தில் வெளிப்படுத்தின. சில விநாடிகளில் ஊர் எங்கும் அதே பேச்சாய்ப் பாவி விட்டது. "அரசிளங்குமரர் கல்லூரியில் படுகொலை! ஆங்கிலத் தலைமை ஆசிரியர் சுட்டுக்கொல்லப்பட்டார்! இரண்டு ஜமீன் பிள்ளைகள் கைது! எங்கும் பரபரப்பு! காரணம் மர்மம்" என்று எல்லாத்தாள்களும் வெளியிட்டன.

ஆங்கிலேய ஆட்சியிலே ஆங்கிலர் ஒருவர் கொலையுண்டார் என்றுல் அரசியல் சும்மா இருக்குமா? தேர்ந்த நிபு

ணர்கள் துப்பு விசாரிக்க நியமிக்கப்பட்டார்கள். தீவிரமாக விசாரணை நடந்தது. இரவில் படுக்கும்போது அணிந்து கொண்டிருந்த உடையிலேயே இரண்டு சிறு மாணவர்கள் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்கள். இரண்டு நாளில் போலிசு விசாரணை முடிந்ததாம். உடனே ஆரம்ப விசாரணை எடுத்துக்கொள்ளப்பட்டது. மாஜிஸ்ட்ரேட் ஒரு நாளில் விசாரித்து மேல் நீதிமன்றத்திற்கு அனுப்பிவிட்டார். உயர் நீதிமன்றத்தில் கொலை விசாரணை நடத்த நாள் குறிக்கப் பட்டது. இவைகள் எல்லாம் சாதாரண வழக்கு. ஆனால் சில மாதங்கள் பிடித்திருக்கும். ஓர் ஆங்கில உயிர் போன தினால் சில நாளில் முடிந்தன. என்னே ஆத்திரம்!

கொலை நடந்ததை எவரும் பார்க்கவில்லை. இரவில் நடு நிசியில் எல்லாரும் உறங்கும்போது நடந்ததாம். அரசிளங் குமாரர்கள் கல்லூரி, ஒரு பெரிய வளைவிற்குள் அழகான பூங்காவின் இடையில் அமர்ந்திருந்தது. பிள்ளைகள் விடுதி மிகப் பெரிய கட்டடம். எல்லா வசதிகளும் கொண்டிருந் தது. மாகாணத்தில் இருந்த ஜமீன்தாரர்களின் பிள்ளைகள் எல்லாரும் அதிலே வாசிப்பார்கள். ஜமீன்களிலிருந்து அக்கல்லூரிக்கு வேண்டிய உதவி கிடைக்கும். பிள்ளைகள் விடுதிக்கு அடுத்தே தலைமை ஆசிரியர் விடுதியும் பிணைந் திருந்தது. தலைமை ஆசிரியர் மனைவியும் வேறொரு பெண்கள் கல்லூரியின் தலைமை ஆசிரியையாக இருந்தாள். இருவரும் இக்கட்டடத்திலேயே இல்லறம் நடத்திவந்தார்கள். கொலை நடந்தபோது யார் யார் எங்கிருந்தார்கள் என்று சொல்லு வார் இல்லை. தலைமை ஆசிரியர் சுடப்பட்ட ஒலிகேட்ட காலத்தில் இரண்டு பிள்ளைகள் படுத்திருந்த உடையோடு வெளித் திண்ணையில் காணப்பட்டார்களாம். உடனே அவர்கள் தான் கொன்றிருக்கவேண்டும் என்ற ஐயம்

ஏற்பட்டது. அவர்களைப் பிடித்து வைத்தார்கள். வழக்கும் தொடர்ந்தார்கள்.

கொலை நடந்த உடனே தலைமை ஆசிரியைக்கு அடக்க முடியாத் துயரம் ஏற்பட்டதாம். இந்நாட்டில் இருக்கவும் அச்சம் உண்டாயிற்றும். உடனே அரசியலாருக்கு மனு செய்து கொண்டாள். அந்நாளே அவளுக்கு அனுமதி தரப்பட்டது. உடனே கப்பல் ஏறி ஆங்கில நாட்டிற்குப் புறப்பட்டுவிட்டாள்.

பிடித்து அடைத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு ஜமீன் பிள்ளைகளும் தமிழ்ப்பிள்ளைகள். பண்டைய பாளையப் பட்டுகளின் சந்ததிகள். வீரப் பெருங் குடிகளின் பண்பு கள் இன்னமும் முளைக்காத வயதினர். ஆகவே, அவர்கள் என்ன செய்யக்கூடும்? ஓர் இளைஞன் மிரட்டிலுக்கு அஞ்சித் தான் குற்றம் செய்ததாக ஒத்துக்கொண்டான் என்று சொல்லப்பட்டது. அதை முன்னிட்டுத்தான் வழக்குத் தொடரப்பட்டது.

ஆனால், தகுந்த காரணமும் சான்றுகளும் இல்லாமல் வழக்கு நிற்குமா? பல காரணங்கள் வெளிப்படுத்தப் பட்டன. கல்லூரியில் தமிழ்ப் பிள்ளைகளோடு ஆந்திரச் சீமான்களின் பிள்ளைகளும் வாசித்து வந்தார்கள். தலைமை ஆசிரியர் ஆந்திரர் பிள்ளைகளைப் பட்சமாகவும் தமிழர் பிள்ளை களைப் பாராமுகத்துடனும் நடத்தி வந்தாராம் என்னப் பட்டது.

ஒரு நாள் வகுப்பில் தமிழ்ப் பிள்ளைகளை மூடர்கள் என்றும் முட்டாள்கள் என்றும் அழைத்தாராம். அது முதல் தமிழ்ப் பிள்ளைகளுக்கு அவ்வாசிரியர் மீது கடுங் கோபமாம். வகுப்பிலே பெரிய பிள்ளை முதற்குற்றவாளி. அவனுடைய நண்பன் இரண்டாம் குற்றவாளி. இவர்கள் இருவருக்கும் ஆசிரியர்மீது கடுங்கோபம் என்று சொல்லப்

பட்டது. அதை முன்னிட்டு அவரைச் சமயம் பார்த்துச் சுட்டுத்தள்ளினர் என்று வழக்குத் தொடரப்பட்டது.

ஆனால், ஊரிலோ பல கதைகள் தோன்றின. 'இவ்விரு பிள்ளைகள் நிரபராதிகள். தலைமை ஆசிரியருக்கும் அவரது மனைவியாருக்கும் நேசமில்லை. பிறருடைய பழிச்சொல்லுக்கு அஞ்சி ஒரே மனையில் வாழ்ந்தார்கள். அன்று இரவே வேறொரு வெள்ளையன் அந்த விடுதிக்கு இரகசியமாக வந்தான். அவனே கொலைக்குக் காரணம். இந்தச் செய்தி வெளிவராமல் செய்யும் பொருட்டே மனைவி ஆங்கில நாட்டிற்குத் துரிதமாகச் சென்றுவிட்டாள். வழக்கின்போது மக்களை வாயை மூடுவதற்காக இளம்பிள்ளைகள் மீது சுமத்தப்பட்டது' என்பதே ஊர் வம்புக் கதை. உண்மை எவர்க்குத் தெரியும் ?

ஜமீன்களுக்குச் சொத்து உண்டு. ஆகவே, தக்க வழக்கறிஞர் நியமிக்கப்பட்டார். முதல் குற்றவாளி தந்தையை இழந்த மைனராகி இருந்தாலும் இரண்டாம் குற்றவாளி தந்தை உள்ளவனே. ஆகவே, எதிர் வாதம் செம்மையாக நடத்தப் பெற்றது. ஆங்கில சமூக முழுவதுமே குற்றவாளிகளைத் தகுந்த தண்டனை தந்து இதைப் போல் என்றும் நிகழாதவாறு தக்க படிப்பினை கற்றுக் கொடுக்கவேண்டும் என்று முயற்சித்தது. நாடு எங்கும் பரபரப்பு ஏற்பட்டது. இதனை அறிந்த வழக்கறிஞர் மத்திய அரசாட்சிக்கு மனு செய்துகொண்டு வழக்கை வேறு மாகாணத்திற்கு மாற்றும்படி விண்ணப்பித்தார். இதுவரை இவ்வித மாற்றம் நடந்ததில்லை. சட்டம் இருந்தாலும் அவ்விதச் செய்கை இதுவரை நடந்ததில்லை. இது முடியவே முடியாது என்று மக்கள் நினைத்தார்கள். ஆனால் தெய்வாதீனமாக குற்றவாளிகளுக்கு அனுகூலமாக உத்தரவு கிடைத்தது. வழக்கு அடுத்த மாகாணத்துப் பெரிய நீதி

மன்றத்திற்கு மாற்றப்பட்டது. முந்திய மன்றத்தில் நடந்திருந்தால் விபரீதமாக முடிந்திருக்கும் என்றே எவரும் நம்பி இருந்தார்கள்.

அடுத்த தலைநகர்ப் பெரிய மன்றத்தில் வழக்கு நடந்தது. மிகச் சிறந்த பாரசீக வழக்கறிஞர் நியமிக்கப் பெற்றார். விசாரணை முடிவடைந்தது. ஜூரிகள் குற்றமில்லை என்று வாக்களித்தார்கள். நீதிபதியும் "ஒரு நாயைத் தூக்குவதற்கு வேண்டிய சான்றுகளும் இதில் இல்லை" என்று தீர்ப்பு சொன்னார்.

இரண்டு குற்றவாளிகளும் நிரபராதிகள் என்று விடுதலை செய்யப்பட்டார்கள். இரண்டு இளைஞர்களும் சென்னைக்கு வந்தபோது மிகுந்த ஆரவாரத்துடனே வரவேற்புநடந்தது. அதைவிட மிகுதியாகவும் உண்மையான அன்புடனும் ஜமீன் குடிகள் தங்கள் ஊரில் முதல் இளைஞருக்கு வரவேற்பு தந்தார்கள். இரண்டாம் இளைஞர் வெருட்டலுக்கு அஞ்சின இளைஞன் என்று மக்கள் ஏசத்தொடங்கினார்கள். 'என்னமோ, எல்லாம் நன்மையாக முடிந்தது. உண்மையே வெல்லும்' என்றும் மக்கள் பேசிக் கொண்டார்கள்.

படுகொலை இயற்றினார் எவரோ இன்னமும் எவருக்கும் தெரியவில்லை. எனக்குத் தெரிந்த ஒரு ஜமீன்தாரார் ஒரு மர்மத்தை வெளியிட்டார். 'முதல் இளைஞர் கொலையில் சம்பந்தப்படாமல் இருக்கலாம், இருந்தாலும் அவருக்குக் கொலையின் மர்மம் தெரிந்திருக்கும்' என்றார். எப்படி என்று கேட்டேன். சில ஆண்டுகளுக்குள் அவர் உயிர் துறந்தார் தெரியுமா ? இத்தனை இளமையில் உயிர் துறக்க ஏதாவது ஊழ்வினை இருக்க வேண்டும், என்றார். ஊழ்வினையில் இத்தனை நம்பிக்கை இவருக்கு இருக்கிறதே என்று நான் வியந்தேன்.

கொலை நடந்தது. வழக்கும் முடிவு அடைந்தது. மக்களும் அதனை மறக்கலானார்கள். இக் கொலையின் காரணமாக மற்றொரு மாறுதல் ஏற்பட்டது. அரசிளங் கல்லூரி எடுபட்டுப் போய் விட்டது. அது நாட்டிற்கு ஒரு பெருத்த நன்மை என்று அறியவேண்டும். ஆங்கில அரசாங்கத்தார் இயற்றிய பணிகளில் பெரும் பான்மையன ஏகாதிபத்தியக் கொள்கையை அனுசரித்தனவே. மேலும் நாட்டில் பிரிவினையும் வகுப்புவாதமும் ஏற்படுத்தக் கூடியவையே. அந்தச் செயல்களினாலே வெகு எளிதாக வேறொரு நாட்டை அடிமைப்படுத்தி ஆளமுடியும் என்க. செல்வ வான்களையும் ஏழைகளையும் நிரந்தரமாகப் பிரித்துவைத்தல் நிலக்கிழார்களையும் நிலமற்றவர்களையும் பிரித்து வைத்தல் இவைகளே அவர்களுடைய முக்கிய செயல்கள். அப்பிரிவினைகளை நிலை நிறுத்தும் நிலையங்களையும் உண்டாக்கினார்கள். தென்னாட்டு அரசிளங்குமார் கல்லூரியும், வடநாட்டு அரசிளங் குமரர் கல்லூரிகளைப்போல் அப்படிப்பட்ட நிலையங்களில் ஒன்று. ஜமீன்தாரர்களின் மக்களை வேறாகப் பிரித்து அவர்களுக்குத் தனிப்பட்ட கல்விச்சாலை அமர்த்தினார்கள். பொதுமக்களின் குழந்தைகளோடு அவர்கள் சமமாக உட்காரக் கூடாதாம். இவர்களுக்குத் தனியான பயிற்சியும் வேண்டுமாம். பொதுக் கல்வியைவிட உடல் பயிற்சி, ஆயுதப்பயிற்சி முதலியன கொடுக்கப்பட்டன. உல்லாச ஆட்டங்கள் கற்பிக்கப்பட்டன. தான் உயர்ந்தவன் என்ற எண்ணம் கொடுக்கப்பட்டது. இந்த வகையில் வேறுபாட்டுநிலை நிறுவப்பட்டது. இவ்விதப் பாடசாலையினால் யாருக்கு என்ன பயன்? அவர்கள் கிணற்றுத்தவளைகள் போல வளர்ந்தார்கள். தங்களை உயர்ந்த வகுப்பினராகக் கருதினார்கள். செருக்கிலும் வீண் பெருமையிலும் ஜமீன் தார்கள் சிக்கனம் என்பதே தெரியாதவர்களாக இருந்தார்

கள். பிற்காலத்தில் ஜமீன் ஆளும்பொழுதும் இதே பண்பில் ஆண்டார்கள். இவைகளினுல் எவர்க்கும் யாதொரு நன்மையும் ஏற்படவில்லை.

தென்னுட்டு அரசியல் கல்லூரி ஒரு பெரிய பூதம். அது அளவு கடந்த பணத்தை உண்டு வந்தது. ஜமீன்களுக்கும் அரசாங்கத்திற்கும் வீண் பண விரய நிலையமாக இருந்தது. அதனுல் எத்தனை குமரர்கள் பயன் பெற்றூர்கள். அனேக ஆண்டுகளாக நடந்து வந்த இந்த நிலையத்திலே பயிற்சி பெற்ற செல்வ மக்களிலே ஒன்றிரண்டு பெயரே கல்வியில் பட்டம் பெற்றூர்கள். அவர்களும் இந்தக் கல்விச்சாலையின் சிறப்பினுல் உயரவில்லை. வேறு பாடசாலைகளில் சேர்ந்ததினுல் சிறப்புப் பெற்றூர்கள். ஆகவே இந்தச்சாலை என்றுல் எவர்க்கும் வெறுப்பு உண்டாயிற்று.

அப்படியிருக்க இந்தப்படுகொலை நடந்ததும் அதையே சாக்காக வைத்துக்கொண்டு அரசாங்கம் அக்கல்லூரியை நீக்கி விட்டது. அக்கொலையோடு பாடசாலையும் மூடப்பட்டது. அரசிளங்குமரர்கள் பொதுப்பள்ளிக் கூடங்களிலேயே சேரத் தொடங்கினுர்கள். இங்கிலாந்து முதலிய நாடுகளில் இவ்விதப் பிரிவினை இல்லை. எல்லாக் கலாசாலைகளிலும் எவரும் வகுப்பு பேதம் இன்றிச் சேர்ந்து படிக்கலாம். இங்கேயும் இது இப்போது ஏற்பட்டதற்கு இக்கொலையே காரணம் என்க. தீமையில் நன்மை பிறந்தது. கள்ளியில் அகில் பிறப்பதில்லையா ? முள் செடியில் ரோஜா பிறப்பதில்லையா ? அது போலவே என்க.

---

5. எங்கே சிக்கனம் வேண்டும்

'காற்றைப் பிடித்துக் கடத்தில் அடக்குதல்' என்பது முடியாத காரியத்திற்கு ஒரு உவமையாகச் சொல்லி வந்தார்கள் முன்னோர்கள்.

கண்ணபிரானருளிய கீதையில் அருச்சனன் 'மனதை அடக்குதல் காற்றை அடக்குதலைப்போல மிகவும் கஷ்டமானது' என்று கண்ணனிடம் கூறுகிறான். (பகவத்கீதை-6 அதி. 34 சுலோகம்) ஆனால் பௌதீக நூல்களோ காற்றை அடக்க முடியும் என்று பல சோதனைக் கருவிகளை கொண்டு செய்து காட்டுவார்கள். அண்மையிலே காற்றினுடைய வெப்ப தட்பங்களை நமக்கு வேண்டியபடி மாற்ற முடியும் எனச் சொல்லிப் பல இயந்திரப் பொறிகளைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். வட இந்தியாவில் வெய்யில் சில மாதங்களில் பொறுக்கமுடியாது. தண்ணீர்த் திரைகள் படதாக்கள் முதலியவைகளின் இடையில் இருந்தாலும் சூடு தாங்கமுடியாது. ஆகவே புகை வண்டிகளில் எவ்வாறு பாலைவனம் போன்ற நாடுகளில் செல்வது. அதற்காகப் புதிதாகக் கண்டுபிடித்த சூடுதணி இயந்திரங்களை அமைத்து மக்களை இன்பப் படுத்துகிறார்களாம். இவ்வித வண்டிகளில் பயணம் செல்லுவதற்குத் தனிக்கட்டணங்கள் கட்டவேண்டுமாம். இந்தவசதிகளை நான் அனுபவித்ததில்லை. ஒருநாள் சென்னையில் மலைச்சாலை என்ற மௌண்ட்ரோட்டில் சென்று கொண்டிருக்கையில் ஒரு சிற்றுண்டி விடுதியில் அவ்வித சூட்டுத் தணிவு அமைப்பு இருக்கிறது என்று அறிந்தேன். அந்த அறைக்குள் சிறிதுநேரம் உட்காரவும் பணம் கொடுக்கவேண்டுமாம். அந்தச் செயலை இன்னும் செய்துபார்க்கவில்லை.* எப்போது இந்த அனுபவம் கிடைக்குமோ என்று எதிர்பார்த்திருந்

தேன். அது எனக்குத் தற்செயலாக எதிர்பாராத வகையில் கிடைத்தது.

என் அலுவலின் நிமித்தம் பல ஜில்லாக்கள் சுற்ற வேண்டியிருக்கும். அங்கே உள்ள சமய நிலையங்களின்மேற் பார்வை என் கடமைகளில் ஒன்று. அவ்வகையில் தென் னாட்டில் ஒரு பெரிய ஜமீன்தாரின் பொறுப்புக்குட்பட்ட நிலையங்களுக்குச் சென்றேன். அந்தத் தொடர்பில் ஜமீன் தாருடன் சில செய்திகள் பேசவேண்டி வந்தது. அவரு டைய அமைச்சன் என்னை அழைத்துக் கொண்டுபோய் ஜமீன்தாருக்கு அறிமுகப்படுத்தினான். என் வட்டத்தில் முந்தியே வேலை பார்த்திருந்தவனானதினால் அமைச்சன் எனக்குத் தெரிந்தவனாக இருந்தான். ஜமீன்தார் காட்சி யும் எளிதில் கிடைத்தது.

ஜமீன்தாரரோ சூடுதணிவு அமைப்புப் பெற்றிருந்த ஓர் அறையில் எழுந்தருளி இருந்தார். அவ்விடத்திற்கு என்னை அழைத்துவரும்படி சொல்லியிருந்தார். அறையின் கதவுகள் எல்லாம் சாத்தப்பெற்றிருந்தன. ஒரு கதவு திறக் கப்பட்டது. நான் உள்சென்றேன். உடனே கதவு சாத்தப் பட்டது. என்ன, சிறையில் அடைக்கப்பட்டேனோ என்ற எண்ணமே எனக்கு உண்டாயிற்று. எதிரில் ஜமீன்தாரர் ஓர் அழகிய சாய்வு மெத்தை நாற்காலியில் அமர்ந்திருந்தார். நான் தனியாக விடப்படவில்லை, மற்றொருவர் இருக்கின்றார். ஆகவே இது சிறைக்கூடம் அல்ல என்று உறுதிப்படுத்திக் கொண்டு மெல்ல உள்சென்றேன். ஜமீன்தாரும் என்னை வரவேற்று நாற்காலியில் உட்கார வேண்டினார். நானும் அமர்ந்தேன். அறையின் வெளியில் 99 டிக்ரி சூடு இருக்க லாம். அறைக்குள்ளே 80 டிக்ரிதான் இருக்கும். அதிலே வீற்றிருக்க மிக இனிமையாக இருந்தது. கோடைக்கானலில் குறிஞ்சிமலை ஆண்டவன் சந்நிதியிலும் குன்னூர் ஊற்று

வயலிலும் (Spring field) இருந்தாற் போல இருந்தது. இந்த ஜமீன்தாரன் மிகுந்த பாக்கியம் செய்தவராக இருக்க வேண்டும் என்று எண்ணினேன். முதல் தடவையில் இந்த அனுபவம் பெற எனக்கும் விருப்பமாகத்தான் இருந்தது. ஏனெனில் வேறு யாராவது பேச்சுக்கு இழுத்து விட்டால் நானும் இந்த அனுபவம் பெற்றவன் என்றும் வெறும் பட்டிக்கட்டாள் அல்ல என்றும் சொல்லிக் கொள்ளலாம் அல்லவா ?

ஜமீன்தாருக்கு வணக்கம் சொல்லி ஆனவுடனே, முதற் பேச்சு இந்தத் தணிவு அமைப்பைப் பற்றித்தான் நடந்தது. அது இயற்கை அல்லவா ?

" ஐயா இந்தத் தணிவு அமைப்பு (Air Conditioned Arrangement) எப்படி இருக்கிறது. " என்று உற்சாகத்துடன் அவர் கேட்டார்.

" வெகு இன்பமாக இருக்கிறது. சமநிலத்தில் இருந்து கொண்டே மலைமீது உள்ள காற்றை அனுபவிக்கலாம். ஆனால் இது செயற்கை அனுபவம். செல்வவான்களுக்குத் தான் கிடைக்கக்கூடியது " என்றேன்.

" ஆமாம். மிகப்பொருட் செலவு செய்துதான் இதை அமைக்க வேண்டியிருந்தது. பத்தாயிரத்திற்கு மேல் ஆகி விட்டது. "

" பணம் போனால் போகட்டும். சுகம் எப்படி இருக்கிறது. இங்கிருந்து 200 கல் ஓடி கோடைக் கானல் ஏற வேண்டியதில்லை. சில பலவீனர்களுக்கு அவ்விடம் பிடிக்கிறதில்லை " என்றேன்.

" ஆமாம். எனக்கும் கோடைக் கானல் பிடிப்பதில்லை. மேலும் வீண் செலவு பாருங்கள். சாதாரண மக்கள் அங்கே எளிதில் போகலாம். எங்களைப் போன்ற ஜமீன்தார்கள் செல்ல முடிகிறதில்லை. வீண் செலவு அதிகம். "

"பெரிய ஜமீன்களுக்கு இது கொசுக்கடி மாத்திரம். செயற்கை அமைப்பை விட இயற்கை அமைப்பு விசேஷம் அல்லவா ?"

"கோடைக் கானலில் ஒரு பங்களா இருக்கிறது. என் தகப்பனுர் கட்டினது. ஆனல் நான் ஒரு முறையும் போனதே இல்லே. ஒருமுறை முயன்றேன். செலவைக் கண்டு வெறுத்தேன். எப்போதும் அங்கே போகவே மாட்டேன்."

இது திராட்சைப்பழம் புளிப்பு என்ற கதை போல் இருக்கிறதென்று மனதில் நினைத்தேன்.

"என்ன, நான் சொன்னது சரியல்லவா" என்று மீண்டும் கேட்டார்.

"நீங்கள் சொன்னது சரிதான். உங்களைப்போல் மற்ற ஜமீன்தாரர்களும் இருந்தால் நமது நாடு வெகு எளிதில் முன்னேற்றம் அடைந்து விடும்" என்றேன்.

"நீங்கள் கூறியது சரிதான். வீண் செலவு ஏன் செய்ய வேண்டும். அதனை குடிகளுக்குக் கொடுக்கலாம்" என்று வெகு தாராளமாகச் சொன்னுர்.

பிறகு அவருடைய ஆலயங்களைப்பற்றிச் சிறிது நேரம் பேசிவிட்டு விடை பெற்றுக்கொண்டு வெளியே வந்தேன்.

அவ்வறையை விட்டு வெளிவந்தேனே இல்லையோ என் உடல் அடைந்த புழுக்கத்தைக் கூறவும் வேண்டுமோ ? நெருப்புலேயில் இறங்கினது போலத் தோன்றியது. அது வரையில் அனுபவித்த இன்பம் ஒரு விநாடியில் பறந்து போயிற்று. உடலெல்லாம் எரியத் தொடங்கியது. இதில் என்ன பயனே அறியேன். இவ்வாறு வெப்பத்திற்கும் தட்பத்திற்கும் உடலை மாறிமாறி இட்டுக் கொண்டிருந்தால் உடலுக்குத் தீராத நோய் வரும் என்பதில் ஐயம் இல்லை.

இதை அனுபவித்த எனக்கு இவ்விதச் செயல்களில் மக்கள் ஏன் புகுகிறுர்கள் என்ற எண்ணமே வந்தது.

ஜமீன்தாரின் அமைச்சன் என்னை ஊர்க் கோயில்களுக்கும் பண்டை ஆயுத,சாலைகளுக்கும் அழைத்துக்கொண்டு சென்ருன். ஊர்க் கோயில்கள் இருக்க வேண்டிய நிலையில் இருக்கவில்லை. சிக்கனத்தை உபதேசித்த ஜமீன்தாரர் தன் கோயில்களைச் சிக்கன முறையில் வைத்து வருமானத்தை மீதிப்படுத்தி ஆலயச் சீர்திருத்தத்திற்குப் பயன்படுத்தியிருக்கலாம். தனக்கு வேண்டும் என்றது கோயிலுக்கு வேண்டாம் போல இருந்தது. அரண்மனையில் கொலுவு மண்டபம் கண்டேன். அங்கே பண்டைக்காலம் சேகரித்து வைத்த அரியாசனங்கள் அரிய படங்கள் அரச உடைகள் ஆயுதங்கள் இவைகளைக் கண்டேன். அது பொருட் காட்சிச் சாலைபோல இருந்தது. இராதாகிருஷ்ணன் படம் ஒன்று வடநாட்டுத் திருவிளையாடலை ஒத்து இருந்தது. அதை யாராவது ஒரு வடநாட்டார் அரசனுடைய வேண்டுகோட்கு இணங்கி விற்றிருக்க வேண்டும் என்று நினைத்தேன். அப்படியாயின் மனதின் போக்கு எந்த வழியில் சென்றது என அறியலாம்.

அமைச்சனிடம் மற்றச் செய்திகளைப் பற்றிப் பேசிக்கொண்டு செல்லுகையில் ஜமீன்தாரர் கடற்கரைத் தேரிகளில் இரண்டு லட்சம் பனைமரங்கள் இருப்பதாகவும் அவைகளை மொத்தமாக மரம் ஒன்று எட்டணு வீதம் ஒரு லட்சம் ரூபாய்க்கு விற்றுவிடக் கருதுகிறுர் என்றும் சொன்ஞன். மரம் ஒன்று இந்நாளில் நான்கைந்து ரூபாய்க்குப் போகும் போது ஏன் பத்தில் ஒரு பங்குக்கு விற்கவேண்டும் என்று கேட்டேன். மரங்கள் இருக்கும் கடற்கரை இங்கிருந்து ஐம்பது கல் தொலைவில் இருப்பதால் வண்டிச் சத்தம் முதலியவைகளைக் கழிக்க அரைரூபாய் தான் பொறும் என்று

சொன்னான். இந்தத் தொகை கொடுக்கவும் ஆள் வருவதில்லை என்றான். ஏன் இத்தனை மரங்களை விற்க வேண்டும் என்று கேட்டேன். இந்தக் கடினநாளில் வருவாய் ஒழுங்காக வருவதில்லை. செலவுகள் குறைந்தபாடு இல்லை. ஆகவே விற்பனை அகத்தியமாக ஏற்பட்டு விட்டது என்றான். இப்போது ஜமீன்தாரர் ஏன் கோடைக்கானலுக்கு கோடைக்கால வாழ்க்கைக்குச் செல்லுவது இல்லை என்றதன் காரணம் தெரிந்துகொண்டேன்.

காவடிச்சிந்து என்றால் எந்தத் தமிழனுக்குத்தான் குதூகலம் பொங்காது. ஒருவன் பாடிச் சென்றால் சிறு குழந்தையும் மகிழ்ச்சியினால் குதிக்கத் தொடங்கும் அல்லவா? அவ் அழகிய பாடல்கள் பெருமைப்படுத்திய மலைக்குச் செல்லலாம் என்ற பேரவா எனக்கு வெகு காலமாக உண்டு. ஒருமுறை நானும் சென்றேன். அழகான ஒற்றைப் பாறைக்குன்று. ஆனால் உயரமும் கொண்டது. சுற்றிலும் பல நீர்ப்பாழிகள். நான் சென்றபோது அவைகளிலிருந்து மக்கள் நீர் மொண்டுகொண்டிருந்தார்கள். மலையின்மேல் சிறிது தொலை ஏறினேன். சமணர்கள் செதுக்கி வைத்த அழகிய பிம்பங்கள் கணக்கிலவாக இருந்தன. சமணர் படுக்கைகளும் உண்டு. குரவர்கள் குரத்திமார்கள் இவர்களுடைய பெயர்களும் செதுக்கப்பட்டிருந்தன. இவ்வதிசயங்களை எல்லாம் கண்டுகொண்டே மலையின் மற்றொரு பக்கம் சென்றேன். ஒரே பெரும் பாறையில் ஒரு பெரிய பிள்ளையார் கோயில் செதுக்கப்பட்டிருந்தது. மாமல்லைத்தேர்க் கோயிலைப் போலவும் இளாபுரி (நைசாம் சீமை)க் கைலாசநாதர் தேர்க்கோயிலைப் போலவும் இருந்தது. இத்தனைக் சிறந்த தேர்க்கோயில் தென்னாட்டில் கண்டதில்லை. கேட்டதும் இல்லை. இவைகளை எல்லாம் கண்டு களித்துக்

கொண்டு நிலத்தில் இறங்கி அடிவாரக் கோயிலைக் காணச் சென்றேன்.

இக்கோயில் ஜமீன் ஆதரவில் உள்ளது. நிரம்பச் சொத்து உண்டு. ஆட்சிக்கு ஓர் அதிகாரி நியமிக்கப் பெற்றிருந்தான். என்றாலும் அதன் ஒழுங்கு பிடிக்கவில்லை. கோயிலுக்கு எதிரே ஒரு கிறிஸ்தவ தேவாலயம் தோன்றிற்று. அதன் நிர்வாகத்தோடு இக்கோயிலின் நிர்வாகம் ஒத்திட்டுப் பார்க்க வேண்டும். பண விஷயத்தில் கோயில் பெரிது, நிர்வாக விஷயத்தில் கிறிஸ்தவர் ஆலயம் சிறந்தது, ஏன் என்ற கேள்விக்கு யார் விடை அளிப்பது ?

வீட்டு அளவில் சிக்கனம் இருந்தால் நாட்டு அளவில் அது ஏன் இருக்கலாகாது ? இல்லற நிலையில் எச்சரிக்கை இருக்கலாம், சமய அறநிலையில் அது வேண்டியதில்லை போலும். இந்த முறையில் ஆட்சி இருந்தால் அதனால் யாருக்கு என்ன பயன் ? முறை தவறுதல் இல்லையா ?

திருவிழாக்களில் மேளங்களுக்குப் பணம் உண்டு. அவைகளால் பாமர மக்களையும் அதிகாரிகளையும் மயக்கலாம். கோயில் மண்டபங்கள் இடியத் தொடங்கினால் அவைகளை சீர்படுத்தப் பணம் இல்லை. இது என்ன நியாயமோ ? இவ் வித எண்ணங்களுடன் அத்திவ்வியக் கோயிலை விட்டு வெளியே வந்தேன்.

---

6. பண்பாட்டிலும் வெறுமை உண்டோ ?

அழகிய பூங்காவனம், நறுமணம் வீசும் மலர்ச்செடிகள், கொத்துக் கொத்தாகத் தொங்கும் பூங்கொடிகள் மிதக்கும் இலைகள் நடுவே தலை நீட்டிப்பார்க்கும் அல்லித் தடங்கள், " நன்னிழலைந் ' தருவதுடன் செந்தீபடர்ந்தாற்

போல் விரிமலர்கள் பூத்த பெருமரங்கள் முதலியன கணக்கில வாய்க்கொண்ட பூம்பொழிலின் இடையே அழகிய மாளிகை. அதற்குள்ளே உடற்கு நலம் தரக்கூடிய அரும் பொருள்கள் என்னென்ன உண்டோ அவைகள் எல்லாம் ஒழுங்காக அமைக்கப் பெற்றிருந்தன. அப்பவனத்தில் ஒருநாள் தங்கும் பெருமை எனக்கு ஒருமுறை கிடைத்தது. அம்மாளிகையில் ஒவ்வொரு அறையிலும் வைக்கப் பெற்றிருந்த கடல்தரு பொருள்களைக் கண்டு வியந்தேன். மிகப்பெரிய சங்குகள், படர்ந்த பவளக்கொடிகள், பலவித நிறக் கிளிஞ்சள்கள் ஓர் அறையை அலங்கரித்தன. யானைத் தந்தங்கள், காட்டெருமைக் கொம்புகள், மரக்கிளைகளையும் தோற்கடிக்கும் கலைமான் கொம்புகள், விதம்விதமான காட்டுவிலங்குகளின் தோல்கள், உயிர் வருக்கங்கள் போல் பதனிடப்பட்ட பயங்கரத் தலைகள் ஆகிய இவைகள் எல்லாம் மற்றொரு அறையில் இருந்தன. அழகிய யுவதிகளின் படங்கள், பலநாட்டு மன்னர்களின் திருவுருவ ஓவியங்கள், பண்டைக்கால செப்புத் திருமேனிகள் முதலியன மற்றொரு அறையில் இருந்தன. இது என்ன கண்காட்சிச் சாலையோ என்று மயங்கவேண்டாம். ஒரு தமிழ் நாட்டுக் குறுநில மன்னனின் உத்தியான பவனம் ஆகும்.

கதிரவன் கொடுமை சற்றுத் தணியத் தொடங்கிற்று. பிற்பகல் சிற்றுண்டி அருந்திவிட்டு நாற்காலியில் உட்கார்ந்தேன். அழகாக உடுத்தியிருந்த சில குழந்தைகள் வந்தார்கள். எல்லாரும் $2\frac{1}{2}$ வயதுமுதல் 5 வயதுக்குள் அடங்கினவர்களே. ஏழெட்டுக் குழந்தைகள். முகங்களில் நல்ல ஒளி வீசிக்கொண்டிருந்தது. ஆகவே பெருங்குடி மக்கள் என்பது விளங்கிற்று. மாநிறம் முதலாக வெண்சிவப்பு வரை பல நிறங்களாய் அமைந்து இருந்தார்கள். ஆனால் எல்லா முகங்களிலும் ஒரே சாயல் இருந்தது. இவ்வளவு

குழந்தைகளும் ஒரே குடும்பத்தினரோ என்று ஐயுற்றேன். இவ்விரு குழந்தைகளுக்கு ஒவ்வொரு துணைப்பையன் இவர்களை அழைத்துக்கொண்டு அத்துணைவர்கள் மாளிகை முழுவதும் சுற்றிக்கொண்டு பூங்காவனத்தில் விளையாடிக் கொண்டும் மேல் மாடியின்மீது ஏறிஇறங்கிக் கொண்டும் இருக்கலானார்கள். அவர்கள் யார், எப்படி உறவு என்ற கேள்விகள் கேட்க எனக்கு மிகுந்த ஆவல் ஏற்பட்டது. ஒரு துணைப்பையன் கையில் ஒரு மிட்டாய்த் துண்டு தந்தேன். அவன் வெகு மகிழ்ச்சி அடைந்து என்னிடம் பேசத் தொடங்கினான்.

" தம்பீ, இந்தக் குழந்தைகள் யாருடைய குழந்தைகள் " என்றேன்.

"உங்களுக்குத் தெரியாதா! பெரிய துரையின் குழந்தைகள் " என்றான்.

" சரி, எல்லாரும் அவர்களுடைய குழந்தைகளோ?"

" ஆமாம், எல்லாரும் அவர்களுடைய குழந்தைகளே! முகசாடை தெரியவில்லையா ?"

"ஆனால், ஒரே வயதுக் குழந்தைகளாகச் சில தெரிகின்றார்களே ?"

"அதற்கென்ன, தாய்மார்கள் வேறு. மாநிறக் குழந்தைகள், பெரிய நாச்சியார் குழந்தைகள். செந்நிறக் குழந்தைகள் இரண்டாம் நாச்சியார் குழந்தைகள். இந்தக் குழந்தைகள் மூன்றும் நாச்சியார் குழந்தைகள். இந்த வெண்ணிறக் குழந்தைகள் பட்டணத்து நாச்சியார் குழந்தைகள்" என்றான். அப்போதுதான் எனக்கு உண்மை விளங்கிற்று.

" எத்தனை நாச்சிமார்கள் இருக்கிறார்கள் ?"

“ நான்கு பேர்கள். முதல் மூன்று நாச்சிமார்களும் சொந்தத்தில் கட்டினவர்கள்: நான்காம் நாச்சியார் பட்டணத்திலிருந்து வந்தவர்கள்.”

“ இவர்கள் எல்லாரும் அந்நியோன்யமாய் இருக்கிறார்களா ?”

“ அதற்கென்ன சந்தேகம். ஒவ்வொருவருக்கும் தனித்தனி அரண்மனை ; தனித்தனி வேலையாட்கள் ; அவரவர்களுக்கு வேண்டிய உணவுப்பொருள்களும் சமையல்காரர்களும் ; குழந்தைகளைப் பார்ப்பதற்குத் தனித்தனி என்னைப்போன்ற அடிமைப் பையன்களும் உண்டு. ஏன் சச்சரவு ஏற்படும் ? ” என்றான்.

“ அடிமைப் பையன் என்றால் உனக்கு அரண்மனையில் என்ன வேலை ? ”

“ நாங்கள் தலைமுறை தலைமுறையாக அரண்மனையிலேயே இருப்பவர்கள். அங்கேயே பிறந்து அங்கேயே வளர்ந்தவர்கள். அரண்மனை வேலை முழுவதையும் எங்கள் குடும்பங்களே வேலை செய்யும். சாப்பாடு துணிமணி எல்லாம் அரண்மனைச் செலவே ” என்றான்.

“ இந்தக் குழந்தைகள்மட்டும் ஏன் அத்தனை செகப்பாக இருக்கின்றன.”

“ அதன் தாயார் மிகச் செகப்பு. அவர்களைப் பட்டணத்தில் கடற்கரையிலே சந்தித்தார் பெரிய துரை. இங்கே அழைத்துவந்து கலியாணம் செய்துகொண்டார். அவர்கள் வேறு வகுப்பு. ஆனால், துரைகள் எந்த வகுப்பிலும் கல்யாணம் செய்துகொள்ளலாம். பட்டத்துக்கு வருகிறவர்கள் மாத்திரம் சொந்த வகுப்பில் இருக்கவேண்டும். ”

“ குழந்தைகள் குணம் எப்படி ? ”

"பெரிய நாச்சியார் குழந்தைகள்மட்டும் வெகு பிடிவாதம். கேட்டது கொடுத்தே தீரவேண்டும். மற்றவர்கள் வெகு சாது!"

"குழந்தைகளைப் பெரிய துரை பார்க்கிறதில்லையா?"

"அவருக்கு நேரமேது. மாலை நேரத்தில் இங்கே வந்தால்தான் குழந்தைகளைக் கண்டு வாரி முத்தம் இடுவார். மற்றக் காலங்களில் அவர் பார்க்கமாட்டார்."

"வீட்டில் பார்ப்பதில்லையா?"

"பெரியதுரை அரண்மனைக்கு வருவதே இல்லை. அங்கே நாச்சியார்கள்தான் இருப்பார்கள். பெரியதுரை அரண்மனைக்கு எதிரே உத்தியானவன மண்டபத்திலேயே எப்போதும் இருப்பார்.

செய்திகள் தெரிந்துகொண்டேன். பையனுக்கும் குழந்தைகளுக்கும் தின்பண்டங்களைக் கொடுத்துவிட்டு அறைக்குச் சென்றேன்.

* * * *

2

சமஸ்தானத்திற்குச் சேர்ந்த சமய நிலையங்கள் பல உண்டு. அவர்களைப் பார்வையிட ஓர் அதிகாரி யிருந்தார். ஆகவே, என் வேலை சுலபமாகிவிட்டது. அவர் என்னை அழைத்துக்கொண்டு பல நிலையங்களையும் காட்டினார். அவைகள் எல்லா ஊர்களிலும் சமஸ்தானங்களிலும் இருந்தவைகளை ஒத்தே இருந்தன. சில நன்றாகவும் சில மத்திமமாகவும் சில பார்க்கச் சகிக்காதனவாகவும் இருந்தன. இந்நிலைமை இப்போது ஏற்பட்டது அல்ல. பண்டைக்காலம் முதற் கொண்டே மக்கள் சமயத்தில் கொண்ட அன்பின்மையே இதற்குக் காரணம் என்க. சமயம் இன்னதென்று தெரியா

மேலும் சடங்குகளையே சமயம் என்றும் மக்கள் கொண்டிருந்தால் சமய நிலையங்கள் அந்தக் கதிதான் அடையும். அதிகாரிகளை நொந்துகொண்டிருப்பதில் பயனில்லை. அறக்காப்பாளர் அன்பே உருவாக இருப்பார். ஆனாலும், மக்கள் அன்பில் ஈடுபடாவிட்டால் என்ன ஆகும்? யாகத்தில் நெய் குடிக்காமல் இருக்கட்டும் என்று தன் பூனையை யூபத் தம்பத்திற்குக் கட்டிவைத்த முனிவரைக் கண்டு அவருக்குப் பின்வந்த சீடர்கள் பூனையை யூபத்திற்குக் கட்டுவதே யாகம் என்று நினைத்து அவ்வாறே செய்துவந்த கதைபோல் நமது ஆலயங்களில் உண்மைச் சமயங்களுக்கு மாறாக சடங்குகளே குடிகொண்டன.

அதிகாரியின் உதவியால் ஆலயங்களைப் பார்வையிட்ட பிறகு பெரிய துரையை எப்போது பார்க்கலாம் என்று கேட்டேன்.

“ துரையைக் காண்பது வெகு எளிது. அவர் தம் அலுவல்களை வெகு ஒழுங்காக வைத்திருக்கிறார். கடியாரமும் பிசகாக நடக்கலாம். அவருடைய நாள் செயல்களோ வெகு கிரமமாக நடக்கும் ” என்றார்.

“ அவருக்கு சமஸ்தானப் பொறுப்பே இல்லை என்று கேள்விப்பட்டேன். அப்படியிருக்க என்ன அப்படிப்பட்ட ஒழுங்கான வேலை இருக்கும் ?”

“சமஸ்தானப் பொறுப்பை அரசியலார் எடுத்துக் கொண்டார்கள். அதினால் அவருடைய வேலை மிக ஒழுங்காகிவிட்டது.

“ இது என்ன முரணாகத் தோன்றுகிறதே. வேலையே இல்லாவிட்டால் வேலை எப்படி ஒழுங்காக இருக்கும் ?” என்று கேட்டேன்.

“இப்போது தான் வேலை ஒழுங்காக இருக்கவேண்டியது. துரை காலையில் எழுந்திருப்பார். காலைக் கடன்களை

முடிப்பதற்கு எட்டு மணி ஆகும். உடனே அவருடைய சகாக்கள் தயாராக வந்திருப்பார்கள். அவர்கள் நிரம்பப் பெயர் பெற்ற பந்தாட்டக்காரர்கள். கிரிக்கெட்டு, டென்னிசு முதலியவைகளில் நிபுணர்கள். அவர்களோடு சிற்றுண்டி அருந்திப் பேச்சுக்களை முடிப்பதற்கு 9-30 ஆகிவிடும். அவர்கள் விடை பெற்றுக்கொண்டு போவார்கள். அதற்குள் தபால், தினசரிகள் வந்துவிடும். அவைகளைப் படித்துப் பதில் எழுத வேண்டியவைகளை எழுதுவதற்கு 11 மணி ஆகிவிடும். பிறகு குளிக்கச் செல்லுவார்.”

“சமஸ்தான வேலைதான் இல்லையே. கடிதப் போக்கு வரவு என்னமாக இருக்கும்” என்றேன்.

“துரைக்குக் கிரிக்கெட், டென்னிசில் மிகப் பிரீதி. பதினைந்து பெயர் பெற்ற நிபுணர்களுக்குச் மாதச் சம்பளம் கொடுத்து வைத்திருக்கிறார். அங்கங்கே நடக்கும் பந்தயங்களுக்கு அவரும் செல்வார். அவர்களையும் அழைத்துச் செல்வார். இந்த ஏற்பாடுகளைச் செய்யவேண்டி நிரம்பக் கடிதப் போக்கு வரத்து ஏற்படும். அந்த வேலை நாடோறும் இரண்டு மணி நேரம் இருக்கும். மேலும் இங்கே பந்தாட்ட இடங்கள் உண்டு. அவைகளை எப்போதும் நல்ல நிலைமையில் வைத்திருக்க வேண்டும். அந்தப் பதினைந்து சகாக்களும் வெளியே செல்லாத காலத்தில் இங்கே விளையாடுவார்கள். அவர்களுக்குச் செய்ய வேண்டிய வசதிகளைச் செய்ய வேண்டாமா?

“இவைகளை ஒரு க்ாரியஸ்தன் செய்யலாமே.”

“அது அவருக்குப் பிடிக்காது. ஒவ்வொரு சிறு வேலையையும் தானே செய்வார். ஒரு முறை ஒரு நல்ல கிரிக்கெட் நிலத்தை வடஇந்தியாவில் கண்டார். அதைப்போலத் தன் ஊரிலும் ஏற்படுத்த வேண்டுமென்று எண்ணினார். ஊர்

வந்தவுடனே சரியான இடம் ஒன்று தேடினர். கிடைக்க வில்லை. உல்லாசபவனத்தை ஒட்டிப் பத்து ஏகர் நிலம் ஒன்று இருந்தது. அது ஒரு பெரிய கருங்காலி மரத் தோப்பாக இருந்தது. உடனே அழித்து வெளியாக்கும்படி உத்தரவு இட்டார். மரங்கள் எல்லாம் விற்கப்பட்டன. தொகையும் வந்தது. எல்லாம் நிர்த்தாட்சினியமாய் வெட்டப்பட்டன. நூறு ஆண்டு மரங்களும் ஒரே தடவையில் விறகாயின. வெட்ட வெளியான வுடனே வந்த தொகை முழுவதும் செலவழிக்கப்பட்டது. அழகான கிரிக்கெட்டு நிலம் ஆயிற்று. அதுமுதல் இங்கே மிகச் சிறந்த கிரிக்கெட்டு விளையாட்டிடம் எற்பட்டது. இதைச் செய்ய எத்தனை மனோ திடமும் தைரியமும் வேண்டும், பாருங்கள்."

"அது மெச்சத் தக்கதுதான். ஆனல் பொது மக்களுக்கு என்ன பயனோ!"

"அது வேறு விஷயம். எந்தக் கண்ணால் பார்வை செல்லுகிறதோ அதை ஒத்து மனப்போக்கு இருக்கும்."

"மெய்தான், பகலிலிருந்து என்ன செய்வார்."

"குளித்தவுடன் பகல் உணவு கொள்ளச் செல்வார். அதற்குள் அனேகமாக சில நண்பர்கள் வருவார்கள். பிறகு சிறிது நேரம் வாசிப்பார். புது நூல்கள் ஒன்றையும் விட மாட்டார். பிறகு 2 மணிக்கு அந்தப்புரம் செல்லுவார். அங்கே தம் மனைவிமாருடன் இரண்டு மணி நேரம் கழிப் பார். அதன்பின் தன் பவனத்திற்கு வருவார். சிற்றுண்டி அருந்திவிட்டு அவர்களோடு பந்தாட்டம் ஆடச் செல்லு வார். பந்தாட்டம் ஆடி முடிய 7 மணி ஆகும். மறுபடியும் அரண்மனை சென்று இரவு உணவு உண்பார். அது முடிய 10 மணி ஆகும். பிறகு தூங்கச் செல்வார். இதுதான் அவருடைய தினசரி ஏற்பாடு.

"வெகு நன்றாகவும் ஒழுங்காகவும் இருக்கிறதே. மனைவியாருடன் பகல் இரண்டு மணி நேரம் தவிர வேறு காலம் கழிப்பதில்லையோ?"

"மெய்தான். அதனால் தான் அவர் உடல் கட்டுச் சரீரமாக இருக்கிறது. 45 வயதாகியும் 25 வயதினர் போல் இருக்கிறார்."

"ஒழுங்கான மனிதராகக் காணப்படுகிறார். பின் ஏன் ஆட்சி இவர் கையில் இல்லையோ?"

"அதுதான் பிராரத்தம் என்பது. முந்திய துரைகள் பழைய மூட்டைகளைக் கட்டி வைத்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள். அவைகளை அவிழ்க்க யாரால் முடியும்?"

"சரி அறிந்தேன். அவரைப் பார்க்கலாமா?"

"ஆம். பார்க்கலாம். காலைச் சிற்றுண்டி கழிந்தவுடனே பார்க்கலாம்."

"ஏற்படுத்துங்கள்" என்றேன்.

"சரி" என்று சொல்லி விடை பெற்றுச் சென்றார்.

* * *

3

"சாதாரண கட்டடம். உல்லாச மண்டபம்போல் காற்றோட்டம் இருக்கும். சில மேஜைகளும் குறிச்சிகளும் போடப்பட்டிருந்தன. பெரியதுரை அங்கே உட்கார்ந்திருந்தார். உடை சாதாரணம், வெள்ளை வேஷ்டி வெள்ளை ஜிப்பா வெள்ளைத் துண்டு இவைகள் தான். என்ன எளிமை என்று எண்ணினேன். என்னைக் கண்டதும் வணக்கம் செய்தார். நானும் வணக்கம் செய்தேன்.

"இறங்கிய சாகை சௌகரியமாக இருக்கிறதா?" என்று கேட்டார் பெரிய துரை.

" ஆகா, மிகவும் சௌகரியமே" என்றேன்.

பிறகு சிறிது நேரம் கோயில்களைப் பற்றிப் பேசின பிறகு பொதுச் செய்திகளைக் குறித்துப் பேசினோம்.

" தங்கள் தகப்பனார் எனக்குத் தெரிந்தவர். என்னோடு பல்கலைக் கழகத்தில் அங்கத்தினர் ஆக இருந்தார். அவர் ஒரு சிறந்த தமிழ் அன்பர். இன்றே அன்னாருடைய புதல்வனாரோடு பேசும் பெருமை எனக்குக் கிடைத்தது" என்றேன்.

"வெகு மகிழ்ச்சி. அவர் தமிழ்ச் சங்கத்திலும் மிக ஊக்கம் கொண்டிருந்தார். தமிழில் எனக்கும் ஆர்வம் உண்டு. இன்னும் சில ஆண்டுகள் சென்றால் அவைகளில் பங்கு எடுத்துக் கொள்ள முடியும் என்று நினைக்கிறேன்" என்றார் பெரிய துரை.

" தங்கள் மூதாதைகள் தமிழை வளர்த்தினவர்கள். ஆகவே, தாங்களும் அதில் ஈடுபட உரிமைகொண்டவர்கள்."

" அதற்கென்ன தடை. ஆனால், பொது அறிவு வேண்டும் அல்லவா ? இக்காலத்தில் மக்களுக்குப் பொது அறிவு நிரம்பவேண்டும். நில உரிமைக்காரர்கள் முன் நாளிலே சிறந்த அனுபவசாலிகளாக இருந்தார்கள். இக் காலத்தில் அவ்வறிவை மற்ற மக்களுக்கு விட்டுவிட்டார் கள். நானோ வாயைத் திறப்பதற்கு முன் உண்மை என்ன என்று அறிய விரும்புபவன். ஆகவே, தற்காலிக உலக நிலையை அறிந்து வருகிறேன்."

" ஆமாம். நான் கண்டுகொண்டேன். தங்கள் மேஜையின்பேரில் உள்ள நூலே அதற்குச் சான்று."

" அந்நூலைப் பார்த்தீர்களா ? மிகப் புதிய நூல்."

" ஆமாம். பார்த்துத்தான் சொன்னேன், 'ஒற்றன்' என்று தலைப்புப் பெயர் இருக்கிறது. இந்தப்போர் நாளில் அதனைத் தொடவும் மக்கள் அஞ்சுவார்கள்" என்றேன்.

"அதில் பண்டைக்கால ஒற்றைப்பற்றி மட்டும் அல்ல, தற்போது பல மேற்கு நாட்டார்கள் அனுசரிக்கும் இரகசியமான ஒற்றுக்களின் தன்மையையும் பயங்கரங்கொண்ட சாகசங்களையும் அது கூறுகின்றது. பல அற்புதமான படங்களும் உண்டு. இதைப்போல பல நூதன வெளியீடுகளையும் படித்துக் கொண்டு வருகிறேன். இவைகள் இந்நாட்டில் கிடைப்பது அரிது" என்றார்.

"மிக விலையுயர்ந்த நூல்களாக இருக்கவேண்டும்."

"மெய்தான். மிகுந்த விலை கொடுத்துத்தான் வாங்க வேண்டும். இல்லாவிடில் அறிவு வளர்ச்சி எப்படி வரும். தற்காலத்திய அறிவு வளர்ச்சி முழுவதும் தெரிந்துகொள்ள வேண்டாமா?"

"ஆம். தங்களைப்போல ஒய்வும் அறிவும் செல்வமும் உள்ளவர்களுச்கே இவைகள் எட்டமுடியும்."

"ஒய்வும் அறிவும் சரிதான். ஆனால், செல்வம்தான் சிறிது தடுமாற்றம். அரசியலார் ஒரு குறிப்பிட்ட தொகை மட்டும் தருகிறார்கள். எனக்குரிய தொகையில் 100-ல் ஒன்றுகூட இல்லை."

"தங்களை மேற்பார்வை ஏற்றுக்கொண்டால்..."

"கொள்ளலாம். ஆனால், அப்போது ஒய்வு இருக்காது."

"சரிதான்." நாய் காணில் கற் காணுவாறுபோல் ஆகிறது அல்லவா என்று மனதுள் எண்ணினேன்.

"மற்றொன்று, பலநூல்கள் வாசித்ததினாலும் பல பெயர்களுடைய உச்சரனை கேட்டுள்ளதினாலும், காணமற்போன அரசியல்வாதிகளுடைய இருப்பிடங்களும் நாம் கூற முடியும். உதாரணம்: போசு அவர்களுடைய உச்சரிப்பை நான் வானொலியில் அறிந்துகொண்டேன். அரசியலாரால் கண்டுபிடிக்க முடியவில்லை" என்றார்.

"மெய்தானு? எப்படி அறிந்தீர்கள்?"

"வாக்கின் ஒலியால்தான். இவைகளையெல்லாம் யூகம் இருந்தால் அறியமுடியும்."

இவ்வாருக வெகு நேரம் பேசிக்கொண்டிருந்தேன். அவருடன் காலம் கழிந்தது அறியவே இல்லை. நேரம் ஆகிறது என்று ஆள் சைகை காட்டினுன். நான் விடைபெற்றுக் கொண்டு கிளம்ப வேண்டி வந்தது. ஆனுல் எனக்கு வெளியேற மனம் வரவே இல்லை. நிலச்சுவான்தாரர்களில் இத்தனை அறிவாளிகள் இருப்பார்கள் என்று எண்ணவேயில்லை.

ஆனுலும் என்ன. என் விடுதிக்கு வந்தவுடன் நடந்த பேச்சைப்பற்றியே நினைந்தவண்ணமாக இருந்தேன். இத்தனை அறிவாளி தற்போது சிறைக்கூடத்தில் அடைத்துக் கிடக்கும் கைதிபோல அல்லவோ அரண்மனைக்குள் திரைக்குள் இருக்கிருர். இவர் அறிவு யாருக்கு என்ன பயன் தருகிறது? தனக்கும் இல்லை, தன் குடிகளுக்கும் இல்லையே என்று கவலைப்பட்டேன்.

தன் சொத்துக்களைத் தானே ஆட்சிபுரிந்து தன் குடிகளுக்கு நன்மைசெய்தால் இந்த அறிவுள்ள மகனுக்கு எத்தனை நன்மை கிடைக்கும். மேலும் காலம் முழுவதும் விளையாட்டிலேயே கழிப்பதும் நல்லதோ? மூளையின் ஆற்றல் வீணுகக் கழிகிறதே என்று அங்கலாய்த்துக் கொண்டு ஒழிவு நேரத்தைக் கழித்தேன்.

இரண்டாண்டுகளின் பின்னர் அவர் ஆட்சி ஏற்றுக் கொண்டார். குடிகள் மிகுந்த குதூகலம் அடைந்தனர். வரவேற்புக்களும் தரப்பட்டன. ஒருமுறை ஒரு நகரத்தில் சிற்றுண்டியும் வரவேற்பும் நடந்தபோது நானும் சென்றிருந்தேன். அவர் கொடுத்த மறுமொழி சிறந்த தமிழில் உயர்ந்த கருத்துக்களைக் கொண்டிருந்தது. அவருடைய

ஆட்சி சிறப்புடன் விளங்குவதாகுக! குடிகளுக்கு நன்மை தருவதாகுக! என்று மனதில் எண்ணினேன். ஆனால் பின் சம்பவங்கள் மாறின. என்ன பயனோ இனி!

---

7. கடன் பட்டேனும் சுகம்படவேண்டும்

பண்டைக்காலத்துப் பாளையக்காரர்கள் கோட்டைகளிலே வசித்து வந்தார்கள். தலைநகரங்களில் வசித்தாலும் அவர்கள் கோட்டைகளுக்கு உள்ளேயே வசிப்பார்கள். அம்மதில்களைச் சுற்றி நீர் நிறைந்த அகழி இருக்கும். அரசியல் காரியாலயங்களும் அக்கோட்டைக் குள்ளேயே இருக்கும். அரசவமிசம் வழிபடும் கோயில் ஒன்றும் உள்ளேயே இருக்கும். நீர் வசதிகளும் வேண்டிய அளவு ஏற்படுத்தி யிருப்பார்கள். நாட்டில் அமைதி இல்லாத காலத்தில் இவைகள் இன்றியமையாதவையே. இப்படிப்பட்ட கோட்டைகள் இந்த இருபதாம் நூற்றாண்டில் எந்தச் செயலுக்கும் பயன்படுவதில்லை. அவைகள் பராமுகமாக விடப்பட்டன. நாளடைவில் அவைகள் அழியத்தொடங்கின. பெரும்பான்மையான கோட்டைகளில் தற்காலத்துப் பாளையக்காரர்கள் வசிப்பதே இல்லை. நல்ல காற்றோ நல்ல நீரோ அங்கே கிடைப்பது அரிதாகிவிட்டது. ஒரு குண்டுக்கும் நிற்காத அக்கோட்டைகளினால் என்ன பயன்! சில இடங்களில் காட்சிச்சாலைகளாக இக்கோட்டைகளை வைத்திருக்கிறார்கள். என்றாலும், சரித்திரத்தில் நிகழ்ந்த பண்டைய கோட்டைகளைக் காண்பதில் எவருக்கும் ஒருவித ஆர்வம் உண்டாகும் அல்லவா? அவ்வாறு ஒருமுறை ஒரு பெயர்பெற்ற பாளையக்காரரின் கோட்டை அரண்மனையைக் காணச் சென்றேன்.

அக்கோட்டை ஊர் நடுவில் அமைந்திருந்தது. சுற்றிலும் நான்கு பெருந் தெருக்கள் இருந்தன. இவைகளே முன்னாளில் அகழிகளாக இருந்திருக்க வேண்டும். இப்போது அழகிய அகலமான தெருக்களாக இருக்கின்றன. கோட்டை வாயில் அழகாக அகலமாக இருந்தது. வாயிலைத் தாண்டினதும் உள்ளே காரியாலயங்கள் இருந்தன. நூற்றுக் கணக்கான கணக்குப்பிள்ளைகள் வேலை செய்துகொண்டிருந்தார்கள். அவர்களுடைய ஊதியம் குறைவானதினால் எவர்களுடைய முகங்களிலும் ஒளி தோன்றவில்லை. சட்டப் பரீட்சை தேர்ந்தவன் நூறு ரூபாயில் வேலைசெய்தால் மற்றவர்களுக்குச் சொல்லவும் வேண்டுமா? அவன் ஒருநாளுக்குப் பன்னிரண்டு மணிநேரம் வேலை செய்யவேண்டியிருந்தது என்று கேட்ட அளவில் என் நெஞ்சு பகீர் என்றது. மேலும், அவ்வலுவலகங்களில் தலைமேல் சீமை ஓடும் துத்தநாகத் தகடும் போர்த்த முகடுகள் இருந்தன. பாண்டி நாட்டு வெய்யிலை இம்முகடுகள் பெருக்கிவிடுவதோடு நிற்காமல் மூளையை வறளச்செய்துவிடும் அல்லவா? இக்காட்சியைக் கண்டு மனம் புழுங்கினவனாய் உள்ளே இருந்த பண்டையக் கட்டடங்களைக் காணச் சென்றேன்.

பண்டைய முறையில் கட்டடங்கள் இருந்தன. வெளிச்சமாவது காற்றோட்டமாவது மிகுதியாக இல்லை. பெரும் பகுதிகள் இடிந்து தலைமீது விழக்கூடிய நிலையில் இருந்தன. பல ஆண்டுகளாக இந்த அரண்மனையில் தலைவருடைய குடும்பங்கள் வாசம் செய்யாமல் இருந்ததினால் கவனிப்பார் இன்றிப் பாழடைந்து இருந்தன. நடுவில் கோபுரம் போன்று மூன்று நான்கு நிலைகள் கொண்ட ஒரு கட்டடம் இருந்தது. அது அந்தப்புரத்தின் ஒரு பகுதி ஆகும். இந்தக் கட்டடத்தில் உச்சியில் நின்றால் சுற்றிலுமுள்ள நகரத்துப் பகுதிகள் நன்றாகத் தெரியும். பின்னான் அந்தப்புரத்தில்

இருந்துகொண்டே, ஊரில் நடக்கும் விழாக்கள், கலகங்கள், சச்சரவுகள் முதலியவைகளைக் கவனிக்கமுடியுமாம். அந்தப் புறத்துப் பெண்மணிகளும் முக்காடு இடும் வழக்கத்தில் இருந்திருந்தும் வெளியில் நடக்கும் கேளிக்கைகளைப் பார்க்க முடியுமாம். ஆனல் உண்மையில் அந்த இடத்தி லிருந்து பூதக்கண்ணுடியின் உதவி இன்றி எதுவும் தெரியாது. அக்காலத்தில் இவ்விதக் கண்ணுடியும் இல்லை என்று அறியவேண்டும்.

கோட்டைக்குள் அழியாமல் இருந்தது ஒன்றே ஒன்று தான். அதுவும் அரண்மனைக்கோயில் ஆகும். அது வெகு சிறியது. அரண்மனைப் பெண்டிர் தொழுது வந்தது ஆகும். அது ஏதோ புனித வசத்தால் நன்ருக வைக்கப்பெற்றிருந்தது. ஆனல் மிகச் சாதாரணமானது தான். கோட்டை காவலாளியும் அவன் மனைவியும் இதனைச் செவ்வையாக வைத்திருந்தார்கள். மற்றும் அரண்மனையைச் சுற்றி இருந்த நந்தவனங்கள் உல்லாச விடுதிகள், லலிதா மண்டபங்கள், நீர்த்தொட்டிகள் எல்லாம் பாழடைந்து கிடந்தன. அரண்மனையே கணவன் இறந்த கைம்மைக்கோலம் பூண்டிருந்தது. அந்த நிலையைக் கண்ட என் நெஞ்சு மிகப் புழுக்கம் எய்தியது. இவ்வாறு மணக்கோலம் கொண்டிருந்த இந்த அரண்மனை இப்போது கைம்மைக் கோலம் கொண்டதற்குக் காரணம் என்ன? கணவன் இதனைத் துறந்துவிட்டுத் தற்கால முறைப்படி ஆங்கில மோகங் கொண்ட பங்களாவைக் கைப்பிடித்ததே ஆகும். ஆங்கில மோகம் செழித்தது. தமிழ் அன்புநிலை குலைந்தது. ஆங்கில மோகம் வந்தும் அவ்வாங்கிலரின் உயர்ந்த குணங்கள் வந்தனவா? இல்லை. பண்டைய நாள்முதல் இருந்துவந்த இழிந்த பண்புகளே விளங்கி இருந்தன.

காலைச்சிற்றுண்டி அருந்திவிட்டுப் பெரியபாதை வழியே நடந்துசென்றேன். ஒரு பங்களாவின் வாயிலண்டை ஒரு ஆள் நின்றுகொண்டிருந்தான். ஒரு கையில் ஒரு துப்பாக்கியிருந்தது. மற்றொரு கையில் ஐந்து அழகிய கௌதாரிகளின் கால்களைக் கட்டின கயிற்றைப்பிடித்து நின்றான். கௌதாரிகள் தலை கீழாகத் தொங்கிக்கொண்டிருந்தன. பாவம், இவ்வழகிய பறவைகளை ஏன் கொன்றானோ? ஆண்கள் சுட்டுக் கொல்லப்பட்டால் பெண் குருவிகள் பரிதவிக்காதோ? பெண் கொல்லப்பட்டால் ஆண் பரிதவிக்காதோ? இந்தப் பரிதாப நிலைகளைச் சுட்டுக்கொன்றவன் அறிந்தானோ? அவனுக்கு அறிந்துகொள்ளும் அறிவும் இரங்கக்கூடிய நெஞ்சும் ஏது? அவனுக்குப் பசிக்கும் வயிறு ஒன்றுதான் உண்டு. வயிற்றுக்கு மீறிய உறுப்பு அவனுக்கு உண்டோ என்பது ஐயம். அவைகளை அவன் தின்பதில்லை. அந்த வாயிலுக்குள் இருக்கும் பங்களாவில் வெகு குதூகலத்தோடு வசிக்கும் செல்வ மக்களின் வயிற்றுக்காக அவன் கொன்றான். அவன் நிற்பதைக் கண்ட பங்களா ஆள் வெளியே வருவான். விலைபேசி அப்பறவைகளை எடுத்துச் செல்வான். வேறிடத்தைக் காட்டிலும் இங்கே இரட்டத்தனை காசு கிடைக்கும். அதை நம்பித்தான் குருவிகளை அடித்தான். அவன் வாடிக்கையாக இப்பங்களாவிற்குக் காடை கௌதாரி இவைகளைக் கொண்டுவந்து விற்பான். இவைகளைத் தந்தவுடன், பாவம், குருவிகளின் உடல்கள் செல்வவான்களின் உடலோடு ஒன்றுபடுகின்றன. அக்குருவிகள் ஒருவிதத்தில் பாக்கியவான்கள். ஏனெனில் காட்டிலே அவைகளின் உடல்களைப் பூச்சிப் புழு நாய் நரி தின்னாமல் செல்வவான்களில் வயிறுகளிலே புதைக்கப்படுகின்றன

அல்லவா ! மற்றொருவிதத்தில் அபாக்கியவான்கள். ஏனெனில் முழு ஆயுள்வரை பிழைப்பதற்கு வழியில்லாமல் இடையிலே பறிக்கப்படுகின்றன அல்லவா ! ஆனால், அவைகளின் உடல்களைச் சமைத்துத் தின்னும் செல்வச் சீமான்கள் அவைகளால் என்ன சுகம் அடைகிறார்கள்? அவருடைய ஒருநாள் உணவிற்காக ஐந்து உயிர்கள் கொல்லப்படுவதால் அவ்வைந்து கொலைகளுக்கும் அவர்களே உடந்தையாகிறார்கள். அப்பாவம் எவர்கள்பால் செல்லுகிறது ? பௌத்தர்கள் கொன்றதைத் தின்றால் பாவம் இல்லை என்கலாம். இவர்களோ இந்துக்கள். இந்துக்களிலும் சைவர்கள். ஆகவே இவர்கள் பொருட்டுக் கொலை புரியப்படுவதால் அக்கொலைக் குற்றத்திற்கு இவர்கள் உடன்படுகிறதில்லையா என்று இவ்விதமான எண்ணங்கள் எல்லாம் என் மனதில் தோன்றின.

இப்படிப்பட்ட செல்வவான்கள் யார் என்ற கேள்வி என்னை உறுத்திற்று. உடனே விசாரித்தேன். இந்நாட்டை ஆளும் குறுநில மன்னர் பெருங்குடியில் பிறந்த உரிமை கொண்டவர்கள், இளவயதினர். படிப்பு மிகுதியாக ஏறவில்லை. ஏறுவதற்கும் அவர்கள் வளர்ப்பு விட்டுக் கொடுக்காது. தகப்பனார் வழக்கப்படி மிகுந்த செலவாளி. சிக்கனமாக ஆட்சிசெய்யாததினால் மிகுந்த கடன்வைத்து விட்டு மறு உலகம் சென்றுவிட்டார். இளைஞர்கள் வயது வராதவர்கள். சட்டப்படி அரசியலார் ஆட்சியை ஏற்றுக் கொண்டு ஒரு திறமைமிக்க அதிகாரியை நியமித்தார்கள். அவர் வெகு வல்லமையுடன் ஆட்சியை நடத்திவருகின்றார். சில ஆண்டுகளுக்குள் குவிந்திருந்த கடன் முழுவதும் தீர்த்துவிட்டு வருவாயை மிச்சப்படுத்தி வைத்திருக்கிறார். இப்போது சமஸ்தானத்திற்குக் கடன் இல்லை. உரிமையாளர்களுக்கு அளவிட்ட பங்கு கொடுக்கப்படுகின்றது.

ஆகவே பொருள் ஆதாரம் திருப்திகரமாக இருக்கிறது. ஒரு செயல் மட்டும் அவரால் முடியவில்லை. மன்னர் குடும்பத்து உள்துறை வேலை பண்டைப் பெண்களின் ஆளுகையில் இருக்கிறது. அதனை மாற்ற வழியில்லை. பெண்களோ அடிமைகளின் வசத்தில் இருப்பவர்கள். அடிமைகள் தங்கள் வசீகரச் செய்கைகளினால் எப்படிப்பட்ட இளைஞர்களையும் தங்கள் வலையில் சிக்கவைத்துவிடுவார்கள். அந்த வகையில் இளைஞர்களுடைய உள்துறை வளர்ச்சி இருந்தது. ஆகவே அறிவும் படிப்பும் எப்படி முன்னேறும். ஒழுக்கத்தைப்பற்றிக் கூறவேண்டியதில்லை. இந்த ஒரு பகுதி தவிர மீதி அரசியல் ஆட்சிமுறை வெகு நன்றாக இருந்தது. ஆனால் உரிமை இளவரசன் பட்டத்திற்கு வந்தால் இந்த நிலைமை எவ்வாறாகுமோ எவரும் கூறமுடியாது.

இக் குடும்பத்தின் பண்டைச் சரித்திரம் மிகப் புகழ் பெற்றது. சில நூற்றாண்டுகளுக்கு முன் வீரத்திலும் தீரத்திலும் பெயர் பெற்றவர்கள் பல போர்களில் வென்றிருக்கிறார்கள். தம் தலை மன்னனுக்குப் பெரும் உதவிபுரிந்திருக்கிறார்கள். பல பெரிய ஆலயங்களையும் கட்டியிருக்கிறார்கள். அவைகளின் சிற்ப அழகுகளை எடுத்துரைக்கவும் நமக்கு ஆற்றல் இல்லை. நூறு கல்லிற்கு அப்பாலிருந்தும் பெரும் பாறைகளைக் கொண்டுவந்து அருமையான சிற்பங்களைச் செதுக்கிக் கட்டியுள்ளார்கள். அவ் வேலைப்பாட்டைக் குறித்துப் பல அரிய கதைகளும் நாட்டில் வழங்கும். புதிதாகப் பல ஏரிகளையும் கட்டிக் குடிகளுக்கு நன்மை செய்திருக்கிறார்கள். போருக்கு அஞ்சா வீரர்களும் இருந்திருக்கிறார்கள். தன்னுரிமை போகாதபடி காத்துவந்த நாட்டன்பு பூண்டவர்களும் உண்டு. நாட்டிற்காகத் தூக்குமேடை ஏறினவர்களும் உண்டு. அவர்களுடைய உருவங்களும் அவர் கட்டின கோயில்களில் காணலாம். ஆனால் சிலர்

உலக இன்பத்தில் ஈடுபட்டவர்களாய்ப் பெருகினார்கள். மிகுதியாகக் கடன்வாயில்பட்டு ஆட்சியை ஆங்கிலர்பால் பறிகொடுத்த மன்னர்களே அதிகரித்தார்கள். ஆங்கில ஆட்சி எடுத்துக்கொண்டு பொருளை மீதிப்படுத்தி உரிமையாளர்களுக்கு ஆட்சியைக் கொடுத்ததுண்டு. ஆனால் ஆட்சி பெற்ற ஒன்றிரண்டு ஆண்டுகளுக்குள் பழைய நிலைமை வந்ததுண்டு. இந்த நிலைமை பலமுறை ஏற்பட்டது. இப்போது இருக்கும் ஆட்சியும் இந்தவகையில் அரசியலார் வசம் இருக்கிறது.

---

8. பாமரர்களுக்கு ஒன்று என்றால்?

ஒரு புருடனுக்கு ஒரு மனைவி இருந்தால் போதாதா? ஒன்றுக்குமேல் ஏன் வேண்டுமோ என்று கேட்பார்கள் தற்கால அறிவுள்ள மக்கள். கிறித்தவர்களிலே ஒருவர் ஒரு காலத்தில் ஒரு மனைவியைத்தான் கொள்ளலாம். ஒன்றுக்கு மேல் கொண்டால் அது சட்டப்படி குற்றம். முகமதியர்களிலோ ஒருகாலத்தில் நான்கு மனைவியரைக் கட்டிக் கொள்ளலாம். ஆனால் எல்லாரையும் ஒரேவிதமாகக் காப்பாற்றும் வருமானம் இருக்கவேண்டும். இந்துக்களிலோ ஒரு மனைவிதான் சாதாரணமாக மணந்து கொள்ளலாம். ஆனால் அம்மனைவி பிள்ளை பெறாவிட்டாலும் நிரந்தரமான நோய்படைத்தவளாக இருந்தாலும் வேறொரு மனைவியைக் கட்டிக்கொள்ளலாம். அம்மனைவியும் அதே விதத்தில் ஆகிவிட்டால் மூன்றும் மனைவியைக் கட்டிக்கொள்ளலாம். இவ்விதம் மனைவியரின் எண்ணிக்கைக்கு அளவு கூறப்படவில்லை. வழக்கத்தில் பெரும்பான்மையான பேர்கள் ஒரே மனைவியைத்தான் மணந்துகொண்டு வாழுகிறார்கள். தமிழர்களில்

காதல் மணத்தில் ஒன்றுக்குமேல் கூறப்படவில்லை. தமிழ்ப் பெருமக்களின் வாழ்க்கைகளிலும் பெரும்பான்மையாக ஒரே மனைவித் திட்டமே காண்கிறோம். தேவர்களுக்கு மட்டும் இருமனைவியரைக் கற்பித்திருக்கிறார்கள். இரண்டுக்கு மேலும் சிலருக்கு உண்டு. அவைகளுக்குத் தத்துவார்த் தங்களை எடுத்துக்கூறுவதுண்டு.

குடிமக்களுக்கு ஒரு மனைவித்திட்டம் இருந்தால் ஆட்சி செய்கிறவர்களுக்கு ஒரு மனைவி போதுமா? ஆட்சித்தெய்வ மாகிய திருமாலுக்கு இரண்டு மனைவியர் இல்லையா? ஆகவே ஆட்சி செய்யும் குறுநில மன்னர்களுக்குக் குறைந்தது இரு மனைவியராவது இருக்க வேண்டும் என்று சில சமஸ் தானங்கள் எண்ணின. அவ்விரு மனைவியரையும் ஒரே காலத்தில் திருமணம் செய்து கொள்வதே தகுதி என்றும் எண்ணினார்கள். ஏனெனில் பாமரர்களுக்கும் மன்னர்களுக் கும் தாரதம்மியம் காட்டவேண்டாமா என்று அப்பெருமை யாளர்கள் நினைத்தார்கள். தென்னாட்டில் சில சமஸ்தானங் களில் இவ்விதத்திருமணத்திட்டம் ஏற்பட்டு அது வழக்கங் களில் ஒன்றாகிவிட்டது. தொட்டியக் கம்பளத்தார்களில் இப்பழக்கம் வேரூன்றிவிட்டது. ஆகவே இரண்டு மனைவி யர் ஒரே காலத்தில் கிடைக்கும் மட்டும் ஒருவன் திருமணம் செய்து கொள்ளவே முடியாது. அம்மனைவியர் பெரும் பாலும் உடன் பிறந்தார்களாக இருப்பார்கள். ஒருமுறை இரண்டு மனைவியரைத் திருமணம் செய்து கொண்டால் அவர்களில் யாராவது ஒருவர் காலமாகி விட்டால் மறுபடி யும் இரண்டு பேரையே திருமணம் செய்துகொள்ளவேண்டு மாம். இந்த வழக்கம் முன்னாளில் சந்ததிப் பெருக்கத்திற்கு ஏற்றதாக இருந்தது. ஆனால் பின்னாளிலே இது உபத்திரவ மாக முடிகிறது. எந்த அறிவாளித் தலைவனும் தன் விருப்பப்படி திருமணம் முடிக்கவே வழியில்லாத நிலைமை

யும் அடிக்கடி ஏற்படுகிறது. இவ்வழக்கும் மிகக் கொடியதாக வும் இயற்கைக்கு மாறானதாகவும் தோன்றவில்லையா?

நமது நண்பர் ஒரு குறுநில மன்னர். நிரம்ப அறிவாளி யாகவும் தமிழ் அறிஞராகவும் இருந்தார். பல சங்கங்களில் என்னுடன் ஒத்த அங்கத்தினராக இருந்து மிக்க நற்றொண்டு களும் புரிந்திருக்கிறார். ஒருமுறை நான் செயலாளனாக இருந்த தமிழ்ச் சங்கத்திலும் ஈடுப்பட்டு ஆண்டு விழாவில் தலைமை வகித்து வெகு நன்றாக நடத்தி வைத்தார். அவை களில் வெகு நன்றாக தமிழில் பேசக்கூடிய வன்மையும் பெற்றவர். பொது மக்கட் சேவையிலும் நிலக்கிழார் சங்கத்திலும் பற்பல தொண்டுகள் இழைத்திருக்கிறார். ஒரு முறை எங்கள் ஊருக்கு அவர் வந்தபோது அவருக்கு முந்தி அறிமுகமான ஒரு நீதிபதியைக் காணச்சென்றோம். அந்நீதிபதி ஒழுங்கீனத்தை வெறுப்பவர். எளிதில் எவரை யும் புகழ மாட்டார். ஆனால் இந்த மன்னரைக் கண்டதும் ஒரே முகமன் கூறத் தொடங்கினார். "நான் பல ஜில்லாக் களில் உத்தியோகம் செய்திருக்கிறேன். அப்போது ஜமீன்தார்களின் அலுவல்களைக் கண் காணிப்பது என் வேலைகளில் ஒன்று. நான் பார்வையிட்ட மட்டில் இவரு டைய ஜமீன் ஒன்றைத்தவிர வேறு எதிலும் ஒழுங்கைக் கண்டதில்லை. இது அவர் எதிரில் கூறும் புகழ்ச்சி அல்ல. உண்மையிலே நான் கண்டது. வீண் டம்பம் இல்லை. வீண் செலவு இல்லை. குடிகளுக்கு வீண் உபத்திரவம் இல்லை. நியாயமாக வரிகளை வசூலித்து நியாயமான முறையில் அமுலை நடத்துவது இவரது ஜமீன் ஒன்றே ஆகும்" என்றார். ஒரு ஜில்லா அதிகாரியிடம் இந்த நற்சாட்சி பெறுவதென்றால் எளிதல்ல. ஆகவே இவருடைய ஆட்சி மிக ஒழுங்கானது என்று அறியக்கூடியது. மேலும் இதற்கு எல்லாம் கூட இருந்து உழைத்தவர் இவருடைய அமைச்சர்

ஆகும். அவரும் என்னுடைய நண்பரே ஆவர். அவர் ஜமீன் சட்டதிட்டங்களை வெகு நன்றாக அறிந்தவர். குடிகளுக்கு யாதொரு தீங்கும் வாரமல் வரவேண்டிய வரிகளை முறையாக வசூலித்து அவர்களுக்குச் செய்ய வேண்டிய நற்செயல்களையும் செய்து வந்தவர். மன்னனும் அமைச்சனும் இந்த வகையில் ஒத்துழைத்ததினால் ஆட்சி செம்மையாக இருந்தது.

இத்தனை அறிவும் ஆற்றலும் நேர்மையும் ஒழுக்கமும் உடைய செல்வவான் கர்ண பரம்பரையாக வழங்கி வந்த ஒரு அசட்டு வழக்கத்தின் கொடுமைக்கு அடிமையாக வேண்டி வந்தது. இது விந்தை அல்லவா! அவ் வழக்கத்தை எதிர்க்க முடியவில்லை. அவராகத்தனியே இருந்தால் எதிர்த்திருப்பார். ஆனால் அவரைச் சுற்றியிருக்கும் சூழலை அவர் விலக்க முடியவில்லை. வழக்கம் என்ற கொடுமை எதுகாறும் நிலைத்திருக்கிறதோ அது காறும் பகுத்தறிவு முன்னேற்றம் அடையாது. அவருக்கு இளவயதிலேயே திருமணமாகி இருந்தது. குடும்பக் கௌரவ வழக்கத்தின்படி இரண்டு கன்னிகைகளைத் திருமணம் புரிந்தார். இரண்டு ஆண் மக்கள் பிறந்தார்கள். இருவரும் வளர்ந்திருக்கிறார்கள். இப்படியிருக்க ஒரு மனைவி இறந்துவிட, இருப்பது ஒரே மனைவிதான். சமஸ்தானத்தின் கௌரவத்திற்கு இரண்டு அரசிகள் இருக்கவேண்டுமாம். சமயக்குலச் சடங்குகளுக்கு இருவரும் ஈடுபட வேண்டுமாம். ஆகவே மறுமணம் அவசியம் என்று போதிக்கப்பட்டது. அதற்குள் அவருக்கு ஐம்பத்தைந்து வயதாகிவிட்டது. ஆனாலும் திருமணம் செய்துகொள்ளும்படி உறவினர்கள் வற்புறுத்தினார்கள். அவருக்குச் சம்மதமின்றியும் வற்புறுத்தலுக்கு ஈடுபட வேண்டி வந்தது. ஆனால் வழக்கத்தின்படி இரண்டு கன்னிகைகள் வேண்டுமே. வெகு தொலைவில் இருந்த ஒரு

குடும்பத்திலிருந்து இரண்டுபேர் தேடிக் கொணர்ந்தார்கள். இவைகளுக்கு வீண் செலவு ஆயிற்று. 55 வயது முதியவருக்கு 14, 16 வயதுச் சிறுமிகள் கட்டப்பட்டனர். இதனுல் யாருக்கு எந்த விதத்தில் இன்பம். முந்திய மனைவிமார்களுக்கு முன்னமே ஆண்வார்சுகள் இருந்தபடியால் இந்தச் சிறுமிகளுக்கு எந்த விதத்தில் பயன் ஏற்படப் போகின்றது. திருமணத்தை ஏற்படுத்திய தரகர்களுக்கே கை மேல் பலன் கிடைக்கும். ஜமீன்தாருக்கும் இச்சிறுமிகளாலே யாதொரு சுகவாழ்வும் கிடைக்கப் போவதில்லை. இரண்டு பேரைக் கட்டிக்கொண்டு முதுமையில் சிற்றின்ப வாழ்க்கை பலவந்தப் படுத்தப் பட்டதினுலோ அல்லது வேறெந்தக் காரணத்தினுலோ இவரது உடல் வெகு நாள் நிலைக்க ஆற்றலற்றுப்போக ஒரு நாள் திடீரென்று மார் படைப்பால் மறு உலகம் சென்ருர். பாவம், இவர் அகால மரணம் அடைந்தது கிடக்கட்டும். இரண்டு அபலைகள் உலகம் இன்னதென்று அறியாததற்கு முன்னமே கைம்மை நோன்பில் வற்புறுத்தப் பெற்ருல் அதைவிட கொடுமை என்ன உண்டு? ஒரு பெண் அல்ல, இரண்டு பேர்கள் ஒரே நாளில் ஆயுள் தண்டனை பெறுதல் என்ன அசம்பாவிதம்? இது கிடக்கட்டும்.

புது மனைக்கு வந்த சில மாதங்களுக்குள் சுமங்கிலியத்தை இழந்தால் அங்கே தங்கவும் என்ன வசதி கிடைக்கும்? சக்களத்திகளின் மக்கள் இருக்கும் போது இப்பேதையர்க்கு என்ன சம்பவிக்கும்? இந்த விபரீதக் கோலத்திலே ஜமீன்தார் மனைவியார் என்ற வீண் கவரவ அந்தஸ்தைக் காப்பாற்ற வேண்டும். அதாவது முக்காடிட்டுக்கொண்டு முகத்தை எவர்க்கும் காட்டாமல் வீட்டுக்குள்ளேயே இருட்டறைகளில் காலத்தைக் கழிக்க வேண்டும். படிப்பாவது அதிகமாக இருந்தால் காலம்

எளிதில் கடத்தலாம். இந்த வகுப்பாரில் படிப்பும் இல்லை. ஆகவே உயிர் இருந்தும் உயிரற்ற பிணங்களைப்போல வாழ் நாள் முழுவதும் கழிக்கவேண்டும். இது என்ன உலகமோ? படிப்பிருந்தும், பொருள் இருந்தும் உலக அனுபவம் இருந்தும் வழக்கம் என்ற கொடிய வலையில் சிக்கி அழியும் இந்த சமீன்களுக்கு யாது ஈடேற்றம் உண்டு? பிறநாட்டு மக்கள் இவ்வலைகளைக் கிழித்து எறிகிறார்கள். பகுத்தறிவு என்ற ஒளியில் மிளிருகிறார்கள். நம்முடைய குறுநில மன்னர்களும் இவ்வகையில் முன்னேறுவார்களா?

---

9. இயற்கை மலையரண் எப்படிக்கண்டார்!

தென்னாட்டில் மண்ணாலும் கல்லாலும் கட்டிய கோட்டைகள் கணக்கின்றி இருந்தன. மலைகளை மாற்றி வல்லரண்களாகக் கட்டிய மலைக் கோட்டைகளும் பல இருந்தன. ஆனால் இயற்கையிலேயே அமைந்த கோட்டைகளைக் காண்பது அரிது. மலைகளே சுற்று மதில்களாகவும் மலைகளுக்கு இடையே வளைந்து வளைந்து செல்லும் பள்ளத்தாக்கே கோட்டை வாயிலாக இருக்கும் அமைப்பு ஒன்றே ஒன்று நம்நாட்டில் உண்டு. அதனை மக்கள் கண்டு மகிழத் தக்கதொரு அற்புத அமைப்பு என்று கூறுதல் வேண்டும். நாற்புறங்களும் உயர்ந்த மலைகள் தொடர்ந்து வட்டமாக இருக்கின்றன. இடையில் சம நிலம் பதினைந்து சதுரக்கல் அளவு இருக்கும். அதாவது நான்கு கல் அகலமும் நான்கு கல் நீளமும் கொண்டதாக இருக்கும். மதில் போன்ற மலைத் தொடரில் வடபுறத்தில் பள்ளத்தாக்கு உண்டு. கோட்டை வாயில் போன்று வளைந்து வளைந்து அது செல்லும். பிற படைகள் எளிதில் செல்ல இயலாத முறையில் அது

அமைக்கப்பெற்றிருக்கின்றது. நடுவே உள்ள சம நிலத்தில் தலைவனின் அரண்மனையும் ஆலயமும் சுற்று வீதிகளும் பூங்காக்களும் உண்டு. இவைகளைச் சுற்றி மக்களின் விளை நிலங்களும் சிறு குடில்களும் உண்டு. மதில்கள் போல் உயர்ந்திருக்கும் சுற்று மலைகளில் அடர்ந்த சோலைகளும் அவைகளில் கொடிய விலங்குகளும் உண்டு. காட்டெருமைகள் மிகுதி என்பர். இவ்விதமான இயற்கைக் கோட்டை எந்த நாட்டிலும் காண்பது அரிது. இதனைத் தமிழ் நாடு, உலகத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாக அமைத்திருக்கிறதோ என்று கூறவேண்டும். அப்படிப்பட்ட ஒரு அற்புத இயற்கைக் கோட்டை ஒன்றைத் தமிழ் நாடு பெற்றிருந்தும், அது ஒன்று இருக்கிறது என்று எத்தனை பேர் அறிந்து உள்ளார்கள் ? யான் ஒருமுறை கண்டு மிக வியந்து மகிழ்ந்தேன்.

இவ்வியற்கைக் கோட்டை ஒரு குறுநில மன்னனின் தலையிடம் ஆகும். அம்மன்னர் வமிசம் இதனைத் தெரிந்தெடுத்து தலைமையிடமாக்கியதே அதன் கூரிய மதியை விளக்குகிறது. பகைவர்கள் காண இயலா அமைப்பைப் பெற்றும் பகைவர் வந்து படையெடுக்க வந்தால் வெகு எளிதில் தற்காப்பு செய்து கொள்ளவும் நிரம்பிய வசதிகள் இயற்கையாகவே இக்கோட்டை இடம் தன்னிடத்தே அடக்கிக்கொண் டிருக்கிறது. நிலவளமும் நீர்வளமும் வேண்டிய அளவு பெற்றிருக்கிறது. தலைவர் ஊரில் இருக்கு இல்லை. அமைச்சர் என்னை அழைத்துச் சென்றார். விசை வண்டி வேகமாகச் சென்றது. மலைகளை எதிர்த்து வழி சென்றது. இவ்வழி மலைகளின் மேல் ஏறிச் செல்லுமோ என்று வியந்தேன். அல்ல, வழியோ இரண்டு மலைத் தொடர்களின் இடையே பள்ளத்தாக்கை எட்டிச் சென்றது. அப்பள்ளத்தாக்கு ஒன்று இருப்பதாக முதலில் தெரியவே

இல்லை. செல்லச் செல்லத்தான் தெரிந்தது. அப்பள்ளத் தாக்கே உள்ளே இருக்கும் சமவெளியான கோட்டையிடத்திலிருந்து மழை நீரை வெளிநாட்டுக்குக் கொண்டுசெல்லும் நீர்த்தாரையாகவும் இருந்தது என்று கூறவேண்டும். வழியும் வரண்ட நீர்த்தாரை ஓரமாகவே செல்லுகிறது. இவ்வித மலைவாயில் வழி ஒரு கல் தொலைவு இருக்கலாம். அது கடந்ததும் உள் நிலப்பரப்பு தோன்றுகிறது. புளி முதலிய காட்டு மரங்கள் நிரம்ப முளைத்திருக்கும் பெரும் வெளியாக அது தோன்றிற்று. புன்செய் நிலங்கள் பரக்கத் தோன்றுகின்றன. அந் நிலப்பரப்பின் இடையில் தலைமை ஊர் இருக்கின்றது. அதன் வழியே நேராய்ச் சென்றோம். ஊர் வாயிலில் ஒரு பெருங் கும்பல் நின்று கொண்டிருந்தது. என்னை வரவேற்கவே நின்றார்கள் என்று நினைத்தேன். ஏனென்றால் யானை, குதிரை, கொடி, தோரணம், மேளம் முதலியவைகள் அங்கே இருக்கக் கண்டேன். யான் சென்ற விசைவண்டி அக் கும்பலுக்கு அருகில் நின்றது.

அமைச்சரும் யானும் வண்டி விட்டிறங்கினோம். மக்கள் வெகு ஆரவாரத்துடன் வரவேற்பு தந்தார்கள். எதிரே வரிசை வரிசையாக அலங்காரமாக நின்றார்கள். முதலில் இரண்டு யானை, பிறகு இரண்டு குதிரைகள், பின்னர் மகர தோரணம், பின்னர் இரண்டு பேர் வெண்சாமரை வீசுகிறார்கள். பின்னர் இருவர் வெண் துகிலை வாரி விண்ணில் எறிந்து கொண்டே சென்றார்கள். ஒருவன் பலசாலி. வெகு வண்ணமாக வீசினான். மற்றொருவன் முதியவன். வெகு சிரமப்பட்டு வீசினான். இவ்விதம் துகிலை வீசுதலை இங்கேதான் முதன் முதலில் கண்டேன். பின்னர் இருவகை மேளங்கள். பின்னர் ஒழுங்காக நடக்கும் குடிகள். பின்னர் மன்னர் பிரதிநிதியாக அவர் இளங் குழந்தைகளை இருவர் ஏந்திச் செல்லுகை. இந்த அழகு பொருந்திய ஊர்

கோலத்துடன் பவனி சென்றது. நாங்கள் இருவரும் இறு தியில் செல்ல வெகு மெதுவாக உலா சென்றது. வீதி அரைக்கல் தொலைவு இருக்கும். ஊர்கோலம் திருக்கோயில் மட்டும் சென்றது. கோயில்வாயிலில் இறங்கினோம். உள்ளே அர்ச்சகர் பூர்ண கும்பத்தோடு எதிர் அழைத்தார். உள்ளே சென்று மூர்த்தியை வழிபட்டோம். கோயில் வழிபாடு முறையாக நடந்தது. கோயில் கல் கட்டடம். மண்டபங் களின் இருபுறம் தூண்களிலும் திருப்பணி செய்தவர்களின் உருவங்கள் செதுக்கப் பட்டிருக்கின்றன. அவ்வுருவங்கள் அம்மன்னர் குடும்பத்தினர்களுடைய பிம்பங்களாம். மனைவி யர் சகிதம் உருவங்கள் இருந்தன. இக்காலத்திற் இக்குடும் பத்தில் படுதா முறை உண்டு. முன்காலத்தில் உண்டோ தெரியவில்லை. இருந்தால் மனைவியர் உருவங்கள் எப்படி செதுக்கப் பெற்றிருக்குமோ என்பது கேள்வி ?

வழிபாடு முடிந்ததும் அரண்மனைக்கு அடுத்திருந்த விருந்தினர் விடுதியில் தங்குவதற்கு ஏற்பாடு செய்திருந் தார்கள். மற்றக் கோயில்களையும் கணக்குகளையும் பார்த்து விட்டுச் சில குடியானவர்களின் மனுக்களையும் கவனித்து விட்டு உணவு உண்டுவிட்டு இளைப்பாறினேன்.

விடுதி வெகு நன்றாகத் தற்கால முறையில் அமைக்கப் பெற்றிருந்தது. எல்லா விதமான சௌகரியங்களும் இருந் தன. அரண்மனையோ பண்டைய கட்டிடம். இத்தனை சௌகரியங்கள் அங்கு அமைக்கப் பெற்றுள்ளனவோ என் பது ஐயம். அரசிகள் அங்கேயே வாசம் செய்வார்கள். தலைவன் வெகுவாக வெளி நாடுகளில் இருப்பது வழக்கமாம். நான் சென்ற போதும் அங்கு இல்லை. இந்தக் குலத்தார் வழக்கப்படி ஒரு மணத்தில் இரண்டு கன்னிகைகளை மணம் புரிபவர். சில குடும்பங்களில் இரண்டிரண்டு கன் னிகைகளை மணந்துகொண்ட போதிலும் இவர்களோடு

திருப்தி அடையாமல் பல காமக்கிழத்தியர்களையும் வைத்துக் கொள்வது வழக்கம். சங்க காலத்திலேயே பரத்தையர் கள் வழக்கம் இருந்திருக்குமானால், அண்மைக் காலத்திலே அவர்களுடைய வலைகள் வீசப்படாமல் எந்நாட்டுச் செல்வ வான்கள் உல்லாசமாக இருக்கக் கூடும்? வேறு நாடுகளும் இவர்களுடைய தொழில் சமூகத்திலும் சட்டத்திலும் அனு மதி பெறாத போதிலும், நமது நாட்டில் இதற்கு ஆகம அனுமதி இருத்தல் எந்த நிலையைக் காட்டுகிறது? சொல்ல வும் வேண்டுமா?

பிற்பகலிலே சிறிது ஓய்வு இருந்ததினால் ஊர் சுற்றிப் பார்த்தேன். ஊர் மிக ஏழை ஊர் தான். ஆனால், வீடுகள் ஒழுங்காகக் கட்டப்பட்டிருந்தன. எல்லாரும் மழையையும் நிலத்தையையும் நம்பி வாழ்பவர்கள் தான். தலைவன் ஊரிலே தங்கி ஆட்சியைக் கவனித்து வந்தால், குடிகள் நிம்மதியாக வாழமுடியும். பிறருடைய துராலோசனைகளும் சுரண்டல்களும் வாரா. நல்லியற்கைக் கோட்டை நன்னடக் கைக் கோட்டையாகவும் விளங்கிவரும்.

நான் தங்கியிருந்த விடுதியிலே நிரம்பப் படங்கள் இருந்தன. எல்லாம் வேட்டைப் படங்களே. காட்டெருமை, கரடி, புலி, சிறுத்தை முதலியவைகளை வேட்டையாடிக் கொன்ற காட்சிகளாகவே இருந்தன. மேலும், சுவர்களிலே வேட்டையிலே பிடிபட்ட காட்டு விலங்குகளின் தலைகள் நிஜ உருவங்களைப் போலத் திணித்து அமைக்கப் பெற்றிருந் தன. பயங்கரமான காட்டெருமைகள் அவைகளில் நிரம்ப இருந்தன. அழகான பல வண்ணங்களைக் கொண்ட தோல் களும் பரப்புக்களாக விளங்கின. இவைகளை எல்லாம் கண்டு களித்தேன். தலைவனும் அவன் குடும்பத்தாரும் வேட்டையாடுவதில் நிபுணர்கள் என்று அறிந்தேன். மற் றொரு முறை அவரை நான் சந்தித்தபோது காட்டெருமை

வேட்டை ஆடுதலைப் பார்க்க வரும்படி என்னை அழைத்த துண்டு. வீட்டெருமை அருகில் செல்லவும் அருவருக்கும் யான் காட்டெருமைப் பக்கல் எப்படி போகத் துணிவேனோ? விடுதிக்கு அடுத்தாற் போல் ஒரு உல்லாசப் பழத்தோட்டம் இருந்தது. அதில் நுழைந்து பார்த்தேன். மிக அருமைப் பூஞ்செடிகள் இருந்தன. அந்த நந்தவனத்தின் நடுவில் ஓர் அழகான தெப்பக்குளம் இருந்தது. வெள்ளைக் கற்படிகளால் நாற் புறமும் கட்டப் பெற்ற சதுரக் குளம். நூறு அடி சதுரமாக இருக்கலாம். படிகள் அடிவரை சென்றுகொண் டிருந்தன. தெளிவான நீர் அதில் இருந்தது. அடிப் பரப் பும் நீருக்குள் தெரிந்த தென்றால் நீரின் தெளிவுக்கு அளவு கூறவேண்டியதில்லை. இந்த இடத்தில் இத்தனை மேலாக நீர் ஊற்று இருக்குமோ என்று ஐயுற்றேன். அருகில் பெரும் துலைக்கிணறு இருக்கிறது. அதிலிருந்து நீர் இறைத்து இக்குளத்தை நிரப்புகிறார்கள் என்று அறிந்தேன். இக்குளம் நீராடுவதற்கு ஏற்பட்ட குளம். குளத்தைச் சுற்றிலும் திரையிட்டாற்போல் பூங்கொடிகள் படர்ந்திருந் தன. அச்செடி உயர்ந்த மதில் போலக் கத்தரிக்கப் பெற்றிருந்தது. குளத்தில் மகளிர் நீர் விளையாடுதற்கு வேண்டிய அளவு நீர் நிறைக்கப்படும். பிறகு எடுத்து விடப்படுமாம். இக்குளத்தைக் கண்டவுடன் ஒலி ஒளித் திரைப் படத்தில் கம்சன் தன் கேளிர் மடந்தையருடன் நீர் விளையாடின காட்சி என் மனத்தில் பட்டது. இவ்வுல் லாச பவனங்களை எல்லாம் பார்த்துவிட்டு வெளிக் கிளம் பினேன்.

நிலையாமை என்ற பண்பின் நன்மை தீமைகளைப் பார்த்து அறிய வேண்டும் என்றால் தமிழ்நாட்டுக் குறுநில மன்னர் வாழ்க்கைகளில் தான் நன்கு அறியலாம். உடல் நிலையாமை, செல்வ நிலையாமை, செல்வாக்கு முதலியவை

களை ஒரே வாழ்க்கையிலே மிகக் குறுகிய காலத்திலே அனுபவிப்பவர்கள் அவர்களே என்றால் அது மிகை அல்ல. திருவள்ளுவர் போன்ற மெய்ப்புலவர்கள் சொற்களைக் காட்டிலும் அவர்களுடைய வாழ்க்கைகள் நேரில் நமக்குப் பல எடுத்துக்காட்டுகளை எடுத்து ஊட்டுவன. இக்குறுநில மன்னர் மிகச் செல்வத்துடனும் செல்வாக்குடனும் வாழ்ந்தவர். மனைவிகள் மக்கள் முதலிய எல்லாப் பேறுகளையும் அடைந்தவர். அவர்களும் இன்பம் துய்த்தவர்கள். ஆனால் அயலிடம் சென்றார். முறை தவறி இளமையிலேயே திடீரென்று உயிர் துறந்தார். குழந்தைகள் வயது வாராதவர்கள். இன்னமும் பாடசாலையும் காணப் பெறாதவர்கள். ஆகவே அரசியலார் ஆட்சியைத் தம் வயத்தில் எடுத்துக்கொண்டார்கள். முந்தி இருந்த அமைச்சர் எடுபட்டார். அரசியலிலே குறைந்த செலவில் ஒருவரை நியமித்தார்கள். அரசிகளுக்கும் குழந்தைகளுக்கும் அரசியல் திட்டப்படி வருவாய் அளவிட்டார்கள். வெகு தாராளமாகச் செலவிட்டுவந்த பெண்மணிகள் மிகச் சிக்கனமாக வாழவேண்டி வந்தது. ஒன்றுக்குக் கால்பங்குகூட செலவு செய்ய வழிஇல்லை. விழாக்கள் திருநாட்கள் முதலியவைகளுக்கு மனுபோட்டுக் காத்திருக்க வேண்டும். கடன்பெறவும் வழியில்லை. சொத்துக்கு உரியவர்களாக இருந்தும் சொத்தின் வரும்படியை அனுபவிக்க வழியில்லை. பாமரர்களும் தம் இச்சைப்படி வாழ்வார்கள். குறுநில மன்னர் குடியிற் பிறந்தும் பிறருடைய கட்டளைக்கு அடிமைப்பட வேண்டும் என்றால் என்ன மானக்குறைவு? தம் குடிகளின் முன்னே வெகு செல்வாக்கோடு இருந்தது, ஒரு கணத்திலே செல்வாக்கு முற்றும் இழந்து வெறும் சிறைச்சாலைக் கைதி போல உரிமையாளர்கள் ஆக்கப்பட்டால் என்ன வெட்கக்கேடு? தலைவன் இறந்தான்; அதன் விளைவை

அனுபவிக்க வேண்டும். கவலை ஒருபுறம், துயரம் ஒருபுறம், பணமின்மை ஒருபுறம், குடிகளின்மீது அன்பு ஒருபுறம் இவைகள் எல்லாம் முரண் செய்துகொண்டு தம்மை வாதிக்கத் தொடங்கினுல் இளவரசுப் பெண்கள், எவ்வாறு காலம் கழிப்பது ? தலைவனுடைய ஒரு சிறு ஒழுங்கீனத்தினுல் இத்தனை கேடுகள் சம்பவித்தன. இச் செயலை எல்லாச் செல்வர் வீடுகளிலும் அடிக்கடி காணலாம். நிலையாமையின் கேடுகளை உண்மையிலே யார் அனுபவிக்கிருர்கள் ?

---

10. பெண்ணின் புலமை

பண்டைக்கால்த்தில் பெண்மக்களில் சிறந்த புலவர்கள் இருந்தார்கள். முதல் முதலில் சிறு குழந்தையாயிருக்கும்போது நாம் மனப்பாடம் பண்ணுவது ஔவைப்பிராட்டியாரின் அருமைப் பாடல்தான். பெண்மக்களில் பாணர்களே யன்றி அரசியர்களிலும் புலமை விளங்கியிருந்தது. ஆனுல் இக்காலத்தில் ஆண் மக்களிலேயே நூற்றுக்கு தொண்ணூறு பேர் எழுத்தறியாதவர்களாக இருக்கையில் பெண் மக்களில் புலமை காண்பது அரிதல்லவா ? வாழ்நாள் முழுவதும் அரண்மனையில் அடைத்து வைக்கப்பட்டுப் பிள்ளை பெறக்கூடிய இயந்திரங்களாக ஆக்கப்பட்டு வரும் அரசிமார்களிலே படிப்பும் அதிலும் சிறந்த புலமையும் காணுவது என்ருல் நம்பமுடியுமா ? அப்படியிருக்கத் தமிழ் உலகம் வியக்கும்படி ஒருநாள் சங்க நூல்களில் சிறந்த உலகியல் நூலுக்கு ஓர் ஒப்பற்ற ஆராய்ச்சி உரை ஒன்று ஒரு மன்னன் மனைவியாரால் எழுதப்பட்டு அவள் பேரிலேயே வெளியிடப்பட்டது என்ருல் அது மருளோ அருளோ என்று பொது மக்கள் மயங்குவார்கள் அல்லவா ? அந்தப்

பெண்கள் நாயகத்தின் புகைப்படமும் சில நூல்களில் வெளிவந்தது; உலகத்தில் பெரும் புரட்சி ஏற்பட்டு வருகின்றதோ என மக்கள் திகைத்தார்கள்.

உலகில் எதற்கும் மறுப்பு தோன்றுவது இயல்பு தானே! அதிலும் அருமையான ஒரு செய்தி நிகழ்ந்தால் அது உண்மை அல்ல என்று நிரூபிக்கப் பலர் தோன்றுவார்கள். நிரூபிக்காவிட்டாலும் அதனை மறுத்துப்பேச முன் வருவாருக்குக் குறைவு இல்லை அல்லவா? இப் பெண்மணி படித்திருக்கலாம். ஆனல், ஓர் அரிய நூலுக்கு உரை எழுதி வெளியிடும் ஆற்றல் வரும்மட்டும் போதிய படிப்பு இல்லை. இவ்வம்மணிக்குக் கல்வி கற்பித்த புலவர் இதனை எழுதி இவ்வம்மையின் பேரில் பதிப்பித்துவிட்டார் என்று வெளிப்படையாகக் கூறவும் தொடங்கினர்கள். சிலபேர் இந்த அரசிக்கு வகுப்பில் படிப்பே இல்லை. அதிலும் ஒரு பாளையப்பட்டில் அந்தப்புற வாழ்க்கையில் ஈடுபட்டால் படிப்பு ஏறுமா? அந்தப்புற வழக்குகளில் போராடவே நேரம் இருக்காது. அப்படியிருக்கப் படிப்புக்கு நேரம் ஏது? அதிலும் படிப்பின் அருமை தெரியாத ஒரு தலைவனுக்கு வாழ்க்கைப்பட்ட பிறகு படிப்பில் ஈடுபட அவன் விடுவானு? இவைபோன்ற பல ஐயங்களை வெளியிட்டு மறுக்கவும் தொடங்கினர். நமது நாட்டில் காவியங்கள் எழுதிய அரசர்கள் இல்லையா, பெண்மணிகள் இல்லையா என்று கேட்கலாம். ஸ்ரீ ஹர்ஷன் "நாகாநந்தம்" என்ற நாடகம் எழுதினன் என்பது வரலாறு. ஆனல் அவன் அதனை எழுதவில்லை என்றும் அவனுடைய அவைப்புலவன் ஒருவன் எழுதி அவன்மீது கட்டிவிட்டான் என்றும் கூறும் ஒரு கட்சி உண்டு. "ஆமுக்த மால்யத" என்ற காவியத்தைக் கிருஷ்ண தேவராயன் எழுதினதாக வரலாறு. ஆனல் அவன் எழுத எங்கே அவனுக்கு பொழுது உண்டு? ஆஸ்தான கவி

போதன்று எழுதி அவன் பேரில் வெளிப்படுத்தினன் என்பது மற்றொரு கட்சி. ஆகவே அரசியலில் சிறப்பு ஒன்றை உட்புகுத்த எவரும் மறுப்பது உலக வழக்கு. அதுபோலவே இப் பெண்மணியைப் பற்றியும் பழி கூறுவர். மற்றொரு விபரீத காரணமும் கூறுவர். தலைவன் இறந்துபோக அவன் சொத்தை ஆட்சி செய்ய வயது வந்த மக்கள் இல்லாத காரணத்தினால் தலைவனுடைய மனைவியரில் படித்தவளுக்கே ஆட்சி கொடுக்கப்படும் என்ற எண்ணம் மனதில் கொண்டு அதனைப் பெறவேண்டி இந்நூல் அவள் பெயரில் வெளியிடப்பட்டது என்று கூறுபவரும் உண்டு.

2

ஒருநாள் என் அறையில் உட்கார்ந்துகொண்டு ஏதோ அலுவல் பார்த்துக்கொண்டிருந்தேன். எவரோ ஒருவர் விசை வண்டியில் தெருக்கதவண்டை வந்து இறங்கினர். சிறிது நேரத்தில் முகவரிச்சீட்டு ஒன்று என்னிடம் வந்தது. “ஜமீன்தாரிணி” என்று எழுதப்பட்டிருந்தது. எனக்கு வியப்பு. “வரச்சொல்” என்று சொல்லிவிட்டு, ஒரு ஜமீன்தாரிணிக்கு என்னிடம் என்ன சோலி இருக்குமோ என்று மனக்கோட்டை கட்டிக்கொண்டு இருந்தேன்.

ஒரு விநாடியில் விலையுயர்ந்த காசிச்சேலையை வெகு நாசூக்காகக் கட்டியிருந்த நடுவயதினளாக ஒருபெண்மணி அறைக்குள் புகுந்தாள். வணக்கம் சொல்லி உட்காரச் சொன்னேன். ஆசனத்தில் அமர்ந்து வெகு கூர்மையான பார்வையில் என்னைப்பார்த்தாள். என் ஆற்றலை அளக்கிறாளோ என்று எண்ணினேன்.

“இத்தனை தொலைவு வந்ததற்கு என்ன காரணமோ?” என்று கேட்டேன்.

"ஒன்றுமில்லை, தங்களைத் தொந்தரவுபடுத்தியதற்கு மன்னிக்கவேண்டும். என் உரிமைகளையும் கௌரவத்தையும் பாதிக்கும் ஒரு செய்கை நடந்துவிட்டது. தங்களிடம் சொல்லிக்கொள்ளலாம் என்று வந்தேன்" என்றாள்.

"என்ன அப்படிப்பட்ட காரியம். சொத்துப் பரிபாலகர்களாலே அதனைத் தீர்க்க முடியவில்லையோ?"

"தொந்தரவு அவர்களாலேதான் ஏற்பட்டுவிட்டது. ஆகவேதான் பரிகாரத்திற்காகத் தங்களிடம் வந்தது."

"ஜமீன் பரிபாலனத்திற்கும் எனக்கும் என்ன தொடர்பு இருக்கிறது? என்னதான் இருக்கமுடியும்."

"இது கோயில் தொடர்புகொண்டது. ஆகையாலே இங்கே வந்தேன்."

"என்ன விவகாரமோ, சொல்லுங்கள்."

"நாங்கள் மூன்றுபேர் அரசிகள். மூத்தவளுக்கு சந்ததியில்லை. எனக்குக் குழந்தை உண்டு. என் குழந்தைக்குத்தான் அனந்தர வார்சு. ஆனால் சட்டப்படி மூத்தவள் தான் தற்போதிய அதிகாரியாம். ஆகையால் அவளிஷ்டப்படிதான் எல்லாம் நடக்கிறது. எங்கள் இருவருக்கும் சிறிதும் ஆகிறதில்லை. நான் எது சொன்னாலும் அவள் எதிர்க்கிறாள். அவளுக்கோ படிப்பில்லை. படிப்பு என்றால் அவளுக்கு நஞ்சு. படித்தவர்களை எல்லாம் சுட்டு எரிக்க வேண்டும் என்கிறாள்" என்று சொல்லிக்கொண்டே கதையை வளர்த்தினாள்.

"அம்மா, காரியம் சொல்லுங்கள். இரண்டு மனைவிகள் மூன்று மனைவிகள் என்றால் சண்டை சச்சரவு இயற்கை தானே. அவர் இல்லாதபோதே இப்படி சண்டை பிடிக்கிறீர்கள். அவர் இருந்தபோது எப்படியிருந்ததோ? உங்களால் அவர் எத்தனை கவலைகொண்டாரோ" என்றேன்.

"அப்படியா, அவர் இருந்தபோது அவள் மூச்சு விடுவாளா? இப்போதுதான் அவள் இராணி ஆகி இருக்கிறாள்."

"சரி, அம்மா, காரியம் என்ன?"

"ஜமீனில் பெரியகோயில் ஒன்று இருக்கிறது."
"அதில் எல்லோரும் தொழப்போகலாம் அல்லவா? சென்ற கிருத்திகையன்று நான் பூசை சாமான் எல்லாம் கொண்டுபோனேன். கோயிலிலே அர்ச்சகன் என் சாமான்களை எடுக்கமாட்டேன் என்று சொல்லிவிட்டான். காரணம் கேட்டேன். அது பெரிய இராணி உத்தரவு என்றான். நான் சொல்லவேண்டியது எல்லாம் சொல்லிப்பார்த்தேன். அவன் எடுக்கவில்லை. வெறும் தனிக்குடிக்கு உள்ள உரிமையும் எனக்கு இல்லையா? இவன் என்னை எப்படி தடுக்க முடியும்......?"

"அம்மா, இதுதானே நடந்தது. அதிகாரிக்குச் சொல்லவில்லையா?"

"சொல்லாமல் இருப்பேனா; சொன்னேன். அவர் அவள் பக்கம் சேர்ந்து பேசினார். எனக்கு என்ன உத்தரவு சொல்லுகிறீர்கள். நீங்கள் அல்லவோ பெரிய அதிகாரி.

"அம்மா, இவ்வளவுதானே விஷயம். இதை எழுதி அனுப்புங்கள். நான் விசாரிக்கிறேன். இத்தனை சிறியதாய் விவகாரம் இருக்காது. ஏதாவது மேலுக்கும் இருக்கலாம்" என்றேன்.

"வேறொன்றும் இல்லை, எனக்குக் கோயிலில் உரிமை ஏன் இல்லாமல் போய்விட்டது. என் குழந்தைதானே இனிமேல் இந்த சொத்துக்கே வாரிசு. அப்படியிருக்க அவன் பெயரால் அல்லவோ கோயிலில் ஆசீர்வாதம் சொல்ல வேண்டும்? இந்த மூடசிகாமணி பேரிலே இராணி என்று

பெயரிட்டுச் சொல்லவேண்டுமாம். என்ன அடா வழக்கு. பாருங்கள்."

சரி, மூட்டைக்குள் இருந்த பூனை வெளியே கிளம் பிற்று. இவள் தன் குழந்தைக்கு அனந்தரபாத்தியம் வரப் போகிறது என்று இப்போதே ஆசிர்வாதத்தில் அவன் பெயரைச் சொல்வதற்கு ஒத்துக்கொள்ளச் சொல்லுகிறாள். வழக்கு முற்றிக்கொண்டு வருகிறது. ஒரு பெண்ணுக்கு இவ்வளவு சட்டம் எப்படி தெரிந்தது? யாரோ வழக்கு அறிந்த ஆண் பிள்ளைகளின் தூண்டுதல் பின்னே இருக் கிறது என்று உணர்ந்தேன். இதை இவளிடம் பேசிப் பயனில்லை.

"அம்மா, விஷயம் தெரிகிறது. நீங்கள் மனுவில் எழுதி அனுப்புங்கள். நான் விசாரிக்கிறேன்" என்று சமாதானம் சொல்லி அனுப்பிவிட்டேன்.

3

ஒருமுறை அதே கோயிலைப் பார்வையிடச் சென்றேன். அந்த அம்மாள் தன் வீட்டிற்கு அழைத்தாள். சென்றேன். இரட்டைநிலை கொண்ட மாளிகை. நல்ல உயர்ந்த வேலைப் பாடுகொண்ட நாற்காலிகள் மெத்தைகள் முதலியவைகள் எல்லாம் போடப்பட்டிருந்தன. அந்த அம்மாள் புத்திசாலி. தன் பூஜை அறைக்கு அழைத்துக்கொண்டுபோய்க் காட்டி னாள். பூஜை அறை வெகு ஒழுங்காக வைக்கப்பட்டிருந் தது. பூஜை மூர்த்திகள் வெகு பளபளப்போடு இருந்தன. பூஜை சாமான்களில் சிறிது அழுக்கும் இல்லை. எண் ணெய் சிந்துதல் முதலிய இயல்பான குற்றங்கள் இல்லை. சுற்றிலும் இருந்த படங்கள் வெகு தூய்மையாக இருந் தன. அந்த ஒழுங்கைப் பார்த்துவிட்டு மிக மகிழ்ந்தேன்.

"பாருங்கள், நான் நாடோறும் வெகு அன்போடு வழிபாடு செய்கிறேன். அப்படியிருக்க இதற்கு முறைப் படி செலவு ஆகாதா? இதற்கும் போதுமான அளவு மாதச் செலவு கொடுக்கக்கூடாதா? இதில் எல்லாம் இண்டத்தனம் செய்கிறார்கள் அதிகாரிகள். நானும் பல்லைக் கடித்துக் கொண்டு இருக்கிறேன். இதற்கெல்லாம் காரணம் பெரிய இராணிதான்."

"பெரிய ராணி எங்கே?"

"அதோ அந்த வீடு தான் அவளுடையது" என்று மற்றொரு மாளிகையைக் காட்டி, "அவள் இங்கே இல்லையாம்; வேணுமென்றே வேறு இடத்திற்குச் சென்று விட்டாள் போல் இருக்கிறது. நான் சென்னையில் சொன்ன சங்கதி ஞாபகம் இருக்கவேண்டும். தங்களிடம்தான் நியாயம் எதிர் பார்க்கிறேன்."

வந்தனம் சொல்லிவிட்டு வெளிக் கிளம்பினேன். இந்தச் சககளத்திகள் விவகாரத்தில் தான் எந்தப் பக்கமும் சேரக்கூடாது என்று சொல்லி அதிகாரி தன் அறையிலே தங்கி இருந்தார். இந்த மூன்று பெண்களுக்கும் இன்னமும் பெரிய விவகாரங்கள் கச்சேரிகளில் நடைபெறுகின்றன என்ற செய்தியை அவர் பின்னால் சொன்னார்.

இவ்வாறு பேசிக்கொண்டு அரண்மனை வட்டத்தில் சென்று கொண்டிருக்கையில் மற்றொரு மாளிகை தெரிந்தது. அதில் மேல் மாடிமுற்றும் இரும்புக் கம்பிகளால் கிளிக் கூண்டுபோல பிணைக்கப்பட்டிருந்தது. இது என்ன கட்டடம் என்று கேட்டேன். 'அது பெரிய கதை. இங்கே அதைப் பற்றிப் பேசவேண்டாம். திரும்பி ஊர் போகும்போது சொல்கின்றேன்' என்றார் என்னோடு கூடவந்த எனது நண்பர். வேலை முடிந்ததும் ஊர் திரும்பினோம்.

விசை வண்டியில் திரும்பி வரும்போது அந்தக் கூண்டு மாளிகையைப்பற்றி விசாரித்தேன். எனது நண்பர் அதனைச் சொல்லத் தொடங்கினர் :

" தன் சொந்தக்காரரில் ஓர் அழகாகப் பெண்பிள்ளை இருக்கிற தென்று கேள்விபட்டுத் திருமணம் செய்து கொள்ள விரும்பினர் இறந்துபோன தலைவர். ஒரு நடுவர் மூலமாக மணப் பேச்சுக்கள் பேசப்பட்டன. பெண்ணின் பெற்ருேர்களும் ஒத்துக்கொண்டார்கள். திருமண நாள் குறிக்கப்பட்டது. பேசியதற்கு அதிகமாகவே அணியாபரணுதிகள் தரப்பட்டன. திருமணமும் வெகு டாம்பீகத்துடனே நடத்தப்பட்டது. திருமணம் ஆனஉடனே புது அரசிக்குத் தனிமாளிகை ஏற்படுத்தப்பட்டது. அதுதான் அந்தக் கூண்டு மாளிகை. முதலில் கூண்டுக் கம்பிகள் இருக்கவில்லை. மேல் மாடியில் புது மணப் பெண்ணும் தலைவனும் மணவாழ்க்கை நடத்திவந்தார்கள். பெண்ணும் விரைவிலே கரு வாய்த்தவளாகத் தெரிந்தது. தலைவனுக்கு வெகு மகிழ்ச்சி. ஆண்பிள்ளை இல்லாதவனுக்கு ஒருவேளை ஆண் வார்சு உண்டானல் மகிழ்ச்சிக்கு அளவு உண்டோ ? அது முதல் என்னென்னவோ கனவுகளைக் கண்டுகொண்டிருந்தான். "

" பிறகு என்ன ஆயிற்று ? "

" ஆனது சொல்லுகிறேன். ஒருநாள் பிரசவவேதனை ஏற்பட்டது. ஏதோ வெறும் நோய் என்று தலைவன் நினைத்தான். திருமணம் ஆகி ஆறு மாதமும் ஆகவில்லை. ஆகவே ஏதோ பேய் பிசாசுத் தொந்தரவு ஏற்பட்டிருக்க வேண்டும் என்று நினைத்தான். பெரிய வைத்தியர்கள் மாந்தரீகர்கள் அழைக்கப்பட்டார்கள். அவர்களுக்குத் தர

வேண்டிய வாய்க்கரிசி தரப்பட்டது. பேயும் இல்லை, பிசாசும் இல்லை; நோயும் அல்ல, நோக்காடும் அல்ல; பிள்ளைபெறும் வருத்தம்தான். அவளுக்கு அடுத்தநாள் ஒரு திட உடல் கொண்டபெண் சிசு பிறந்தது.

"என்ன விபரீதம். திருமணம் ஆகி ஆறு திங்கள் முடியவில்லை. குழந்தை பிறக்குமா? ஆங்கிலர் சட்டம் என்றால் அக்குழந்தை சரியான குழந்தைதான், சட்டப்படி அதுவே வார்சு ஆகும். இந்துச் சட்டப்படி அது எப்படி ஔரசக் குழந்தை ஆகும்? நிரம்ப நினைத்தார் தலைவர். உண்மை அறிந்தார். உடனே ஒருமுடிவிற்கு வந்தார். குழந்தை பிறந்த மேல்மாடியைச் சுற்றி இரும்புக் கம்பி இணைக்கச் செய்தார். அதை ஒரு பெரிய கிளிக்கூண்டு போல் வலுவாக அமைத்தார். மெத்தை ஏறும்படிக்கு வலுவான கதவை வைத்தார். அதைத் தானே பூட்டிச் சாவியைத் தன்னிடமே வைத்துக்கொண்டார். தன்னைத் தவிர வேறு எவரும் அதனைத் திறப்பதில்லை."

"ஆகவே பெண்ணும் குழந்தையும் மாடியிலேயே சிறையாட்கள் ஆகிவிட்டார்கள்."

"உணவு வசதி எப்படியோ?"

"ஒரு நம்பிக்கை உள்ள பெண் நாள்தோறும் இருமுறை உணவு முதலியவைகளை மேலே எடுத்துச் செல்வாள். அவள் ஒருத்தியைத் தவிர வேறு எவரும் உள்ளே செல்ல அனுமதி இல்லை. இரட்டைக் கம்பிகள் உள்ளபடியாலும் கைப்பிடி உயர்ந்து இருக்கிறதினாலும் வெளியிலிருந்தும் எவரும் குழந்தையையாவது தாயையாவது பார்க்கமுடியாது. தலைவனும் அம்மாடி மேலே அது முதல் செல்லவே இல்லை."

"என்ன கடுஞ்சிறை?"

"ஆமாம்; கடுஞ்சிறைதான். தலைவன் என்ன் செய்வான்? மானம் போவதை எப்படித் தடுப்பான்?"

"பிறகு என்ன ஆயிற்று?"

"ஆகிறதென்ன? அச் சிறையிலேயே அப் பெண் காலத்தைக் கழித்தாள். குழந்தையும் அங்கேயே வளர்ந்தது. குழந்தைக்குப் பத்து வயதாகுமட்டும் அது இருவர் முகங்களைத் தவிர வேறு எந்த முகத்தையும் பார்த்தது கிடையாது. தலைவன் செத்தான். ஆண் வார்சு இல்லாததினால் அரசியலார்கள் ஆட்சியை எடுத்துக்கொண்டார்கள். இந்த அபலைகள் விடுதலை செய்யப்பட்டார்கள். அப் பெண் தாய் வீடு சேர்ந்தாள்."

"அவர்களுக்கும் சீவனம்சம் உண்டோ?"

"ஏன் இல்லாமல்? அரசியலார் அவர்களுக்கு ஒரு திட்டம் போட்டுக் கொடுக்கிறார்கள்."

"இதைப்பற்றி விவகாரம் இல்லையோ?"

"ஆண் குழந்தை ஆனால் தகரார் ஏற்படும். பெண் குழந்தை அல்லவா? யாரும் எந்தப் பேச்சும் எடுக்கவில்லை.

"இப்பொழுது என்ன ஆயிற்று?"

"அப்பெண்ணுக்குத் திருமணமும் ஆயிற்று. கணவனுடன் பிழைக்கிறாள். வேறு வகுப்பாராயிருந்தால் சந்தேகம் தான். இந்தச் சாதியில் அத்தனைக் கட்டுப்பாடு இல்லை" என்றார் எனது நண்பர்.

---

11. தூதுவர் மூலம்தான் காணலாம்

இரயில் அடிக்கு வெகு தொலைவில் இருக்கும்படியான ஓர் உள் நாட்டு ஊர். சுற்றுப் பக்கங்களுக்கு ஒரு நடு வட்டமானவூர். சர்க்கார் வேலையோ, வியாபாரமோ, சில்லறைத் தொழிலோ இவைகளுக்கு எல்லாம் சுற்றுவட்டார மக்களெல்லாம் இவ்வூர் சென்றுதான் தங்கள் வேலையை

முடித்து வருவார்கள். ஆகவே சர்க்கார் தொழிலாளிகளும் அவர்களுடைய தொழிலகங்களும் இங்கே உண்டு. இவை கள் இருக்கும் என்றால், வழக்கறிஞர்கள் இருக்க மாட்டார் களா? அவர்கள் விளையாட்டு, பொழுது போக்கு இவை களுக்காக ஒரு விடுதியும் ஏற்படுத்தி இருந்தார்கள். மாலை வேளைகளில் பகலெல்லாம் வேலை செய்து வந்த சிரமத்தைப் பரிகாரம் செய்து கொள்ளுவதற்காக இங்கே கூடி ஊர் வம்பு பேசி விட்டுச் செய்தித் தாள்களை வாசித்து விட்டு வீடு திரும்புவார்கள். இத்தகைய உல்லாச இடம் ஒரு நாள் மிக்க ஆரவாரத்துடன் விளங்கியது. அவ்வூர் சர்க்கார் ஆட்கள் எல்லாரும் வந்திருந்தார்கள். வழக்கறிஞர் ஓர் ஆள் தவறாமல் அங்கு வந்து சேர்ந்தார்கள். காரணம் நான் அங்கு சென்றது தான். எனக்கு ஒரு விருந்து ஏற்பாடு செய்து உபசரிக்க வேண்டி எல்லாரும் கூடியிருந்தார்கள்.

அங்கு வந்தவர்கள் எல்லாரும் ஒவ்வொருவராக எனக்கு அறிமுகம் செய்யப்பட்டார்கள். முதல் முதலில் அறிமுகம் செய்யப்பட்ட வழக்கறிஞர் அச்சங்கத்தின் தலைவர். "இவர்தான் சங்கத்தலைவர்; இவ்வூர்ச் சின்னதுரை" என்றார்கள். அதைக் கேட்கச் சிறிது வியப்பாக இருந்தது. "பெரிய துரை அரண்மனையில் இருக்கிறார்கள். அவர்கள் வெளியே வருவது கிடையாது. அதனால் இன்று வரவில்லை. சின்னதுரை தனியாக ஊரில் ஒரு பங்களாவில் இருக்கிறார். அவர்வழக்கறிஞராக இருக்கிறார்" என்றார்கள். ஜமீன்தாரர்களு டைய மக்கள்ஆங்கிலப்படிப்புப் பெறுவதில்லை. பெற்றாலும் வழக்கறிஞர் தொழிலுக்கு வருவதில்லை. அதற்கு இவர் ஒரு புறநடை என்று எண்ணினேன். ஆந்திர நாட்டிலும் வங்க நாட்டிலும்தான் ஜமீன்தாரர்கள் வழக்கறிஞர்களாகத் தொழில் புரிகின்றனர் எனக் கேள்விப்பட்டிருக்கிறேன். அவர்களைப் போல் இங்கேயும் ஆட்கள் இருக்கின்றனர்

என்று வியந்து அமர்ந்தேன். விருந்து வெகு விமரிசையாக நடந்தது. அவர்கள் கூட்டத்தில் நானும் பேச வேண்டி யிருந்தது.

மறுநாள் ஊரில் இருந்த அழகிய குளம், அதனருகில் இருந்த பண்டைக் கோயில், அதில் கிடைத்த செப்புத் திரு மேனிப் புதையல், அருகில் சிறிது தொலைவில் இருந்த மலைக் கோயில் இவைகளை யெல்லாம் கண்டு களித்து விட்டு ஊரில் நடந்த உற்சவங்களிலும் கலந்து கொண்டேன். இவ்வூர் சென்ற செய்தி வெகு காலம்வரை மறக்க முடியவே யில்லை.

* * * *

பின்னர் ஒரு தடவை எனக்கு அறிமுகம் ஆனவரும் மிக்க நட்புரிமை பூண்டவரும் ஆன ஒரு நிலக்கிழவரைக் கண்டு பேசிக் கொண்டிருந்தேன். சிறிது நேரம் பல செய்திகளைப் பற்றிப் பேசுகையில் இவ்வூர் பெரியதுரை சின்னதுரை இவர்களைப்பற்றிச் சொன்னேன். பெரியதுரை அரண்மனையில் இருக்கச் சின்னதுரை தனியே ஊரில் வேறு குடித்தனம் செய்வது வியப்பாக இருக்கிறதென்று கூறினேன்.

“இதில் என்ன வியப்பு இருக்கிறது? பெரியதுரையி னுடைய குணாதிசயங்களை அறிந்திருந்தால் வியப்பு என்று சொல்லமாட்டீர்கள்” என்றார்.

“என்ன அப்படிப்பட்ட குணாதிசயங்கள். நான் நேரில் அவ்வூர் சென்றபோதும் அங்கு விருந்து நடந்த போதும் அதைப்பற்றி ஒருவரும் சொல்ல வில்லையே” என்றேன்.

“அங்கே அவர் மகன் சங்கத்தலைவராக இருந்தபோது சொல்லுவார்களா? அதுவும் நீங்கள் அலுவல் சம்பந்த

மாகச் சென்றபோது எப்படி உங்களுக்கு எல்லா இரகசிய மும் தெரியவரும் ?"

"தங்களுக்கு நிரம்பத் தெரிந்திருக்கலாம், அப்படி என்ன விபரீதம் நடந்திருக்கக்கூடும் ?"

"சொல்லுகிறேன் கேளுங்கள். தென்னாட்டு நிலச் சுவான்தாரர்களுக்கு ஒரு பிரதிநிதி சட்டசபையில் இருப் பதை நீங்கள் அறிவீர்கள். ஒருமுறை எனது நெருங்கிய நண்பர் ஒருவர் அந்தத் தானத்திற்கு நின்ருர். அவருக்காக வேலை செய்யும் பொறுப்பு எனக்கு இருந்தது. நானும் உதவி செய்வதாக ஒத்துக் கொண்டேன். பல துரைகளையும் பார்த்து வாக்குறுதி பெற்றேன். இந்தவூர்ப் பெரிய துரை யைக் கண்டு வாக்குறுதி கேட்கலாம் என்று புறப்பட்டு இவ்வூர் வந்து சேர்ந்தேன்."

"இத்தனைத் தொலைவு போனீர்களா ?"

"வாக்குறுதி கொடுத்த பிறகு போகாமல் என்ன செய்வது? நடந்ததைக் கேளுங்கள்."

"அங்கே சென்றவுடனே என் முகவரிச் சீட்டு ஒன்றைக் கொடுத்தனுப்பி நான் துரைகளைப் பார்க்க வேண்டும் என்று சொல்லி அனுப்பினேன். வெகுநேரம் ஆகியும் பதில் வரவே இல்லை. எவ்வளவு நேரம் காத்திருப்பது. மறுபடி யும் செய்தி அனுப்பினேன். பதில் வரவில்லை. நானும் அவரைப்போல ஒரு நிலச்சுவான்தானே. மேலும், நிலச் வான்தாரர் சங்கத்தில் ஒரு பொறுப்புப் பதவியும் பெற்ற வன். அப்படியிருக்க எனக்கு மிகுந்த அவமானம் இதனல் வரும்போல் தோன்றிற்று. மூன்ரும் தடவை விவரமாக எழுதி உள்ளே அனுப்பினேன். பிறகு வெகு நேரம் கழித்து ஒரு பதில் அரண்மனை ஆள் மூலம் வந்தது."

"அது என்ன அப்படிப்பட்டது?"

" என்னவா ? ' பெரியதுரை எவர்களையும் பார்க்கும் சம்பிரதாயம் இல்லை. அதன்படி சொல்லிவிடு ' என்ற ஒரு சிறு செய்திதான் கிடைத்தது. அதைப் பெற்றுக்கொண்டு மிகுந்த கோபத்தோடும் ரோஷத்தோடும் ஊர் திரும்பினேன்."

" இப்படி உங்களையும் அவமானப் படுத்திவிட்டாரா ? எனக்கு விருந்து நடந்தபோதும் பெரியதுரை வெளியே வருவதில்லை என்று குறிப்பாக அங்கு சொன்னார்கள் " என்றேன்.

"இது மட்டுமா இன்னும் கேளுங்கள். இப்படி அகந்தை பிடித்த ஒருவனைப் பற்றி முழுவதும் தெரிந்துகொள்ள வேண்டாமா என்று எண்ணிக் கொண்டிருந்தேன். அதற்குத் தகுந்த ஒற்றர் வேலை செய்தேன். உண்மை தெரிந்தது. அகந்தை பிடித்தவர் அல்லர். அவருடைய உள்துறை நடவடிக்கைகள் அப்படிப்பட்டவை. பகலும் இரவும் மெல்லியலாருடைய உறவிலேயே இருப்பாராம். வயது அறுபதிற்கு மேல் இருந்தாலும் ஒருகணமேனும் மெல்லியலாருடைய உடல் பரிசம் இல்லாவிட்டால் அவர் பிழைக்க முடியாதாம். மெல்லியலாரும் பதியிலார் குலத்தவராக இருக்க வேண்டுமாம். ஒருவர் அல்ல, பல பெயர்களும் இருக்கவேண்டுமாம். இந்த முறையில் அவருடைய வாழ்க்கை இருக்கும்பொழுது குலப் பெண்களுக்கு உதித்த குல ஆடவர்கள் அவரிடம் எவ்வாறு நடவடிக்கை வைத்துக் கொள்ள முடியும். ஆகவே அவருடைய உறவினரும் தன்னந்தனியே வெவ்வேறு தொழில்களைக் கொள்ள வேண்டி வந்தது. இதில் வியப்பு இல்லையே."

" சரிதான் காரணம் அறிந்தேன் " என்றேன்.

"மற்றொன்று சொல்லவில்லையே? கேளுங்கள் இவரிடம் வாக்குறுதி பெறுதலும் வெகு சுலபம் என்றறிந்தேன். „

"துரையிடம் செல்லவே வேண்டியதில்லை. துரைக்கு அந்தரங்கத் தோழிகள் சில பேர் இருக்கின்றனர். அவர்களைப் பிடித்தால் போதும். அவர்களுக்குச் சிறிது மூகமனும் வாய்க்கரிசியும் இட்டாற் போதும். உடனே காரியம் சித்தி ஆகிவிடும் என்று உண்மைச் செய்தி கிடைத்தது."

"அப்படியானுல் என்ன செய்தீர்கள் ?"

"காரியம் நடக்கவேண்டியது தானே? அந்தக் காரியம் தான் செய்யச் சொன்னேன். வெகு சுலபத்தில் எடுத்துக் கொண்ட காரியமும் வெற்றியோடு முடிந்தது."

இந்த செய்திகளைக் கேட்டவுடன் எனக்கு இருந்த ஆச்சரியத்திற்கு அளவே இல்லை. மானிட உருவத்தில் இப்பேர்ப்பட்ட குணுதிசயமூர்த்திகளும் இருக்கின்றனவா ? என்று எண்ணி எண்ணி மயங்கினேன்.

---

12. இரவே பகல் அங்கே

"அசைவுஇல் இலங்கை மூதூர்
ஆர்இருள் இன்மை யாலே
நிசிசரர் ஆயிற்று அம்மா
நெடுநகர் நிருதர் எல்லாம்"

என்று கம்பர் இலங்கை அரக்கர்களைப் பற்றிக் கூறினுர். புலி, சிறுத்தை, சிவிங்கி, முதலிய கொடிய விலங்குகள் தான் பகல் எல்லாம் தூங்கி இரவில் விழித்திருந்து வேட்டையாடச் செல்லும் என்று சிகாரிகள் என்ற வேட்டையாட்கள் கூறுவார்கள். அவ்விலங்குகளைக் கண்டு தான் அவ்விலங்குகளின் சுபாவங்களுக்கு இணையான அரக்கர்களைக் கம்பர் அவ்வாறு கூறினுர் போலும் ! முன் காலத்தில் இவ்வகையில் அவ்வியல்புகொண்ட மக்கள் இருந்

திருந்தால் அன்னுருடைய சந்ததியார் அந்த இயல்பிலேயே இப்போதும் இருக்க மாட்டார்களா? இந்நாளில் இலங்கை சென்று பார்த்தால் அவ்வித இயல்பு கொண்ட மக்களைக் காணேம். ஆகவே அக்கூற்று வெறும் மனோராச்சியம் என்போமா?

அண்மையிலே ஒரு செய்தி கேள்விப்பட்டேன். இலங்கை அரக்கர்களிடம் ஏன் செல்ல வேண்டும். நமது தமிழ் நாட்டிலேயே சில குடும்பங்கள், செல்வாக்குள்ள குடும்பங்கள், செழிப்பு மலிந்த குடும்பங்கள் இருக்கின்றன வாம். அவைகளிலே செல்வச் செழிப்பினுலே உலக இயற்கையை மாற்றித் தலை கீழாக நடத்துகிருர்களாம். இரவெல்லாம் சிட்டாட்டம் ஆடுகிறதினுலே பகலெல்லாம் தூங்குகிருர்களாம். பகல் எல்லாம் தூங்கிவிட்டு இரவெல் லாம் வேலை செய்யும் செல்வவான்களும் இருக்கின்றனராம். அதைக் கேட்டவுடனே அவர்கள் பஞ்சாலைப் பேர்வழிகள் ஆக இருக்கலாமென்று எண்ணினேன். ஏனெனில் பஞ்சாலை களிலே மூன்று தடவை எட்டெட்டு மணி நேரமாக வேலை வாங்கி இரவு எல்லாம் விழித்துக் கொண்டிருப்பது இக் கால இயல்பாகி விட்டது. முன்னே குறிப்பிட்டவர்கள் அப்படிப்பட்ட ஆலைப் பணக்காரர்களும் அல்லவாம். பின் யார் என்ருல், நிலச்சுவான்தார்களாக இருந்து பகல் எல்லாம் தூங்கிவிட்டு இரவிலே சில பேர்கள் வேலை செய் கிருர்களாம். அப்படிப்பட்ட ஒரு பெரியவரை நான் காணும் வாய்ப்பு எனக்கும் கிடைத்தது.

பண்டைய பெருமாள் கோயில் ஒன்று ஒரு குறு நில மன்னரின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. இரயிலடிக்கு வெகு தொலைவில் இருந்ததினுல் அதனைத் தரிசிக்கப் பெருங் கூட்டம் செல்லாது என்று நினைக்கிறேன். அக்கம் பக்கத்து ஊரார் மட்டும் அங்கே செல்லக் கூடும். பட்டிக்காட்டார்கள்

ஆராதனை ஒன்றைத் தவிர பிறவற்றை அர்ச்சகர்கள் அறிய மாட்டார்கள். குறுநில மன்னரும் அக்கோயிலைக் கண்டு எத்தனை ஆண்டுகள் ஆயிற்றோ ? கூறமுடியாது. கண்கண்ட தெய்வம்போல் அக்கோயிலை எப்போதாவது எட்டிப்பார்ப்பவர் அவரது அமைச்சர் என்று நினைத்தேன். நான் சென்றபோது அவ்வமைச்சர் இருந்தார். என்னை வரவேற்றியருளினார். அவரும் ஒரு பெரிய பெருமாள்தான். பெருமாள் கோயிலில் திருக்கோபுரத்திற்கு முன்னாலே ஒரு உயரிய நாற்கால் மண்டபம் இருக்கும். இம்மண்டபத்தின் கீழ் பெருமாள் திருவிழாக்களிலே எழுந்தருளுவர். சில சமயங்களில் அதில் ஊஞ்சல் உற்சவம் நடைபெறும். அதற்காக அம்மண்டபம் வெகு உயரமாக அமைக்கப்பெற்று இருக்கும். அதனாலே அம்மண்டபத்தைக் கட்டின நாள் முதற்கொண்டு அதனை ஏறிப் பார்க்காத ஆலய ஆட்களும் உண்டு. நான் சென்றபோது அக்கோயில் மண்டபத்தின்மீது நிரம்பப் புற்பூண்டுகள் முளைத்து வெகு செழிப்பாக வளர்ந்திருந்தன.

"சுவாமி, பெருமாளுக்கு நிலத்தில் இருக்கும் நந்தவனத்தைவிட மண்டபத்தின்மீது உள்ள நந்தவனத்தின் பேரில் விருப்பம் மிகுதியா ?" என்று அவ்வமைச்சரைக் கேட்டேன். அவரோ பொருள் விளங்காமல் விழித்தார். "சுவாமி, இந்தக் கோயிலில் நந்தவனம் வைக்க நிலத்தில் இடம் இல்லையா? மண்டபத்தின்மீது வைத்திருக்கிறீர்களே" என்று கேட்டேன். "இல்லை இல்லை. கோயிலுக்கருகில் நல்ல நந்தவனம் இருக்கிறதே" என்று பதில் சொன்னார். என் கருத்து அவருக்கு இன்னும் விளங்கவில்லை என்று அருகில் இருந்தோர் புன்னகை செய்தார்கள். "சுவாமி, அதோ தெரிகிறதே. அந்த மண்டபத்தின்மீது செடிகள் முளைத்திருக்கின்றனவே அதைப் பற்றித் தான் சொன்னேன்" என்றேன். "ஆ, ஆ, மன்னிக்க வேண்டும், பத்து நாள்

களுக்கு முந்திதான் அவைகளைப் பிடுங்கிவிடச் சொல்லி உத்தரவு இட்டேன். அவைகள் இதற்குள்ளே முளைத்து விட்டன. இராட்சதப் பூண்டுகள்!" என்று பதில் உரைத்தார். "சுவாமி, இந்த நாடு செய்த பாக்கியமே பாக்கியம். பத்து நாள்களுக்குள் மூன்று முழம் ஒரு செடி வளர்ந்தால், எத்தனை மழை பெய்திருக்கவேண்டும்? இந்த மழையில் ஒரு பகுதியையாவது எங்கள் நாட்டிற்கு அனுப்பிவைத்தால் நாங்கள் மிகுந்த பாக்கியம் செய்தவர்கள் ஆவோம்" என்றேன். அமைச்சர் பெருமாள் தலைகுனிந்து கொண்டார்.

* * *

தலைவர் ஊருக்குச் சென்றேன்; அங்கிருந்த கோயில்களையும் பார்த்தேன். மூலத்தானத்தில் முன்னர் அஞ்சலி செய்து நிற்கையில் ஒரு பெரிய சாஸ்திரிகள் அருகில் வந்து "வந்தே சம்பும் உமாபதிம் வந்தே ஜகத் குரும்" என்று ஒவ்வொரு பதமாகச் சொல்லி என்னைச் சொல்லச் சொன்னார். புரோகிதர் திதி நடத்துவது போல அத்தொனி இருந்தது. எனக்கு இவ்விதத் தியான சுலோகங்கள் தெரியாது என்று நினைத்தார் போலும்! அவர் சொல்வதற்கு முந்தியே முழு சுலோகத்தையும் சொல்லி முடித்தேன். உடனே சிறிது வெட்கப்பட்டு ஒதுங்கிக் கொண்டார். யாராவது உத்தியோகஸ்தர்கள் வந்தால் இவ்வாறு சொல்லி வைத்து ஏதாவது வெகுமதி பெறுவது இவர் வழக்கம் என்று எண்ணினேன். பாவம் அவர் தந்திரம் பலிக்கவில்லை.

* * *

அவ்வூரில் அன்று தங்க நேரிட்டது. பெரிய துரை என்னைப் பார்க்க வேண்டும் என்று அமைச்சர் மூலமாகச் சொல்லி அனுப்பினர். 'பகல் இரண்டு மணிக்குமேல் குளிக்கப்

போவார். அதற்குப் பின் பார்க்கலாம்' என்று அமைச்சர் சொன்னார். 'ஏன் அத்தனை நேரம்' என்றேன். 'அவர் எழுந்திருப்பதே நடுப்பகல், அதற்குப் பிறகு காலைக்கடன் கள் முடிப்பதற்குள் இரண்டு மணி ஆகும்' என்றார். 'அப் படியானால் பகல் போஜனம் எப்போது' என்றேன், '4 அல் லது 5 மணி' என்றார். 'பிறகு ஜமீன் வேலை பார்ப்பது எப்பொழுது' என்றேன். 'அவைகள் எல்லாம் இரவில்தான்' என்றார். 'இரவு போஜனமோ நடுநிசியில்' என்றார். 'படுக் கப்போவது 2 அல்லது 3 மணி' என்றார். ஆகவே 'பகல் இரவாகவும் இரவு பகலாகவும் மாறிவிடுகிறது' என்றேன். 'ஆம், அது அவர் வழக்கம். அவரைப் பார்க்கிறவர்களும் இரவில் தான் பாாக்க வருவார்கள்' என்றார்.

"இன்று தங்களுக்காக விரைவில் குளித்து விட்டுத் தயாரானதும் சொல்லி அனுப்புவார்" என்றார்.

நான் உண்டுவிட்டுச் சிறிது இளைப்பாறிவிட்டு இரண்டு மணிக்குச் சென்றேன். துரை இன்னமும் தயார் ஆகவில்லை என்று தெரிந்தது. ஆகவே அரண்மனைக்கு முன்னால் இருந்த ஆபீசு அறையில் உட்கார்ந்தேன். அங்கே கணக்குப் பிள்ளைகள் நிலத்தில் உட்கார்ந்து 'கணக்குப்பிள்ளை மேஜை யில் எழுதிக் கொண்டிருந்தார்கள். எலும்பும் தோலும் குண்டு விழுந்த கண்கள்-சொட்டைத் தலை கொண்ட கணக் கர்கள், தடித்த மூக்குக் கண்ணாடிகள் அணிந்து கொண்டு பொழுது போக்கிக் கொண்டிருந்தார்கள். பாவம், இவர் கள் சம்பளம் என்ன என்று விசாரித்தேன். 12ம் பசலி முதல் கொண்டு இவர்களுக்கு சாசுவதமாக ஏற்பட்ட சம் பள விகிதம் மாதம் ஒன்றுக்கு 8 ரூபா என்று அறிந்தேன்.

"அப்படியானால் இந்த யுகத்தில் இவர்கள் உடலுக் குள்ளே உயிர் வைத்திருப்பது யோக சதனமாயிருக்க வேண்டும்" என்றேன்.

"இதை விட்டால் இவர்களுக்கு இந்த கெதியும் இல்லை" என்றார்.

" அப்படியானால் இவர்களைச் சித்திரவதை செய்வதைக் காட்டிலும் ஒரே தடவையில் கிணற்றில் தள்ளிவிடுவதே மேல் " என்றேன்.

இப்படிப் பேசிக்கொண்டே இருக்கையில் பெரியதுரை தயாராகத் தன் ஆஸ்தான மண்டபத்தில் எழுந்தருளி இருக்கிறார் என்று தகவல் வந்தது.

அழைப்புக்கு இணங்கி உள்ளே சென்றேன்.

"கொலு மண்டபத்தின் வாயிலில் இருந்த தவால் சேவகன் "ஐயா, இடுப்பில் மேல் வேஷ்டியைக் கட்டிக் கொண்டு செருப்பை இங்கே விட்டுச் செல்லுங்கள் " என்றான். எனக்கோ பொறுக்க முடியாத சினம் வந்தது. "போடாப் போ, சுத்த கருநாடகமே!" என்று சொல்லி விட்டு உள்ளே சென்றேன். அங்கே என்ன கண்டேன்.

அனேக ஆண்டுகளுக்கு முந்தி குன்னுப்பட்டையால் அலங்கரிக்கப்பட்ட மேல் முகடு. அதைத் தாங்கி நிற்கும் எட்டுத்தூண்கள். கீழே பண்டைக்காலத்து;அழுக்கு படர்ந்த விரிப்பு. அதன் மேல் பழைய அரசக் குறிச்சி. முன்னால் இரண்டு வரிசை குறிச்சிகள் இருந்தன.

அரசக் குறிச்சியில் பெரிய துரை கொலு வீற்றிருந்தார். தங்கப் புட்டான் போட்ட காசிச் சிகப்புப் பட்டால் தைத்த பெரிய அங்காக்கு. தலையில் பழைய காலத்து உருமால். அங்காக்கைத் திடீரென்று பார்த்தால் காசிச் சேலைபோன்று இருந்தது. அதனைப் போர்த்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறாரோ என்று நினைத்தேன். வயது 45 இருக்கும். அருகில் ஆறு வயதுள்ள ஒரு பையன் அம்மணத்தோடு நின்று கொண்டிருந்தான். அழுக்குப் படிந்த உடல்; எந்த விதக் கவனிப்பும் இல்லாத பையன் என்று நினைத்தேன். சொந்தக்

குழந்தை எனினும் கவனிப்பு இல்லை. மற்றொரு பையன் 12 வயதிருக்கும். துரைக்கு வெண்சாமரம் வீசிக்கொண்டிருந்தான். அவனும் தலை வளர்த்திக் கொண்டிருந்தான். இந்த அற்புதக் காட்சியை வியந்துகொண்டு சென்றேன். வணக்கம். எதிர் வணக்கம் சொல்லியான பிறகு உட்கார்ந்தேன். சிறிது நேரம் நான் சென்ற அலுவலைக் குறித்துப் பேசிவிட்டு வெளி வந்தேன். அன்று அவ்வூரில் நான் ஒரு சபையில் தலைமை வகிக்க வேண்டி ஒப்புக் கொண்டிருந்தேன். அதற்குத் தன் மக்களை அனுப்புவதாகச் சொன்னார்.

இதுவரை துரைமக்களை வெளியே பாமர சபைகளுக்கு அனுப்பினதில்லையாம். அவர்களுக்குத் தனி ஆசனங்கள் இடப்பட்டிருந்தன. மகமல் சட்டை தங்கரேக்குக் குல்லாய் இவைகளைத் தரித்துக்கொண்டு வந்தார்கள். படிப்பு இல்லை. நிரம்ப வயதாகியும் தலை முடிவாங்கவில்லை. தகுந்த நாள் கிடைக்கவில்லை போலும்! தம்பிக்கு 30 வயதாகிறதாம். மணம் செய்யவில்லை என்றால் எத்தனை சுருசுருப்பு என்று அறியலாம். ஆனால் அவ்வூரில் இப்பேச்சுக்களைப் பெரிய துரையிடம் எடுத்துரைக்கவே அஞ்சுகிறார்கள்.

இந்த நிலையில் வெகுநேரம் பேச வழியில்லை. விரைவில் விடைபெற்றுக்கொண்டு வெளியே வந்துவிட்டேன்.

பெரிய நிசியில் வேலை செய்தாலும் ஒழுங்காக வேலை செய்வதாகத் தோன்றிற்று. அரண்மனைக்கு அடுத்தாற் போல பெரிய பண்ணை ஒன்று இருக்கிறது. அதில் பலநல்ல குதிரைகள், மாடுகள், ஆடுகள், கோழிகள், புள்ளிமான், எருமை, பறவைகள் முதலியவைகளை வளர்த்திவருகிறார். பண்ணை வெகு ஒழுங்காக இருந்தது. அதைக் கண்டு வியந்தேன்.

---

13. வயதில் அடங்கா மைனர்

அல்லது

என்றும் இளையார்

“ஜார்ஜ் பெர்னார்ட் ஷா என்ற ஆங்கிலப் பேராசிரியர் 92 வயதாகியும் இன்னும் நூல்களை எழுதிக்கொண்டே இருக்கிறார். தம்மை இளைஞன் என்று கூறிக்கொள்கிறார். காந்தியடிகளை நேற்றைய பையன் என்று சொன்னார். அது அவருடைய ஊக்கத்திற்கு அடையாளம். ஆனால் நம் நாட்டிலே 65 வயதுள்ள ஒருவரை மைனர் அல்லது வயது வராதவன் என்று அழைத்தால் அதன் பொருள் வேறே.

சட்டத்தின்படி “மைனர்” என்றால் சொத்து விஷயத்தில் பொறுப்பு எடுத்து நடத்தக்கூடிய அளவு வயது வராதவன் என்று பொருள். இந்திய சட்டத்தில் இருவகை மைனர்கள் இருக்கிறார்கள். (1) பொதுமக்கள், (2) நிலச்சுவான்தார்கள். பொதுமக்கள் 18 வயது ஆனவுடன் சொத்து உரிமையும் அவைகளை நடத்தும் பொறுப்புகளும் பெறுகிறார்கள். ஆனால் நிலச்சுவான்களும் நீதி மன்றங்களுக்கு உட்பட்டவர்களும் 21 வயது வரையில், அப்பொறுப்பு பெறுவதில்லை. ஆகவே சாதாரண மக்களுக்கு ஒரு சட்டம், செல்வவான்களுக்கு ஒரு சட்டம் என்று ஏற்படுகிறது. சாதாரண மக்களில் ஒருவன் இறக்க அவன் மகன் மைனர் ஆக இருந்தால் அவனுடைய நெருங்கிய சொந்த ஆள் ஒருவன் மைனருக்காகச் சொத்துக்களைப் பரிபாலிக்கும் உரிமை பெறுகிறான். ஆனால், பெரும் நிலச்சுவானாக இருந்தால் அரசியலார் அப்பொறுப்பை ஏற்றுக் கொள்கிறார்கள்.

இந்த வகையில் மைனர் என்றால் சொத்து உள்ள ஓர் இளைஞன், ஆனால் அதை நடத்தும் பொறுப்பு இல்லாதவன்,

அவனுக்கு வேறு ஒருவன் பொறுப்பை ஏற்றுக்கொள்ளு கிறுன் என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. எனவே, மைனர் என்றால் சொத்து இருந்து கவலையற்றவன் என்ற பொருள் வந்துவிட்டது. ஆகவேதான் இச்சைப்படி செலவு செய்யக் கூடியவன், நன்றாக வாழும் சுகசீவி, பொறுப்பற்ற வீண் நண்பர்களுடன் திரியும் பணக்காரன் முதலிய பொருள்கள் வந்துவிட்டன.

ஒருவனைப் பார்த்து இவன் மைனர் என்று சொன்னால் பொறுப்பற்ற டாம்பீகச் செலவாளி என்று அறியவேண்டும். இளம் வயதில் பாதுகாப்பு இல்லாத பெயர்கள் இந்த முடிவுக்கு வருகிறார்கள். அப்பர் சுவாமிகளும் "காத்தாள் பவர் காவல் இகழ்ந்தமையால் கரை நின்றவர் கண்டு கொள்ள" என்று கூறுகிறார்கள் அல்லவா ? அதனால்தான் அவரும் சமணப் பாழ்குழியில் விழுந்து வருந்தினர். இக் காலப் பேச்சில் அவர் மைனர் ஆனார் என்னலாமோ ?

ஒருமுறை மைனர் பட்டம் வந்துவிட்டால் - அதில் வெகு ஆண்டு இருந்துவிட்டால் - மக்கள் அப்பெயரை மறக்கிறதில்லை. மைனரின் விளையாட்டுகள் வேரூன்றிவிடும். அவைகளை எவரும் மறக்கமுடியாதுபோகும். 28 வயதான பிறகும் மைனர் என்ற பட்டத்தை விடாமல் காத்த ஒருவர் அடியிற்கண்டபடி ஓர் இடத்தில் தன் சகாக்களிடம் சொன்னாராம்.

"ஒரே இரவில் 3000 ரூ. செலவு செய்தேன். உங்களால் முடியுமா? வேறு யார் செய்திருக்கிறார்கள் ? சொல்லுங்கள்; பந்தயம் கட்டுகிறேன்" என்று வீறாப்பில் பேசினார். கேட்டவர்கள் வியப்பு அடைந்தார்கள். அக்காலத்தொரு ரூ. இப்போது 10 ரூ. மதிப்பு இருக்கும் என்க.

தென்னாட்டிலே ஒரு பெரிய பணக்காரக் குடும்பம் இருந்தது. தலைவன் இறந்தான். உரிமை உள்ளவனோ

மைனர். தாயார் சொத்துக்களை வெகு திறமையோடு பரிபாலித்தாள். சொத்து விரயம் ஆகவில்லை. பிள்ளை வயது வந்தவன் ஆகியும் தாயாரே பரிபாலித்தாள். பிள்ளை நன்றாக உண்டு உறங்கி மகிழ்ந்துவந்தான். ஆகவே மைனர் என்ற பெயர் நிலைத்துவிட்டது. மேலும் கச்சேரிகளில் மைனர் என்ற பெயர் ஒருமுறை தாக்கலாகிவிட்டால் அது நிரந்தரப் பெயர் ஆகிவிடுகிறது அல்லவா? இந்தவகையில் இக்குடும்பத்தின் உரிமையாளன் மைனர் என்ற பெயரிலேயே அழைக்கப்பெற்றான். ஊரின் பெயர் சொல்லி இன்ன ஊர் மைனர் என்று வழங்குவார்கள். தாயார் இறந்த பிறகுதான் மைனர் பொறுப்பு ஏற்றுக்கொண்டான். அவ்வாறு ஏற்றுக் கொண்டும் பழைய பெயர் போகவில்லை. இப்போதோ அவருக்கு வயது 65. இன்னும் அவர் ஊர்ப்பெயர் சொல்லி மைனர் என்றே அழைக்கப்படுகிறார். உண்மையில் இவருடைய குடிகளுக்கும் இவர் உண்மைப்பெயர் தெரியாது. மைனர் என்றால்தான் தெரியும். இந்த வகையில் மக்கள், பேரன்மார், பேத்தியர் தோன்றியும், இன்னமும் மைனர் என்றே வழங்குதல் இந்நாட்டின் விசித்திரங்களில் ஒன்று ஆகும் அல்லவா!

இப்படிப்பட்ட மைனருக்கு உலக விவகாரங்கள் எப்படித் தெரியக்கூடும். கிணற்றுத் தவளையைப்போல் தன் அரண்மனையே உலகம் என்று எண்ணிக்கொண்டு வாழ்ந்தார். தன் ஊர் தன் பரிவாரம் தன் குடிகளில் சிலர் இவர்களைத் தவிர உலகில் வேறு எவரையும் கண்டு பேசியிருக்கமாட்டார்.

அப்படியாயின் பொது அறிவு எப்படி ஏற்படும். தம் மக்களையும் அதே நிலைமையில் நடத்திவந்தார். குடிகளின் நலம் பொலம் இவைகள் இன்னதென்று அறியும் அறிவும் பெறாமல் இருந்தார். ஆகவே உண்மையில் காரியத்தர்களே குடியானவர்களுக்குத் தலைவர்கள். உண்மைத் தலைவர்

வெறும் மூலத்தான மூர்த்தி. உற்சவர்களே அறியத்தக்க தெய்வங்கள். மைனராக இருந்தபோது தாயார் சிக்கனமாக இருந்ததால் தற்போதும் இந்த முறையே நடைபெற்றது. இதன் முடிவாக மைனரின் குமாரர்களுக்குப் படிப்பாவது உலக அனுபவமாவது ஏற்படவில்லை.

குடிகளை நேரில் பார்க்காத நிலைமை பின்னாலே விபரீதத்திற்குக் காரணம் ஆக இருந்தது. காரியத்தர்கள் சொத்து நிர்வாகத்தை நடத்தினார்கள். அரண்மனையில் மைனர் கொலுவில் இருக்கும்போது அவர்களுக்கு இடும் கட்டளைகளைத் தவிர இவர் நேரில் எதையும் அறிந்தவர் அல்ல. ஆகவே காரியத்தர்கள் செய்யும் அட்டூழியங்கள் எல்லாம் மைனர் தலையில் சுமந்தன. குடியானவர்களின் குறைகள் மைனர் மீது சென்றன. ஆனால் மைனரோ அவற்றை அறியார். சமயம் வந்தபோது கற்பிக்கலாம் என்று பலபேர் காத்துக்கொண்டிருந்தார்கள். ஒருமுறை அப்பேர்ப்பட்ட சம்பவம் நடந்தது. காத்துக்கொண்டிருந்தவர்களுக்கும் நல்ல தூண்டில் கிடைத்தது. அதனால் ஒரு கொழுத்த மீனைப் பிடிக்கக்கூடும் அல்லவா ? ஒரு நாள் காலையில் ஊர் ஓரமாக மைனருக்குச் சேர்ந்த ஒரு பண்ணை நிலத்திற்கு வெளியே வேலியோரமாக ஒரு பறையன் இறந்து கிடந்தான். அவனை யார் என்று ஒருவரும் கண்டுபிடிக்கமுடியவில்லை. கூர்ந்து பார்க்கவே கழுத்துத் திருகப்பட்டிருந்தது எனத் தோன்றிற்று. ஆகவே ஊர் காவலாளன் அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தினான். போலீசு அதிகாரி வந்து பார்வையிட்டான். கொலை வழக்கு என்று பதிவு செய்துகொண்டு துப்புதேடத் தொடங்கினான். ஊரில் மைனர்மீது நிரம்ப அழுக்காறு இருந்ததை அறிந்தான். அதை வைத்துக் கொண்டு கயிறு திரிக்கத் தொடங்கினான். மைனர் பண்ணைக்கு அருகில் ஒரு கொலை நடந்திருந்தால் மைனருக்குத்

தெரியாமல் இருக்குமோ என்று தனக்குள்ளேயே வாதாடி ஞன். பறையர்களில் சில குறையாளர்கள் இருந்தார்கள். இந்தச் சமயத்தை முன்னிட்டு அவர்கள் பெரும்பயன் அடையவேண்டும் என்று சதி செய்தனர். போலீசு அதி காரிக்குப் பலவிதமான ஊழல்கள் கூறினர். அதிகாரி அவர் களைக் கையில்போட்டுக்கொண்டு ஒருநாள் காலையில் மைனர் மாளிகைக்குச் சென்ருன். இதுவரை எந்த அதிகாரியும் மாளிகைக்குள் உத்திரவின்றியும் அழைக்கப்படாமலும் சென்றதில்லை. இவனே இந்நாட்டிற்குப் புதியவன். இளமை வயது. எதற்கும் அஞ்சாத பேர்வழி. அரண்மனைக்குள் சென்று துரையைப் பார்க்கவேண்டும் என்று சொல்லி அனுப்பினுன். மைனர் தன் ஆஸ்தான மண்டபத்தில் உட் கார்ந்தான். போலீசு அதிகாரி எதிரே உட்கார்ந்தான்.

" என்ன விசேடம்? இத்தனை நாளீ நடவாத விதத்தில் சமஸ்தானதைப் பார்க்க வந்தீர் " என்ருன் மைனர்.

"இத்தனை நாள் நடவாத காரியம் ஒன்று நடந்துள்ளதி ஞல் இந்த விதத்தில் வரவேண்டி வந்தது" என்று உயர்ந்த தோரணையில் பேசினுன் அதிகாரி.

" அப்படி என்ன நடந்துவிட்டது ?"

" என்ன நடந்துவிட்டதா ? உங்களுக்குத் தெரியாமல் எது நடக்கக்கூடும். உங்கள் பண்ணைக்கு அருகிலே ஒரு கொலை நடந்திருக்கிறது."

" சரி, அதனுல் என்ன, யாரோ ஒரு பறையன் தெரு வில் செத்துக் கிடந்தால் அதைச் சொல்ல அரண்மனைக்குள் உத்திரவின்றிப் புகலாமா ?"

"ஐயா, சிறிது யோசித்துப் பேசுங்கள். நானே போலீசு அதிகாரி. தப்பு இல்லாமல் இத்தனைத் தொலைவு வரமாட் டேன். உங்களைத் தொந்திரவு பண்ண எனக்கென்ன ஆசை?

விஷயம் என் கையை மீறிக்கொண்டு செல்லுகிறதினுல் இங்கு வந்தேன்" என்ருன் தந்திரமாக.

"என்ன, இல்லாத அபவாதம் எல்லாம் சமஸ்தானத்திற் கருகில் கொண்டுவந்தீர்? சிறிது யோசித்துப் பேசும். எங்கே இருக்கிறீர் என்று தெரியவில்லையா?"

"ஐயா, எனக்கு நன்ருகத் தெரியும். உங்கள் மேன்மைக் காகத்தான் சொல்லுகிறேன். முளைக்கும்போதே கிள்ளிவிட் டால் ஒன்றுமில்லை. எச்சரிக்கையின்றிப் பெரிதாக வளர விட்டுவிட்டால் கோடாலிகொண்டு வெட்ட முடியாது."

"இந்தப் பழமொழி எனக்கும் நன்ருக தெரியும். இனி மேல் இப்படி ஒருவர், எந்த அதிகாரியானுலும் சரி, உத்திரவு இன்றி மரியாதையின்றி இடத்தை அறியாமல் உள்ளேபுகக் கூடாது என்று தெரியப்படுத்துவதற்காகத்தான் சொல் கிறேன். அப்படி யாராவது அவமரியாதையாக நடந்துகொள் ளும் நினைப்பிருந்தால் அந்நினைப்பை விளைவிலேயே கிள்ளி விட வேண்டியது நல்லது அல்லவா? இப்போதே நான் அதனை எச்சரிக்கை படுத்துகிறேன்" என்ருன்.

"மைனர் துரை அவர்களே, எண்ணங்கள் முழுவதும் எனக்குத் தெரியும். இப்போதே இதோ உங்கள்பேரில் இக் குற்றத்திற்குச் சான்று இருக்கிறது. புத்திசாலித்தனத் தோடு நடந்துகொண்டு என்னை அனுப்பிவைத்தால் உண்மையில் அபவாதம் வராது. செலவும் உண்டாகாது. ஆகவே சிறிது ஆலோசனை செய்யுங்கள்."

"என்ன, காரியம் மீறிவிட்டது. இந்த மிரட்டல் இந்த சமஸ்தானத்தில் நடவாது. சாக்கிரதை!" என்று உரக்கப் பேசினுன் மைனர்.

"எனக்கென்ன, நான் போகிறேன். பின்ருல் விபரீதம் ஏற்பட்டால் அது என் செயல் அல்ல. புத்தி சொன்னேன். அதனை திரஸ்கரித்தால் பலன் உம்முடையதே."

•

• •

"என்ன ஐயா இது, முன்பின் தெரியாமல் பேசுகிறீர். ஒரு சுண்டைக்காய் போலீசு அதிகாரி சமஸ்தானத்தை அவமதிப்பதா? யாரடா, சேவகன், இவரை வெளியே அனுப்பு."

"ஐயா, அத்தனை வேண்டாம், நானே செல்லுகிறேன். உமக்கு நற்புத்தி புகட்ட வந்தேன். குரங்குக்குப் புத்தி சொன்ன தூக்கணான் குருவி போல் ஆயிற்று. இன்னும் கடைசியாய் ஒரே எச்சரிக்கை சொல்லுகிறேன்."

"இன்னும் போகவில்லையா? என்ன துணிச்சல்" என்று கத்தினார் மைனர்.

போலீசு அதிகாரி உடனே சென்றுவிட்டான். போகையில் 'பணமிருந்து என்ன பயன்? இத்தனை முட்டாளைப் பார்த்ததே இல்லை. சிறிய தொகையில் போவதை இலட்சக்கணக்கில் அளக்கப் போகிறான்' என்று மனதில் எண்ணிக்கொண்டு சென்றான் அவ்வதிகாரி. மூன்றும் நாள் காலை விடிவதற்கு முன் மைனர் மாளிகையைச் சுற்றி ஒரு போலீசு படை மெல்ல மெல்லச் சூழ்ந்து கொண்டது. சிறிது நேரத்தில் போலீசு அதிகாரி பத்து சேவகர்களுடன் அரண்மனையுள்ளே புகுந்தான். இந்த ஆரவாரம் கேட்ட மைனரும் அவனுடைய இரண்டு மக்களும் வெளியே வந்தனர். உடனே போலீசு அதிகாரி அம் மூவரையும் 'கொலைக்குற்றத்திற்காக உங்களைக் கைதி செய்கிறேன்' என்று சொல்லித் தொட்டான். ஒரு வினாடியில் சேவகர்கள் அம்மூவர்களுக்கும் கைவிலங்குகளை மாட்டினார்கள். இவ்விதம் ஆகும் என்று மைனராவது அவன் மக்களாவது கனவிலும் எண்ணவில்லை. விலவிலத்துப் போனார்கள். தன் அரண்மனையிலேயே தன்னைக் கைதி செய்தால் இதைவிட அவமானம் என்ன இருக்கிறது?

'ஏன் இவ்வாறு அவமானப் படுத்துகிறீர்' என்று கூச்சல் இட்டான் மைனர்.

"படிக்கத் தெரியுமா? தெரிந்தால் இதைப்பாரும். இது தான் உம்மைக் கைதிசெய்து கொட்டடியில் அடைத்துவிடும் படி நீதிபதி உத்திரவு. உமது பண்ணைக் கருகில் கொலை செய்யப்பட்ட பறையனை நீரும் சேர்ந்து சதிசெய்து கொன்றுவிட்டதாக உம்மீது குற்றம் சாற்றப்பட்டுள்ளது. அறிந்தீரா" என்று கம்பீரத்தோடும், புன்னகையோடும் அதிகாரி சொன்னான்.

ஆனால் நடந்த செய்கையினால் பரபரப்புற்ற மைன ரால் எதுவும் அறிய முடியவில்லை. இங்கே இருந்தால் ஊரில் கலகம் ஏற்படக்கூடும் என்று அறிந்த அதிகாரி உடனே மூவரையும் தள்ளிக்கொண்டு ஏற்கனவே வந்திருந்த போலீசு மூடுவிசை வண்டியில் ஏற்றிக்கொண்டு கதவைப் பூட்டித் தலை நகருக்குச் சென்றுவிட்டான்.

ஊரில் எவருக்கும் யாதொன்றும் தெரியவில்லை. தெரிந்திருந்தால் தடைமாத்திரமல்ல, கலகமும் ஏற்பட்டிருக் கும். சிறிது நேரத்தில் இந்தச் செய்தி நெருப்பு போலப் பாவியது. அரண்மனையில் அழுகைக்கும் கூச்சலுக்கும் சொல்ல வேண்டியதே இல்லை.

அடுத்தகணமே சமஸ்தானத்து வழக்கறிஞர்கள் தோன்றினார்கள். மைனர் துரையையும் அவர் மக்களையும் விடுவிக்க மனுக்கள் போடப்பட்டன. நீதிபதி அவற்றை எல்லாம் நிராகரித்து விட்டான். அரண்மனையில் யாதொரு கவலையுமின்றி வாழ்ந்த பிரபுக்கள் இப்பொழுது வெறும் சிறைக் கூடத்திலே இருக்க நேர்ந்தது. ஊழ்வினை எப்படி இருக்கிறது பாருங்கள்.

இனி விசாரணையைப்பற்றி விவரிக்க வேண்டியதில்லை. நெடுநாள் நடந்தது. கீழ்க்கச்சேரியில் முதலில் நடந்தது. பிறகு பெரிய கச்சேரிக்கு அனுப்பப்பட்டது. பெரிய கச்சேரியில் மிகத் தேர்ந்த வழக்கறிஞர்கள் அமைக்கப்

பட்டார்கள். ஆங்கில நிபுணன் மிகுந்த பணச் செலவில் வந்தான். இறுதி விசாரணை நடந்தது. மைனர் பேரிலும் அவன் மக்கள் பேரிலும் யாதொரு சாட்சியமும் இல்லை என்று வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டது.

எத்தனை பணச்செலவு, எத்தனை அலைச்சல், எத்தனை மனோவேதனை, இவைகள் எல்லாம் சிறிது முன்யோசனை யில்லாத குறைவினால் வந்தது அல்லது இண்டத்தனத்தி னால் வந்தது என்று ஊரில் பலபேர் பேசிக்கொண்டார்கள். பகுத்தறிவு இருந்தால் இரண்டு லட்சம் செலவானது இருநூற்றில் முடிந்திருக்கலாம் என்று சிலர் பேசிக் கொண்டார்கள். இந்த மைனருக்கு இப்படித்தான் ஆக வேண்டும். ஒரு தம்பிடி தருமம் செய்யாதவனுக்கு இரண்டு லட்சம் போதாது. பத்து லட்சம் தொலைய வேண்டும் என்றார்கள் சிலர்.

சிறையில் இருக்கவேண்டும் என்று விதி இருந்தால் என்ன செய்தும் என்ன பயன் என்றார் வேறு சிலர். ஒரு பாவமும் அறியாத மக்களிருவருக்கும் ஏன் சிறை வாசம் கிடைத்ததோ என்றார்கள் மற்றையோர்.

இவ்வாறு பலரும் பலவிதமாகப் பேசினார்கள். ஆனால் இம்மக்களுக்குள் பின்னும் யாதொரு வாழ்க்கை மாறு தல்கள் ஏற்பட்டதாகத் தோன்றவில்லை.

14. இன்ப வாழ்வு வேறென்ன ?

'செக்கச் செவேல் என்ற ஒளி செய்யும் மேனி, திரண்டு உருண்டு திகழும் உறுப்புக்கள், சரீரக்கட்டோ கொழுப்போ என்று திணரவைக்கும் தசைகள், அகன்று உயர்ந்து படர்ந்த நெற்றி, ஒளி மிளிரும் கூரிய கண்கள், நீண்டு நன்கு வளர்ந்த மூக்கு, புன் சிரிப்பு பொங்கும் உதடுகளுடைய வாய், வழு வழுப்பாக முண்டிதம் செய்த தலை.'

இவ்விதமாகத் திருவுருவம் படைத்த ஒரு வியக்தியைக் கண்டால் இவர் என்ன அரச போகத்தில் அவதரித்தவரோ என்றும் கூறலாம் அன்றோ? நான் அன்னவரை முதல் முதலில் கண்டது ஒரு புகழ்பெற்ற கோயில் கும்பாபிடேகத் திருவிழாவிலே. அதற்குப் பல்லாயிரக் கணக்கான பேர்கள் வந்திருந்தார்கள். திருவிழா மிகவும் டாம்பிகத்தோடு நடைபெற்றது. பிரமுகர்கள் எல்லோரும் ஒரு பெரிய விடுதியில் தங்க வைத்திருந்தார்கள். கிரம்ப ஏற்பாடுகள் நடத்தி வைக்கப்பெற்றிருந்தன. அங்கே மேற்கூறிய பெரியவரைக் கண்டேன். கழுத்தில் தங்கச் சரடு பொருந்திய அக்குமணி வடம் அணிந்திருந்தார். நெற்றியில் பட்டை பட்டையாக திருநீறு பூசப்பட்டிருந்தது. இடையில் காவி அணியப்பட்டிருந்தது. வந்தவர்கள் எல்லாரும் தம்பிரான் சுவாமிகள் என்று மிகுந்த வணக்கம் காட்டினார்கள். எனக்கும் அறிமுகப்படுத்தப்பட்டார். வெகு தெளிவாக உரை ஆடினர். மிகுந்த அமைதியோடு சொற்களை அடுக்கினர். படிப்பு உண்டு என்று அறிந்தேன். மேலும் ஆங்கிலப் படிப்பும் உண்டு என்று கண்டுகொண்டேன். இந்தத் திரு விளங்கிய உருவம்கொண்ட இப் பெரியார்

இளமை நீங்கி நடு வயது அடையும் தருவாயில் உள்ளவர், ஏனோ காவி அணிந்து துறவி ஆனார் என்று வியந்தேன்.

இவர் பெரிய பட்டத்திற்கு உரியவர் என்று தெரிந்தெடுக்கப்பட்டவர். ஆனால் தெய்வச் செயல், அது அவருக்கு கிடைக்கவில்லை. பெரிய பட்டத்திற்கு ஏற்ற குணங்கள் முழுதும் இவரிடம் உண்டு என்று பலர் சொல்ல அறிந்தேன்.

பட்டம் கிடைக்காததைப்பற்றிச் சிறிது கவலை அவருக்கு உண்டு. இருந்தாலும் அதைக் காட்டிக்கொள்வதில்லை. இவரால் யாதொரு இடைஞ்சலும் ஏற்படாத வண்ணம் இவருக்குத் தனிக்கோயில் ஆட்சி விடப்பட்டிருந்தது. அங்கே இவர் ஏகபோக ஆட்சி செய்து வருகின்றார் என்று மக்கள் கூறினார்கள். சரி அரசபோகம் உண்மையில் கிடைத்திருக்கிறது என்று எண்ணினேன்.

மறுபடியும் பல திருவிழாக் கூட்டங்களில் இவரைப் பார்த்திருக்கிறேன். உடலின் பொலிவு சிறிதும் மாறினதாகத் தெரியவில்லை. எப்பொழுதும் புன்சிரிப்போடும் கூரிய பார்வையோடுமே விளங்குவார்.

ஒருதடவை அவருடைய திருக் குகையிலேயே அவரைக் காணும் பேற்றைப் பெற்றேன். நான் தங்குவதற்கு என்ன சௌகரியங்கள் செய்யவேண்டுமோ அவைகளையெல்லாம் செய்துவைத்தார். தனி விடுதி, தனி உணவு முதலிய சௌகரியங்கள் முற்றும் இருந்தன.

அவருடைய ஆட்சிக்கு அடங்கின கோயிலுக்கு அழைத்துச்சென்று அரச மரியாதையுடன் வரவேற்பும் வழிபாடும் செய்வித்தார்.

எனக்குச் சரிதம், சரிதச் சான்றுகள், சாசனங்கள், சிற்பக் குறிப்புகள் இவைகளில் ஆர்வம் உண்டு என்று ஏற்கனவே அறிந்திருந்த அந்தப் பெரியார் கோயிலில்

இருந்த குறிப்புக்கள் முற்றுமே ஒன்று விடாமல் காட்டிச் சென்றார். புராண வரலாறுகள் மட்டுமேயன்றி ஆராய்ச்சிக் குறிப்புக்களையும் காண்பித்தார். அன்னாருடன் சிறிதுநேரம் இருந்தபோதிலும் மிகுந்த செய்திகளை உணர்ந்தேன். தம்பிரானாக இல்லாமல் ஒரு போதகாசிரியராக இவர் இருந்தால் மிகுந்த நன்மை ஏற்பட்டிருக்கும் என்று எண்ணினேன். சமயாச்சாரியர்களில் சிறந்தவர் ஒருவர், இந்தத் தலத்தில் எங்கெங்கே ஈடுபட்டார், எங்கெங்கே அவரது சின்னங்கள் இருக்கின்றன, அவர்களுடைய பாடல்களில் கண்ட பெயர்கள் எங்கெங்கு இருக்கின்றன என்ற செய்திகளையும் மேற் கோள்களோடு விளக்கினார்.

பிறகு தனக்கு என்று ஏற்பட்டிருந்த விடுதிக்கு அழைத்துச்சென்றார். அங்கே வழிபாட்டு இடம், நூற்சாலை, கணக்கு அலுவலகம், பொருட்சாலை முதலியவைகளையும் காட்டினார். இந்த இடங்கள் பண்டைக்காலத்தில் ஏற்பட்டவை. முந்திய தம்பிரான்கள் இருந்த இடங்கள் மிக இருட்டடர்ந்த அறைகள். இவைகளிலே இந்தத் திருமேனி எவ்விதமாகத் தங்கி இருக்கும் என்று மயங்கினேன். மேனியின் பொலிவுக்கு ஏற்றபடி அல்லவோ தங்கும் இருப்பிடமும் அமைவுற வேண்டும். என் மனதில் ஓடும் எண்ணத்தை எப்படித்தான் அறிந்தாரோ? “இவைகள் பண்டைக் கால விடுதிகள். நான் வந்த பிறகு வேறொரு விடுதியை ஏற்படுத்தி உள்ளேன்” என்றார்.

ஊரை விட்டு வெளியே சென்றோம். ஆற்றங் கரை ஓரம். ஒரு பெரிய தென்னம் பொழில் தோன்றிற்று. அதற்குள்ளே சென்றோம். மிகப் பெரிய பொழில், மா நிழல், நிரம்ப வெய்யிலும் தண் என்றிருக்கச் செய்யும். ஆற்றிலே மணல் வெளி தோன்றின போதிலும் ஊற்றங்கால் எடுக்கப்பெற்று வேண்டிய நீர்ப் பாய்ச்

சல் வசதி ஆக்கப்பெற்றிருந்தது. அப்பெரிய தோப்பின் இடையில் ஓர் அழகிய காவணம் கட்டப்பட்டிருந்தது. அதிலே ஓர் இளைஞன் என்னென்ன இன்பம் நுகர முடியுமோ அவைகள் எல்லாம் வைக்கப்பெற்றிருந்தன. அவைகளை முறையாக வருணிக்க வேண்டியதில்லை என்று கூறுவேன். அக் காவணத்திலிருந்து ஆற்றிற்கு ஒரு பூங்கொடிப் பந்தல் சென்று கொண்டிருந்தது. எப்படிப்பட்ட கோடை காலத்திலும் அதன் கீழ் ஒரு சிறிது ஆயாசமும் இன்றி நடக்கலாம். அந்தக் கொடியின் அடியே நடந்து சென்றால் ஆற்றங்கரை அடைவோம். அங்கே ஆற்றின் இடையில் ஓர் ஊற்று அகழப் பெற்றிருந்தது. அவ்வூற்றில் என்றும் குறையாத தெளிநீர் ஊறிக்கொண்டிருந்தது. மணல் உடையாவண்ணம் சுற்றிலும் கரை கட்டப் பட்டிருந்தது. கோடைக்காலத்தில் அங்கே நீர் விளையாட்டைச் செய்வதால் அமரரும் பொறாமைப்படக் கூடும். அப்படிப்பட்ட உல்லாச பவனப் பூம்பொழில்களைக் கண்டதும், அச்சிறந்த திருமேனிக்குகந்த திட்டம் இங்கே வெகு பொலிவாக வகுக்கப்பட்டிருக்கிறதே என்று வியந்தேன். இப்பூம் பொழிலுக்குள்ளே எந்த மனிதப் பூண்டும் உத்திரவின்றி அனுமதிக்கப்படாது என்றும் அறிந்தேன். நம் நாட்டில் சிற்சில இடங்களின் அமைவுகளைக் கண்டதுண்டு. விவிலியர்களில் மேல் நாட்டுப் பாதிரிமார்கள் இங்கே வந்து தங்கியிருந்து தமக்கென வாழாமல் பிறர்க்குரியாளர்களாக விளங்குவது உண்டு. அவர்கள் சமய ஒழுங்கின்படி திருமணம் செய்து கொள்ளாமல் துறவிகளாகவே இருக்கவேண்டும். இவர்களைப் போலவே சில மேற்கு நாட்டுப் பெண்மணிகளும் துறவிகளாகத் திருமணம் செய்து கொள்ளாமல் கடவுள் வழிபாட்டிலேயே இருக்க வேண்டும். ஆலயத்திற்கு ஒருபுறம் பாதிரிமார்விடுதி இருக்க, மற்றப்புறம் பெண்துறவிகளுக்கு ஏற்பட்ட விடுதி

ஒன்று இருக்கும். சில நாட்களிலே இவை இரண்டு விடுதிகளுக்கும் சேர்ந்தாற்போல அநாதைக் குழவிகளின் விடுதி ஒன்று முளைத்து விடுமாம். அநாதை விடுதிகள் என்றால் பெற்றோர் இன்னார் என்று அறியமுடியாத குழவிகளின் விடுதி என்று பொருள். இப்படிப்பட்ட பரிதாபப் பிறவிகளைக் காப்பாற்றுவது பிறர்க்குரியாளர்களுடைய தன்மை அல்லவா ? அப்படிப்பட்ட அருமையான அறச்சாலைகளை நம் நாட்டிலும் வெள்ளைச் சமயாசிரியர்கள் நுழைத்து விட்டனர். இவைகளை நானும் சில வேளைகளில் கண்டதுண்டு. அவைகளை நான் மறுப்பதும் இல்லை. ஆனால் அப்பெரியார்கள் மக்களுக்கு இயற்றும் கல்வி மருத்துவம் முதலிய பேர் உதவிகளினால் மற்ற உள்துறை ஏற்பாடுகள் நமக்குத் தெரிவதில்லை. தெரிந்தாலும் மனதில் வைத்துக் கொள்வதில்லை அல்லவா ?

இந்த முறைகளை அறிந்த எனக்கு ஓர் ஐயம் ஏற்பட்டது. நம் தம்பிரான் சுவாமிகள் இளம் பிராயத்திலேயே நைமிட்டிக பிரமசாரியாக இருந்து முழுதுறவும் பெற்றிருந்தபடியால் இவரது ஒழுக்கம் மிகச் சிறந்திருக்க வேண்டும் என்பதுதான். உடல் வனப்பு நன்றாக இருந்து அரசபோகமும் துய்க்கவல்ல வசதிகளைப் பெற்றிருக்கிறாரே. இவர் எப்படி இந்திரிய நிக்கிரகம் செய்ய வல்லவர் என்று ஐயம் கொண்டேன். வெள்ளையர் விடுதிகளைப் போலவே இவரும் மற்ற விடுதிகளை ஏற்படுத்தி யிருக்கிறாரோ அல்லது யோக சாதனங்களில் நன்கு பழகினவரோ என்று பல நாள் ஆராயவேண்டும் என்று எண்ணினது உண்டு. அவ்வாராய்ச்சி ஒரு நாள் திடீரென்று தடைபட்டது. ஏன் என்பீர்களோ !

திடகாத்திரமாக இருந்த அவர் ஒரு நாள் சிவபதம் அடைந்தார் என்று தினத்தாள்கள் வெளிப்படுத்தினதே

அது ஆகும். இப்படிப்பட்ட வனப்பு பொருந்திய உடல் எவ்வாறு ஒரே கணத்தில் மாய்ந்ததோ என்று நினைத்தேன். காரணம் இது என்று யாரைக் கேட்பது ? எனக்குத் தெரிய வில்லை. தினத்தாள்களும் கூறவில்லை. நீங்களே ஆராய்ந்து கொள்ளுங்கள்.

---

15. கடவுளுக்கென்று சொத்து ஏனோ

முருகன் இளமையும் அழகும் வாய்ந்த தமிழ் தெய் வம். அவன் அழகன். ஆகையால் அழகையே விரும்புவான். அவன் எழுந்தருளும் இடமும் அழகான மலைப்பாங்கே. எந்த அழகிய மலைமீதும் அவன் எழுந்தருளி இருப்பான். அம்மலைகளுக்குக் குன்றுதோறாடல் என்ற சிறப்புப் பெயர் ஏற்பட்டு விட்டது. அக்குன்றுதோறாடல்களில் முதன்மை பெற்றது ஓர் அழகிய தொண்டை நாட்டுச் சிறு குன்று. அங்கே ஒவ்வொரு திங்களும் கிருத்திகையின் போது இலட் சக்கணக்கான மக்கள் சென்று முருகனைக் கண்டு மகிழ்வார் கள். ஆடியிலே தெப்ப உற்சவமும் நடக்கும். அதனுடைய அழகைக் காண ஆயிரம் கண்கள் வேண்டும். தமிழ் நாடு முற்றிலுமிருந்து அவ்வுற்சவம் கண்டு மகிழப் பல்லாயிரம் பேர் காவடிகள் எடுத்துச் செல்வார்கள். அந்த ஓர் உற்ச வத்திலிருந்தே ஆலயத்திற்கு இருபதினாயிரம் ரூபாய்வரை வருவாய் கிடைக்கும். ஓராண்டு அந்தக் கிருத்திகையின் போது முருகக் கடவுளை அலங்காரம் செய்து தெப்ப உற்சவத்திற்கு எழுந்தருள்விக்கத் தொடங்கினார்கள். இவ் விதச் சிறந்த சமயங்களில் மிக விலையுயர்ந்த அணிகளை யெல்லாம் மூர்த்திகளுக்கு அணிவிப்பது உண்டு. அதில் சிறந்தது ஒரு பச்சைப் பதக்கம். அதன் விலை மதிக்க வியலாது. உலகத்திலேயே அத்தனைப் பெரிய பச்சை இல்லை

என்பார்கள். அது இரண்டங்குலம் சதுரமாக இருக்கும். அதில் முருகக்கடவுள், வள்ளி தெய்வானையாருடன் எழுந்தருளும் கோலமாகச் சித்திரம் செதுக்கப் பட்டிருந்தது. அந்தப் பதக்கத்தின் இருபுறங்களிலும் நவரத்தினங்களும் தொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த விலைபெற்ற பதக்கத்தை ஆண்டுக்கு ஒருமுறை கடவுளுக்கு அணிவித்து உற்சவம் செய்வது பண்டைக்காலம் முதல் ஏற்பட்ட ஒரு பழக்கம். அந்த ஆண்டுத் திருநாளில் கருவூலத்திலிருந்து அந்தப் பதக்கம் வரவில்லை. அலங்கரித்த அர்ச்சகர்கள் ஆச்சரியப்பட்டார்கள். காத்துப்பார்த்தார்கள். அறக்காப்பாளர் அதைக் கொண்டுவரவில்லை. ஏன் என்று கேட்க அவர்களுக்கு வாய்வரவில்லை. குறுநில மன்னன் அறக்காப்பாளனுக இருந்தான். அவன் எதிரே எவ்வாறு கேள்வி கேட்பது. அப்பதக்கம் இன்றி மற்ற அலங்காரங்கள் செய்து வைத்து உற்சவம் நடத்தினுர்கள். பச்சைப் பதக்கம் சுவாமிக்கு அணிவிக்கப்படவில்லை என்ற செய்தி விரைவில் மக்களிடம் பரவிற்று. பாபரப்பும் உண்டாயிற்று. திருவிழா எங்கும் அதே பேச்சாக இருந்தது. அறக்காப்பாளர் உற்சவத்தில் தலை காட்டவில்லை. ஆகவே மக்கள் யாதொன்றும் செய்ய முடியவில்லை.

'இந்த ஆண்டு பச்சைப் பதக்கம் சுவாமிக்குப் போடவில்லையாமே என்ன அநியாயம்?' என்ருர் ஒருவர். 'நானும் கேள்விப்பட்டேன். முன்னமே நாட்டில் பஞ்சம். இனி என்ன நடைபெறுமோ' என்று ஏக்கத்துடன் பேசினுர். மற்றவன் 'பஞ்சம் இருக்கட்டும். உலகிலேயே சிறந்த பதக்கம் எந்த நாட்டிலும் அதைப்போல் இல்லையாம். அது போனுல் கோயிலுக்கு எத்தனை கெடுதி.'

'ஓர் இரகசியம் தெரியுமா? ஜமீன்தாரனீ யாருக்கும் தெரியாமல் அதனை ஒரு மாறுவாடிக்கு விற்றுவிட்டானும்.'

'நிஜமா ? எப்படித் துணிந்து விற்றான் ? அதனால் பாவம் இல்லையா ?'

'பாவம் என்ன ! நீரிலே மூழ்கினவனுக்கு ஒரு முழம் முழுகினால் என்ன, நூறுமுழம் முழுகினால் என்ன ? சொல்லமுடியாத கடன் ஏற்படுத்திவிட்டான் மகானுபாவன். அவனால் கோயிலுக்கு எத்தனை கடன் தெரியுமா ? அந்த கடனுக்காகத்தான் விற்றானும்.'

'சரி, அந்தக் கடனாவது காட்டினானா ? இல்லை. அதில் பெரும்பான்மை தானே எடுத்துக்கொண்டானும்.'

'அப்படியா, எத்தனைக்கு விற்றான் ?'

'எத்தனையா, ரூ. 10000க்குப் பேசினானும். 8000 வாங்கிக்கொண்டானும். இன்னமும் 2000 பாக்கியாம்.'

'கோயில் கடன் ஏதாவது தீர்ந்ததா ?'

'அது எப்படித் தீரும்? கடல் அலை நின்றாலும் நிற்கும். இந்தக் கடன் அப்படிப்பட்ட அறக்காப்பாளர்கள் இருக்கு மட்டும் தீராது.'

'சரி, இந்தப் பதக்கத்தை இவனுடைய முன்னோர் கள் கொடுத்து தானே இருக்கலாம். எப்போது கொடுத்து விட்டார்களோ சொத்து சுவாமியினுடையது ஆயிற்று. இவனுக்கு அதனை விற்க என்ன உரிமை ?'

இவ்விதமாக ஊரெல்லாம் பேசிக் கொண்டார்கள்.

இரண்டு பேர்கள் கடவுளிடம் பேரன்பு பூண்டவர்கள் முன் வந்தார்கள். நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தார்கள். அறக்காப்பாளர் செய்த கிரய ஒப்பந்தம் செல்லாது என்று தீர்ப்புக் கேட்டார்கள். அறக்காப்பாளரான ஜமீன்தாரரும் மார்வாடியும் எதிரிகள். வழக்கு மூன்று கோர்ட்டுகளிலும் நடந்தது. முடிவில், கிரயம் செல்லாதென்றும், பதக்கத்தில் சுவாமியின் இலக்கனை உள்ளதால் அது விற்கக்கூடிய பொருள் அல்ல என்றும் தீர்ப்புக் கூறப்பட்டது. பதக்கம்

கோயிலுக்கு வந்து விட்டது. மாறுவாடிக்கு 8000 ரூ. தொலைந்தது. மன்னன் அதை எங்கிருந்து கொடுக்கப் போகிறான். இந்த விதத்தில் தரும பரிபாலனம் நடந்தது. ஆடிக் கிருத்திகையின்போது 15 அல்லது 20 ஆயிரம் வரை வருவாய் வரும். அதனை வருடச் செலவாக வைத்துக் கொண்டால் நலம்தான். ஆனால் மன்னன் முன்னம் ஏற்படுத்திய கடன் தலைக்கு மேல் நிற்கும். வரவு வந்தவுடனே கச்சேரியிலிருந்து மறியல் வரும். கடன்காரன் வரும்படி முழுவதும் கொண்டு போய்விடுவான். இனி கோயில் நடவடிக்கை எவ்வாறு நடைபெறும்?

மேலும், மற்றக் கடன்களுக்காகக் கோயில் நிலங்கள் பல பராதீனமாயின. ஒரு முறை எட்டுக் கிராமங்கள் பத்தாயிரம் ரூபாய்க்கு ஒரு செட்டியார் ஏலத்தில் எடுத்தார். அதனை விடுவிக்கப் பின் வந்தோர் பட்ட வருத்தத்திற்குச் சொல்லவும் வேண்டுமா? அக்கிராமங்கள் அத்தொகையை விட நூறு மடங்கு அதிக விலைபொறும்.

ஆனால் கோயிலுக்கு நற்காலம் பிறந்தது. பல அன்பர்கள் கூடி ஒரு திருப்பணிக் குழுவாகச் சேர்ந்து திருப்பணி செய்ய முன்வந்தார்கள். படிகளையும் மற்றக் கட்டடத் திருப்பணிகளையும் செய்தார்கள். புது நிர்வாக சபை ஏற்படுத்தப் பட்டது. அறக்காப்பாளன் நீங்கிப் போனான். மற்றொரு வேலையாள் கிடைத்தான். அதுமுதல் கோயில் வேலை நன்கு நடைபெறுகிறது. தொலைந்து போன கிராமங்களும் மீட்கப் பெற்றன. வழக்குகளும் வெற்றி பெற்றன. அறக்காப்பாளனான மன்னன் எளிதில் உரிமைகளை விடவில்லை. பாம்பரை பாத்தியம் உண்டு என்று வாதாடினான். ஆனால் அது முழுவதும் போய்விடும் போல் இருந்தது. அப்போது சமாதானத்திற்கு வந்தான். பாம்பரைப் பூமாலை உண்டு. அவைகளோடு 250 ரூ. மாதச் சீவனம்சம் உண்டு. வேறு

எவ்வித பாத்தியமும் கோரப்படாது என்று முடிவுக்கு வரப்பட்டது.

இந்த 250ம் எந்த மூலைக்கு உதவும். அது வருவதற்கு முந்தியே அடைவு வைக்கப்படுகிறது. இந்த விதப் பேர் வழியிடம் எந்தக் கோயிற் சொத்து மீதி ஆகும். மூர்த்திகள் இப்படிப்பட்ட நபர்களிடம் சிக்கிக் கொண்டு படும்பாடு எழுத்தால் எழுத முடியாது என்க.

* * * *

ஒரு நாள் அக்குறு நில மன்னன் ஊர்பால் செல்ல வேண்டி வந்தது. அவனுடைய அரண்மனையைச் சுற்றிப் பார்த்தேன். பெரும்பான்மையான பகுதி இன்றோ நாளையோ விழுந்து விடும் போல் தோன்றிற்று. அப்பகுதியில் தான் திருமணம் செய்து கொண்ட ராணிமார்கள் இருக்கின்றனர். மற்றொரு புறம் புதிதாக அவன் தகப்பன் கட்டின மாளிகை இருந்தது. அது கட்ட ஒரு லட்சம் பிடித்ததாம். அதில் மேல் நாட்டுச் சமான்கள் நிரம்ப வைக்கப் பட்டிருந்தன. பாதி செலவாகிவிட்டன. மற்றப் பகுதிதான் இருக்கின்றன. அவைகளும் எப்போது நடந்து ஏகி விடுமோ சொல்ல முடியாது. அக்கூட்டத்தில் ஓர் அழகிய பெண் ஒரு குழந்தையுடன் நின்று கொண்டிருந்தாள். முகச்சாடை வேறு இனம் என்று தோன்றிற்று. என்னுடன் வந்த அதிகாரி அவள் காமக்கிழத்தி என்றான். எத்தனை கடன் பட்டும் இந்த நிலையில் இருக்கிறானே என்று வியந்தேன்.

ஆனால் பேச்சு வெகு அழகாகப் பேசினான். அன்றைக்கு முந்தின நாள் ஒரு தெருக்கூத்து அவன் மாளிகையில் நடைபெற்றிருந்தது. இரவு முழுவதும் அதற்காகக் கண் விழித்துக் கொண்டிருந்திருக்கிறான். கண் செக்கச் செவேல் என்று இருந்தது. ‘நீங்கள் நேற்று வந்திருந்தால் அழகான கூத்து பார்த்திருக்கலாம்’ என்று அவன் சொன்னான்.

'அறிவித்திருந்தால் வந்திருப்பேன்' என்று பதில் சொல்லி விட்டு மீண்டும் கேட்டேன். 'நீங்கள் இத்தனை கடன்பட என்ன காரணம்' என்றேன். அதற்கு 'நான் என்ன செய்வது? என்னால் ஒன்றும் ஏற்படவில்லை. என் பாட்டன் காலம் முதல் இது வளர்ந்து வருகிறது. என் பாட்டன் சிறந்த கல்விமான். சொத்துப் பரிபாலனம் கவனிக்காமல் எப்போதும் புலவர்களை ஆதரித்துக் கொண்டும் நூல்களை அச்சடிப்பித்துக் கொண்டுமே காலம் கழித்தார். அப்போதுதான் கடன் தொடங்கியது' என்றான்.

'அப்படி என்ன நூல்கள் உண்டு?'

'நிரம்ப நூல்கள் உண்டு. எதுவும் விற்கப்படவில்லை. ஒரு கட்டுத் தருகிறேன்' என்று சொல்லி அவர் பாட்டன் பதிப்பித்தப் பதினைந்து நூல்களைக் கொடுத்தான்.

'பிறகு அக்கடன்களை என் தகப்பன் கட்டவில்லை. போதாக் குறைக்கு என் தகப்பன் ஒரு லட்சத்தில் அரண்மனையும், மற்றொரு லட்சத்தில் தெப்பக் குளமும் கட்டினான்' என்றாள்.

இவைகளைப் பின்னால் பார்த்தேன். உண்மை என்று தெரிந்தேன். 'பிறகு தன் தமயன் பட்டத்திற்கு வந்தான். அவனாலே மற்றக் கடன்களும் கோயில் கடன்களும் ஏற்பட்டன. அவன் காலத்தில் தான் பச்சைப் பதக்கமும் விற்கப்பட்டது. அதன் மர்மம், நீங்கள் அறிவீர்கள்' என்று சொன்னான். அதை எல்லாம் கேட்ட பிறகு செய்தி முழுவதும் தெளிந்தது. இப்போதுள்ள மன்னன் எல்லாரைக் காட்டிலும் சிறந்தவன் என்று எண்ணினேன். ஏற்பட்ட பாவம் இனிப் போதும், இனி வளர்த்த வேண்டாம் என்பது சரி அல்லவா?

16. எதில்தான் துன்பமில்லை

நாட்டுக் கதைகளிலே மிக ஓங்கி நிற்கும் கோட்டை ஒன்று உண்டு. அங்கு சில நூற்றாண்டுகளுக்கு முந்தி நடந்த கொடிய போரைப் பற்றி மக்களை இன்றைக்கும் பெருமையுடன் பேசியும் பாடியும் வருவார்கள். அலங்கார வுடை யணிந்து நிறைமதி நாட்களிற் தாளத்திற்கேற்ற ஒழுங்கில் உரத்த தொனியில் ஒரே விதமான நடையில் குதித்துக் கொண்டு பாடும் பாணர் வகையினர் இதன் பெருமையைப் பாடுவார்கள். அவ்வாறு பாடுகையில் நூற்றுக் கணக்கான நாட்டுப்புறத்து மக்கள் இரவு முழுதும் உட்கார்ந்து கொண்டு கேட்பார்கள். அவர்கள் பாடும் வீரப் பாடல்கள் இந்நகரச் சரிதத்தைப் பற்றியவையே. கொடிய போர் நடந்த அக்கோட்டை இப்போது வெறும் மேடாக இருக்கிறது. இக்கோட்டை வீரர்களைக் கொன்றெறிந்த வேறொரு மன்னன் மூன்றும் நாள் இவ்விடத்திலேயே ஒரு குடியானவனுல் குத்திக் கொல்லப்பட்டான். புறநாட்டு வெள்ளைப் பகைவர்களின் சதியால் தம் நாட்டுப் பிரபுவை பூண்டோடழிக்க முயன்றவன் கதி என்ன ஆகும்? பழி வாங்கின குடியானவனுன வீரனின் நினைவாக இந்நாள் ஒரு நினைவுத் தம்பம் நாட்டப்பட்டு இம்மேட்டில் நிற்கிறது. இச்சின்னங்களைப் பார்த்துக் கொண்டு வருகையில் பின் காலத்தில் தோன்றிய இரண்டு கோட்டைகளைக் கண்ணுற்றேன். அவைகளில் மேற்பாலுள்ளதில் இராஜபட்டம் பெற்ற தற்காலப் பாளையக்காரன் வசிக்கிறுன். இக்கோட்டைக்குள் உள்ள கட்டடங்கள் பல காலாகாலங்களில் கட்டப்பட்டவை. ஆகையால், யாதொரு ஒழுங்கு மின்றிச் சிறியவை, பெரியவை, அழகில்லாதவை, அழகுள்ளவை எல்லாம் விரவி இருக்கின்றன. 'அவைகளில் சிறிது காலத்

திற்கு முன் கட்டப்பட்ட சபா மண்டபம் மிகப் பெரியது. அரசன் கொலுவிருப்பதற்காகக் கட்டப்பட்டது. தற்காலச் சௌகரியங்கள் கொண்ட சாமான்கள் நிரம்ப இருக்கின்றன. முகலாய முறையில் அது சிறந்த மண்டபமாக விளங்கு கிறது. பின்புறத்தில் ஒரு கண்காட்சி வைக்கப்பட்டிருக் கிறது. அதில் அரச பரம்பரையினர் படங்களும் பண்டைக் கால உடைகள், அணிகள், படைக்கலங்கள் முதலியவை கள் வைக்கப்பட்டிருக்கின்றன.

மாலை 6 மணிக்குத் தன்னிடம் வரும்படி எனக்கு அழைப்பு அக்கோட்டை மன்னன் அனுப்பியிருந்தான். அதை அனுசரித்து நானும், என்னுடைய அடுத்த அதி காரியும் சென்றோம். அந்தச் சபாமண்டபத்து உப்பரிகை யில் சிறிது நேரம் இருந்தோம். அப்போதுதான் அதனைக் கண்டு களித்தது. அப்பெரிய மண்டபத்தை இப்போதுள்ள மன்னனின் பாட்டன் கட்டினான். அவனுக்கு இருந்த பெருமையைக் காக்கவே வெகு செலவிட்டு அதனைக் கட்டினான். அதனால் அந்தச் சமஸ்தானத்திற்குக் கடனும் ஏற்பட்டு விட்டதாம். அதனைத் தீர்க்க அனேக ஆண்டுகள் பிடித்தனவாம். மன்னன் எங்களை வரும்படி ஆள் விடுவதற்கு அரைமணி நேரம் ஆயிற்று. எனக்குச் சலித்து போய்விட்டது. திரும்பிவிடலாம் என்று எண்ணினேன். அவனுடைய விருந்தாளியாக இருந்து விட்டு எப்படிச் சொல்லாமல் போவது என்று தயங்கினேன். அந்த நேரத் தில் பல செய்திகளையும் அறிந்தேன். பொழுது வீணாகப் போகவில்லை.

கோட்டைக்குள் பல கட்டடங்களுக்கும் தனி வளைவு களும் தெருக்களும் இருந்தன. அரண்மனைப் பகுதி சபா மண்டபம் இவைகளே யன்றி விருந்தாளிகள் விடுதி, அமைச்சர் விடுதி, ஆள்காரர் விடுதி, இவைகளுக்கு நீர் வசதி,

மின்சார வசதி, முதலியவைகளும் இருந்தன. தெருக்களில் பல ஆட்கள் நடமாடிக் கொண்டே இருந்தார்கள். அதையே ஓர் ஊராகவும் நினைக்கலாம். ஆனால் எல்லாரும் அரண்மனையைச் சார்ந்தவர்களே. தெருவில் ஆண்கள் மட்டும் அல்ல, பெண்களும் நடமாடிக் கொண்டிருந்தார்கள். பெண்கள் தற்கால உடைகளை நாசூக்காக அணிந்து கொண்டு உல்லாசமாகச் சென்று கொண்டிருந்தார்கள். இந்த மன்னர் விடுதிகளில் எல்லாரும் திரை மறைவில் இருப்பார்கள் என்று எண்ணினேன். முக்காடு இன்றி தாராளமாகச் செல்லுகிறார்களே என்று எனது நண்பரிடம் சொன்னேன்.

'இவர்கள் அரண்மனைச் சீமாட்டிகள் அல்ல. அரண்மனைத் தாசிகள். இவர்கள் எங்கும் நாணமின்றிச் செல்லலாம்' என்றார்.

'தாசிகள் என்றால் யார்' என்றேன்.

'இந்த வெலம குலத்து மன்னர்களின் அரண்மனைகளில் தாசிகள் என்ற அடிமைக் குடும்பங்கள் உண்டு. அவர்கள் பரம்பரையாக மன்னர் குலத்திற்கு அடிமைப் பட்டவர்கள். கோட்டைக்குள்ளேயே பிறந்து வளர்கிறவர்கள். ஆண்கள் அரண்மனை வேலையும், பெண்கள் அந்தப்புற வேலையும் செய்வார்கள். இவர்கள் எல்லோருக்கும் அரண்மனையிலேயே உணவு. நல்ல அழகான பெண் ஆனால் இளவயதிலேயே ஒரு அரச குமாரனுடன் இணைத்து விடுவார்கள். ஒவ்வொரு தடவை இரண்டு, மூன்று தாசிகளும் இணைக்கப்படுவதுண்டு. இவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் தாசிகளே யன்றி பட்டத்துக்கு உரியவர்கள் அல்ல. இம்முறை இந்நாடுகளின் வழக்கம்.'

'மன்னர் குடும்பத்தார் வேறேயோ?'

'ஆம், அவர்கள் நல்ல குடும்பத்தில் பிறந்தவர்கள். வேறு மன்னனின் குமாரிகளாக இருப்பார்கள். அவர்கள் வெளியே வரமாட்டார்கள். திரை மறைவிலே இருப்பார் கள். வெளியில் முக்காடு இல்லாமல் வாரார்கள்' என்றார்.

இதற்குள் ஒரு விசை வண்டி அந்தப்புறத்திலிருந்து வெளியே சென்றது. அது திரை போடப்பட்டு மூடப்பட் டிருந்தது.

'இதோ பார்த்தீர்களா ? இந்த வண்டியில் போகிறவர் கள் அரச குமாரிகள். இவர்கள் உல்லாச பவனத்திற்குச் செல்லுகிறார்கள். அங்கே பந்து ஆடுவார்கள். இந்தச் செய்கை முன்னாளில் இல்லை. இப்போது இம்மன்னன் வந்த பிறகு ஏற்பட்ட வழக்கம்.'

இப்படிப் பேசிக்கொண் டிருக்கையில் எங்களுக்கு அழைப்பு வந்தது. மன்னன் தங்குமிடம் சென்றோம். நூற்சாலை மண்டபத்தில் இருந்து வந்தனம் அளித்தார். 'வாருங்கள் சிறிது நேரம் ஆயிற்று. மன்னியுங்கள். வருமான வரி சம்பந்தமாக கணக்குச் சோதகரிடம் முக்கியமான சில சங்கதிகள் பேச வேண்டி வந்தது. அதனாலே நேரம் ஆகி விட்டது' என்றார்

அவருடைய வினயமான பேச்சைக் கேட்டு அயர்ந்து போனேன்.

'மன்னிப்பு ஏன்? நாங்கள் அறியாதவர்களா? வருமான வரி என்றால் எங்களுக்கு அதன் சிரமம் தெரியுமே' என்றேன்.

'என்ன அறிந்திருந்தாலும் நிலச்சுவான்தாரர்களாகிய நாங்கள் படும் கஷ்டங்களை வெளி மக்கள் அறிவதில்லை. ஒருபுறம் சர்க்கார் எங்களிடம் அளவுக்கு மீறிக் கறக்கிறார் கள். மறுபுறம் பொது மக்கள் எங்களை வைது கொண்டே இருக்கிறார்கள். எங்களுக்கு மத்தளம் போல் இருபுறங்

களிலும் இடி. பொது மக்கள் எங்களை அரசியலாரின் செல்லக் குழந்தைகள் என்று எண்ணுகிறார்கள். முன்காலத்தில் அவ்வாறு இருக்கலாம். இப்போது அவ்வாறு இல்லை. இந்த உலகப் போர்கள் வந்ததும் எங்களிடம் கறக்கிற கறத்தல் போதும். சென்னைப் பால்காரன் கன்றுக் குட்டியின் தோலை வைத்துக் காட்டியாவது பசுவின் பால் முற்றிலும் கறக்கிறான். இவர்களோ அத்தோலையும் காட்டாமல் ஒரு சிறு துளியும் விடாமல் கறக்கிறார்கள். நிலவரி, பேஷ்கிஸ்து, வருமான வரி, தொழில் வரி முதலிய நியாயமான வரிகளுக்கு அளவில்லை. யுத்த நிதி, யுத்தக் கடன், ஆள் சேகரிப்பு, நில ஒழிப்பு இவைகளுக்கு அளவுண்டா? விலையுயர்ந்த பளிங்கு மாளிகைகளை ஒரு நாள் தவணையிலே கைவசப்படுத்திக் கொண்டு யாதொரு வாடகையுமின்றிக் காட்டுமிராண்டிகளான ஆப்பிரிடிக் காலாடிகளுக்கு விட்டுக்கொடுக்கிறார்களே! இதில் எத்தனை நட்டம்? ஆயிரக் கணக்கான தொகை செலவழித்துச் சேமித்து வைத்த புலி முதலிய மிருகங்களின் உடல்களை ஒரு கனத்தில் தூக்கி எறிந்துவிட்டுச் சேனைகள் புகுந்து கொண்டன. அதனால் நட்டம் இவ்வளவு என்று சொல்ல முடியுமா? அவர்கள் கொடுக்கும் வாடகை நிபமாத்திரமானது. பழுது பார்க்கவும் போதாது. அதிலும் முக்கால் திட்டம் வருமான வரிக்குத் தொலைந்துவிடுகிறது. அழகிய மாங்கள், தோட்டங்கள், பழச்செடிகள் இவைகள் எல்லாம் பாழாயின. இவைகளைக் கேட்பார் இல்லை. இவைகள் எல்லாம் பொதுமக்கள் அறிகிறார்களா? இவற்றை யார் எடுத்துக் கூறுவது? கூறினாலும் நம்புவார்களா' என்றார்.

இப்பிரசங்கத்தைக் கேட்டவுடன் நான் இவருடைய மனப்போக்கை வியந்தேன். அடிமைத்தனம் சிறிதும்

அங்கு இருக்கவில்லை. சிறந்த தேசீய வாதியைக் காட்டிலும் நாட்டு அன்பு இவரிடம் மிளிரக் கண்டேன்.

'இவைகளை யெல்லாம் சட்டப்படி நடத்தும் அமுல் என்று கூறலாம். மற்றும் பல ஆக்ஞைகள் வருகின்றன. அவைகள் எந்தச் சட்டமோ சொல்ல முடியாது. நாங்களும் தள்ள முடியாமல் ஏற்றுக் கொள்கிறோம். உதாரணமாக, நேற்று ஒரு படைத் தலைவரும் அவருடைய சகாக்கள் பதினைந்து பேரும் விருந்தாளிகளாக என்னிடம் வருகிறார்களாம். பதினைந்து பேருக்கும் வேண்டிய உபசாரங்கள் செய்ய வேண்டுமாம். விருந்தாளி என்றால் அதனுடைய பொருள் எங்கள் விருந்துபவனம் கண்டால் தெரியும். இன்று போய்ப் பாருங்கள்'' என்றார்.

'விருந்தாளி பூவனம் இருக்கிறதே. அதனால் உங்களுக்கு என்ன சிரமம் ?'

'அதில் அவர்களுக்குத் தங்குவதுமட்டுமோ. அவர்களுக்கு ஐரோப்பிய முறையில் உணவு ஏற்படுத்தவேண்டும். காலை மாலைகளில் விளையாட்டுக்களை அமைத்து ஒன்று சேர்க்க வேண்டும். 50 கல் போய் வர விசை வண்டி அமர்த்தவேண்டும். ஒருமுறை இவர்கள் வந்தால் ஆள் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் பறந்துபோகும். இதற்கு எல்லாம் நாமே பொறுப்பு' என்றார்.

இவைகளைக் கேட்கக்கேட்க ஏன் இவைகளை ஒப்புவிக்கும்படி கேட்டோம் என்று எண்ணினேன். 'நீங்கள் இதனை அறிய நாளை இங்கிருந்து ஆராய்ச்சி செய்யுங்கள்' என்றார்.

மறுநாள் இருந்து பார்ப்பதாகச் சொன்னேன்.

'மற்றும் பாருங்கள் இப்போதோ உலகின் போக்கு எவ்விதமாகப் போகிறது. எதிர்காலத்தில் எங்களைப்போன்ற ஆட்களுக்கு இடமில்லை என்று சொல்லுவேன். எதிர்காலத்தில் எங்களை வேறு உலகத்திற்கு அனுப்பிவிடுவது திண்ணம்.

எப்பொழுது பொது உடமை உலகத்தில் சிறக்கத் தொடங்கு கிறதோ, அங்கே எங்களைப் போன்ற ஆட்களுக்கு என்ன வேலை? அதை உணர்ந்து சில அறிவாளிகள் தாங்களாகவே வேறு தொழில்களை ஏற்றுகொள்ளத் தொடங்கிவிட்டார்கள். நாங்களும் இதில் தலைப்பட்டு விட்டோம். நிலத்தை நம்பு வதில் பயனில்லை. கைத்தொழிலும் வாணிபமுமே இக்காலத் தில் வருமானத் தொழில்கள். இதை உத்தேசித்து மூன்று சர்க்கரை ஆலைகள் ஏற்படுத்தி உள்ளோம். அதிலும் அரசிய லாளர்கள் புகுந்து தலையிட்டுக் கொள்கிறார்கள். அடுத்த மாகாணத்தில் 10 ரூபாய் வரும்படி வந்தால் இங்கே கட்டுப் பாடு ஏற்படுத்தி ஐந்து ரூபாய் ஆக்குகிறார்கள். எங்கள் கதி என்ன ஆகிறது" என்று பல தற்காலக் கேள்விகளை வரிசையாக எடுத்துக் கூறினார். நாங்களும் விடைபெற்று வந்தோம்.

இவைகளை எல்லாம் கேட்டு இந்தச் செல்வவந்தர்களின் நிலையும் மிகச் சீர்கெட்டுவிட்டது என்று எண்ணவேண்டி வந்தது.

மறுநாள் சென்னைச் சேனைத் தலைவர்கள் 25 பேர் வந்தார்கள். அவர்கள் விருந்தினர் மாளிகையில் தங்கினார் கள். அதனைப் பார்த்தோம். பல இலட்சம் ரூ. செலவில் முகலாய முறையில் கட்டப்பட்ட பெரிய பவனம் 50, 60 அறைகள் கொண்டது. சிறந்த நாற்காலிகள் முதலியன போடப்பட்டிருந்தன. சுற்றும் நந்தவனம். போலோ ஆடு மிடம், கைச் செண்டு ஆடுமிடம் முதலியவை சுமார் 50 ஏகர் நிலத்தில் இருந்தன. அதனைக் காப்பதற்கே பெரிய கிராமம் ஒன்று வேண்டி யிருந்தது. அதில் மின்சார விளக்குகள் விசிறிகள் முதலியன அமைக்கப் பெற்றிருந்தன. வந்த பதினைந்து பேரும் தனியாக வரவில்லை. ஒவ்வொருவருக் கும் இரண்டு மூன்று பேர் வேலை யாட்களோடு வந்தார்கள்.

இவர்களுக்கு எல்லாம் தக்க உணவு தரப்பட்டது. மேலும் அன்று மாலே எல்லோரும் புறப்பட்டு வேட்டையாடப் போனுர்கள். வேட்டை அங்கிருந்து 25 கல் தொலேவில் இருந்த ஒரு பெரிய ஏரியிலாம். அது மீன் வேட்டை என்று எண்ணினேன். அல்ல, இரவில் மீன் வேட்டை எப்படி ஆடக் கூடும். நீர்ப் பறவை வேட்டை என்ருர்கள். இரவு முழுவதும் வேட்டையாடிவிட்டு நிரம்ப சிற்றுண்டிகளும் பான வகைகளும் அருந்திவிட்டு விடியலில் திரும்பினுர்கள். இவர்கள் ஒத்தாசையாகச் சென்ற சிகாரிகளுக்கு அளவில்லே. விடிந்த உடனே ஒரு விசை வண்டியில் ஏறக்குறைய 150 பறவைகளே ஏற்றிக்கொண்டு வந்தார்கள். இவ்வளவு பறவைகளும் அன்றிரவு சுடப்பட்டன. சுடப்பட்டுக் கைக்கு அகப்படாமல் நீரிலோ, நிலத்திலோ விழுந்த பறவைகளுக்கு அளவில்லே. அன்று இரவு தன் கூண்டுகளில் உறங்கிக் கொண்டிருந்த ஒரு பாவமும் அறியாத பறவைகளே எழுப்பி உயிர் வாங்கின இந்த எமகிங்கரர்களுக்கு என்ன உவமை கூறுவதோ? இத்தனே பறவைகளின் களேபரங்களேயும் வண்டியில் ஏற்றி வந்து அன்று பகலிலேயே சிறகுகளேப் பிடுங்கிச் சமயல் செய்ய வேண்டுமாம். அன்று பகல் விருந்திற்கே அவைகள் பயன்பட வேண்டுமாம். இல்லாவிடில் சுவைகள் கெட்டு விடுமாம். ஆகவே 15 பேர்களுக்காக 200 பட்சிகள் கொல்லப்பட்டுப் பலாலும் உண்ணப்பட்டன. இனி அடுத்து வரும் கிழமைகளிலே பறவைகளேப் போல் முயல்களும், காட்டுப் பன்றிகளும் மான்களும் வேட்டையாடப் பெறும். இவ்வேட்டைக்கு மிகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். இந்த வகையில் இந்த சமஸ்தானங்கள் ஈடுபட வேண்டி வரும். இவைகளேக் கண்ட என் மனம் ஒரே புண் மயம் ஆகிவிட்டது. செல்வவான்கள் செருக்குற்று பிழைப்பவர்கள், மற்ற ஏழைகளே

னொருக்கி இன்பத்தை நுகருகிறவர்கள், என்று எண்ணின எண்ணத்தை விட்டுவிட்டேன். அவர்களுக்கும் சுகதுக்கங்கள் உண்டு. அவர்களையும் மேய்க்கிற ஆட்கள் உண்டு என்று அறிந்தேன். என்ன, அடிமை நாட்டிலே இந்த விபரீத வாழ்வுகள் மிகச் சாதாரணம் என்று எண்ணினேன். சீர்திருத்தம் வந்துகொண்டிருக்கிறது. அது எவ்விதமாக மாறுமோ யார் அறிவார் என்ற எண்ணத்துடன் திரும்பினோம்.

---

17. உல்லாச பவனம்

"நாமும் பல ஜமீன் பண்ணைகளைப் பார்த்திருக்கிறோம். பூங்காவனங்களைப் பார்த்திருக்கிறோம். அரச மாளிகைகளைப் பார்த்திருக்கிறோம். இம்மூன்றும் சேர்ந்து ஒப்பற்ற போக பவனம் ஆக ஒன்று இந்த நிலவுலகத்தில் இருக்கும் என்று இதுவரை கனவிலும் நினைத்ததில்லை."

"தோழர் சொல்லுவது சரிதான். நானும் பல ஜமீன்தாரர்களிடம் நெருங்கிப் பழகி இருக்கிறேன். ஒப்பற்ற பூங்காக்களைக் கண்டு களித்திருக்கிறேன். மன்னர்களுடைய பண்ணையும், பொழிலும் மாளிகையும் ஏற்றத் தாழ்ச்சி இல்லாமல் இருப்பது இது ஒன்றே ஆகும்."

"அருமையான விலையுயர்ந்த சொத்துக்கள் இருக்கலாம். ஆனால் அவைகளை அனுபவிக்காமல் பல செல்வவந்தர்கள் இருக்கிறார்கள். மித மிஞ்சிய சொத்து எனக்கு உண்டு என்று சொல்லின் யாருக்கு என்ன பயன்? அவைகளை அனுபவிப்பவர்களுக்கு அல்லவோ அவைகள் பயன்படும். பல செல்வவந்தர்கள் தங்கள் சொத்துக்களை வேலைக்காரர்களும் குமாஸ்தாக்களும் அனுபவிக்க விட்டு

விடுகிறார்கள். தாங்கள் அச்சொத்துக்களின் ருசி அறிவதே இல்லை. நமது துரைகள் அப்படிப்பட்டவர்கள் அல்ல. இந்தப் புகழ் பெற்ற உல்லாசப் பண்ணையில் வாழ்ந்து அதனை முழுவகைளிலும் அனுபவிப்பதைக் காண எனக்கு மிகவும் திருப்தி.”

“அது மட்டும் அல்ல. அவர் தன்னந்தனியாக அனுபவித்தால் அது யாருக்குத் தெரியும்? அதில் என்ன இன்பம் இருக்கிறது? நம்மைப் போன்ற நண்பர்களை அழைத்து விருந்தளித்து, இந்த அருமையான உல்லாச பவனங்கள், பூஞ்சோலைகள், பழவகைப் பண்ணைகள் ஆகிய வைகளைக் காட்டி மகிழ்ச்சி அடைவதிலேதான் உண்மை யான இன்பநுகர்ச்சி இருக்கிறது அல்லவா?”

“ஆமாம்; நீங்கள் சொல்வது சரியே. அழகும், அழகுக் கேற்ற திடமும், அதற்கேற்ற உணவும், அதற்கேற்ற நண்பர் களும் இவைகளுக்கு இடையே அல்லவோ இந்திர போகம் உண்டு. நமது துரைகள் கூர்ந்தமதி உடையவர்கள். ஆகவே தான் இந்த அற்புதமான பழந்தோட்டத்தை வாங்கி இதில் சுகவாழ்வு வாழ்கிறார். நண்பர் இன்பம் துய்ப்பது, தான் துய்ப்பதற்குச் சரி என்ற பெரும் நோக்கத்தோடல்லவோ நமக்கு இங்கே விருந்தளித்திருக்கிறார். இங்கே எத்தனைநாள் இருந்தாலும் இன்பம் தெவிட்டாதுபோல் இருக்கிறது.”

இதுவரை யாதொன்றும் பேசாமல் நண்பர்கள் பேசிக் கொண்டிருந்ததை எல்லாம் காதாரக் கேட்டுக்கொண்டு மகிழ்ச்சியில் முழுகியிருந்த துரை இப்பொழுது பேசத் தொடங்கினான்:

“என்னுடைய நண்பர்கள் மகிழ்ச்சியடைந்தால் அதுவே என் மகிழ்ச்சி. நீங்கள் நினைக்கிறபடி நான்கு நாள் இங்கே முகாம்போடுவது எனக்கு இஷ்டம்தான்” என்றுசொன்னான். அதைக்கேட்ட மற்ற நண்பர்களுக்கோ மகிழ்ச்சிக் களவில்லை.

இதற்குள் உணவு முடிந்தது. எல்லாரும் கை கழுவிக் கொண்டு சிறிது நேரம் மாளிகையின் வெளியிலே சென்று அழகிய பூம்பொழிலின் கீழே சாய்வு நாற்காலிகளில் அமர்ந்தார்கள். அவர்களுக்கு எதிரே பூந்தோட்டத்தின் அழகிய தோற்றம் தெரிந்தது. அதனைக் கண்டு மகிழ்ந்து கொண்டிருந்தார்கள். சிறிது நேரம் பொறுத்துத் தோட்டத்தில் உலாவச் சென்றார்கள். அழகிய செடி கொடிகளிலே நன்றாக மணம் வீசும் மலர்களைப் பறித்துக்கொண்டு சிறிது நேரம் உலாவினார்கள். அவர்கள் கண்ட காட்சியை வர்ணிக்க முடியுமா?

* * *

எங்கள் நாட்டின் கிழக்கு எல்லையாய் சில மலைகள் அடுக்கடுக்காக உயர்ந்துகொண்டே போகும். இடை இடையில் ஆழ்ந்த பள்ளத்தாக்குகள் உண்டு. அவைகளிலே குளிர்ந்த நீர் ஓடைகள் பாய்ந்துகொண்டு செல்லும். மழைக் காலங்களில் அவ்வோடைகள் காட்டு ஆறுகளாக மாறிப் பாதைகளின்மீது விழுந்து நுரைகளைத் தள்ளிக்கொண்டு ஓடுவதைப்பார்த்தால் வெகுபயங்கரமாகயிருக்கும். ஏனைய காலங்களில் சிற்றருவிகளாகச் சிலுசிலுர்த்துக் கொண்டு ஓடும். எப்பொழுதும் தங்கியிருக்கும். ஈரத்தினால் எங்கும் நிலம் பச்சைப்பசேல் என்றிருக்கும். பெரும்பாறைகளிடையில் தேக்கு, ஈட்டி முதலிய பெரும் மரங்கள் முளைத்து இனிய காற்றை வீசிக்கொண்டிருக்கும். மேகங்கள் தோய்வதனால் நீலநிறச்சால்வை வெள்ளைப் புடவைக் கட்டினாற் போல அங்காங்கு தெரியும். இப்படிப்பட்ட இயற்கை வளம் பொருந்தியது எங்கள் நாட்டுக் கொல்லி மலைத்தொடர். அம்மலைத் தொடர்களின்மீது இரண்டாயிரம் அடிக்கு மேல் ஏறினால் மனோரம்யமான பரந்த புல்லாந்தரைகளைப் பார்க்கலாம். அங்கங்கே சிறு சிறு நீர் நிலைகள்

தேங்கி இருக்கும். மேட்டிடங்களில் பண்டைக் குடிகள் சின்னஞ்சிறு வட்டக் குடிசைகளைக் கட்டிக்கொண்டு வாழ்வார்கள். அவர்கள் இருளர் காடர் போன்ற மலைச் சாதியர்கள். பொதுவாக மலையாளர் என்று வழங்கப்படுவார்கள். இவர்களோ மிகுந்த ஏழைகள். சுற்றிலுமுள்ள மேட்டுப்பாங்கான இடங்களில் உழுது தினை கம்பு முதலியவைகளை விதைத்து அதிலிருந்து வரும் தானியங்களை உண்டு பிழைப்பார்கள். இவர்கள் பிழைப்பு மிகவும் எளிமையானது. ஆனால் மரியாதையுள்ளது, அமைதியும் கொண்டது. தற்காலத்து நாகரீகம் அவர்களிடம் எட்டவில்லை.

மேற்கு நாட்டார்கள் இம்மலைகளைக் கண்டார்கள். நிலச்செழிப்பு, நீர்ச் செழிப்பு, காற்றுச் செழிப்பு இந்த மூன்றையும் கண்டார்கள். உடனே அங்கே மேல்நாட்டுக் காய் பழம் இவைகளை விளைவிக்கும் பண்ணைகளை வைக்க எண்ணினார்கள். பணமும் அறிவும் இருக்கும்போது எதுதான் நடவாது? அதிகாரமும் அவர்களுக்கு உதவிசெய்தது. மலைமேல் ஏறுவதற்குச் சுலபமான பாதைகள் போடப்பட்டன. அருமையான நீரோட்டம் கொண்ட பள்ளத்தாக்குகள் பழத்தோட்டங்களாக மாற்றப்பட்டன. தோட்டச் சாலைகள் வேலைக்காரர்களுக்காகக் கட்டப்பட்டன. உயர்ந்த இடங்களில் முதலாளிகள் இருக்க மாளிகைகள் கட்டப்பட்டன. அருவிகளிலிருந்து நன்னீர்த் தேக்கங்களும் வாய்க்கால்களும் நிர்மாணிக்கப்பட்டன. பண்ணைகளிலே அருமையான மா, பலா, வாழை முதலிய நாட்டுமரங்களும் ஆரஞ்சு ஆப்பில், பேரி முதலிய மேல்நாட்டுப் பழங்களும் வைக்கப்பட்டன. சாரல்களிலே காப்பிச் செடிகள் பயிரிடப்பட்டன. இவ்விதமான அருமையான பழத்தோட்டங்கள் எங்கும் உண்டாகி மலைத்தொடர் முழுவதும் செல்வம் விளையும் செழிப்பு இடங்களாகி விட்டன. இவ்விதமான

பண்ணைத் தோட்டங்களில் ஒன்றில்தான் மேலே சொன்ன நான்கு ஐந்து உல்லாசப் பேர்வழிகள் விருந்து அயர்ந்து கொண்டு இன்பமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

* * *

நண்பர்கள் அவ் உல்லாசப் பூந்தோட்டத்தின் முதலாளியாகிய ஒரு ஜமீன்தாரனின் அழைப்பிற்கு அங்கே வந்தவர்கள். அச்சமீன்தாரன் ஒரு பண்டைய பாளையப் பட்டைச் சேர்ந்தவன். வழி வழி வந்த செல்வத்தில் திளைத்தவன். அவனுடைய முன்னோர்கள் நாயக மன்னர் காலத்தில் இராணுவத் தலைவர்களாக இருந்தனர். அரசனுக்குப் போர்க்காலங்களில் படைகளைத் திரட்டிக்கொண்டு உதவிசெய்யும் கடமைக்காக ஒரு பாளையப்பட்டு அளிக்கப் பெற்றவர்கள். அந்தப் பாளையப்பட்டின் வரி வசூல் முழுவதும் அவர்களுக்கே சேர்ந்தது. ஒரு பகுதி மட்டும் அரசனுக்குக் கொடுத்துவிட்டு மற்றப் பெரும்பகுதி எல்லாம் தாங்களே அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். இந்த வகையில் சிறந்திருந்த ஒரு பாளையப்பட்டின் வார்சாகத் தோற்றினான் ஓர் இளைய துரை. அவன்தான் மேலே சொன்ன நண்பர்களுக்கு விருந்தளித்தவன்.

அவனுடைய முன்னோர்கள் அருமையாகப் பாடுபட்டுப் பாளையப்பட்டை விருத்தி செய்தார்கள். செல்வம் மிகுந்திருந்த போதும் கடுமையான வாழ்வே வாழ்ந்தார்கள். தற்கால உல்லாச வாழ்வு அவர்களுக்குத் தெரியாது. ஆனால் ஆங்கில மோகம் நாட்டில் பரவவே அக்குடும்பத்தாரின் போக்கும் சிறிது மாறும் அல்லவா? தற்போதைய முதலாளியின் தந்தையார் காலத்திலேயே குடும்பப் போக்கு சிறிது மாறிவிட்டது. பெரிய நகரங்களில் வாழ்ந்து அங்கு காணும் உல்லாசங்களை அனுபவிக்க வேண்டும், என்ற எண்ணம் தோன்றிற்று. நாட்டுப்புறத்தில் எளிய முறையில்

வாழ்ந்து கொண்டிருந்த பாளையக்காரன் நகரத்தில் உள்ள அரசியல் சபைகளால் இழுக்கப்பட்டு நகரவாழ்வை அறியத் தொடங்கினான். அப்பொழுது நகரத்தில் ஒரு பெரிய பங்களா வாங்கவேண்டி வந்தது. அதிலே குடியிருக்கத் தனிக் குடும்பம் வைக்க நேர்ந்தது. ஒரு குடும்பம் இரண்டு குடும்பமாகி ஒருசெலவு இருசெலவாகிவிட்டது. நண்பர்களுக்கும் அதிகாரிகளுக்கும் அடிக்கடி விருந்து கொடுக்க வேண்டி வந்தது. இந்த வகையில் சிறிது சிறிதாகக் கடன் ஏறிவிட்டது.

இந்த விதமாக உல்லாச வாழ்க்கை நடத்தி வந்த பாளையக்காரன் திடீரென்று இறந்துவிட்டான். அவனுக்கு வார்சாக வந்தவன் இருபது வயதும் நிரம்பாத ஓர் இளையவன். உலக அனுபவம் இல்லாதவன். தனது உல்லாச நண்பர்களுடன் நகர வாழ்க்கையிலே ஈடுபட்டு வந்தவன். திடீரென்று சொத்து முழுவதும் தன் வசத்தில் வந்து சேரவே இன்னதுதான் செய்வதென்று அறியாத நிலைமையில் இருந்தான். ஆகவே நண்பர்களின் தூண்டிலிலே எளிதில் அகப்பட்டுக் கொண்டான்.

"பணமும், சொத்தும் இருந்து என்ன பயன்! அவைகளை நன்றாக அனுபவிக்க வேண்டாமா? இளமையை வீணாக்கித் தொலைப்பது சரியல்ல" என்று நண்பர்கள் சொன்னார்கள். அது முதல் ஓர் அருமையான அழகிய பூம்பொழிலை வாங்கி அதில் வாழவேண்டும் என்று நிச்சயித்தான் புதிய துரை. அதன் பலனாக ஒரு தரகன் தோன்றினான். மேலே கூறிய அழகிய கொல்லி மலைப்பண்ணை காட்டப்பட்டது. அதன் முதலாளியாய் இருந்த வெள்ளையன் சமயம் பார்த்து ஏறிய விலை கூறினான். அவனும் இந்த நாட்டைவிட்டுத் தன்னுடைய நாட்டை அடைய வேண்டுமென்று எண்ணம் கொண்டிருந்தான். தரகனுக்கோ இருபுறங்களிலிருந்தும்

தாகு கிடைத்தது. சொத்தும் ஒன்றுக்கு நான்கத்தனை விலைக்கு வாங்கப்பட்டது.

புதிய துரை பணத்தின் அருமையை அறியமாட்டான். தந்தையார் காலத்திலேயே சிறிது கடன் இருந்தது. இப்பொழுதோ அது பெருகத் தொடங்கியது. பொதுவாக ஜமீன்தாரர்கள் மிகுந்த செலவாளிகளானதால் நினைத்த போது கையில் ரொக்கம் இருக்காது. அவர்கள் நிலைமை இவனுக்கும் இருந்தது. ஆகவே, அதிக வட்டிக்குக் கடன் வாங்கப்பட்டது. கொல்லி மலைப்பண்ணை புது துரையின் கைவசம் சேர்ந்தது. அந்தச் சம்பவத்தைக் கொண்டாடவே மேலே சொன்ன விருந்து அளிக்கப்பட்டது. நண்பர்களும் மகிழ்ச்சியோடு விருந்து உண்டு களித்திருந்தார்கள்.

* * * *

அவர்கள் விருந்துண்ட பிறகு பூந்தோட்டத்தின் பல பாகங்களிலும் உலாவிச் சென்று அதன் அழகுகளைக் கண்டு வியந்து கொண்டிருந்தார்கள். அவ்வழகுகளைப் பற்றிப் பேசிக் கொண்டே சென்று நீர் அருவியின் எதிர்க் கரையில் அமைக்கப்பட்டிருந்த ஒரு பூங்கொடியின் பந்தற்கீழ் உட்கார்ந்தார்கள். அப்போது அங்கு திராக்ஷை ரசம் அளிக்கப்பட்டது. அதை அருந்திவிட்டு இன்ப சாகரத்தில் மூழ்கி இருந்தார்கள்.

"இந்த அருமையான இன்ப சமயத்திலே ஒன்று இரண்டு சங்கதிகள் சேர்ந்திருந்தால் அமராவதியும் இதற்குத் தோற்றுவிடும் அல்லவா" என்றான் தோழர்களில் ஒருவன்.

"அப்படி யென்ன இல்லாமல் போய்விட்டது" என்று கேட்டான் மற்ற ஒருவன்.

"இன்னிசையும் அதை இசைப்பவளும் இல்லாததைத் தான் குறித்தேன்" என்றான் முதல் பேசினவன்.

"நானும் அதைத்தான் நினைத்தேன். ஆனல் துரைகளிடம் எவ்வாறு சொல்வது" என்று தயங்கினேன் என்றான் மற்றவன்.

"அதற்கு என்ன, துரைகள் நினைத்தால் இப்பொழுதும் ஆகாதோ" என்றான் ஒருவன்.

இதை யெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த துரை, "தாங்கள் விரும்புகிறபடி அமைக்கத் தயார்தான். யாராவது ஒருவர் இங்கிருந்து புறப்பட்டால் நாளையே ஆட்களைக் கொண்டு வந்து விடலாம். யாராவது ஒருவர் செல்லுகிறீர்களா" என்று கேட்டான்.

"சரி, நான் போகிறேன்" என்று ஒவ்வொருவரும் சொன்னார்கள். சிறிது நேரம் ஆலோசித்துவிட்டு அவர்களில் ஒருவரை அனுப்புவது என்று முடிவு செய்தார்கள். துரையும் அந்தப் பிரயாணத்திற்கு வேண்டிய வாகனுதிகள் பணமுடிப்பு முதலியவைகளை யெல்லாம் தந்தனுப்பினான். ஏற்படுத்தப்பட்ட ஆளும், மலையை விட்டு நகரத்திற்குச் சென்றான்.

* * * *

மறுநாள் உல்லாச பவனத்தில் முந்தினநாள் போலவே விருந்துகள் நடந்தன. விருந்தாளிகள் அதுவரை அனுபவித்திராத இன்பம் அனுபவித்தார்கள். மாலை ஆக ஆக இன்னிசை இன்னும் வரவில்லையே என்று எதிர்பார்த்த வண்ணம் அமர்ந்திருந்தார்கள். சுமார் 5 மணிக்கு ஒரு வண்டி வரும் ஓசை கேட்டது. எல்லாரும் ஆவலுடன் எழுந்தார்கள். சென்ற ஆள் முதலில் இறங்கினான். பின்னர் ஓர் அழகிய யுவதி இறங்கினாள். அதற்குப்பின் ஒரு வாலிபன் இன்னிசைக் கருவிகளோடு இறங்கினான். துரைகள் வந்தவர்களை வரவேற்று அவர்களுக்கென்று தனியாக ஓர் அறை ஒதுக்கி வைத்தான். அவர்களும் அவ்வறைக்குச்-

சென்ற உடனே இனிய சிற்றுண்டி அளிக்கப்பட்டது. அருந்திவிட்டுச் சிறிது நேரம் இளைப்பாறினார்கள்.

மாலை கழிந்ததும் விருந்து தயாரிக்கப்பட்டது. உல்லாச பவனத்தின் பெரிய மண்டபத்தில் அழகிய மேஜைகளின் மேல் உணவு பரிமாறப்பட்டது. விருந்தினர்கள் அமர்ந்தனர். புதிதாக வந்தவர்களும் அமர்ந்தார்கள். விருந்து முடிவதற்கு 9 மணி ஆயிற்று. பிறகு மற்றொரு பெரிய அறைக்கு எல்லாரும் சென்றார்கள். அங்கே ஒரு பீடத்தின் மீது அந்த யுவதி உட்கார்ந்தாள். இசைக்கருவிகள் வைக்கப்பட்டன. சுற்றிலும் தனித் தனி மெத்தை நாற்காலிகளில் விருந்தாளிகள் உட்கார்ந்தார்கள். நடுவில் மஹமல் சாய்வு நாற்காலியில் துரை உட்கார்ந்தான். இன்னிசை தொடங்கப்பட்டது. இனிய கீதம் அந்தப் பவனம் முற்றும் நிரம்பி ஒலி செய்தது. நிசப்தமான இரவிலே இனிமையான கானம் பன்மடங்கு ஓங்கி விளங்கியது. விருந்தாளிகள் அடைந்த இன்பத்தைக் கூறவும் வேண்டுமா? இசையினுக்கு இடையில் மது ரசமும் அளிக்கப்பட்டது என்றால் ஆனந்தத்திற்கு என்ன குறைவு? இவ்வாறு நள்ளிரவு முழுதும் ஆனந்தக் கடல் அங்கு பொங்கிக் கொண்டிருந்தது.

* * * *

உல்லாச பவனம் இந்த வகையில் நான்கு நாளும் இந்திர போக நிலையம் ஆகியிருந்தது. இந்திரனே இந்த பவனத்திற்கு வந்திருந்தால் பொறாமைப்பட்டுத் தன் ஊருக்கு ஓடிப்போயிருப்பான். நான்கு நாட்களும் கழிந்த பின் அவரவர்கள் தங்கள் தங்கள் ஊர்களுக்குப் பயணம் ஆனார்கள். அவர்களில் ஒருவருக்காவது அந்தப் பரிமளப் பூங்காவை விட்டுப் பிரிய விருப்பமில்லை. துரைக்குத் தன் ஊரில் அவசர வேலையிருப்பதாக் ஆள் வந்தான். அவன்

இருக்க முடியவில்லை. ஆகவே விதியின்றித் தோழர்கள் போகவேண்டி வந்தது. எல்லாருக்கும் தகுந்த சன்மானங் களும் கிடைத்தன. யுவதிக்கு வேண்டிய பரிசுகள் கிடைத் தன.

தோழர்கள் புறப்படுமுன்னர் விடை பெற்றுக் கொள் ளச் சென்றார்கள். மற்றொரு முறை வருவதற்கு ஏற்பாடு செய்தனர். "அத்தனை சிறந்த பூங்காவைச் சுற்றிப் பார்க்க மூன்று நான்கு நாள் போதுமா? மறுபடியும் சமயம் வாய்த் தால் துரையினுடைய ஔதாரிய குணத்தை மெச்சுவதற்கு இடம் கிடைக்கும்" என்று மெல்ல ஊதிவிட்டார்கள். மறு படியும் ஒரு முறை அழைப்பு அனுப்புவதாகத் துரை சொன்னான். தோழர்கள் மிகுந்த திருப்தியோடு வணக்கம் சொல்லிவிட்டுச் சென்றார்கள்.

துரைக்குத் தன் பாளையப்பட்டிலே மிகுந்த வேலை யிருந்தது. கடனும் ஏறிக் கொண்டே சென்றது. கையில் ரொக்கமும் இல்லை. வரி வசூலும் செவ்வையாக ஆவதில்லை. 'கடன் பட்டார் நெஞ்சம் போலக் கலங்கினான் இலங்கை வேந்தன்' என்ற குறிப்பைக் கம்பர் இராவணன் போன்ற பெரிய இராட்சத மன்னர்களுக்குச் சொன்னாரே ஒழிய தென்னாட்டுப் பாளையப்பட்டுகளுக்குச் சொல்லவில்லை யல்லவா? ஆகவே, இந்தப் பாளையப்பட்டு இளைய துரைக்குக் கடன்களினாலே யாதேனும் கவலை ஏற்படுமா? இல்லவே இல்லை. முனிவர்களைப் போன்று வெகு நல்ல அமைதியில் அவனும் இருந்தான்.

மூன்று நான்கு மாதம் கழித்து ஏதோ ஒரு பணத் தொகை கிடைத்தது. உடனே எல்லாத் தோழர்களுக்கும் அழைப்பு போயிற்று. இன்னிசை யுவதிக்கும் சென்றது. இந்தமுறை 5 நாள் உல்லாச பவனத்தில் சொல்லவொண்ணா டாம்பிகத்தில் விருந்து நடந்தது.

இந்த விதமாக ஓர் ஆண்டில் மூன்று நான்கு விருந்துகள் நடைபெற்றன். கடனும் மலைபோல் ஏறிக்கொண்டே சென்றது. இதனால் துரை யாதொரு விசாரமும் பட்டதாகத் தெரியவில்லை.

* * * *

யுவதியை அழைத்துச் சென்ற தோழன் ஒருநாள் துரையின் மாளிகைக்குச் சென்று தன் வீட்டில் ஒருசிறப்பு நடப்பதாகவும் அதன்பொருட்டு இரவு 9 மணிக்கு ஒரு விருந்து நடப்பதாகவும் அதற்குத் தவறாமல் துரை வரவேண்டும் என்றும் மன்றாடிக் கேட்டுக் கொண்டான். தான் பாமரமக்கள் வீட்டிற்குப் போனதில்லை என்று துரை சொன்னான். யுவதியின் இசையரங்கு ஏற்படப் போகிறதென்றும் அது முடிந்தவுடன் துரை தன் கையால் அவருக்கு ஒரு இரத்தினப் பதக்கம் அணிவிக்கவேண்டும் என்றும் கூறினான். யுவதியின் பேச்சு எடுக்கவே துரை ஒத்துக்கொண்டான்.

குறித்தநாள் அன்று அந்த அழைப்பு நினைவு மூட்டப்பட்டது. துரையும் யுவதியைக் காணமுடியும் என்ற பேராவலுடன் தோழன்வீட்டிற்கு விரைந்து சென்றான். வீட்டு வாயிலில் தோழன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். உடனே துரையை அழைத்துக்கொண்டு மாடிமேல் ஓர் அழகிய அறையில் உட்கார வைத்தான். வீட்டில் யாதொரு சந்தடியும் இல்லாமல் இருந்தது. விருந்து ஆர்ப்பாட்டம் காணோமே என்று துரை எண்ணினான். அவசரத்தில் சிறிது முன்னாலே வந்துவிட்டோமோ என்று எண்ணினான். மேஜையின் பேரில் மதுவகைகளும் தாம்பூலமும் வைக்கப்பட்டிருந்தன. ஐந்து நிமிஷங்களில் பெரிய மண்டபத்திற்குச் செல்வோம், அதற்குள் சிறிது மது உண்ணுங்கள் என்று தோழன் வினயமாகக் கூறினான். துரை ஒருதுளி பருகினான். ஒருவித வாசனை அடித்தது. ஆகவே முழுதும்

பருகாமல் கிண்ணத்தை மேஜையின்மீதே வைத்து விட்டான். அதைக் கண்ட தோழன் ஒரு விநாடியில் வருகிறேன் என்று சொல்லி உள்ளே சென்ருன். மறு விநாடியில் மீண்டும் வந்து துரையை உள்ளே வரும்படி அழைத்துச் சென்ருன். துரை உள்ளே சென்றதும் கதவு மெதுவாகச் சாத்தப்பட்டது; பூட்டும் இடப்பட்டது. அதனைத் துரைபார்க்கவில்லை.

துரை அழைத்துச் செல்லப்பட்ட அறையிலும் ஒருவரும் இருக்கவில்லை. ஒரு சிறு மேஜையும் அதன் பேரில் சில கடிதங்களும் இரண்டு குறிச்சிகளுமே இருந்தன. மற்ருெரு சிறு பலகையின் பேரில் ஒரு கைத்துப்பாக்கி இருந்தது. அதனைத் துரை பார்க்கவில்லை.

"துரைகளே,, உட்காருங்கள்" என்று தோழன் சொன்ஞன்.

"நண்பனே, இங்கே யாரும் காணேமே. சிறப்பு எங்கே நடக்கிறது? விருந்தினர்கள் வந்துவிட்டார்களா? நான் முந்தியே வந்துவிட்டேஞ?

இல்லை. நீங்கள் சரியான நேரத்தில்தான் வந்திருக்கிறீர்கள். சிறப்பு விருந்து இப்போது நடைபெறும்" என்று அசட்டுச் சிரிப்போடு தோழன் சொன்ஞன்.

அது கண்ட துரைக்குச் சிறிது சந்தேகம் தோன்றிற்று.

'என்ன நண்பா, நீ சொல்வது ஒன்றும் விளங்கவில்லையே? எங்கே மற்ற விருந்தினர்கள்?'

"துரைகளே, நீங்கள் ஒருவரே ஆயிரம் விருந்தாளிகளுக்குச் சமானமானவர் அல்லவா? விருந்து தயார் ஆகிறது" என்று சொல்லிவிட்டு மறுநாற்காலியில் அவனும் அமர்ந்தான். அந்த அவமரியாதைச் செயலை அத்துரை விரும்பவில்லை.

உடனே தோழர் ஒரு காகிதத்தை எடுத்தான். ‘ துரையே, நான் சொல்வதைக் கவனமாகக் கேளுங்கள். நான் உல்லாச பவனத்திற்கு யுவதியை கூட்டி வந்தது இன்னிசை அரங்கு ஒன்றிற்குத்தான். நீங்களோ அத்து மீறி அவளை துராக்கிரகம் செய்ய எண்ணினீர். உண்மையா அல்லவா ?

‘ஆனால் அதற்கென்ன ?’

‘அதற்கென்னவா ? அவளை நீங்கள் தொடலாமா ?’

‘அவள். பாட்டுக்காரி தானே, பாட்டுக் காரியைத் தொட்டால் என்ன தப்பு ?’

‘அவள் வெறும் பாட்டுக்காரி அல்ல. என்மனைவி. தற்கால வழக்கப்படி இல்லறத்தாரும் பணத்திற்காகச் கச்சேரிக்குப் போகலாம். அந்த வகையில் அவள் வந்தாள். அப்படியிருக்க அவளை நீர் எப்படித் தொடலாம் ?’

‘அவள் உம்மனைவி என்றதற்கு என்ன அறிகுறி?’

‘இதோ பாரும் இந்த ரிஜிஸ்டர் சாசனம். இதனைப்படியும்’ என்று சொல்லி சாசனத்தை முன் நீட்டினான்.

அந்த சாசனத்தின்படி அது சரி என்று துரை கண்டான். அவனுக்கு என்ன சொல்வது என்று தோன்றவில்லை. மௌனம் சாதித்தான்.

‘ துரை, உமக்குச் சொத்தும் பணமும் பட்டயமும் இருக்கலாம். அவைகளால் எனக்கு என்ன? என் மனைவியை நீர் தீண்டிவிட்டபடியால் எனக்குப் பெருத்த மானபங்கம் ஏற்பட்டிருக்கிறது. இதோ பாரும் எதிரே உள்ளது ரவை நிரப்பி உள்ள துப்பாக்கி. உம்மை இப்போதே மறு உலகிற்கு அனுப்பிவிட்டு மறுவேலை பார்க்கிறேன் ?’ என்று சொல்லித் துப்பாக்கியை எடுத்தான்.

துரை நடுநடுங்கிவிட்டான். சுற்றிலும் பார்த்தான். கதவுகள் பூட்டப்பட்டிருந்தன.

‘ஐயா, நான் செய்தது தப்புதான். என்னைக்கொல்ல வேண்டாம். நீர் சொன்னபடி கேட்கிறேன்.’

‘அப்படியாயின் என் மானநட்டம் கொடுத்தால் விடுகிறேன்’

‘எனக்கு ஒரு லட்சம். என் மனைவிக்கு ஒரு லட்சம் கொடுத்தால் விட்டு விடுகிறேன்.’

‘இரண்டு லட்சமா ? எங்கே பணத்திற்குப் போவது ? யார் கடன் கொடுப்பார்கள் இந்த நாளில் ?’

‘எங்களுக்குப் பத்திரம் எழுதிக்கொடுங்கள்.’

‘சரி இருவருக்குமாக ஒரு லட்சம் கொடுக்கிறேன்.’

‘போதாது.’

‘நான் என்ன செய்வது ? சுட்டுவிடுங்கள்.’

‘சரி பாவம், தொலையட்டும், எழுதிக்கொடுங்கள் ஒரு லட்சத்திற்காவது.’

உடனே பேனா, கொடுக்கப்பட்டது. தோழனுக்கு ½ லட்சம் யுவதிக்கு ½ லட்சம் பத்திரம் எழுதிக் கையெழுத்துப்போட்டுக் கொடுத்தான்.

‘இதனை எவரிடமும் சொல்லக்கூடாது’ என்று இரு திறத்தார்களும் வாக்குத்தத்தம் செய்துகொடுத்த பிறகு கதவு திறக்கப்பட்டது. துரையும் வீடு சென்றான். அன்று அவன் தூங்கினனோ ?

* * * *

மூன்று மாதங்கள் கழிந்தன. யாதொரு நடவடிக்கையும் நடக்கவில்லை. எல்லாரும் மவுனம் சாதித்தார்கள். நடந்த விஷயத்தைத் துரையோ மறக்கத் தொடங்கினான். ஆனல் தோழனுக்கோ கவலை ஏற்பட்டது. என்ன என்பீர்களோ ? தான் மிகவும் சிரமப்பட்டு எழுதிவாங்கின பத்திரங்கள் பலன் விளைக்குமோ என்பதுதான்.

ஒரு லக்ஷம் ரூபாய்க்குப் பத்திரங்கள் எழுதி வாங்கின வகையில் மிகவும் சந்தோஷம் தான். ஆனால் அவைகள் வெறும் பத்திரங்கள்தானே. ஈடு எதுவும் கிடையாதே. துரைக்கோ நாளுக்கு நாள் விஷம் ஏறினாற்போல கடன் ஏறிக்கொண்டு வருகிறது. அப்படியிருக்கச் சொத்து முழுவதும் கடனில் முழுகிவிட்டால் பின்னர் வெறும் பத்திரத்திற்கு என்ன ஆதரவு உண்டு என்று மிகவும் கவலைப்பட்டான். நாள் ஆக ஆக கவலை அதிகரித்தது. இரவு முழுவதும் தூக்கமே இல்லை. பகல் முழுவதும் ஒரே ஏக்கம், எந்த வேலையையும் செய்ய முடியவில்லை. இப்படி சில நாள் கழிந்தன.

ஆனால் தோழனே கூர்மையான புத்தியுள்ளவன். எப்படியாவது ஈடுபெற்றே முடிக்கவேண்டுமென்று எண்ணினான். தன் தோழர்களோடும் தீர ஆலோசித்தான். ஒரு முடிவிற்கு வந்தான். அம் முடிவை செயல்முறைக்குக் கொண்டுவர முயற்சித்தான். அதற்காக அவனுடைய தோழர்கள் சகாயமும் வாக்குமளித்தார்கள்.

தோழன் அது முதல் துரையின் போக்கு வரவுகளைக் கூர்மையாகக் கவனித்தான். உளவு சொல்ல ஒன்றிரண்டு ஆட்களையும் அனுப்பி வைத்தான். வெகு எளிதில் துரையினுடைய அன்றாட நிகழ்ச்சிகளை அறிந்துகொண்டான். ஏதோ காரியம் இருப்பதாகச் சொல்லித் துரையைப் பார்க்கவும் சென்றான். தன் யுவதியின் காலட்சேபம் துரையின் வீட்டில் நடத்துவதற்கு ஏற்பாடும் செய்தான். துரையோ பஞ்சதந்திரத்து நீள் செவியனின் குணத்தைக் கொண்டவன். பழைய சம்பவத்தை மறந்துவிட்டு, இந்தப் புது ஏற்பாட்டை ஏற்றுக்கொண்டான். ஒன்றிரண்டு காலட்சேபங்களும் நடந்தன.

* * * *

தோழன் இவ்விதமாகத் துரையின் வீட்டிற்குச் சென்று கொண்டிருக்கையில் துரையினுடைய போக்கு வரவுகள் முழுவதையும் எளிதில் அறிந்து கொண்டான். ஒருநாள் துரை உல்லாச பவனத்திற்குச் செல்லுவதாகத் தகவலும் கிடைத்தது. அதனை சமயல்காரன் மூலமாக அறிந்து கொண்டான் தோழன். அந்தச் சமயத்தை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று நினைத்தான் தோழன். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை எல்லாம் செய்தான்.

துரை சகல ஏற்பாடுகளுடன் உல்லாச பவனம் சென்று தங்கியிருந்தான். இரண்டாவது நாள் தோழன் தன்னுடைய அந்தரங்க நண்பன் ஒருவனோடு உல்லாச பவனத்திற்குப் புறப்பட்டான். போகும் போதே செய்யவேண்டிய காரியங் களுக்குத் தகுந்த, சாமான்களை ஒரு சிறு பெட்டியில் வைத்துக்கொண்டு சென்றான். அவன் வரவை துரை எதிர்பார்க்கவில்லை. ஆனாலும் எதையும் மறுக்கவும் முடிய வில்லை. அவனுக்கு வரவேற்பு தந்து ஓர் அறையை ஒழித்து விட்டான். தோழனும் அவனுடைய நண்பனும் அன்று அதில் தங்கினார்கள். அன்று முழுவதும் தோழன் உளவு பார்த்தான். உல்லாசபவனத்தில் சமயல்காரனும் மற்றொருவனையும் தவிர வேறு ஒருவனும் இருக்கவில்லை. இந்தச் சமயத்தில் தன் காரியத்தை நிறைவேற்றிக்கொள்ள வேண்டும் என்று தோழன் எண்ணினான்.

பூந்தோட்டத்தில் பழமரங்கள் எல்லாம் மலைச் சரிவு களில் வெகு அழகாக முளைத்திருந்தன என்று முன்னமே அறிவோம். இரண்டு சரிவுகளுக்கு நடுவில் உள்ள பள்ளத் தாக்கில் ஓர் அழகிய நீர் ஓடைக்கு மறுபுறத்தில் ஒரு பூப்பந்தர் அழகாக அமைந்திருப்பதை முன்னமே கூறியிருக்கிறோம். மறுநாள், காலை எழுந்தவுடன் எவருக்கும் தெரியாமல் தோழன் தன் சிறு பெட்டியை எடுத்துக்

கொண்டு போய் அந்தப் பூப்பந்தலில் ஒளித்து வைத்து விட்டு வந்தான். துரை எழுந்துவருவதற்கு முன் பவனத்திற்கு வந்துவிட்டான். காலை சிற்றுண்டி அருந்தினார்கள். அப்போது தோழன் துரையுடன் பூப்பந்தலிலே சிறிது நேரம் உல்லாசமாக பொழுது போக்குவோம் என்று கூறினான். முன்பின் அறியாத துரையும் ஒத்துக் கொண்டான். தோழனும் நண்பனும் துரையும் ஆக மூவரும் பூப்பந்தலில் சென்று சிறிது நேரம் உட்கார்ந் தார்கள்.

* * *

தோழன் பல செய்திகளைப் பற்றியும் சிறிதுநேரம் பேசிவிட்டு மெதுவாக எழுந்து தான் ஒளித்து வைத்திருந்த கைப் பெட்டியை எடுத்துவந்து ஒரு சிறு மேஜையின் பேரில் வைத்தான். அதைத் துரை கவனிக்கவில்லை. ஏதேதோ பேசிக்கொண்டு திராட்சை ரசமும் அருந்தினார் கள். துரையோ சிறிது அதிகமாகக் குடித்துவிட்டு நாற் காலியில் சாய்ந்தான்.

அச்சமயம் பார்த்துத் தோழன் தான் எண்ணின காரியத்தைச் செய்யத் தொடங்கினான். கைப்பெட்டியைத் திறந்து சில பாத்திரங்களையும், கைத் துப்பாக்கியையும் எடுத்து வைத்தான். பிறகு பேசத் தொடங்கினான்.

'துரையே முந்தி செய்த குற்றத்திற்குத் தண்டனை அனுபவித்தீர். மறுபடியும் ஏன் குற்றம் செய்ய வேண்டும்' என்று கேட்டான்.

துரை திடுக்கிட்டு எழுந்து நிமிர்ந்து உட்கார்ந்து 'நான் எப்போது என்ன குற்றம் செய்தேன்' என்று கேட்டான்.

"யுவதியைக் கற்பு அழிக்க முயன்றதற்காக ஒரு லக்ஷத்திற்கு எழுதிக் கொடுக்கவில்லையா ? அந்தக் கடன் இன்னும் தீரவில்லை, அதற்குள்ளாக சென்றவாரம் தங்கள்

மாளிகையில் அவள் பாடவந்தபோது மீண்டும் கற் பழிக்கலாமா ?" என்று கேட்டான்.

" நான் அவள் அருகிலேயே போகவில்லையே " என்று மன்றாடினான் துரை.

"ஏன் பொய் சொல்லுகிறீர்கள்? யுவதி அதைப் பற்றிச் சொன்னாள். அவள் பொய்சொல்ல மாட்டாள் " என்றான்.

" ஏன் இந்த அபவாதம்! உங்களுடைய தீக்குணத்தை இன்றுதான் அறிந்தேன் " என்றான் துரை.

" தீக்குணமோ பேய்க்குணமோ இதோ எதிரே பாருங்கள். கைத்துப்பாக்கி ரவை நிரம்ப உள்ளது. அருகில் இரண்டு பர்லாங்கிற்கு யாரும் இல்லை. ஒரு நொடியில் காக்கை கழுகுகளுக்கு இரையாகப் போகிறீர்கள். சம்மதமா ?" என்று மிரட்டினான் தோழன். வில விலத்துப் போனான் துரை.

" சரி என்ன வேண்டும் ? பணம் தானே எழுதிக் கொடுக்கிறேன் " என்றான் துரை.

" அதெல்லாம் முடியாது. முந்திய கடனைக் கோட் கண்டு உல்லாசபவனத்தை யுவதிபேரில் கிரையம் செய்ய வேண்டும். இல்லாவிடில் சம்மதிக்க மாட்டேன் " என்றான்.

" அதெல்லாம் முடியாது " என்றான் துரை.

" முடியா விட்டால் இதோ பாருங்கள் " என்று சொல்லிக் கைத்துப்பாக்கியை எடுத்து அருவியின் பக்கம் ஒரு வேட்டு எழுப்பினான். மிகுந்த ஒலி இல்லாமல் குண்டு பாய்ந்தது. அங்கே ஓடிக்கொண்டிருந்த ஒரு பன்றியின் மீது பட்டு அது துடித்து விழுந்து இறந்தது. பார்த்தான் துரை. பதறினான்,பன்றி துடித்ததைக் கண்டு வெகுண்டான்.

" சரி எங்கே கை எழுத்து இடவேண்டும் முடித்து விடுங்கள் " என்று அழுகுரலோடு சொன்னான்.

தோழன் முந்தியே தயாரித்துக் கொண்டு வந்திருந்த பத்திரத்தைத் துரையின் எதிரில் வைத்தான். துரை கை எழுத்திட்டான். தோழனும் நண்பனும் சாட்சி போட்டார்கள்.

தோழன் அப்பத்திரத்தைத் தன் பெட்டியில் பத்திரமாக வைத்துக்கொண்டு துப்பாக்கி எடுத்துக்கொண்டு துரையை முன்னாலே நடத்திக்கொண்டு சென்றான். உலக நினைவே சிறிதுமின்றி மெய்மறந்து நடந்தான் துரை. பவனம் சேர்ந்ததும் தன் படுக்கையில் படுத்துக்கொண்டான். தோழனும் நண்பனும் உல்லாசபவனத்தை விட்டு உடனே புறப்பட்டுவிட்டனர்.

துரை கை எழுத்திட்ட பத்திரத்தின் படி உல்லாச பவனம் முழுவதும் பழைய கடனுக்காக யுவதியின் பேரில் எழுதிவைக்கப்பட்டிருந்தது. பாவம், துரை அன்றுமுதல் அண்டப்பாப்பர் ஆகிவிட்டான். சொல்லவொண்ணா ஏக்கம் கொண்டு அடுத்த நாள் தன்னுடைய நாட்டுப்புற இல்லத்திற்குச் சென்றான்.

* * *

இப்போது தான் ஜமீன்தார் துரைக்கு உணர்ச்சி வந்தது. தன் பாளையப்பட்டு வழக்கறிஞரை அழைத்து வரும்படி ஆள்விட்டான். வழக்கறிஞர் அவனுடைய தந்தையார் காலம் முதல் பாளையப்பட்டிற்கு நன்னம்பிக்கையோடு உழைத்தவர். நடந்த சங்கதிகள் முழுதும் கேட்டார். உடனே ஒரு பிராது எழுதினார். துரையிடம் கையெழுத்து வாங்கிக்கொண்டு நேராக போலீசு அதிகாரியிடம் சென்றார். பிராது தாக்கல் செய்யப்பட்டது.

போலீஸ் அதிகாரி ஓர் இளைஞர். ஊக்கத்தோடு வேலை செய்பவர். வழக்கு பெரியதாய் இருப்பதை அறிந்து உற்சாகத்துடன் வேலை செய்தார். அதனால் தனக்கு நல்ல

பேர் கிடைக்கும் என்று உணர்ந்தார். உடனே பிராதை எடுத்துக்கொண்டு நீதிபதியிடம் உத்திரவு பெற்றுத் தோழனுடைய வீட்டைச் சோதனை செய்தார். தோழன் இதனை எதிர் பார்க்கவில்லை. பத்திரங்களையும் மறைத்து வைக்க நேரமில்லை. எல்லாப் பத்திரங்களும் அகப்பட்டன. தோழனும் நண்பனும் கைதி செய்யப்பட்டார்கள்.

விசாரணை தொடங்கிற்று. தோழன் சும்மா தலை கொடுக்க மாட்டான் அல்லவா? பிரபல வழக்கறிஞர்களை ஏற்படுத்தி வாதாடினான். ஜமீன்தாரனும் மிகுந்த செலவு செய்யவேண்டி வந்தது. குற்றவாளிகளுக்குச் சிறைத் தண்டனை கிடைத்தது. மேல் நீதிமன்றங்களிலும் வாதாடினார்கள். ஆனால் தண்டனை ஊர்ச்சிதமாயிற்று.

ஜமீன்தார் துரைக்கு என்ன முடிவு ஏற்பட்டது? சொத்துக்கு மேல் கடன் ஏற்பட்டதுதான் லாபம். தான் எழுதிவைத்த கிரயீம் ஊர்ச்சிதமாகவில்லை. யுவதியோ சும்மா இருக்கவில்லை. சிவில் வியாச்சியம் தொடங்கினாள். அதற்கும் துரைக்கு மிகுந்த செலவு ஆயிற்று. நல்ல காலமாக துரை செயித்தான். மானம் போயிற்று. அதனோடு சொத்தும் தொலைந்தது. இது என்ன உலக ரீதியோ! யார் விடை கூறுவார்கள்?

18. காமம் என்ன செய்யாது

கருநாடகப் பிரதேசங்களிலிருந்து ஒரு பாகவதர் எங்கள் ஊருக்கு விஜயம் செய்தார். இராம நாமமே அவருடைய ஒப்பற்ற கோட்பாடு. அதுவே ஜென்மசாபல்யம் தரும் என்று சொல்லி இராமபஜனை செய்வார். அப்பஜனை அகோர பஜனைச் சொரூபத்தில் விளங்கும். 'ராம் ராம் சிதாராம்', "விட்டலே. விட்டலே ஜயஜய விட்டலே"

என்பதைப் போன்ற இராமநாம சப்தங்களை இடைவிடாமல் கத்துவதும், மெதுவாகத் தொடங்கி உச்சச் சுரத்தில் ஏற்றி முடிப்பதுமே அப்பஜனையின் செயல் ஆகும். வந்த பாகவதரோ தன்னோடு தம்பூரா முதலிய இசைக்கருவிகளைப் பக்க வாத்தியங்களாகக்கொண்டும் தனியாகவும் பஜனை செய்வார். பஜனைக்கு வருகிற மக்கள் எல்லாரையும் ஆனந்தபரவசம் ஆக்கித் தன்னோடு சேர்த்துப் பஜனையில் ஈடுபடச் செய்வார். இப்பஜனைக்கு சங்கீத ஞானம் வேண்டியதில்லை. அன்பு பரவசமே போதுமானது. இந்த அகோர பஜனை அனேக மணிக்காலம் நடக்கும். ஒவ்வொரு தடவை இரவு முழுதும் நடைபெறுவது உண்டு. இதன் தொனியையும் ஆட்டத்தையும் கண்டு இப்பாகவதர் பெயர் 'ராம்தடாக் பாகவதர்' என்று நிலைத்துவிட்டது.

கருநாடக நாட்டு மடாதிபதிகள் திக்கு விஜயம்செய்து தம் சிஷ்யவர்க்கங்களிடமிருந்து பாதகாணிக்கை பெற்று வருவது போல இந்தப் பாகவதரும் தென்னாட்டில் திக்கு விஜயம் செய்து எங்கள் ஊருக்குத் தம் புனித பாதசேவை தர விரும்பிவந்தார். உடனே அவருக்கு ஒரு கோஷ்டி சேர்ந்துவிட்டது. அக்கோஷ்டி நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே வந்தது. இந்தப் பாகவதர் வெறும் ராம் ராம் பஜனைமட்டும் செய்வதில்லை. பக்த லீலைகளும் செய்வார். தன்னைக் காதலியாகப் பாவித்து இறைவனைக் காதலனாகக் கொண்டு அவனோடு யமுனா தீரத்திலே மண்டலம் சுற்றுவது போலச் சுற்றுவார். எந்த வாலிபன் முன்வந்தாலும் கை கோர்த்துச் சுற்றுவார். வந்த வாலிபன் பிரமையடைந்து வீழ்வானே ஒழிய பாகவதர் விழவேமாட்டார். வயதானவராக இருந்தாலும் நூற்றுக்கணக்காகச் சுற்றினாலும் சிறிதேனும் பிரமை அடையமாட்டார். இது இவரிடம் ஓர் அற்புதமாகக் கருதப்பட்டது. இளைஞர், வாலிபர், நடுவயதினர்

முதியவர் இருபாலாரும் கூட்டம் கூட்டமாக இவருடைய பஜனை கோஷ்டிகளுக்கு வருவார்கள். ராம்தடாக் மக்களிடை விளைவித்த அன்பு நிலையைக் குறித்துக் கூறவே முடியாது. ஏழைகளே யன்றி மிகுந்த செல்வவான்களும் இதில் ஈடுபட்டார்கள். எங்கள் ஊர் பண்டரீபுரமே ஆய் விட்டதோ, எங்கள் காலம் கருநாடக பக்தர் காலமே ஆய் விட்டதோ, என்றும் மயங்கவேண்டியதாயிற்று.

ராம்தடாக் நடத்துவதற்குப் பாதகாணிக்கை தர வேண்டும். அக்காணிக்கையின் திட்டமும் இடத்திற்கு ஏற்றபடி இருந்தது. நெருங்கிய சிஷ்ய வர்க்கத்தினர் இந்த பஜனைகளைப் பல தனவந்தர்கள்வீட்டில் நடத்த முயன்றார்கள். நாட்டுப் பழக்கத்தையொட்டி அவ்வாறு நடத்த எவரும் மறுக்கத் துணியவில்லை. பாகவதர் பஜனைகள் நகரெங்கும் பரவத் தொடங்கியது. அவ்வாறு ஆங்காங்கே பஜனைகள் நடந்தேறியதில் சில மக்கள் தொடர்ந்தாற்போலத் தவறாமல் செல்லுவார்கள். பாகவதர் அந்தணர். கூடச் செல்பவர்கள் பெரும்பான்மையாக அந்தணர்களே. பிற சமூகத்தார் நடத்தும் பஜனைகளுக்கும் செல்வார்கள். அவ்வாறு சென்று கொண்டிருந்த பக்த ஜனங்களுக்கு ஓர் அழகிய இளைய வாலிபன் தவறாமல் அதில் ஈடுபட்டுச் செல்வான். அவன் ஒரு மிகச் செல்வக் குடும்பத்தைச் சேர்ந்த அந்தண வகுப்பு வாலிபன். இவனும் இந்த பக்தி வலையில் அகப்பட்டுப் பாகவதருடன் திரிகிறானே, இவன் நாளாவட்டத்தில் இந்த அழகிய பருவத்தில் துறவியாகி விடுவானோ என்று பலபேர் எண்ணினார்கள். மீராபாய் போலும் துகாராம் போலவும் போய்விட்டால் என்ன ஆகுமோ என்று மக்கள் பேசிக் கொண்டதுண்டு. அவ்வித ராம்தடாக் பஜனைகள் எப்போதும் நடைபெறுமா? காணிக்கைகள் கொடுப்பவர்கள் எல்லாம் கழிந்துபோகப் பாகவதர் மற்றொரு ஊருக்குத்

திக்விஜயத்தின் பொருட்டுச் சென்ருர். அவருடைய கொள்கைகளை காடுமுற்றும் பரப்பவேண்டாமா ? எங்கள் ஓர் ஊர்மட்டும் புண்ணியம் செய்யவேண்டுமா ? ஏனைய ஊர்கள் செய்யவேண்டாமா என்ருர்கள் ராம்தடாக் சீடர்கள். எங்கள் ஊரில் பேரொலி இறைச்சல் ஒருவாறு ஓய்ந்தது.

* * * *

எங்கள் வட்டத்திலேயே அதிகமான நிலவரி செலுத்தும்படியான குடும்பம் ஒன்று இருந்தது. அது அந்தணக் குடும்பம். குறுநில மன்னர்களாகிய பாளையப்பட்டுக்களி லும் மிகுதியாக நிலவரி செலுத்தினுல் அதன் பெருமையை யும் செல்வாக்கையும் மிகைப்படுத்திக் கூறவேண்டியதில்லை. அக்குடும்பம் பெரிய குடும்பந்தான். தலைவர் மிகுந்த சிறப் போடும் அரசியலில் மிகுந்த செல்வாக்கோடும் வாழ்ந்து வந்தார். அடக்கி ஆளும் ஆற்றல் கொண்டவர். ஆகவே குடும்பம் வெகு அமைதியுடன் இருந்தது. அவருக்குப் பின் அடுத்த மூத்தமகன் வெகுநாள் வாழவில்லை. அவனுக் குப் பிந்தி இருந்தவர்கள் ஆற்றலில்லாதவர்கள். ஆகவே குடும்பப் பிரிவினை ஆகிவிட்டது. என்ருலும் ஒவ்வொரு பங் குக்கும் வந்த சொத்துக்கள் அளவுகடந்தே இருந்தன. செல்வாக்கும் குறையவில்லை. பங்குக்காரர்கள் இளையவர் கள். படிப்பு இல்லை. புத்திமதி சொல்ல பெரியவர்களும் இல்லை. அடக்கியாளத் தலைவர்களும் இல்லை. ஆகவே அக்குடும்பம் என்ன நிலையில் இருக்கும் என்று சொல்லவும் வேண்டுமா ?

பிரிவினை அடைந்து தன்னந்தனியாகச் சொத்துக்களைப் பெற்ற பங்குக்காரர்கள் தம் இச்சைப்படி டாம்பீகங்களில் வாழத் தொடங்கினுர்கள். விலையுயர்ந்த விசைவண்டிகள், இன்பம்ததும்பும் மாளிகைகள், தெவிட்டாத நல்லுணவுகள், எவரையும் மயக்கும் பானங்கள், இன்னிசைக் கூத்தாட்டங்

கள் இவைகள் புகுந்தன என்றால் மதனனுடைய சேஷ்டைகள் எட்டாமற் போகுமோ ? குறைவற்ற வளமும் இளமையும் இருந்தால் மதனனுடைய கூட்டுறவு வராமல் நிற்குமா ? என்ன நடந்தது பார்ப்போம்.

செக்கச் செவேல் என்ற உருவம்கொண்ட வாலிபன் ; சாமூத்திரிகா லட்சணங்களில் சிறிதும் குறைபாடில்லாதவன் ; யவ்வனம் தாண்டவம் ஆடிக்கொண்டிருக்கிறவன் ; வசிக்கும் பவனத்தில் சகல இன்பங்களை ஈட்டவல்ல பொருள்களைக் கொண்டுள்ளவன் ; தற்காலத்து நவநாகரீக முறையில் ஈடுபட்ட பல இளைய நண்பர்களின் நட்புரிமை பெற்றவன். அப்படிப்பட்ட ஒப்பற்ற செழிப்புகளைக் கொண்டவன் மூன்றில் ஒருபங்குக்கு முழு உரிமையும் பெற்று இன்ப வாழ்வில் திளைத்துக்கொண்டிருந்தான். இப்படிப்பட்ட செல்வவந்தனுக்கு யார்தான் தம்பெண்ணைத் தா இசையமாட்டார்கள். பல்லாயிரக்கணக்கில் முன்வருவார்கள் அல்லவா ? ஆனால் சொந்தம் என்ற பாசம் விடுமா? சொந்தத்திலேயே ஓர் அழகிய பெண்மணி வாய்த்தாள். இரதியும் நாணத்தக்க வனப்பு வாய்ந்த குணவதி. நாற்குணமும் நாற்படைகளாகப் பெற்றவள் என்று புகழ ஒரு புகழேந்தி வேண்டியதில்லை. இயற்கையிலேயே பெற்றவள். போதாக் குறைக்குப் படிப்பும் பெற்றவள். மணமகனைவிட மணமகளே கலைமகளின் பிரீதியைப் பெற்றாள் என்றால் வேறு குணாதிசயங்களைக் கூறவும் வேண்டாம். இந்தவகை செழிப்புக்கள் இருந்தால் இல்லறம் எத்தனை ஒழுங்காக இருக்கும் ? கூறவும் வேண்டுமா ?

பரிபாலிக்கவேண்டிய சொத்துக்கள் நிரம்ப இருந்தபடியால் ஒரு முதலாளிக்கு அந்தவேலையே போதுமானது. குடித்தனமும் நன்கு வளரும். உலகில் பெற்றோர்கள் வைத்துவிட்டுப்போன சொத்தை அழிக்காமல் வைத்திருப்

பதே ஓர் அரிய செயல் என்று கூறவேண்டாமா ? ஒரு மகன் தான் புதிதாகச் சம்பாதிக்கவேண்டியதில்லை. பெற்ரோர்கள் யாதொன்றையும் வைக்காமல் போனால்தான் புதிதாக ஈட்டவேண்டும். பெற்ரோர்கள் நிரம்ப வைத்து விட்டுச் சென்ருல் அதன்மேலும் தான் சம்பாதிக்கவேண்டும் என்று பேராசைப்படுகிறவன் முட்டாள் என்று கூறிஞல் என்ன தப்பு ? அவ்விதம் ஆசைப்படுகிறவன் யாதொன்றும் சம்பாதிக்காமல் பெற்ரோர் வைத்துவிட்டுச் சென்ற சொத்தையும் கூடப்போட்டுவிடுகிருன் அல்லவா ? இதுவே உலக அனுபவம். ஆகவே பெற்ரோர் வைத்து விட்டுச் சென்றதை எவன் அழிக்காமல் வைத்திருக்கிருனே அவனே மேதாவி என்று சொல்ல வேண்டாமா ? அந்த நிலையில் நமது கதாநாயகன் இருந்தானு என்பதை இனி வரும் கதை கூறிவிடும். எப்போது நவநாகரீக நண்பர்கள் நட்டுறவு கிடைத்ததோ அப்போதே அந்தக் குடும்பத்தின் போக்கு சரியானதா என்று கூறமுடியாதா ? நமது அருமந்த செல்வந்த பங்காளன் என்ன நிலை அடைந்தான் ? அதை இனிக் காண்போம் :

நவநாகரீக நண்பர்களுடன் ஆடல் பாடல் பந்தாட்டம் சீட்டாட்டம் வைத்துக்கொண்டால் பொழுது போவது வெகு எளிது அல்லவா ? பகலை இரவாகவும் இரவைப் பகலாகவும் மாற்றுவதும் எளிது. அதற்கு ஒரு விசுவாமித்திரனே இராவணனே வேண்டியதில்லை. அத்தியந்த நண்பர்களே போதுமானவர்கள். சீட்டுக்கட்டு,மதுக்கிண்ணி, சிறு சுருட்டுப் பெட்டி இவைகள் இருந்தால் போதும். வேறு இரசாயன வித்தையும் விஞ்ஞான சோதனையும் வேண்டவே வேண்டாம். நமது கதாநாயக அந்தண சிரோன்மணி இச்சிறு பொருள்களின் உதவியால் பண்டைப் புராணங்களில் கண்ட தானவப் பண்புகளை அடைந்துவிட்டான்

என்றால் அது அதிசயோக்தி அல்ல. விருந்து இல்லாநாள் இல்லை. மதுபானம் இல்லாவிருந்து இல்லை. இன்னிசை சேரா மதுபானம் இல்லை. நாட்டியம் இல்லா இன்னிசை இல்லை. பந்தாட்டம் தொடரா நாட்டியம் இல்லை. சீட்டாட்டம் தொடரா பந்தாட்டம் இல்லை. பந்தயம் வாங்கா சீட்டாட்டம் இல்லை. இந்தவகையில் நாட்கள் கழிந்தன.

ஒரு பந்தயப் பந்தாட்டம் ஏற்படுத்தப்பட்டது. அதற்குப் புதிய பந்துகள் தேவை என்று அறிவிக்கப் பட்டது. புதிய பந்துக்களுக்குச் சென்னைக் கெழுதி வர வழைப்பது என்றால் நாள் இல்லை. ஆகவே உள்ளூரில் உள்ள ஒரு கடைக்குச் சென்றார்கள் கதாநாயகனும் அவனுடைய நண்பர்களும். அந்தக் கடையில்தான் விதவிதமான இரப்பர் பந்துகள் இருந்தன. அவைகளை நன்கு பரிசோதித்து நல்ல பந்துக்களைத் தேடி எடுக்க வெகு நேரம் பிடித்தது. கடைக்காரனும் நாகரீகச் சீமான்கள் வந்து விஜயம் செய்துள்ளார்கள், இதுவரை விலையாகாப் பொருள்களையும் வட்டி சேர்த்து விற்றுவிடலாம் என்று எல்லாவற்றையும் விவரமாகக் காட்டினான். நேரம் போனது தெரியவில்லை. கடைக்காரன் கடையின் பின்புறத்திலேயே குடியிருந்தான். உணவு கொள்ளும் நேரமும் ஆகிவிட்டது. உள்ளே இருந்து கதவைத் திறந்துகொண்டு அவன் மகள் கடைக்கு வந்து 'அப்பா, நேரம் ஆய்விட்டது. அம்மா சாப்பிடக் கூப்பிடுகிறாள் வா' என்று இனிய குரலில் அழைத்தாள். அக்குரலைக் கேட்டதும் திரும்பிப்பார்த்தான் கதாநாயகன். நல்ல அழகும் வயதுவந்த வனப்பும்கொண்ட ஒரு வனிதை அவ்வாறு பேசினாள் என்று அறிந்து கண்கொட்டாமல் பார்த்தான். கடைக்காரன் 'போ, அம்மா வருகிறேன்' என்று விடைகூற அவள் கதவைச் சாத்திக்கொண்டு உள்ளே மறைந்துவிட்டாள். ஆனால், கதாநாயக அந்தண வாலிப

னுக்கோ அவள் உருவம் மனக்கண்ணிலிருந்து மறையவில்லை. அவள் இனிய குரலும் காதிலிருந்து நீங்கவில்லை. ஒன்றிற்கு இரட்டத்தனை விலைகொடுத்துப் பத்தத்தனை பந்துகளை வாங்கிக்கொண்டு நண்பர்களுடன் வீடுதிரும்பினன்.

* * * *

அன்று மாலை நடந்த பந்தாட்டத்தில் கதா நாயகனுக்கு எப்படி ஆர்வம் ஏற்படும்? பந்துக்கும் தடுப்புக்கும் சம்பந்தம் அற்றுப்போய்விட்டது. பந்துக்குப்பதிலாக ஒரு பெண்ணின் முகம் தெரிந்தால் பந்துக்கு எப்படி அடிபடும், நண்பர்களுக்கும் யாதொரு பொருளும் விளங்கவில்லை. அவர்கள் மற்ற ஆட்டத்தை நிறுத்திவிட்டு வீடு சேர்ந்தார்கள். இரவில் உணவு நஞ்சுபோல இருந்தது. தூக்கமும் சிறிதும் வரவில்லை. ஒரு நவீனகம் படிக்க முயன்றான். பக்கங்களில் கதைக்குப் பதிலாக ஒரு பெண்ணின் ஓவியமே கண்டான். இந்த நிலைமையை அதிவீரராமபாண்டியனால் சந்திராலம்ப படலம் முதலிய வருணனைகள் கொண்டு நன்றாக வருணித்து விடுவான். நம்மால் முடியுமோ ?

செல்வவந்தனின் மனப்போக்கின் மாறுதல் கண்டு நண்பர்கள் விசாரம் உற்றார்கள். அத்யாத்ம நண்பன் ஒருவன் தந்திரமாக உளவை அறிந்துகொண்டான்.

'அன்று பந்து வாங்கினது முதல் உன் மனது பேதப்பட்டிருக்கிறதே ? உடம்புக்கு என்ன?'

'உடம்பிற்கு ஒன்றுமில்லையே.'

'உடம்பிற்கு ஒன்றுமில்லைதான். மனத்திற்கோ?'

'மனதிற்கும் ஒன்றுமில்லை.'

'அந்தக் கடையில் வாங்கின பந்து பிடிக்கவில்லை. வேறுபந்து வாங்க வேண்டும்.'

'சரி போகலாம்.' உடனே இருவரும் புறப்பட்டார்கள். வெகு நேரம் பந்துகளைத் தடுப்புகளைப் புரட்டிப் புரட்டிப்

பார்த்தார்கள். ஒன்றும் பிடிக்கவில்லை. கதவு திறக்கும் என்று நாயக்கன் நினைத்தான். கடைகாரன் உண்டுவிட்டு இருந்தபடியால் அது திறக்கச் சமயம் ஏற்படவில்லை. ஆனாலும் வெகு நேரம் கழித்து 5 பந்துகளை மூன்றத்தனை விலைகொடுத்தே வாங்கினார்கள். மறுநாளும் முந்திய பந்து சரியில்லை என்று சாக்குக் கூறி பந்து வாங்கச் சென்றார் கள். பந்து முழுவதும் வாங்கியாகி விட்டது. விரும்பின பந்து கிடைக்கவில்லை. கதாநாயகன் ஏக்கம் தீரவில்லை. பெருகிற்று. நண்பன் குட்டு அறிந்து கொண்டான். அப்பெண் ணைக் காட்டுவதாகத் தந்திரம் செய்வதாகச் சொல்லிப் பெரும் பணம் பெற்றுக் கொண்டான்.

கடைக்காரன் பணக்காரன் அல்ல. ஆனல் போதுமான வருமானம் உண்டு. யோக்கியன். குடும்பமும் யோக்கியக் குடும்பம். ஒரு வேளாளக் குடும்பம்; எவ்வாறு அந்தண னுடைய பேராசைக்கு அது ஈடுபடக்கூடும். ஆகவே நண் பனின் தந்திரங்கள் எளிதில் ஈடேறவில்லை.

நண்பன் எத்தனையோ தந்திரங்கள் செய்தான். பணத் தினல் ஆகாதது யாது என்று பெருமையாகப் பேசினான். ஆனல் அந்தப் பேச்சு பேச்சோடு நின்றது. பெண்ணின் தகப்பன், தாய், தமயன் இவர்களைப் பணத்தினல் இழுக்க முயன்றும் ஒன்றும் கைகூடவில்லை. பெண்ணோ பாட சாலையில் வாசித்துக் கொண்டிருந்தாள். பாடசாலைக்குப் போகும்போது அவளை ஒன்றிரண்டு முறை காட்டினான் நண்பன். ஆனல் அந்தக் காட்சிகள் கண்ணுடியில் கண்ட கிழி போல் இருந்தது. காமத்தை வளர்த்தினவே அன்றிக் குறைக்கவில்லை. வீட்டில் பஞ்சவர்ணக்கிளி இருக்க வெளியே பறக்கும் வெறும் பச்சைக் கிளியை இவன் ஏனோ விரும்பு கிறான் என்று கேட்டு விடாதீர்கள். அக்கேள்விக்குக் குட்டு மதனன் விடை தருவான்.

இப்படியே பல நாள் கழிந்தன. கதாநாயகனும் அன்பனும் செய்து கொண்டிருந்த சதிகள் கடைக்காரனுக்குத் தெரிந்தன. தன் குடும்ப மரியாதையைக் காக்கும் பொருட்டு வழி தேடினன். பணக்கார - துஷ்ட - வாலிபனுடைய பகை என்றால் அதன் வேகத்தை அளக்க யாரால் முடியும் ? ஆகவே, பெண்ணுக்குத் தக்கவான் தேடித் திருமணம் முடிப்பதே மேல் என்று கருதி அந்த செயலில் தகப்பன் புகுந்தான். இச்செய்தி கதாநாயகன் காதிற்கு எட்டியது. பெண்ணுக்குத் திருமணம் ஆகிவிட்டால் தன் பிரயாசை முழுதும் வியர்த்தம் ஆகிவிடும் என்று ஏங்கினன். வேறொரு தூர ஊரில் திருமணமும் நிச்சயிக்கப்பட்டது என்று செய்தியும் வந்தது.

காரியம் கைவிட்டு மீறிப்போகிறது என்று கண்டு தனது நண்பருடன் சதி செய்தான். மதி கெட்டுவிட்டது. செய்வது இன்னது என்று தோன்றவில்லை. தகப்பனே தடை என்று எண்ணி அவனைத் தொலைத்து விட்டால் மணம் நின்றுவிடும். பிறகு பெண்ணை அடையலாம் என்று மிகவும் விபரீதமாக முடிவு செய்தான். இப்படியும் ஆகுமோ என்று படிப்பவர்களே எண்ணுவீர்களோ ? உலகில் ஆகாதது எது இருக்கிறது ?

இரவு 9 மணி இருக்கும். கடைக்காரன் வீட்டெதிரே ஒரு மோட்டார் வண்டி வந்து நின்றது. அப்போதுதான் கடைக்காரன் உணவு அருந்திவிட்டுச் சற்று நேரம் இளைப்பாரிக்கொண்டிருந்தான். மோட்டாரில் வந்த ஒருவன் தாராளமாக வீட்டுக்குள்ளே புகுந்து தெரிந்தவன் போல் பேசினன். “ அண்ணு, தங்கை மகன் தெருவிலே போய்க்கொண்டிருக்க ஒரு போலீஸ் சேவகன் பிடித்துக் கொண்டான். விடமட்டேன் என்கிறுன். நீங்கள் வந்தால்தான் முடியும். ஒரு நண்பருடைய வண்டி கொண்டு வந்திருக்

கிறேன். 5 நிமிஷத்தில் திரும்பி விடலாம் வாருங்கள்" என்று அழைத்தான்."

கடைக்காரனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. தங்கை மகன் என்றால் யாருக்குத் தான் உணர்ச்சி தோன்றாது. உடனே எழுந்து மனைவியிடம் 5 நிமிஷத்தில் வந்து விடு கிறேன் என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டான்.

வண்டி புறப்பட்டது. இருட்டில் அது எங்கு போகிற தென்று தெரியவில்லை. வெகு நேரம் போய்க்கொண்டிருந் தது. கடைக்காரன் பின்னால் உட்கார்ந்திருந்தான். அழைக்க வந்தவனும் வண்டியோட்டியும் முன்னால் உட்கார்ந்திருந் தார்கள். இரவில் குளிர்ந்த காற்று அடித்துக் கொண்டிருந் தது. அன்று பகலில் கடைக்காரன் அதிக வேலை செய்து கொண்டிருந்து மிகுந்த ஆயாசத்தோடு உட்கார்ந்திருந்தான். காற்றும் ஜில் என்று அடிக்க அவனுக்குத் தூக்கம் வந்து விட்டது. ஆகவே வண்டி எங்கே போகிறது என்று அவன் தெரிந்து கொள்ளவில்லை.

வடக்கே வெகு தூரம் போய்க் கொண்டிருந்த வண்டி நிசப்தமான ஒரு காட்டின் நடுவிலே நின்றது. அது நின்ற அசைவில் கடைக்காரன் விழித்துக் கொண்டான். 'போலீஸ்காரன் எங்கே? அந்த இடத்திற்கு வந்துவிட் டோமா' என்று கேட்டான். மற்றவன் 'ஆம் வந்துவிட் டோம்; கீழே இறங்குங்கள்' என்று உரக்கச் சொன்னான் வண்டியோட்டியும். கடைக்காரனும் தூக்க வெறியோடு இறங்கினான். வந்த இடம் எது என்று அவனுக்குத் தோன் றவே இல்லை. மற்ற இருவரும் சட் என்று குதித்தார்கள். வண்டியோட்டி கையில் எதையோ எடுத்து கடைக்காரன் மண்டையில் ஓர் அடி அடித்தான். பாவம், கடைக்காரன் கீழே விழுந்தான். மற்றவன் கடைக்காரனைக் கால்பிடித்து

தாதர வென்று இழுத்து மோட்டார் வண்டியின் முன்னுல் கிடத்தினுன்.

உடனே வண்டியோட்டி வண்டி ஏறி வில்லே அழுத்தினுன். வண்டி விரைவாக ஓடி நிலத்தில் விழுந்தவன் பேரில் ஏறிற்று. மீண்டும் அவ்வண்டியை பின்னுல் அடித்தான். மறுபடியும் வண்டி ஏறிற்று. இவ்வாறு நான்கு ஐந்து தடவை அவ்வேழைக் கடைக்காரன்மீது வண்டியை முன்னும் பின்னும் அடித்தான். எப்பேர்ப்பட்ட பலசாலியானுலும் மோட்டார் வண்டியால் உந்தப்பட்டால் உடம்பு நிற்குமா ? எலும்பும் தோலும் நொருங்கிப் போய்விட்டது. பாதை யெல்லாம் ரத்தக் களறியாய் விட்டது. அந்தப் பாதகர்கள் வண்டியை நிறுத்தி விட்டுச் சவத்தை தூக்கிச் சென்ருர்கள். $\frac{1}{2}$ பர்லாங் தொலேவில் முன்னமே தோண்டப்பட்டிருந்த ஒரு குழியில் இட்டு மண்ணேப் போட்டு மூடிவிட்டார்கள். உடனே தெருவிற்கு வந்து இரத்தம் சிந்தப்பட்டு இருந்த இடத்தில் மண்ணேப் போட்டு மூடிவிட்டார்கள். இந்தச் செய்கை எல்லாம் கால் மணி நேரத்தில் முடிந்தது. எழுதுவதற்குத்தான் நேரமாயிற்று.

அந்தப் பாதகர்கள் உடனே வண்டியை திருப்பிவிட்டார்கள். வண்டி ஊர்ப்பக்கத்தில் வரவரத் தான் தாங்கள் செய்த காரியத்தை எண்ணத் தொடங்கினுர்கள். காரியத்தை முடித்து விட்டோம் என்ற மகிழ்ச்சி இருக்க இருக்க மறையத் தொடங்கிற்று. பழி செய்தோம் என்ற எண்ணம் வந்தது. உடனே, திகிலும் உண்டாயிற்று. வண்டியை நிறுத்திப் பார்த்தார்கள். சக்கரங்களும் அடிப் பாகமும் இரத்த மயமாய் இருந்தன. தங்கள் துணிகளிலும் ரத்தக் கறை இருந்தது. இவற்றைப் போக்க வேண்டும் என்று எண்ணினுர்கள். அதற்குள் ஊர் வந்துவிட்டது. ஊருக்குத் தென்புறமாக வண்டியை விரைவாக விட்டார்கள். பத்து கல்

சென்றதும் ஒரு ஓடை தென்பட்டது. அந்த ஓடையிலே வண்டியை நிறுத்தி அதனை நன்ருய்க் கழுவினுர்கள். தங்கள் துணிகளையும் நன்ருய்த் துவைத்துக்கொண்டார்கள். பிறகு ஊர் திரும்பினுர்கள். இந்தச் செய்தி எவரும் காண வில்லை.

* * *

கடைக்காரன் வீட்டில் அவனுடைய மனைவி வெகு நேரம் காத்துக் கொண்டிருந்தாள். அவன் வரவில்லை. இரவெல்லாம் ஒரே ஏக்கம். மறுநாள் காலையில் எழுந்து பார்த்தும் அவன் காணும். அன்று முழுவதும் காத்தும் பார்த்தார்கள். அவன் வரவில்லை. கடைக்காரனுக்கு நெருங்கிய பந்து ஒருவன் நல்ல செல்வாக்கில் வாழ்ந்து வந்தான். மனைவி அவனிடம் சென்று முறையிட்டாள். அவனும் கடைக்காரனைத் தேடுவதற்கு முயற்சிகள் செய்தான். போலீஸ்காரிடமும் பிராது சொல்லப்பட்டது. போலீஸ் காரரும் துப்பு விசாரித்தார்கள். முதலில் ஒன்றும் தெரிய வில்லை. பிறகு சிறிது சிறிதாக விஷயங்கள் தெரியவந்தன. கடைக்காரனுடைய பந்து தாராளமாகச் செலவழித்தான். ஒரு கை தேர்ந்த துப்பறிவாளன் நியமிக்கப்பட்டான். அவன் கண்ணும் கருத்துமாக வேலை செய்தான்.

அந்தணச் செல்வன் கடைக்கு வந்து போனதும் பந்து வாங்கினதும் காதல் கொண்டதும் முதலான விவரங்கள் வெளி வந்தன. நீதி மன்றத்தில் வழக்குத் தொடரப் பட்டது. வெகுநாள் விசாரணை நடந்தது. அந்தணனே செல்வம் படைத்தவன். ஆகவே மிகப் பிரசித்தி பெற்ற ஆங்கில வழக்கறிஞன் பெரும்பொருள் செலவில் நியமிக்கப் பட்டான். என்ருலும் என்ன ? ஊரெங்கும் ஓரே அமளி. அந்தணன் மீது எங்கும் புகைச்சல். ஜூரிகள் எதிர்

அபிப்பிராயம் கொடுத்தார்கள். நீதிபதி அந்தண வாலிப னுக்குத் தூக்குத் தண்டனை விதித்தான்.

வாலிபனோ உயர் நீதிமன்றத்திற்கு அப்பீல் செய்து கொண்டான். தூக்கிற்கு வேண்டிய சாட்சியம் இல்லை என்று சொல்லி மரணத்தீர்ப்பை ரத்து செய்துவிட்டார் கள். அந்தணனும் தப்பித்துக்கொண்டான்.

ஆனால் அந்த அந்தண வாலிபன் விசாரணையில் பட்ட மனோவேதனைக்கு அளவு உண்டோ? தீர்ப்புப் பெற்று விலங்கிடப் பெற்றுத் தனிச் சிறையில் ஒடுங்கிக் கிடந்த போது அவன் அடைந்த துயரத்திற்கு அளவு உண்டா? மஹ்மல் மெத்தைகளில் உல்லாசமாகத்தென்றல் காற்று வீச இன்பம் துய்த்துக் கொண்டிருந்த அவனுக்கு ஈரத்தரையில் முரட்டுப்பாயான படுக்கை கிடைத்தால் எவ்விதமாய் இருக்கும்? ஆனால், விடுதலை அடைந்த பிறகாவது அவன் குணம் மாறிற்று?

* * * *

முன்னால் 'ராம்தடக்' பஜனையில் வெகு பயபக்தியுடன் பங்கெடுத்துக் கொண்டிருந்த அந்த அழகிய அந்தண வாலிபனே பின்னால் கொலைக்குற்றம் சாட்டப் பெற்றுத் தூக்குத் தண்டனையும் விதிக்கப்பட்டான் என்றால் வியப் பல்லவா? வேறோர் இடத்தில் எழுதியுள்ள ஒரு சிறு கதை இங்கே நினைவிற்கு வருகிறது. ஒரு சித்திரக்காரன் உலகில் தேவ வடிவம் யாது, அசுர வடிவம் யாது என்று ஆராய்ந்து இரண்டு ஓவியங்கள் தீட்ட முயன்றான். தேவ வடிவத்திற்கு ஓர் இளைய பாடசாலைச் சிறுவனை உதாரண மாகக் கொண்டான். அசுர வடிவத்திற்கு ஒரு கொலை யாளியை எடுத்துக் கொண்டான். விசாரிக்கப்போக அப் பாடசாலைச் சிறுவனே பின்னால் கொலையாளியானனும். இவ்விரண்டு கதைகளும் ஒத்திருக்கின்றன அல்லவா?

இனி ஒரே ஒரு வார்த்தை? அந்தணச் செல்வனுடைய பிந்திய சரித்திரம் என்ன என்று கேட்பீர்களோ ? அதைப் பற்றி விவரமாக கூறவேண்டியதில்லை. தன்னுடைய பண்ணையாட்களை மிகுதியாக இம்சித்துக் கொடுங்கோல் நடத்தி வந்தான். ஒரு நாள் தன்னம் தனியே ஒரு பண்ணை வீட்டில் இருந்தபோது இருட்டின சமயம் பார்த்துப் பண்ணையாட்கள் ஒன்று சேர்ந்து அவனைமேல் உலகத்திற்குஅனுப்பி விட்டார்கள். கோர்ட்டிலோ இதற்கும் நியாயம் கிடைக்கவில்லை. கீழ்க்கோர்ட்டில் தண்டனை அடைந்தவர்கள் மேல் கோர்ட்டில் விடுதலை பெற்றார்கள். இதுவும் உலக இயல்பே அன்றோ ?

" கொலையஞ்சார் பொய்ந்நாணார் மானமு மோம்பார்
களவொன்றோ ஏனையும் செய்வார்—பழியொடு
பாவமிஃ தெண்ணார் பிரிதுமற்றென் செய்வார்
காமம் கதுவப் பட்டார்."

19. செல்வச் செருக்கு என்ன செய்யாது ?

நிலைமை நகரில் பல புற நகர்கள் உண்டு. நகரின் மக்கள் தொகை வளர வளரச் சுற்றிலும் உள்ள நிலங்களில் புது வீடுகளைக் கட்டுவது இயல்பு. அவ்வீடு புது முறையில் விசாலமாகவும் சௌகரியமாகவும் கட்டுவார்கள். பெரும்பாலும் அவைகள் பூந்தோட்ட வீடுகளாய் இருக்கும். செல்வவான்கள் அப்படிப்பட்ட புது மாளிகைகளைக் கட்டி உல்லாச வாழ்வு வாழ்வார்கள். அப்படிப்பட்ட புறநகர்களுக்கு நகரச் தொடர்ச்சிகள் (City extensions) என்று இக்காலத்தில் வழங்குவார்கள். செல்வவான்களிலே நிலச்சுவான்தார்கள் மட்டுமேயன்றிப் பெருத்த வியாபாரிகளும் அலுவலாளர்களும் இத்தகைய நகர்த் தொடர்ச்சி

களில் வசிப்பார்கள். இவர்களுக்கு நகரத்தில் வியாபாரக் கிடங்குகளும் அலுவல் அகங்களும் உண்டு. பகல் முழுவதும் நகரில் தொழிலைப் பார்த்துவிட்டு இரவுகளில் புறநகரிலுள்ள மாளிகைகளில் உல்லாசமாக வாழ்வார்கள். இப்படிப்பட்ட வாழ்க்கை சில ஆண்டுகளாகச் சிறந்து வளர்ந்து வருகிறது.

மேலே கூறிய புறநகர்களில் ஒரு சிறந்த தொடர்ச்சியில் ஓர் அழகிய மாளிகை இருந்தது. அதில் ஒரு செல்வ முதலாளி வசித்து வந்தான். செல்வத்தினுல் அளவு கடந்த கர்வம் கொண்டிருந்தான். கர்வத்தினுல் அவன் செய்த கொடுமைகளுக்கு அளவில்லை. அந்த ஆளினுடைய உருவமும் அவனுடைய செல்வத்தைப் போலவே திரண்டிருக்கும். கன்னங்கரேல் என்ற திருமேனி, தேங்காய் போல திரண்டு உருண்ட தசைகள், முகத்தில் முருக்கு மீசை, கூர்ந்த கருங் கண்கள், அவற்றில் கொடிய பார்வை இவைகள் எல்லாம் ஒரு மனிதனிடத்தில் இருந்தால் அவனைக்கண்டு கம்பர் வருணிக்கத் தொடங்கினுல் தன்னுடைய அருமைக் காவியத்தில் அரக்கர்களை வர்ணித்ததைக் காட்டிலும் சிறப்பாக வர்ணித்திருப்பார் அல்லவா ?

இப்படிப்பட்ட குடும்பத்தலைவனுக்கு வாய்த்த மனைவியைப்பற்றிக் கூறவேண்டியதே இல்லை. கணவனுக்கேற்ற வண்ணத்தில் மனைவியும் ஒப்புயர்வின்றி இருந்தாள். எட்டே கால் லக்ஷணங்களுள் கால் லக்ஷணமும் குறையாமல் தம்பதிகள் இருவரும் இருந்திருப்பார்களானுல் நாம் எவ்வாறு குறைத்துக் கூறமுடியும் ?

சில பெரிய குடும்பங்களில் கணவனுக்கும் மனைவிக்கும் எப்போதும் மல்யுத்தங்கள் நடைபெறுவதுண்டு. ஆனுல் இந்தக் குடும்பத்திலோ ஒற்றுமை என்ற சிறப்புக் குணம் தலை சிறந்து இருந்தது. கொடுமை இயற்றுவதில் கணவனை விட மனைவி ஒரு சிறிதும் இளைக்கமாட்டாள். அப்படிப்

பட்ட குடும்பம் செல்வாக்கில் குறையாமல் விளங்கி வந்ததைப்பற்றி மக்கள் ஆச்சரியப்படுவார்கள். அவர்களுடைய செயல்களை நேரில் கண்ட அக்கம் பக்கத்துக் குடிகள் 'கடவுளுக்குக் கண் இல்லையா' என்றும் குறிப்பாகப் பேசுவார்கள். பேசிப் பலன் என்ன? அப்பேச்சு அவர்கள் காதுவரை எட்டுமா? அப்படி எட்டினாலும் சீர்திருத்தம் ஏற்படுமா? குரங்குக்கு மதி கூறிய தூக்கணாங் குருவிபோல ஆகிவிடும் அல்லவா?

பெரிய குடும்பம் என்றால் நிரம்ப ஆள்கள் இருக்க வேண்டும். ஆனால் இப்படிப்பட்ட மேன்மை தங்கிய குடும்பத்தில் எந்த வேலையாள் நிலைத்திருக்கக் கூடும்? ஒவ்வொரு மாதமும் புது புது ஆள் நியமிக்கப் படுவார்கள். அந்த மாதம் முடிவதற்குள் கைகால்களில் காயங்கள்பட்டு வெளியே ஓடவேண்டிய நிலைமை ஏற்படும். இந்த நிலைமையில் அச்செல்வர்களுடைய அடங்காக் கோபம் விளங்கிக் கொண்டிருந்தது. ஏழை மக்கள் என்ன செய்வார்கள்? கொடுமை இருந்த போதிலும் வயிற்றுப்பாட்டிற்காக அச்செல்வவான் வீட்டில் வேலைக்குச் சேருவார்கள். இவ்வாறு வேலைக்குச் சேர்ந்த ஓர் ஏழைப்பெண் பிள்ளை என்ன கெதியானாள் என்பதைப்பற்றி ஒரு சிறிது எடுத்துக் கூறுவோம்.

அவ்வீட்டு வேலைக்காரிப் பெண் வேலையில் சேர்ந்து இரண்டு வாரம்தான் ஆயிருக்கும். அவ்வீட்டில் வேறு வேலையாளே இல்லை. பற்று தேய்த்தல், வீடு பெருக்குதல், கிணற்று நீர் மொள்ளல், அரிசி தீட்டுதல் முதலிய எல்லா வீட்டு வேலைகளையும் அவளே செய்யவேண்டும். வயிற்றுக்குக் கொஞ்சம் பழையதைத் தவிர வேறு ஒன்றும் கிடைக்காது. பெண்ணுக்கு வயது பன்னிரெண்டுதான் இருக்கும். காலை 5 மணிக்கு வேலை தொடங்கினால் இரவு பத்துமணி வரை

வேலை செய்யவேண்டும். ஓய்வு என்பது கிடையாது. சிறிது நேரம் அயர்ந்து உட்கார்ந்தால் கசையடிதான் கிடைக்கும். இந்த நிலையில் பாவம் அந்தப் பெண் என்ன செய்வாள்?

பதினைந்து நாள்களுக்குள்ளாக எலும்புந் தோலுமாகி விட்டாள். இப்படி இருக்கையில் ஒரு நாள் காலையில் எஜமானி அப்பெண்ணைப் பற்றுதேய்க்கச் சொன்னாள். அவள் முன்னாலே பதினைந்து உருப்படிகள் கிடந்தன. தேய்ப்பதற்குத் தண்ணீரும் கிணற்றிலிருந்து சேந்தவேண்டும். என்ன செய்வாள்? பசியோ அடக்க முடியவில்லை. எஜமானிக்குப் பயந்து மெதுவாக வேலை செய்யத் தொடங்கினாள். பாத்திரங்கள் தேய்க்க நேரமாயிற்று. எஜமானிக்குக் காப்பி வைப்பதற்கு பாத்திரம் கிடைக்கவில்லை. கோபம் வந்தது. சீறி விழுந்தாள். அடியும் அடித்தாள். பெண்ணோ அலறிக் கீழே விழுந்தாள். அப்படியிருந்தும் அழுதுகொண்டு வேலையைத் தொடங்கினாள்.

மணி 7 ஆயிற்று. வீட்டு எஜமானன் காப்பி எங்கே என்று கத்திக்கொண்டு வந்தான். எஜமானியோ 'நான்என்ன செய்யட்டும்? வேலைக்காரி பற்று தேய்க்கவில்லை' என்று சாக்குச்சொன்னாள். தலைவனுக்கு வந்தது கோபம், மீசை துடித்தது, கண் சிவந்தது. சீறிக்கொண்டு வந்தான். அப்பெண்ணைப் பிடித்து இழுத்து ஒரு சேந்துக் கயிற்றால் இரண்டு கைகளையும் கட்டி முகட்டில் இருக்கும் ஒரு வளையத்தில் மாட்டி தூக்கிடுதலைப் போன்று கயிற்றை இழுத்தான். பாவம் அப்பெண்ணின் உடல் முழுவதும் கயிற்றிலிருந்து தொங்கிற்று. திடீரென்று கயிற்றை விட்டான். உடல் நிலத்திற்கு வந்தது. மறுபடியும் கயிற்றை இழுத்தான். அது மேலே ஏறிற்று. இவ்வாறு இறக்குவதும் ஏற்றுவதுமாகப் பல தடவைகள் செய்தான். பெண்ணின் உடல் முழுவதும் நடுநடுங்கிற்று. இந்தக் கொடுமையைப்

பார்த்துக்கொண்டு எஜமானி சிரித்துக் கொண்டிருந்தாள். "தாகம் தாகம், தண்ணீர் தண்ணீர்" என்று அப்பெண் கத்தினுள். ஒரு துளி தண்ணீரும் அவளுக்குக் கொடுக்கப் படவில்லை. "தாகம்! சாக்கடை நீர் போய்க் குடியடி, வெறும் பாசாங்கு" என்று சொல்லிக் கத்தினுள் எஜமானி. இதற்குள் அப்பெண் பிரக்ஞையற்றுப் போனுள். எஜமானனும் சலித்துப்போய்க் கயிற்றை விட்டுவிட்டான். பெண் நிலத்தில் விழுந்தாள். உயிர் இருந்ததாகத் தெரிய வில்லை. அவர்கள் அதைப் பார்க்கவும் இல்லை. அவ்வுடலை ஒரு மூலையில் தள்ளிவிட்டு அதன் பேரில் ஒரு பாயை மூடினுர்கள். பிறகு யாதொரு கவலையின்றித் தங்கள் தங்கள் வேலைக்குச் சென்று விட்டார்கள்.

இரவு 7 மணி ஆயிற்று. நன்ருய் இருட்டி விட்டது. அப்போதுதான் எஜமானி அந்தப் பாயைத் திறந்து பார்த் தாள். உயிர் போயிருந்தது. அதைக் கணவனிடம் சொன் னுள். 'பாவா இல்லை, அதை எடுத்துச் சென்று புதைத்து விடுவோம்' என்று அவன் சொன்னுன். உடனே தெரிந்த ஆள்கள் இரண்டுபேரை அழைத்துப் பணம் கொடுத்து மூங்கிலும் கயிறும் வாங்கிக்கொண்டு வரும்படி சொன்னுன். 'அம்மை வந்து ஒருசிறு பெண் இறந்துவிட்டதாகவும் அதைச் சுடுகாட்டிற்குக் கொண்டுபோக வேண்டும்' என்றும் சொன்னுன். பணம் என்னதான் செய்யாது?

அன்று இரவு பத்து மணிக்குள்ளாகப் பிணம் சுடுகாட் டில் புதைக்கப்பட்டது. அதுமுதல் ஒன்றும் நடவாதது போல் அம்மாளிகையின் தலைவனும் தலைவியும் இருந்தார் கள். சில நாட்கள் சென்றன. வேலைக்குப் போன பெண் திரும்பிவரவில்லை என்று பெற்றோர்கள் அம்மாளிகைக்குச் சென்றுர்கள். எவரும் ஒருவிவரமும் கொடுக்கவில்லை. அந்த ஏழைகளை அம்மாளிகைக்குள்ளேயே விடப்படவுமில்லை.

என்ன முயற்சி செய்தும் தங்கள் பெண்ணைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை. மிகவும் வியாகூலப்பட்டுப் போலீஸில் சொன்னார்கள். 'ஏழை சொல் அம்பலம் ஏறுமோ' என்ற பழமொழிப்படி அவர்கள் பேச்சு போலீஸார் காதில் ஏற வில்லை.

தெய்வாதீனமாக ஒரு சத்தியவந்தன் போலீஸில் வந்து சேர்ந்தான். ஏழையினுடைய பேச்சைக் கேட்டுப் பதிவு செய்து கொண்டான். பிறகு துப்புவிசாரிக்கப் பட்டது. மாளிகைத் தலைவர்கள் பெண் என்ன ஆனாள் என்று சொல்லித் தீரவேண்டும் அல்லவா? அம்மை வந்தது என்றால் யார் நம்புவார்கள்? அதில் இறந்தால் ஏன் பெற்றோர்களுக்குச் சொல்லவில்லை? ஏன் திருட்டுத்தன மாக இரவிலே இருட்டிலே புதைத்தார்கள்? இந்தக் கேள்வி கள் எழும்பின. சரியான பதில் வாராததினால் கொலை நடந்திருக்கவேண்டும் என்று ஊகிக்கப்பட்டது.

அதுமுதல் போலீஸார் வெகு அக்கறையோடு விசாரித் தார்கள். எஜமானனும் கூடியமட்டில் பணப்பையைத் திறந்து விட்டான். இருந்தாலும் சத்தியவந்தனிடம் பணம் என்ன செய்யும்? துப்பு நன்றாக ஆராயப்பட்டது. உண்மை முழுதும் போலீஸாருக்குத் தெரிந்து விட்டது.

உடனே நீதி மன்றத்தில் விசாரணை தொடங்கிற்று. தலைவனும் தலைவியும் சிறையில் அடைக்கப்பட்டார்கள். சாட்சி விசாரிக்கப்பட்டது. மத்தியஸ்தர்கள் (ஜூரி) அவர்களைக் குற்றவாளி என்று அபிப்பிராயம் சொன்னார்கள். நீதிபதி தலைவனுக்குத் தூக்குத்தண்டனையும் தலைவிக்கு இரண்டு ஆண்டு கடுங்காவலும் விதித்தார்.

இந்த வழக்கு நடந்தபோது தலைநகர் முழுவதும் ஒரே பரபரப்பு ஏற்பட்டது. வழக்கைப்பற்றிச் சிலபேர் பொய் என்றார்கள். சிலபேர் உண்மை என்றார்கள். தீர்ப்பு

சொன்னவுடன் சிலபேர் தண்டனை சரி என்றார்கள். சிலபேர் சரியல்ல என்றார்கள். தலைவனும் தூக்குமேடை ஏறினன். தலைவியும் சிறைக்குச் சென்றாள். தலைவன் சவத்தை மயானத்திற்கு எடுத்துக் கொண்டுபோனபோது மக்கள் வியப்படைந்தார்கள். இத்தனை பெரிய உருவம் இந்த கதி அடைந்தது அல்லவா? என்று பேசினார்கள். செல்வமிருந்து என்ன பயன், செருக்கு அதை அழித்து விட்டது அல்லவா என்றும் பேசினார்கள். செல்வச்செருக்கு என்ன தான் பண்ணாது என்றும் சிலர் பேசினார்கள். சூரபத்மனும் இராவணனும் சென்ற கதியை நினைப்பூட்டுகின்றான் என்றார்கள் வேறுசிலர். இந்த விதம் தலைநகரையே புரட்டித் தள்ளின பரபரப்பையே சில மாதங்களில் பொதுமக்கள் மறந்துவிட்டார்கள்.